# பொதுத் தமிழ்

[செய்யுள் — உரைநடை]

மேல் நிலை — முதலாம் ஆண்டு

பகுதி 1 — தமிழ்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

# பொதுத் தமிழ்

[செய்யுள் — உரைநடை]

## மேல் நிலை - முதலாம் ஆண்டு

பகுதி 1 — தமிழ்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

© தமிழ்நாட்டு அரசு
முதல் பதிப்பு—1978
மறு பதிப்பு—1979

**பதிப்பாசிரியர் குழுத்தலைவர் :**

**வித்துவான் டாக்டர் தி. முத்து-கண்ணப்பன்,** *எம்.ஏ., பிஎச்.டி.,*
*சிறப்புப் பேராசிரியர் (யு.ஜி.சி.), தமிழ்த் துறை,*
*பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600 030*

**உறுப்பினர்கள் :**

**பேராசிரியர் தி. அ. சொக்கலிங்கம்,** *எம்.ஏ., எம்.லிட்.*
*முதல்வர், யாதவர் கல்லூரி, மதுரை.*

**புலவர் அன்பு கணபதி**
*தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600 030*

**புலவர் ப. அரங்கசாமி**
*முதனிலைத் தமிழாசிரியர், அரசினர் உயர்நிலைப் பள்ளி,*
*லால்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.*

**புலவர் முத்து-சடையப்பன்,** *எம்.ஏ., பி.டி.*
*தலைமையாசிரியர், அரசினர் மேல்நிலைப் பள்ளி,*
*வன்னிக்கோனேந்தல், திருநெல்வேலி மாவட்டம்.*

**புலவர் த. முருகேசன்**
*தமிழாசிரியர், ஆர்.சி.டி. உயர்நிலைப் பள்ளி,*
*சிதம்பரம், தென்னார்க்காடு மாவட்டம்.*

**மதிப்புரையாளர் :**

**தமிழ்ப் பெரும்புலவர், பேராசிரியர் மு. ரா. பெருமாள் முதலியார்,**
*எம்.ஏ., எல்.டி.*
*(ஓய்வுபெற்ற முதல்வர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதை),*
*'சிலம்பு', ஐந்தாம் தெரு, டாக்டர் சுப்பராயநகர், சென்னை-600 024.*

**விலை : ரூ. 2·40**

*இந்நூல் 60 ஜி.எஸ்.எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.*

ஆஃப்செட் முறையில் அச்சிட்டோர் :
**தி டயோசிசன் அச்சகம், சென்னை-600 007**

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா.

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

## தேசிய கீதம்—பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீ தான் மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் ஸிந்துவையும் குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும் திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும் உள்ளக்கிளர்ச்சி அடையச்செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது :
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது :
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன : நின் புகழைப் [பாடுகின்றன.

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன் என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல்-பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.'

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்,
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்;
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

—'மனோன்மணீயம்' பெ. சுந்தரம் பிள்ளை

# பொருளடக்கம்


| எண் | செய்யுள் பகுதி | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | .... | 1 |
| 2. | தமிழ்த்தாய் வாழ்த்து | .... | 2 |
| 3. | புறநானூறு | .... | 2 |
| 4. | குறுந்தொகை | .... | 8 |
| 5. | திருக்குறள் | .... | 10 |
| 6. | பழமொழி | .... | 17 |
| 7. | மணிமேகலை | .... | 19 |
| 8. | திருத்தொண்டர் புராணம் | .... | 24 |
| 9. | திருவிளையாடற்புராணம் | .... | 33 |
| 10. | இரட்சணிய யாத்திரிகம் | .... | 44 |
| 11. | காசிக் கலம்பகம் | .... | 49 |
| 12. | தமிழ்விடு தூது | .... | 53 |
| 13. | காட்சி இன்பம் | .... | 59 |
| 14. | தமிழ் இசை | .... | 61 |
| 15. | பல்சமயப் பாடல்கள் | .... | 63 |

| | மனப்பாடப் பகுதி | | அடிகள் |
|---|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | .... | 4 |
| 2. | தமிழ்த்தாய் வாழ்த்து | .... | 4 |
| 3. | புறநானூறு (2, 5) | .... | 19 |
| 4. | குறுந்தொகை (1, 4) | .... | 11 |
| 5. | திருக்குறள் [(1) 1, 3, 4, 7, 9, 10; (2) 2, 4, 8, 10; (3) 1, 2, 3, 5, 8; (4) 1, 4, 5, 6, 8; (5) 1, 4, 5, 8, 9] | .... | 50 |
| 6. | பழமொழி (1, 3) | .... | 8 |
| 7. | பல்சமயப் பாடல்கள் (அனைத்தும்) | .... | 24 |
| | மொத்தம் | .... | 120 |

## உரைநடைப் பகுதி


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கடற்கரையிலே —டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை | .... | 67 |
| 2. | கடிதம் —டாக்டர் மு. வரதராசனார் | .... | 75 |
| 3. | பழங்காலத் தமிழக நாடும் நகரமும் —டாக்டர் அ. சிதம்பரநாதன் | .... | 83 |
| 4. | சமய இலக்கியங்களில் அறநெறி —தவத்திரு. குன்றக்குடி அடிகளார் | .... | 91 |
| 5. | இயற்கைக் காட்சிகள் —திரு. கி. வா. ஜகந்நாதன் | .... | 98 |
| 6. | விடுதலைப் போராட்டக் கவிஞர் —திரு. கா. திரவியம் | .... | 108 |
| 7. | ஏறு தழுவுதல் —கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை | .... | 118 |
| 8. | இலக்கிய மரபு —டாக்டர் தமிழண்ணல் | .... | 123 |
| 9. | மூதின் மகளிர் —பேராசிரியர் கோ. சுப்பிரமணியப் பிள்ளை | .... | 133 |
| 10. | குறள் காட்டும் நெறி —திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் | .... | 139 |
| 11. | கொடி காட்டும் குறிப்புகள் —நீதிபதி மு. மு. இஸ்மாயில் | .... | 147 |
| 12. | தேசிய ஒருமைப்பாடு —திரு. அகிலன் | .... | 156 |
| 13. | தமிழ் நாடகம்—தோற்றமும் வளர்ச்சியும் —டாக்டர் இரா. குமரவேலன் | .... | 162 |
| 14. | மருத்துவத்தில் வியத்தகு சாதனைகள் —டாக்டர் வ. நம்பி | .... | 171 |

# செய்யுள் பகுதி

## 1. கடவுள் வணக்கம்

*மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே.*

**—திருநாவுக்கரசர்**

### குறிப்புரை

திருநாவுக்கரசர் சைவசமயப் பெரியார்களான அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் ; சமய குரவர்கள் எனச் சிறப்பாகப் போற்றப்படும் நால்வருள் ஒருவர். இவர் நடு நாட்டில் திருவாமூரில் பிறந்தார். இவர்தம் பெற்றோர் புகழனார் - மாதினியார்ஆவர். இவர் தமக்கை பெயர் திலகவதியார். இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் மருள்நீக்கியார் என்பது. இவர் சைவ வேளாளர் மரபினர்; சைவ மரபில் பிறந்து, சமணமதத்தைத் தழுவி, மீண்டும் சைவ நெறிக்குத் திரும்பியவர்.

சிவபெருமானைப் போற்றி இவர் பாடிய பாடல்கள் தேவாரம் எனப்படும். தே + ஆரம் = தேவாரம், கடவுளுக்குச் சூட்டப்படும் பூமாலை போன்ற பாமாலை என்பது பொருள்.

சமணத்தை நீங்கி மீண்டும் சைவத்தைச் சார்ந்தபோது இவருக்கிழைக்கப்பட்ட தீங்குகள் பல. அவற்றுள் ஒன்று நீற்றறையில் (சுண்ணாம்புக்காளவாயில்) இட்டுத் துன்புறுத்தப் பட்டதாகும். அப்போது பாடியதே ' மாசில் வீணையும் ' என்னும் இப்பாட்டு.

இவர் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டு. இவருக்கு அப்பர், வாகீசர் என்னும் பெயர்களும் உண்டு.

' என் கடன் பணி செய்து கிடப்பதே ' என்பதை இவர் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

### அருஞ்சொற்பொருள்

மாசு இல் - குற்றமில்லாத ; வீங்கு – மிகுந்த ; மூசு - மொய்க்கும் ; அறை - ஒலிக்கும் ; பொய்கை - குளம் ; இணையடி - இரண்டு திருவடிகள்.

## 2. தமிழ்த்தாய் வாழ்த்து

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே,
மன்னியமூ வேந்தர்கடம் மடிவளர்ந்த மகளே,

தேனார்ந்த தீஞ்சுவைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி யாயிடைநற் செங்கோல்கொள் செல்வி,

கானார்ந்த தேனே,கற் கண்டே,நற் கனியே,
கண்ணே,கண் மணியே,யக் கட்புலஞ்சேர் தேவி,

ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே,
அம்மே,நின் சீர்முழுதும் அறைதல்யார்க் கெளிதே!

—அரங்க வேங்கடாசலம் பிள்ளை

**அருஞ்சொற்பொருள்**

திருமாலின் குன்றம் - திருப்பதிமலை, ஆனாத - அழியாத, குறையாத; அறைதல் - எடுத்து விளக்குதல்.

## 3. புறநானூறு

1. ஆரந் தாழ்ந்த அணிகிளர் மார்பின்
தாடோய் தடக்கைத் தகைமாண் வழுதி
வல்லை மன்ற நீநயந் தளித்தல்
தேற்றாய் பெரும பொய்யே என்றும்
காய்சினந் தவிராது கடலூர் பெழுதரும்
ஞாயி றனையைநின் பகைவர்க்குத்
திங்க ளனையை யெம்ம னோர்க்கே.

திணை : **பாடாண் திணை** துறை : **பூவை நிலை**

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனை மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் பாடியது.

2. நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழி லாண்ட உரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற

வென்றோய் நின்னினு நல்ல னன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புக ழுலக மெய்திப்
புறப்புண் ணுணி வடக்கிருந் தோனே.

திணை : **வாகை** துறை : **அரசவாகை**

சோழன் கரிகாற் பெருவளத்தானை வெண்ணிக்குயத்தியார் பாடியது.

3\. என்னைக் கூரிஃ தன்மை யானும்
என்னைக்கு நாடிஃ தன்மை யானும்
ஆடா டென்ப வொருசா ரோரே
ஆடன் றென்ப வொருசா ரோரே
நல்ல பல்லோ ரிருநன் மொழியே
அஞ்சிலம் பொலிப்ப வோடி யெம்மில்
முழாவரைப் போந்தை பொருந்தி நின்று
யான்கண் டனனவ னாடா குதலே.

திணை : **கைக்கிளை** துறை : **பழிச்சுதல்**

சோழன் போர்வைக் கோப்பெரு நற்கிள்ளியைப் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் பாடியது.

4\. எந்தை வாழி யாத னுங்கவென்
நெஞ்சந் திறப்போர் நிற்காண் குவரே
நின்னியான் மறப்பின் மறக்குங் காலை
என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென் வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக விடைகழி யறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர்புர வெதிர்ந்த வறத்துறை நின்னே.

**திணை : பாடாண் திணை** துறை : **இயன்மொழி**

**ஆதனுங்கனைக்** கள்ளில் **ஆத்திரையனார் பாடியது.**

5. காய்நெல் லறுத்துக் கவளம் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமுங் கெடுமே.

திணை : **பாடாண்திணை** துறை : **செவியறிவுறூஉ**

பாண்டியன் அறிவுடை நம்பியுழைச் சென்ற பிசிராந்தையார் பாடியது.

## குறிப்புரை

புறம் + நான்கு + நூறு=புறநானூறு. புறப் பொருள்கள் பற்றிய நானூறு பாடல்கள் எனப்படும். இங்குப் புறநானூறு என்பது புறப்பொருள் பற்றிப் பாடப்பட்ட நானூறு பாடல்களைக் கொண்ட நூலைக் குறிப்பதாகும். இது புறம், புறப்பாட்டு எனவும் வழங்கப்பெறும்.

புறப்பொருள்களாவன, மக்கள் வாழ்க்கையோடு தொடர்புடைய புறத்தே நிகழும் உலகியல் நிகழ்ச்சிகள். அவை வீரம், கொடை, புகழ், ஆட்சி, வெற்றி முதலிய நிகழ்ச்சிகள். அவற்றைப் பற்றிப் பாடப்பட்ட பாடல்களைக் கொண்டது புறநானூறு.

இது கடைச்சங்க கால நூலாகும். இஃது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. பல புலவர்களால் பலகாலங்களில் பாடப் பெற்ற பாடல்களின் தொகுப்பாகும் இந்நூல்.

எட்டுத் தொகை நூல்களாவன :

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோ டகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை.

அவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவை.

**இந்நூற் சிறப்பு:** பழந்தமிழ் நாட்டில் சிறப்புற்று விளங்கிய மூவேந்தர்கள், சிற்றரசர்கள், வீரர்கள், வள்ளல்கள், புலவர்கள் முதலியவர்களின் வரலாறுகளையும், மக்கள் நாகரிக வாழ்க்கை, பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றையும் இந் நூலால் அறியலாம்.

ஒவ்வொரு பாட்டும் இன்னின்ன பொருளைப்பற்றிக் கூறுகிறது என்பதைத் **திணை - துறை** என்னும் பாகுபாடுகள் உணர்த்தும். இந் நூலில் 11 திணைகளும் 65 துறைகளும் கூறப்பட்டுள்ளன.

## அருஞ்சொற்பொருள்

1. திணை - ஒழுக்கம்; துறை - திணையின் உட்பிரிவாக அமைந்து, அவ்வத் திணையில் கூறப்படும் பொருளைப் பாகு படுத்திக் கூறுவது.

பாடாண் திணை - பாடப்படும் ஆண் மகனது ஒழுக்கம்; அஃதாவது ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் முதலியவற்றைத் தெரிந்து சொல்லுதல்.

பூவைநிலை - ஒன்றினை ஒன்று போலக் கூறுந்துறை; மனிதரைத் தேவரோடு உவமித்துக் கூறுதல். மனிதரை ஞாயிறு, திங்கள் முதலியவற்றோடு உவமித்துக் கூறுதலும் உண்டு.

ஆரம் - மாலை; அணி - அழகு; கிளர் - விளங்கும்; தாடோய் - (தாள்+தோய்) முழங்காலில் தோய்ந்த; தகை - அழகு; மாண் - மாட்சிமைப்பட்ட; வழுதி - பாண்டியன்; வல்லை - வல்லமையுடையாய்; நயந்து அளித்தல் - உவந்து அருள் செய்தல்; தேற்றாய் - யாவரிடத்தும் தெளியாய்; காய்சினம் - சுடும் வெம்மை; கடல் ஊர்பு எழுதரும் - கடலிடத்தே கிளர்ந்து எழுகின்ற.

பாண்டியன் நன்மாறனை ஞாயிற்றோடும் திங்களோடும் உவமித்துக் கூறியதனால் இப்பாட்டு, பூவை நிலையாயிற்று.

2. வாகைத்திணை - வாகைப்பூவைத் தலையில் சூடிப் பகைவரை வென்று ஆரவாரித்தல்; அரசவாகை - அரசனது வெற்றியைக் கூறுதல்.

நளி - செறிந்த, அடர்ந்த; இரு - பெரிய; முந்நீர் - கடல் (ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் ஆகிய மூன்று நீர் உடையது); நாவாய் - கப்பல்; ஓட்டி - இதனை ஓட்ட எனத் திரிக்க; வளி - காற்று; உரவோன் - வலிமையுடையோன்; மருக - மரபில் வந்தவனே; களி இயல் யானை - மதம்பொருந்திய யானைகளை யுடைய; சென்று - பகைமேற் சென்று; அமர் - போர்; நின் ஆற்றல் தோன்ற - நின் வலிமை புலப்பட; கலி - தழைத்தல்; யாணர் - புது வருவாய்; வெண்ணிப் பறந்தலை - வெண்ணி என்னும் ஊர்க்குப் புறத்தேயுள்ள போர்க்களம்; உலகம் புகழ் மிக எய்தி - உலகத்துப் புகழை மிகப் பொருந்தி; புறப்புண் - மார்பில் தைத்து உருவின தாலே புற முதுகில் உண்டான புண்; வடக்கிருத்தல் - உயிர் விடுதற்கு வடக்கு நோக்கி நோற்றிருத்தல்.

இது கரிகால்வளவன் வெற்றி கூறியதாகலின் அரச வாகை யாயிற்று.

3. கைக்கிளை - ஒருதலைக் காமம்; ஒருவரிடம் மட்டும் தோன்றும் காமம். பழிச்சுதல் - வழிபடுதல்.

என் ஐக்கு ஊர் இஃது அன்மையானும் - என் தலைவனுக்கு ஊர் இது அல்லாமையானும்; ஆடு - (இயல்பாய) வென்றி; ஆடு என்ப - வென்றி என்று சொல்வர்; ஆடு அன்று என்ப - வென்றி யன்று என்று சொல்வர்; ஒரு சாரோர் - ஒரு பக்கத்தார்; பல்லோர் - பலரும்; இரு நன்மொழி - ஒத்தும் ஒவ்வாமலும் கூறும் இருவகைப்பட்ட நன்மொழி; நல்ல - நல்லவாயிருந்தன; அம் சிலம்பு ஒலிப்ப ஓடி - அழகிய சிலம்பு ஒலிக்க ஓடிச்சென்று; எம் இல் - எமது வீடு; முழா - மத்தளம்; வரை - பக்கத்தையுடைய; போந்தை - பனைமரம்; கண்டனன் அவன் ஆடு ஆகுதல் - அவனது வெற்றியாகுதல் யான் கண்டேன்.

ஏதாவது ஒன்றினைச் சார்ந்து நின்று ஒருவரைப் பார்த்தலும் ஒன்றைக் கேட்டலும் நாணமுடைய குலமகளிர்க்கு இயல்பு. ஆதலின், பனைமரத்தைச் சார்ந்து நின்று தன் தலைவனின் வெற்றியைக் கண்டதாகக் கூறுகிறாள்.

4. இயன்மொழி - ஒருவர் இயல்பைக் கூறுதல்; தலைவன் செய்தியையும் அவன் குலத்தோர் செய்தியையும் அவன் மேல் ஏற்றிப் புகழ்தல்.

எந்தை - எம் தந்தை, எம் இறைவ, தலைவ; என் நெஞ்சம் திறப்போர் - என் நெஞ்சை வெளிப்படுத்திக் காண்பவர்; நின்னி யான் - நின்னை (உள்ளத்தில்) உடைய யான்; மறக்குங்காலை - மறக்கும் காலமாவது; என்னியான் மறப்பின் மறக்குவென் - என்னையான் மறக்கும் காலம் உண்டாயின் அப்பொழுது மறப்பேன் அல்லாமல் மறவேன்; விண் பொரு - விண்ணைத் தோயும்; மோரியர் - வேந்தர்; சக்கரவாள சக்கரவர்த்திகள்; விச்சாதரரும் நாகரும் என்பர். திண் - திண்ணிய; திகிரி - சக்கரம்; திரிதர - இயங்க; அறைவாய் - அற்றவாயின் கண்; நிலைஇய - நிறுத் தப்பட்ட; மலர்வாய் - பரந்த இடத்தையுடைய; மண்டிலம்—ஆதித்த மண்டிலம் - சூரியமண்டிலம்; புரவு - காத்தல்; எதிர்ந்த - ஏற்றுக்கொண்ட.

5. செவியறிவுறூஉ - அரசன் செய்யவேண்டிய காவல் முறைமையை, கெடுதலில்லாத உயர்ந்த எண்ணத்துடன் அவனிடம் சொல்லி அவன் செவியிற் புகுத்தி அறிவுறுத்தல்.

காய் - காய்த்த; கவளம் - உணவு உருண்டை; மா - நில அளவு; செறு - செய், வயல்; தமித்து - தனித்து; நெறி - முறை, அரசு வரி கொள்ளும் நெறி; கோடி - கோடியளவு பொருள்; யாத்து - ஈட்டிக்கொடுத்து; நந்தும் - தழைக்கும்; கிழவன் - அரசன்; மெல்லியன் ஆகி - அறிவால்மெல்லியன் (குறைந்தவன்) ஆகி; வைகலும் - நாடோறும்; வரிசை - தரம்; கல் என் - ஆரவாரத் தையுடைய; பரிவு - அன்பு; தப - கெட; எடுக்கும் - கொள்ளும்; பிண்டம் - பொருள் தொகுதி; நச்சின் - விரும்பின்; புலம் - அந்த யானை புகுந்த வயல்.

# 4. குறுந்தொகை

1. கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின், மயில்இயல்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீஅறியும் பூவே.

—இறையனார்

2. வண்டுபடத் ததைந்த கொடியிணர் இடைஇடுபு
பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்
கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம் காரெனக் கூறினும்
யானோ தேறேன் அவர்பொய் வழங்கலரே.

—ஓதலாந்தையார்

3. அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை ஆயினும்
நீஆகியர் எம் கணவனை
யான்ஆகி யர்நின் நெஞ்சு நேர்பவளே.

—அம்மூவனார்

4. இடிக்கும் கேளிர் நும்குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்றுகொளற் கரிதே !

—வெள்ளிவீதியார்

5. பல்லோர் துஞ்சும் நள்ளென் யாமத்து
உரவுக் களிறுபோல் வந்திரவுக் கதவம்முயறல்
கேளேம் அல்லேம் கேட்டனம் பெரும
ஓரி முருங்கப் பீலி சாய
நல்மயில் வலைப்பட் டாங்குயாம்
உயங்குதொறும் முயங்கும் அறனில் யாயே,

—கண்ணன்

## குறிப்புரை

குறுந்தொகை, சங்க நூல்களாகிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று; குறுமையான அடிகளையுடைய பாக்களால் ஆன நூல்; கடவுள் வாழ்த்துடன் நானூற்றிரண்டு பாடல்களைக் கொண்டது. இதிலுள்ள பாடல்கள், குறைந்த அளவு நான்கு அடிகளும் உச்ச அளவு எட்டு அடிகளும் உடையனவாகும். புலவர் பலரால் பாடப்பட்ட இப்பாடல்கள் பூரிக்கோ என்பவரால் தொகுக்கப்பட்டனவாகும்.

இந்நூல் அகப்பொருள் பற்றியதாகும். அகப் பொருளாவது உள்ளத்தே உணரும் இன்ப நுகர்வைப் பற்றிக் கூறுவது. இந்த இன்பம் ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தாம் நுகர்ந்த இன்ப நுகர்ச்சிகளைத் தம் உள்ளத்து உணர்வால் அனுபவிப்பதாகும். தத்தமக்கு மட்டும் புலனாகி, பிறர்க்குக் கூறப்படாததாய் அகத்தே நிகழும் உணர்வே அகத்திணை. சுருங்கக் கூறின் இஃது இல்லற இன்பவியலைக் கூறுவது.

குறுந்தொகைப் பாட்டுகள் வாயிலாகப் பண்டைய தமிழ் மக்களின் ஒழுக்கம், வாழ்க்கை முறை, பழக்க வழக்கம், நாகரிகம் முதலியவற்றை அறியலாம்.

## அருஞ்சொற்பொருள்

1. கொங்கு - தேன்; தேர் - ஆராய்ந்து / உண்ணும்; அம் சிறை - உள்ளிடத்தே சிறகையுடைய; தும்பி - வண்டே; காமம் - விருப்பம்; பயிலியது - பழகியது; கெழீஇய - பொருந்திய; செறி - செறிந்த, நெருங்கிய; எயிறு - பல்; அரிவை - பெண்; நறியவும் - மணமுடைய பூக்களும்.

2. ததைந்த - நெருங்கி மலர்ந்த; கொடி இணர் - நீட்சியையுடைய பூங்கொத்துகளை; இடையிடுபு - இடையிலிட்ட; இழை - தலையணிகளை; கதுப்பு - கூந்தல்; கானம் - காடு.

3. முண்டகம் - முள்ளிச் செடி; கேழ் - நிறம்.

4. நிறுக்கல் - பொறுத்தல்; ஆற்றின் ஓ - செய்தால்; ஓ - அசைநிலை; அறை - பாறை; ஊமன் - ஊமையன்; உணங்கல் - உருகிய வெண்ணெய்.

5. யாமம் - நள்ளிரவு; உரவு - வலிமை; உயங்குதல் - வருந்துதல்; யாய்-தாய்.

# 5. திருக்குறள்

## 1. கூடா ஒழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். 1

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின். 2

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. 3

தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. 4

பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவுந் தரும். 5

நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். 6

புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து. 7

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். 8

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல். 9

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின். 10

## 2. கள்ளாமை

எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு. 1

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 2

களவினு லாகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும். 3

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும். 4

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். 5

அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர். 6

களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல். 7

அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு. 8

அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். 9

கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு. 10

## 3. வாய்மை

வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல். 1

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். 2

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும். 3

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன். 4

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை. 5

பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும். 6

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 7

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும். 8

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 9

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. 10

## 4. வெகுளாமை

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கால் என். 1

செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற. 2

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும். 3

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற. 4

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். 5

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். 6

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கையிழையா தற்று. 7

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 8

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். 9

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. 10

## 5. இன்னா செய்யாமை

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 1

கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 2

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும். 3

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். 4

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை. 5

இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல். 6

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. 7

தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். 8

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும். 9

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 10

### குறிப்புரை

திரு + குறள் = திருக்குறள் - பெருமை பொருந்திய குறள் வெண்பாக்களாலான நூல். திரு என்பது பெருமை, சிறப்பு, மேன்மை, விருப்பம் எனப் பல பொருள்படும்.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும்பிரிவுகளையும்; இல்லறவியல், துறவறவியல், அரசியல், அங்கவியல், ஒழிபியல், களவியல், கற்பியல் என்னும் ஏழு துணைப் பிரிவுகளையும் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களாகிய உட்பிரிவுகளையும் கொண்டது; அதிகாரத்திற்குப் பத்து வீதம் 1330 குறட்பாக்கள் உடையது.

இலக்கியப் பகுப்பு முறையில் இது பதினெண்கீழ்க் கணக்கு வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

உலக மொழிகள் பலவற்றில் திருக்குறள் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. சாதி, மதம், நாடு, நிறம், இனம், மொழி ஆகியவற்றைக் கடந்து உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும் கருத்துகளைத் திருக்குறள் கூறுவதால் இஃது உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது.

இதற்கு முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, தெய்வநூல் எனும் பல பெயர்கள் வழங்குகின்றன.

இதற்குப் பத்துப்பேர் எழுதிய பழைய உரைகள் உண்டு. அவற்றுள் மிகச் சிறந்ததாகப் போற்றப்படுவது பரிமேலழகர் எழுதிய உரையே. இந்நாளிலும் பலர் உரை எழுதியுள்ளனர்.

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் சென்னை மயிலாப்பூரில் வாழ்ந்தவர் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. இவரைப்பற்றித் தெளிவான வரலாறு கிடைத்திலது. இவர் காலம் ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முன்னதாகும்.

## அருஞ்சொற்பொருள்

### 1. கூடாவொழுக்கம்

1. படிற்றொழுக்கம் - படிறு ஒழுக்கம் - மறைந்த ஒழுக்கம்; அகத்தே - உள்ளே; நகும் - சிரிக்கும்.

2. வானுயர் தோற்றம் - வான்போல் உயர்ந்த தவவேடம்; தானறிகுற்றம் - தான் குற்றம் என்று அறிந்த குற்றத்தில்.

3. வலியினிலைமையான் = வலி + இல் + நிலைமையான் - மனத்தை அடக்கும் வலிமையில்லாத இயல்பினையுடையான்; வல்லுருவம் = வன்மை + உருவம் - பண்புத்தொகை; பெற்றம் - பசு. இதில் உள்ளது இல்பொருள் உவமையணி.

4. தவமறைந்து - தவவேடத்தின்கண்ணே மறைந்து நின்று. தவம் - தவவேடம் (ஆகுபெயர்); புதன் மறைந்து - புதரில் மறைந்து; புள் - பறவை; சிமிழ்த்தல் - பிணித்தல்.

5. பற்று - ஆசை; ஏதம் - துன்பம்.

6. வன்கணார் - வன்கண்மையுடையவர், கொடியவர்.

7. குன்றி - குன்றிமணி (முதலாகு பெயர்).

8. மாண்டார் - தவத்தால் மாட்சிமையுடையார்.

9. கணை கொடிது - அம்பு செயலால் கொடிது; வினைபடு பாலால் - செயலால்.

10. மழித்தல் - தலைமயிரைச் சிரைத்தல் (மொட்டை அடித்துக் கொள்ளல்); நீட்டல் - சடைமுடியாக வளர்த்தல்.

## 2. கள்ளாமை

1. எள்ளாமை - இகழாது; வேண்டுவான் - விரும்புவான்; கள்ளாமை - பிறரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை.

2. உள்ளலும் - கருதுதலும்; உம் - இழிவு சிறப்பு; எனல் - என்று கருதற்க, 'அல்' ஈற்று எதிர்மறை வியங்கோல் வினைமுற்று.

3. ஆக்கம் - பொருள்; அளவிறந்து - அளவு கடந்து; ஆவது - வளர்வது.

4. கன்றிய காதல் - மிக்க வேட்கை; வீயா - அழியாத; விழுமம் - இடும்பை, துன்பம்

5. பொருள் கருதி - பொருளை வஞ்சித்துக் கைக்கொள்ள எண்ணி; பொச்சாப்பு - சோர்வு.

6. அளவின்கண் - உயிர் முதலியவற்றை அளத்தலாகிய அளவின் கண்; கன்றிய - மிகுந்த.

7. கார் அறிவாண்மை - இருண்ட அறிவினையுடையராதல்.

8. கரவு - வஞ்சனை. இதிலுள்ளது உவமை அணி.

9. செய்து - நினைத்து, (நினைத்தலும் செய்தலோடு ஒக்குமாதலின்); வீவர் - கெடுவர்; தேற்றாதவர் - அறியாதவர்.

10. தள்ளும் - தவறும்; தள்ளாது - தவறாது.

## 3. வாய்மை

1. சொலல் - சொல்லுதல்.

2. புரை - குற்றம்; பயக்கும் - கொடுக்கும்.

3. பொய்யற்க - பொய் சொல்லாதொழிக; சுடும் - துன்பத்தால் வருத்தும்.

4. பொய்யாது - பொய் கூறாது.

5. தலை - சிறப்புடையவனுவான்.

6. அன்ன - போல; புகழ் - புகழுக்குரிய காரணம், புகழ் என்னும் காரியப் பெயர் காரணமாகிய பொய் பேசாமையை உணர்த்துதலினுல் இது காரிய ஆகுபெயராகும்.

7. ஆற்றின் - செய்தால்.

8. புறந்தூய்மை - புற உடலின் தூய்மை; அகந்தூய்மை - மனத்தூய்மை.

9. பொய்யாவிளக்கே - பொய் கூருதிருத்தலாகிய விளக்கே.

10. மெய்யா - மெய்ந்நூல்களாக; மெய் - மெய்யை உணர்த்துவதற்குக் காரணமாய் இருக்கும் நூல்களை மெய் என்றது காரிய ஆகுபெயராகும்.

## 4. வெகுளாமை

1. செல்லிடம் - பலிக்கும் இடம்; காப்பான் - தடுப்பான்; அல்லிடத்து - பலிக்காத இடத்து.

2. சினம் - கோபம்.

3. யார்மாட்டும் - யாவரிடத்தும்; அதனுன் - வெகுளியால்.

4. உவகை - மகிழ்ச்சி.

5. காவாக்கால் - காப்பாற்றிக் கொள்ளாவிட்டால்.

6. ஏமம் - பாதுகாவல்; புணை - தெப்பம்.

7. கேடு - கெடுதல், முதனிலை திரிந்த தொழிற் பெயர்; அறைந்தான் - அடித்தவன்; பிழையாது - தப்பாது.

8. இணரெரி - பல சுடரை உடையதாகிய பெரிய தீ; இன்னு - துன்பம் தருவனவற்றை.

9. உள்ளிய எல்லாம் - கருதிய பேறுகள் எல்லாம்; உள்ளான் - நினையான்.

10. அனையர் - ஒப்பர்; துறந்தார் துணை - சாதல் தன்மையை ஒழிந்தாரோடு ஒப்பாவர்.

## 5. இன்னுசெய்யாமை

1. ஈனும் - கொடுக்கும்; மாசற்ருர் - குற்றமற்ருேர், சான்ருேர்; கோள் - கொள்கை, முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

2. கறுத்து - கோபித்து; மறுத்து - மீண்டும்.

3. செற்ருர் - கோபங்கொண்டவர்; உய்யா - கடக்கமுடியாத;

4. ஒறுத்தல் - தண்டித்தல்; நாண - வெட்கப்படுமாறு; நன்னயம்-நன்மை; விடல் - அவன் செய்த தீமையையும் தான் செய்த நன்மையையும் மறந்துவிடல்.

5. பிறிதின் நோய் - வேறோர் உயிருக்கு வரும் துன்பம்; நோய் - துன்பம்.

6. துன்னாமை - பொருந்துமாறு செய்ய விரும்பாமை.

7. எனைத்தானும் - சிறிதாயினும்; எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; மாணா - இன்னாத செயல்கள்.

8. இன்னாமை - துன்பம்; தன்னுயிர் - ஆறும் வேற்றுமைத் தொகை; மன்னுயிர் - நிலைபேறுடைய பிற உயிர்.

9. முற்பகல், பிற்பகல் } இவை முன்பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகைகள். இவை இலக்கணப் போலி எனவும் கூறப்படும்.

10. நோய் - துன்பம்; நோயின்மை - துன்பமில்லாமை.

## 6. பழமொழி

தெரியா தவர்தம் திறனில்சொல் கேட்டால்
பரியாதார் போல இருக்க — பரிவில்லா
வம்பலர் வாயை அவிப்பான் புகுவாரே
அம்பலம் தாழ்க்கூட்டு வார். 1

கொழித்துக் கொளப்பட்ட நண்பி னவ்வரைப்
பழித்துப் பலர்நடுவண் சொல்லாடார் என்கொல்
விழித்தலரும் நெய்தற் றுறைவா! உரையார்
இழித்தக்க காணிற் கனா. 2

கற்றதொன் றின்றி விடினும் கருமத்தை
அற்றம் முடிப்பான் அறிவுடையான் — உற்றியம்பும்
நீத்தநீர்ச் சேர்ப்ப! இளையானே யாயினும்
மூத்தானே ஆடு மகன். 3

காட்டிக் கருமம் கயவர்மேல் வைத்தவர்
ஆக்குவர் ஆற்றஎமக் கென்றே அமர்ந்திருத்தல்
மாப்புரை நோக்கின் மயிலன்னாய்! பூசையைக்
காப்பிடுதல் புன்மீன் தலை. 4

*விரும்பி அடைந்தார்க்கும் சுற்றத் தவர்க்கும்*
*வருந்தும் பசிகளையார் வம்பர்க் குதவல்*
*இரும்பணைவில் வென்ற புருவத்தாய்! ஆற்றக்*
*கரும்பனை அன்ன துடைத்து.* 5

**குறிப்புரை**

இது நானூறு வெண்பாக்களை உடைய நூல். ஒவ்வொரு வெண்பாவின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழி இடம் பெற்றுள்ளது. ஆகவே, இந்நூல் பழமொழி நானூறு என வழங்கப்படுகிறது. இதன் ஆசிரியர் முன்றுறையரையனார். ஆசிரியர் பற்றிய தெளிவான வரலாறு இல்லை. இவர் பழமொழிகளைப் பொருள்களோடு பொருத்தியிருக்கும் திறன் மிகவும் வியக்கத்தக்கது. இந்நூல் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. பழமொழியின் காலம் கி.பி. 5 - ஆம் நூற்றாண்டு என்பர்.

**அருஞ்சொற்பொருள்**

1. தெரியாதவர் - அறிவில்லாதவர்; பரியாதார் - துன்புறுதவர்; பரிவு - அன்பு; வம்பலர் - அயலார்; அவிப்பான் புகுவார் - அடக்கப்புகுவார்; அம்பலம் - பொதுவிடம், பலரும் கூடும் இடம்; தாழ்க் கூட்டுவார் - தாழிடத் துணிபவரோடு ஒப்பர்.

2. கொழித்து - ஆராய்ந்து; விழித்து அலரும் நெய்தல் துறைவா - விழி மலர்தலைப்போன்று மலரும் நெய்தல் பூக்கள் நிறைந்த கடல் துறைவனே; இழித்தக்க - பிறருக்கு உரைக்கத் தகாத இழிவாகக் கருதக்கூடியவற்றை.

3. கருமத்தை - காரியத்தை; அற்றம் முடிப்பான் - சோம்பல் இன்றி முடிப்பவன்; ஆடுமகன் - காரியத்தைச் செய்து முடிப்பவன்.

4. மா புரை - மாவடுவைப்போன்ற; நோக்கின் - விழியினை (உடைய); கயவர்மேல் வைத்து - கீழ் மக்களிடம் ஒப்படைத்து; ஆக்குவர் - செய்து கொடுப்பர்; புல்மீன் தலை - அற்பமான மீன் உலர்கின்ற இடத்தில்; பூசை - பூனை; காப்பு - காவல் வைத்தது போலாம்.

5. இருபணைவில் - பெரிய மூங்கிலால் செய்யப்பட்ட வில்; களையார் - நீக்காதவர்; வம்பர்க்குதவல் - புதிய அயலார்க்கு உதவுதல்; ஆற்ற - மிகவும்; கரும்பனை அன்னது உடைத்து - கரிய பனை மரம், தன்னை வித்திட்டு ஆக்கினார்க்கு உறுங்காலத்து உதவாது நெடுங்காலம் சென்று பிறர்க்குப் பயன்படுவது போலாம்.

# 7. மணிமேகலை

## பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை

ஆங்கது கண்ட ஆயிழை அறியாள்
காந்தளஞ் செங்கை தலைமேற் குவிந்தன
........................................................அதின்
இடமுறை மும்முறை வலமுறை வாராக்
கொடிமின் முகிலொடு நிலஞ்சேர்ந் தென்ன
இறுநுசுப் பலச வெறுநிலஞ் சேர்ந்தாங்கு
எழுவோள் பிறப்பு வழுவின் றுணர்ந்து
தொழுதகை மாதவ துணிபொரு ளுணர்ந்தோய்
காயங் கரையினி யுரைத்ததை யெல்லாம்
வாயே யாகுதன் மயக்கற உணர்ந்தேன்
காந்தார மென்னுங் கழிபெரு நாட்டுப்
பூருவ தேயம் பொறைகெட வாழும்
அத்தி பதியெனும் அரசாள் வேந்தன்
மைத்துன னாகிய பிரம தருமன்
ஆங்கவன் றன்பால் அணைந்தற னுரைப்போய்
தீங்கனி நாவல் ஓங்குமித் தீவிடை
இன்றேழ் நாளில் இருநில மாக்கள்
நின்றுநடுக் கெய்த நீணில வேந்தே
பூமி நடுக்குறூஉம் போழ்தத் திந்நகர்
நாகநன் னாட்டு நானூறு யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்
இதன்பா லொழிகென இருநில வேந்தனும்
மாபெரும் பேரூர் மக்கட் கெல்லாம்
ஆவும் மாவுங் கொண்டுகழி கென்றே
பறையிற் சாற்றி நிறையருந் தானையோ
டிடவய மென்னும் இரும்பதி நீங்கி
வடவயின் அவந்தி மாநகர்ச் செல்வோன்
காயங் கரையெனும் பேரியாற் றடைகரைச்
சேயுயர் பூம்பொழிற் பாடிசெய் திருப்ப
எங்கோன் நீயாங் குரைத்தவந் நாளிடைத்

தங்கா தந்நகர் வீழ்ந்துகே டெய்தலும்
மருளறு புலவநின் மலரடி யதனை
அரசொடு மக்க ளெல்லாம் ஈண்டிச்
சூழ்ந்தனர் வணங்கித் தாழ்ந்துபல ஏத்திய
அருளறம் பூண்ட ஒருபே ரின்பத்து
உலகுதுயர் கெடுப்ப அருளிய அந்நாள்
அரவக் கடலொலி அசோதரம் ஆளும்
இரவி வன்மன் ஒருபெருந் தேவி
அலத்தகச் சீறடி அமுத பதிவயிற்று
இலக்குமி யென்னும் பெயர்பெற்றுப் பிறந்தேன்
அத்தி பதியெனும் அரசன் பெருந்தேவி
சித்திபுரம் ஆளுஞ் சீதரன் திருமகள்
நீல பதியெனும் நேரிழை வயிற்றில்
காலை ஞாயிற்றுக் கதிர்போற் றோன்றிய
இராகுலன் றனக்குப் புக்கேன் அவனொடு
பராவரு மரபினின் பாதம் பணிதலும்
எட்டிரு நாளிலிவ் விராகுலன் றன்னைத்
திட்டி விடமுணுஞ் செல்லுயிர் போனால்
தீயழல் அவனொடு சேயிழை மூழ்குவை
ஏது நிகழ்ச்சி ஈங்கின் றாகலின்
கவேர கன்னிப் பெயரொடு விளங்கிய
தவாக்களி மூதூர்ச் சென்றுபிறப் பெய்துதி
அணியிழை நினக்கோர் அருந்துயர் வருநாள்
மணிமே கலாதெய்வம் வந்து தோன்றி
அன்றப் பதியில் ஆரிருள் எடுத்துத்
தென்றிசை மருங்கிலோர் தீவிடை வைத்தலும்
வேக வெந்திறல் நாகநாட் டரசர்
சினமா சொழித்து மனமாசு தீர்த்தாங்கு
அறச்செவி திறந்து மறச்செவி யடைத்துப்
பிறவிப்பிணி மருத்துவன் இருந்தற முரைக்கும்
திருந்தொளி யாசனஞ் சென்றுகை தொழுதி
அன்றைப் பகலே உன்பிறப் புணர்ந்தீங்கு
இன்றியா னுரைத்த உரைதெளி வாயெனச்
சாதுயர் கேட்டுத் தளர்ந்துகு மனத்தேன்
காதலன் பிறப்புங் காட்டா யோவென

ஆங்குனைக் கொணர்ந்த அரும்பெருந் தெய்வம்
பாங்கிற் றோன்றிப் பைந்தொடி கணவனை
ஈங்கிவன் என்னும் என்றெடுத் தோதினை
ஆங்கத் தெய்வதம் வாரா தோவென
ஏங்கினள் அழூஉம் இளங்கொடி தானென்.

—மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

## குறிப்புரை

மணிமேகலை, தமிழில் அமைந்த ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய இவ்வைந்து நூல்களும் ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

கோவலனுக்கு மாதவி வயிற்றில் பிறந்த மகள் மணிமேகலை. இவள் வரலாற்றைக் கூறுவது இந்நூல். பாட்டுடைத் தலைவியின் பெயரே நூலுக்குமாயிற்று. மணிமேகலை துறவு என்று வேறொரு பெயரும் இந்நூலுக்குண்டு.

**நூல் அமைப்பு :** மணிமேகலை கதையைத் தொகுத்துக் கூறுவதான 'பதிகம்' என்பது நூலில் முதலில் அமைந்துள்ளது. இதில் விழாவறை காதை முதல் பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை ஈறாக முப்பது காதைகள் இடம் பெற்றுள்ளன. காதை என்பது கதை தழுவி வரும் நெடும் பாட்டாகும்.

இந்நூல் பௌத்த சமயக் கொள்கைகளைக் கூறுவதாகும். ஆயினும் அனைத்துச் சமயங்களுக்கும் ஏற்புடைய பொது அற நெறிகள் ஆங்காங்கே வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன.

'மணிமேகலை நூல் முழுவதையும் படித்தால் சிலப்பதிகாரக் கதை - வரலாறு - முற்றும்' என்பது இளங்கோவடிகள் கருத்து. அதனால், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனப்படும்.

**ஆசிரியர் :** மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் இதனை இயற்றிய ஆசிரியர் ஆவார். இவர் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்தவர்; மதுரையில் கூலவாணிகம் செய்தவர். இவருடைய சமயம் பௌத்தம். இவர் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்று கூறுவர்.

இளங்கோவடிகளும் இவரும் ஒரு காலப் புலவர்கள் என்று கூறுவர்.

கோவலன் - கண்ணகி வரலாற்றைச் சீத்தலைச்சாத்தனுர் கூறக் கேட்டு, இளங்கோவடிகள் சிலப்பதிகார நூலாக இயற்றினுர் என்பர்.

## பாடப்பகுதி

### பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை

**கதைச் சுருக்கம்:** இது மணிமேகலையில் ஒன்பதாவது காதையாகும். மணிமேகலா தெய்வத்தால் உவ வனத்தினின்றும் எடுத்துச் செல்லப்பெற்று மணிபல்லவத்தில் வைக்கப்பெற்ற மணிமேகலை அங்குத் தோன்றிய புத்த பீடிகையைக் கண்டு விம்மிதமுற்று இன்பக் கண்ணீர் வடித்து அதனை மும்முறை வலம் வந்து பணிந்து எழுந்தாள்; அப்பீடிகைக் காட்சியால் தன்பழம் பிறப்பில் நிகழ்ந்த செய்திகளை அறிந்தாள். அப்போது மணிமேகலை,

''மாதவ! உறுதிப்பொருளை உணர்ந்தோய்! கர்யங்கரையென்னும் ஆற்றங்கரையில் நீ சொல்லியவெல்லாம் உண்மையாதலை அறிந்தேன். காந்தாரமென்னும் நாட்டிலுள்ள பூருவ தேசத்தில் இடவயம் என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டு ஆளும் அத்திபதி என்னும் அரசனுடைய மைத்துனனுகிய பிரமதரும! நீ அவ்வரசனுக்கு அறம் உரைக்கையில் 'இச்சம்புத் தீவில் இன்றைக்கு ஏழாம் நாளில் பூகம்பம் உண்டாகும். அதனுல் இந்நகரும் நாகநாட்டில் நானூறு யோசனைப் பரப்பும் பாதலத்தில் வீழ்ந்தழியும்; ஆதலால் நீ இந்நகரைவிட்டு விரைவில் வேறு நகரம் புகுவாய்' என்று சொன்னுய். அவன் அந்நகரத்தாருடன் அந்நகரை நீங்கி, வடக்கேயுள்ள அவந்தி நகரத்தையடைதற்குச் செல்லுங்கால், இடையில் காயங்கரை என்னும் நதிக்கரையில் தங்கினுன்.

''நீ உரைத்தவாறே பூகம்பம் உண்டாகி இடவய நகரம் அழிந்தது. அதையறிந்த அரசனும் மற்றையோரும் உன்னைச் சரணடைந்து நிற்க, அவர்கட்கு முத்திவழியைக் கூறிக்கொண்டிருந்தாய். அப்பொழுது அசோதர நகரத்து அரசனுன இரவிவன்மன் என்பவன் தேவியான அமுதபதி என்பவள் வயிற்றிற் பிறந்து, இலக்குமி என்னும் பெயர் பெற்று, அத்திபதி என்னும் அரசனுக்கு நீலபதி என்பவன்பால் பிறந்த இராகுலன் என்பவனுக்கு மனைவியாகப் புகுந்தயான், என் கணவனோடு தருமங் கேட்டற் பொருட்டு வந்து உன்னை வணங்கினேன்.

''அப்போது நீ என்னை நோக்கி, 'இவ்விராகுலன் இற்றைக்குப் பதினாறும் நாளில் திட்டிவிடம் என்னும் பாம்பால் இறப்பான். நீ இவனோடு தீயிற்புகுவாய்; பின்பு காவிரிப்பூம்பட்டினத்திற் சென்று பிறப்பாய். அவ்விடத்தில் உனக்கு ஒரு துன்பம் நேரும். அப்போது மணிமேகலா தெய்வம் வந்து தோன்றி நள்ளிரவில் உன்னை எடுத்துக்கொண்டு சென்று காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கே கடலிலுள்ள சிறு தீவு ஒன்றில் வைத்துவிட்டுச் செல்லும். சென்ற பின் நீ ஆங்குள்ள புத்த பீடிகையைக்கண்டு தொழுவாய்; தொழுத வுடன் உனது முற்பிறப்பில் நிகழ்ந்த செய்திகளையறிந்து இன்று நான் சொன்ன மொழிகளையும் தெரிந்து கொள்வாய்'' என்று சொல்ல, ''என் காதலன் இன்னவாறு பிறப்பான் என்பதையும் தெரிவிக்கவேண்டும்'' என்று கேட்டேன். கேட்ட எனக்கு, ''உன்னைக்கொண்டு சென்ற தெய்வம் மீண்டுந்தோன்றி உனக்கு அதனைப் புலப்படுத்தும்'' என்று அருளிச்செய்தாய். அத்தெய்வம் வரவில்லையே'' என்று ஏங்கி அழுதுகொண்டிருந்தாள்.

## அருஞ்சொற்பொருள்

பீடிகை - புத்தபிரான் அமர்ந்து அறம் கூறிய ஆசனம்.

ஆங்கு - மணிபல்லவத்தில்; அதுகண்ட - புத்தபீடிகையைக் கண்ட; ஆயிழை - ஆய்ந்தெடுத்த அணிகளை உடையாவள் (மணிமேகலை); அறியாள் - தன்னை அறியாளாயினாள்; காந்தள் அம் செங்கை - காந்தள் மலர் போன்ற அழகிய சிவந்தகை; அதின் - அப்பீடிகையின்; இடமுறை - இடப்பக்கமாக இருந்து; கொடிமின் - மின் கொடி என மாற்றுக; முகில் - மேகம்; நுசுப்பு - இடை; அலச - வருந்த; வழுஇன்று - குற்றமின்றி, நன்றாக; காயங்கரை - ஒரு நதியின் பெயர்; வாயேயாகுதல் - உண்மை யாதல்; கழிபெரு - மிகப் பெரிய; பொறை - பாரம்; அவன் - அத்திபதி என்னும் அரசன்; நாவல் ஓங்குந்தீவு - சம்புத்தீவு; யோசனை - தொலைவு எல்லை; இதன்பால் ஒழிக - இந்நகரினின்றும் நீங்குக; ஆ - பசு; மா - பிற விலங்குகள்; நிறை அருந்தானை - பகைவரால் தடுத்து நிறுத்துதற்கரிய சேனை; இடவயம் - அத்திபதியின் நகரம்; சேய் உயர் - மிக உயர்ந்த; பாடி செய்து - பாடி வீடுகொண்டு தங்கி; எங்கோன் யாங்கு - எம் தலைவன் அவ்விடத்தே; மருள் - மயக்கம்; ஏத்திய - ஏத்த; அரவம் - ஒலி; அலத்தகச்சீறடி - செம்பஞ்சிக் குழம்பு தோய்ந்த சிறிய அடிகளையுடைய, அலத்தகம் - செம்பஞ்சிக் குழம்பு. இராகுலன் என்பது புத்தனுடைய புத்திரன் பெயர்.

புத்தனிடம் கொண்ட பக்தியினால் அப்பெயர் இவனுக்கு இடப் பட்டது. பராவரும் மரபு - வணங்கும் முறை ; எட்டு இருநாள் - பதினாறு நாள் ; திட்டிவிடம் - கண்ணில் விடமுடைய ஒரு பாம்பு ; கவேரகன்னி - கவேரகன்னி என்னும் பெண், காவிரியின் பெயர்; தவாக்களி - குறையாத களிப்புடைய ; மூதூர் - காவிரிப்பூம் பட்டினம் ; எய்துதி - அடைவாய் ; அருந்துயர் - உதயகுமரனால் மணிமேகலைக்கு உண்டாகக்கூடிய துன்பம் ; சினமாசு - கோப மாகிய குற்றம் ; மனமாசு - காமமும் மயக்கமும் ஆகிய குற்றம் ; அறச்செவி - அறத்தைக் கேட்டற்குரிய காது ; மறச்செவி - பாவச்செய்திகளைக் கேட்கும் காது ; பிறவிப்பிணி மருத்துவன் - புத்தன் ; தொழுதி - தொழுவாய் ; சா துயர் - இராகுலன் இறப்பான் எனும் துன்ப மொழி ; காதலன் - கணவன் ; பாங்கில் - பக்கத்தில் ; இளங்கொடி - மணிமேகலை. செங்கை - பண்புத் தொகை ; இறு நுசுப்பு - வினைத்தொகை ; வாரா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் ; முதுமை ஊர் - மூதூர், பண்புத்தொகை ; அணியிழை - அன் மொழித் தொகை ; அழூஉம் - சொல்லிசை அளபெடை; இளங்கொடி - அன்மொழித் தொகை.

# 8. திருத்தொண்டர் புராணம்

## புகழ்ச்சோழ நாயனார் புராணம்

குலகிரியின் கொடுமுடிமேல் கொடிவேங்கைக் குறியெழுதி
நிலவுதரு மதிக்குடைக்கீழ் நெடுநிலங்காத் தினிதளிக்கும்
மலர்புகழ்வண் டமிழ்ச்சோழர் வளநாட்டு மாமூதூர்
உலகில்வளர் அணிக்கெல்லாம் உள்ளுறையூ ராம்உறையூர். 1

அந்நகரில் பாரளிக்கும் அடலரச ராகின்றார்
மன்னுதிருத் தில்லைநகர் மணிவீதி அணிவிளக்கும்
சென்னிநீ டனபாயன் திருக்குலத்து வழிமுதலோர்
பொன்னிநதிப் புரவலனார் புகழ்ச்சோழர் எனப்பொலிவார். 2

ஒருகுடைக்கீழ் மணமகளை உரிமையினில் மணம்புணர்ந்து
பருவரைத்தோள் வென்றியினால் பார்மன்னர் பணிகேட்பத்
திருமலர்த்தும் பேருலகுஞ் செங்கோலின் முறைநிற்ப
அருமறைச்சை வந்தழைப்ப அரசளிக்கும் அந்நாளில். 3

பிறைவளருஞ் செஞ்சடையார் பேணுசிவா லயமெல்லாம்
நிறைபெரும்பூ சனைவிளங்க நீடுதிருத் தொண்டர்தமைக்
குறையிரந்து வேண்டுவன குறிப்பின்வழி கொடுத்தருளி
முறைபுரிந்து திருநீற்று முதல்நெறியே பாலிப்பார். 4

அங்கண்இனி துறையுநாள் அரசிறைஞ்ச வீற்றிருந்து
கொங்கரொடு குடபுலத்துக் கோமன்னர் திறைகொணரத்
தங்கள்குல மரபின்முதற் றனிநகராங் கருவூரில்
மங்கலநாள் அரசுரிமைச் சுற்றமுடன் வந்தணைந்தார். 5

வந்துமணி மதிற்கருவூர் மருங்கணைவார் வானவர்சூழ்
இந்திரன்வந் தமரர்புரி எய்துவான் எனஎய்திச்
சிந்தைகளி கூர்ந்தரனார் மகிழ்திருவா னிலைக்கோயில்
முந்துறவந் தணைந்திறைஞ்சி மொய்யொளிமா ளிகை
புகுந்தார். 6

மாளிகைமுன் அத்தாணி மண்டபத்தின் மணிபுனைபொற்
கோளரிஆ சனத்திருந்து குடபுலமன் னவர்கொணர்ந்த
ஒளிநெடுங் களிற்றின்அணி உலப்பில்பரி துலைக்கனகம்
நீளிடைவில் லிலகுமணி முதல்நிறையுந் திறைகண்டார். 7

திறைகொணர்ந்த அரசர்க்குச் செயலுரிமைத் தொழிலருளி
"முறைபுரியுந் தனித்திகிரி முறைநில்லா முரண்அரசர்
உறைஅரணம் உளவாகில் தெரிந்துரைப்பீர்" எனஉணர்வு
நிறைமதிநீ டமைச்சர்க்கு மொழிந்தருளி நிகழுநாள். 8

சென்றுசிவ காமியார் கொணர்திருப்பள் ளித்தாமம்
அன்றுசித றுங்களிற்றை அறஎறிந்து பாகரையும்
கொன்றஎறி பத்தர்எதிர் "என்னையுங்கொன் றருளும்" என
வென்றிவடி வாள்கொடுத்துத் திருத்தொண்டில்
மிகச்சிறந்தார். 9

விளங்குதிரு மதிக்குடைக்கீழ் வீற்றிருந்து பாரளிக்கும்
துளங்கொளிநீள் முடியார்க்குத் தொன்முறைமை
நெறிஅமைச்சர்
"அளந்ததிறை முறைகொணரா அரசன்உளன் ஒருவன்"
என
உளங்கொள்ளும் வகைஉரைப்ப உறுவியப்பால்
முறுவலிப்பார். 10

"ஆங்கவன்யார் ?" என் றருள "அதிகன் அவன்; அணித்தாகி
ஓங்கெயில்சூழ் மலைஅரணத் துள்ளுறைவான்" எனஉரைப்ப
"ஈங்குநுமக் கெதிர்நிற்கும் அரணுளதோ ? படைஎழுந்தப்
பாங்கரணந் துகளாகப் பற்றறுப்பீர்" எனப்பகர்ந்தார். 11

அடல்வளவர் ஆணையினல் அமைச்சர்களும் புறம்போந்து
கடலனைய நெடும்படையைக் கைவகுத்து மேற்செல்வார்
படர்வனமும் நெடுங்கிரியும் பயில்அரணும் பொடியாக
மிடலுடைநாற் கருவியுற வெஞ்சமரம் மிகவிளைத்தார். 12

வளவனுர் பெருஞ்சேனை வஞ்சிமலர் மிலைந்தேற
அளவில்அர ணக்குறும்பில் அதிகர்கோன் அடற்படையும்
உளநிறைவெஞ் சினந்திருகி உயர்காஞ்சி மிலைந்தேறக்
கிளர்கடல்கள் இரண்டென்ன இருபடையும் கிடைத்தனவால். 13

கயமொடு கயமெதிர் குத்தின ;
அயமுடன் அயமுனை முட்டின ;
வயவரும் வயவரு முற்றனர் ;
வியனமர் வியலிட மிக்கதே. 14

மலையொடு மலைகள் மலைந்தென
அலைமத அருவி கொழிப்பொடு
சிலையினர் விசையின் மிசைத்தெறு
கொலைமத கரிகொலை யுற்றவே. 15

சூறை மாருதம் ஒத்தெதிர்
ஏறு பாய்பரி வித்தகர்
வேறு வேறு தலைப்பெய்து
சீறி ஆவி செகுத்தனர். 16

மண்டு போரின் மலைப்பவர்
துண்ட மாயிட உற்றெதிர்
கண்டர் ஆவி கழித்தனர்
உண்ட சோறு கழிக்கவே. 17

வீடி ஞர்உட லிற்பொழி
நீடு வார்குரு திப்புனல்
ஓடும் யாறென ஒத்தது ;
கோடு போல்வ பிணக்குவை. 18

வானி லாவு கருங்கொடி
மேனி லாவு பருந்தினம்
ஏனை நீள்கழு கின்குலம்
ஆன ஊணொ டெழுந்தவே. 19

வரிவிற் கதைசக் கரமுற் கரம்வாள்
சுரிகைப் படைசத் திகழுக் கடைவேல்
எரிமுத் தலைகப் பணமெற் பயில்கோல்
முரிவுற் றனதுற் றனமொய்க் களமே. 20

வடிவே லதிகன் படைமா ளவரைக்
கடிசூழ் அரணக் கணவாய் நிரவிக்
கொடிமா மதில்நீ டுகுறும் பொறையூர்
முடிநே ரியனுர் படைமுற் றியதே. 21

முற்றும் பொருசே னைமுனைத் தலையில்
கற்றிண் புரிசைப் பதிகட் டழியப்
பற்றுந் துறைநொச் சிபரிந் துடையச்
சுற்றும் படைவீ ரர்துணித் தனரே. 22

மாறுற் றவிறற் படைவா ளதிகன்
நூறுற் றபெரும் படைநூ ழில்படப்
பாறுற் றஎயிற் பதிபற் றறவிட்(டு)
ஏறுற் றனன்ஓ டிஇருஞ் சுரமே. 23

அதிகன் படைபோர் பொருதற் றதலைப்
பொதியின் குவைஎண் ணிலபோ யினபின்
நிதியின் குவைமங் கையர்நீள் பரிமா
எதிருங் கரிபற் றினர்எண் ணிலரே. 24

அரண்முற் றிஎறிந் தஅமைச் சர்கள்தாம்
இரணத் தொழில்விட் டெயில்சூழ் கருவூர்
முரணுற் றசிறப் பொடுமுன் னினர்நீள்
தரணித் தலைவன் கழல்சார் வுறவே. 25

மன்னுங் கருவூர் நகர்வா யிலின்வாய்
முன்வந் தகருந் தலைமொய் குவைதான்
மின்னுஞ் சுடர்மா முடிவேல் வளவன்
தன்முன் புகொணர்ந் தனர்தா னையுளோர். 26

மண்ணுக் குயிரா மெனும்மன் னவனூர்
எண்ணிற் பெருகுந் தலையா வையினும்
நண்ணிக் கொணருந் தலையொன் றினடுக்
கண்ணுற்ற தொர்புன் சடைகண் டனரே. 27

கண்டபொழு தேநடுங்கி மனங்கலங்கிக் கைதொழுது
கொண்டபெரும் பயத்தினுடன் குறித்தெதிர்சென்
றதுகொணர்ந்த
திண்டிறலோன் கைத்தலையில் சடைதெரியப் பார்த்தருளிப்
புண்டரிகத் திருக்கண்ணீர் பொழிந்திழியப் புரவலனூர். 28

முரசுடைத்திண் படைகொடுபோய் முதலமைச்சர்
முனைமுருக்கி
உரைசிறக்கும் புகழ்வென்றி ஒன்றொழிய ஒன்றுமல்
திரைசரித்த கடலுலகில் திருநீற்றின் நெறிபுரந்தியான்
அரசளித்த படிசால அழகிதென அழிந்தயர்வார். 29

''தார்தாங்கிக் கடன்முடித்த சடைதாங்குந் திருமுடியார்
நீர்தாங்குஞ் சடைப்பெருமான் நெறிதாங்கண் டவரானூர்
சீர்தாங்கும் இவர்வேணிச் சிரந்தாங்கி வரக்கண்டும்
பார்தாங்க இருந்தேனே? பழிதாங்கு வேன்''என்றார். 30

என்றருளிச் செய்தருளி இதற்கிசையும் படிதுணிவார்
நின்றநெறி அமைச்சர்க்கு ''நீள்நிலங்காத் தரசளித்து
மன்றில்நடம் புரிவார்தம் வழித்தொண்டின் வழிநிற்ப
வென்றிமுடி என்குமரன் தனைப்புனைவீர்'' எனவிதித்தார். 31

அம்மாற்றங் கேட்டழியும் அமைச்சரையும் இடரகற்றிக்
கைம்மாற்றுஞ் செயல்தாமே கடனாற்றுங் கருத்துடையார்
செம்மார்க்கந் தலைநின்று செந்தீமுன் வளர்ப்பித்துப்
பொய்ம்மாற்றுந் திருநீற்றுப் புனைகோலத்
தினிற்பொலிந்தார். 32

கண்டசடைச் சிரத்தினையோர் கனகமணிக் கலத்தேந்திக்
கொண்டுதிரு முடித்தாங்கிக் குலவும்எரி வலங்கொள்வார்
அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்தும் எடுத்தோதி
மண்டுதழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புக்கார். 33

புக்கபொழு தலர்மாரி புவிநிறையப் பொழிந்திழிய
மிக்கபெரு மங்கலதூ ரியம்விசும்பின் முழக்கெடுப்பச்
செக்கர்நெடுஞ் சடைமுடியார் சிலம்பலம்பு சேவடியின்
அக்கருணைத் திருநிழற்கீழ் ஆராமை அமர்ந்திருந்தார். 34

—சேக்கிழார்

## குறிப்புரை

'திருத்தொண்டர் புராணம்' என்பது, சிறந்த தொண்டர்களின் (அடியார்களின்) பழமையான வரலாறு எனப்பொருள் படும். சைவ நெறிபோற்றிச் சிவத்தொண்டு செய்து வாழ்ந்த தொண்டர்களின் வரலாற்றைக் கூறுவது திருத்தொண்டர் புராணம். இத்தொண்டர்கள், 'அடியார்கள்' என வழங்கப் பெற்றனர். ஒழுக்க நெறிகளில் சிறந்து விளங்கிய இவர்கள் 'பெரியார்கள்' என்றழைக்கப்படுவாராயினர். இப்பெரியார்கள் வரலாற்றைக் கூறுவதால் இந்நூல் 'பெரியர் புராணம்' எனப்பெயர் பெற்றுப் பின்னர்ப் 'பெரிய புராணம்' என வழங்குவதாயிற்று.

நூலாசிரியராகிய சேக்கிழார் இந்நூலுக்கிட்ட பெயர் **திருத்தொண்டர் புராணம்** என்பதாகும்.

இந்நூல் இரண்டு காண்டங்களாகவும், பதின்மூன்று சருக்கங்களாகவும் வகுத்து அமைக்கப் பெற்றுள்ளது. முதற் காண்டத்தில் ஐந்து சருக்கங்களும், இரண்டாங்காண்டத்தில் எட்டுச் சருக்கங்களும் உள்ளன. இதில் மொத்தம் 4286 பாட்டுகள் உள.

**ஆசிரியர் :** இந்நூலை இயற்றியவர் சேக்கிழார். இவர் தொண்டை நாட்டில் புலியூர்க் கோட்டத்தில் குன்றத்தூர் வள நாட்டுப் பகுதியில் அடங்கிய குன்றத்தூரில் பிறந்தவர். **பெற்றோர்,** வெள்ளியங்கிரி முதலியார்—அழகாம்பிகை என்பர். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பது. உத்தமசோழப் பல்லவர் என்றும், தொண்டர்சீர் பரவுவார் என்றும் இவருக்குச்சிறப்புப் பெயர்கள் வழங்கின. 'மாதேவடிகள்' என்ற சிறப்புப் பெயரும் இவருக்கு வழங்கியதாகக் கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம்.

சேக்கிழார் என்பது குடிப் பெயர். 'சேவூர்க்கிழார்' என்பதே சேக்கிழார் என மருவி வழங்குகிறது என்பர். சேவூர் என்பது தொண்டை நாட்டிலுள்ள ஓர் ஊர்.

சோழ நாடாண்ட இரண்டாம் குலோத்துங்க சோழனை அநபாய மன்னன், சேக்கிழாரைத் தமது அமைச்சராக்கிப் பெருமை பெற்றான், அம்மன்னன் வேண்டுகோளுக்கிணங்கவே சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் இயற்றியருளினார்.

தில்லையில் அம்பலவாணர் திருக்கோயிலில் இறைவன் திருமுன்பு 'உலகெலாம்' என்ற சொற்றொடர் உருவிலியாக விண்ணில் ஒலிக்கக்கேட்டு, அதனையே முதற்சீராக அமைத்து நூல் பாடினார் சேக்கிழார் என்பது வரலாறு.

சிவத்தொண்டில் சிறந்து நின்ற அறுபத்து மூன்று அடியார்களைப் பற்றிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய 'திருத்தொண்டத் தொகை'யையும், அதனைப் பின்பற்றி நம்பியாண்டார் நம்பிகள் செய்த 'திருத்தொண்டர் திருவந்தாதி'யையும் முதல் நூல்களாகக் கொண்டு சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடினார். பன்னிரண்டு சைவத் திருமுறைகளுள் இந்நூல் பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்படுகிறது.

உமாபதிசிவாசாரியர் 'சேக்கிழார் புராணம்' பாடியும், மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் 'சேக்கிழார் பிள்ளைத்தமிழ்' பாடியும் சேக்கிழாரைச் சிறப்பித்துள்ளனர். இவர் காலம், அநபாய மன்னன் ஆண்டகாலப்பகுதியான கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு ஆகும்.

புகழ்ச்சோழ நாயனார் வரலாறு, திருத்தொண்டர் புராணத்தில் எட்டாவது பகுதியான 'பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கத்தில் உள்ளது.

உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சோழமரபில் வந்த புகழ்ச்சோழர் என்பவர் சைவநெறியைப் போற்றிச் சிவனடியார்பால் காட்டிய அன்பும் செயலும் இவர் வரலாற்றில் கூறப்படுகின்றன.

## அருஞ்சொற்பொருள்

1. குலகிரி - இமயமலை; வேங்கைக்குறி - புலிக்கொடி; நிலவு - ஒளி; அணி - அழகு; உள்ளுறை - இருப்பிடம்.

2. அடல் - வலிமை; தில்லைநகர் - சிதம்பரம்; பொன்னி - காவிரி.

3. பணிகேட்டல் - ஏவல் செய்தல்; திருமலர்த்தும் பேருலகம் - செல்வச்செழிப்புற்ற பெரிய இவ்வுலகம்.

4. புகழ்ச்சோழர் சிவாலயங்களில் பூசனைவிளங்கச் செய்தார்; சிவனடியார்களையடைந்து அவர்களைப் போற்றி, அவர்கள் விரும்புவனவற்றைக் குறிப்பறிந்து வழங்கினார்; திருநீற்றுநெறி பெருகுமாறு பாதுகாத்தார்.

5. குடபுலம் - மேற்குத்திசைப்பகுதி ; திறை - கப்பம்.

6. வானவர் சூழ இந்திரன் அமராவதி நகரை யடைந்தது போல, அமைச்சர் முதலானோர் புடைசூழப் புகழ்ச் சோழர் கருவூரை யடைந்தார். இறைஞ்சி - வணங்கி. இதில் உள்ளது உவமையணி.

7. அத்தாணி மண்டபம் - அரசிருக்கை மண்டபம் (கொலு மண்டபம்); கோளரி ஆசனம் - அரியணை (சிம்மாசனம்); களிற்றின் அணி - யானைக் கூட்டம் ; பரி - குதிரை ; துலைக் கனகம் - துலையி லிட்டு நிறுக்குமளவுள்ள பொன்; துலைக்கோல் - தராசு; கனகம் - பொன்; மணி - நவமணிகள் ; திறை - கப்பம்.

8. செயல் உரிமைத் தொழில் - அவரவர் செய்தற்கு உரிமை யுடைய அரசுரிமைத் தொழில் ; முரண் - ஆளுகைக்கு அடங்காது மாறுபட்ட ; அரணம் - காவல் இடம்.

9. சிவகாமியார் - சிவகாமியாண்டார் என்னும் அடியவர் ; திருப்பள்ளித்தாமம் - இறைவனுக்குச் சூட்டுதற்குரிய பூ மாலை ; எறிந்து - கொன்று ; எறிபத்தர் - எறிபத்தர் எனும் அடியவர்.

10. உறுவியப்பு - மிக்க வியப்பு ; உறு என்பது உரிச்சொல்; முறுவலித்தல் - புன் முறுவல் பூத்தல்.

11. எயில் - மதில் ; பற்று அறுப்பீர் - முற்றும் அழிப்பீர்.

12. வளவர் - சோழர் ; புறம் போந்து - வெளியே வந்து ; கை வகுத்து - அணிவகுத்து ; மேற் செல்லல் - போர் மேற் செல்லுதல்; நாற்கருவி - நான்குவகைப் படைகள்; (யானை, குதிரை, தேர், ஆள்).

13. வஞ்சி மலர் மிலைந்து - வஞ்சி மாலை சூடி போர் மேற் செல்வோர் சூடுதல் வஞ்சிமாலையாகும். குறும்பில் - அரணிருக்கும் ஊரில் ; காஞ்சி - காஞ்சி மாலை. தம் மேல் வரும் போர்ப் படையை எதிர்க்கும் வீரர்கள் சூடும் மாலை காஞ்சிமாலையாகும். கிடைத்தன - நெருங்கின. இதில் உள்ளது உவமையணி.

14. கயம் - யானை ; அயம் - குதிரை ; வயவர் - வீரர் ; வியல் இடம் - அகன்ற இடம் (போர்க்களம்).

15. சிலை - வில்; விசை - வேகம்; மிசை - மேல்; கரி - யானை.

16. சூறை மாருதம் - சூறாவளி; பரி வித்தகர் - குதிரை வீரர்கள்; செகுத்தனர் - அழித்தனர்.

17. கண்டர் - போர் வீரர்; உண்ட சோறு கழித்தல் - செஞ்சோற்றுக் கடன் கழித்தல்.

18. வீடினார் - இறந்தவர்; குருதி - இரத்தம்; கோடு - மலை அல்லது கரை.

19. மேனிலாவு - மேல் + நிலாவு = வானத்தில் பறக்கும்; ஊண் - உணவு (இங்கு மாமிசம் என்னும் பொருள் கொள்க).

20. முற்கரம் - சம்மட்டி; சுரிகைப்படை - சிறுசூலம்; சக்தி - வேல்; கப்பணம் - இரும்பினால் யானை நெருஞ்சிமுள் வடிவாகச் செய்த ஒரு வகைப் படை.

21. மாள - அழிய.

22. கற்றிண் புரிசை - கல் திண் புரிசை - வலிமைமிக்க மதில்.

23. நூறுற்ற பெரும்படை - பகைவரை அழித்த பெரும் படை; நூழில்பட - கொல்லப்பட; பாறுற்ற எயிற்பதி - அழிவுற்ற தனது மதில் சூழ்ந்த நகரை; சுரம் - காடு.

24. போர் பொருது அற்ற தலைப்பொதியின் குவை - போர் செய்து, வெட்டுண்ட தலைப்பொதிகளின் (மூடைகளின்) கூட்டம்; நிதியின் குவை - செல்வக் குவியல்.

25. இரணத் தொழில் - போர்த் தொழில்; நீள் தரணித் தலைவன் - நீண்ட உலகத்தை ஆளும் அரசனான புகழ்ச் சோழன்.

26. குவை - கூட்டம்.

27. புன்சடை - சிறுசடை.

28. புண்டரிகம் - தாமரை மலர்; புரவலனார் - அரசர்.

29. புகழ்வென்றி ஒன்று ஒழிய ஒன்றுமல் - புகழ் வெற்றி ஒன்று தவிர வேறொரு பயனும் பெறாமல்; புரந்து - போற்றி.

30. வேணி - சடை.

31. மன்றில் நடம்புரிவார் - சிவபெருமான்.

32. மாற்றம் - சொல்; கைம்மாற்றும் செயல் - தமக்கு நேர்ந்த சிறுமையை மாற்றும் செயலை.

33. கனகம் - பொன்; கலம் - பாத்திரம்.

34. மங்கல தூரியம் - மங்கல ஒலி; சிலம்பு அலம்பு - சிலம்பு ஒலிக்கும்; ஆராமை - நீங்காது.

# 9. திருவிளையாடற்புராணம்

## திருவாலவாய்க் காண்டம்

### சங்கப் பலகை தந்த படலம்

வேடுரு வாகி மேரு வில்லிதன் நாமக் கோலெய்
தாடம ராடித் தென்னன் அடுபகை துரந்த வண்ணம்
பாடினஞ் சங்கத் தார்க்குப் பலகைதந் தவரோ டொப்பக்
கூடிமுத் தமிழின் செல்வம் விளக்கிய கொள்கை சொல்வாம். 1

### பிரமன் அசுவமேத யாகம் செய்தல்

வங்கிய சேக ரன்கோல் வாழுநாண் மேலோர் வைகற்
கங்கையந் துறைசூழ் கன்னிக் கடிமதிற் காசி தன்னிற்
பங்கய முளரிப் புத்தேள் பத்துவாம் பரிமா வேள்வி
புங்கவர் மகிழ்ச்சி தூங்க மறைவழி போற்றிச் செய்தான். 2

### பிரமன் தன்தேவியர் மூவருடன் கங்கைக்கு நீராடச் செல்லல்

நிரப்பிய வழிநாள் நன்னீர் ஆடுவான் நீண்ட வீணை
நரப்பிசை வாணி சாவித் திரியெனு நங்கை வேத
வரப்பிசை மநுவாங் காயத் திரியெனு மடவா ரோடும்
பரப்பிசைக் கங்கை நோக்கிப் படருவான் படரு மெல்லை, 3

### நாமகள் காலந்தாழ்த்தி வருதலும் சினங்கொள்ளுதலும்

நானவார் குழலி னரம் மூவருள் நாவின் செல்வி
வானவா றியங்கும் விஞ்சை மாதரான் ஒருத்தி பாடுங்
கானவா றுள்ளம் போக்கி நின்றனள் கமல யோனி
யானவா லறிவன் ஏகி யந்நதிக் கரையைச் சேர்ந்தான். 4

நாமகள் வரவு தாழ்ப்ப நங்கைய ரிருவ ரோடுந்
தாமரைக் கிழவன் மூழ்கித் தடங்கரை யேறு மெல்லைப்
பாமகள் குறுகி யென்னை யன்றிநீ படிந்த வாறென்
னுமென வெகுண்டாள் கேட்ட வம்புயத் தண்ணல்
[சொல்வான். 5

## பிரமன் நாமகளைச் சபித்தலும் நாமகள் வருத்தமும்

குற்றநின் மேல தாக நம்மைநீ கோபங் கொள்வ
தெற்றென இனைய தீங்கை எண்ணறு மாக்கள் தோற்றம்
உற்றனை ஒழித்தி யென்று உரைத்தனன் சாப மேற்கும்
பொற்றொடி மடந்தை யஞ்சிப் புலம்புகொண் டவலம்
[பூண்டாள். 6

ஊனிடர் அகன்றோய் உன்று ருயிர்த்துணை யாவே னிந்த
மானிட யோனிப் பட்டு மயங்குகோ வென்ன வண்டு
தேனிடை யழுந்தி வேதஞ் செப்புவெண் கமலச் செல்வி
தானிட ரகல நோக்கிச் சதுர்முகத் தலைவன் சாற்றும். 7

## பிரமன் மதுரையில் நாற்பத்தெட்டுப் புலவர்கள் பிறக்க அருளுதல்

முகிழ்தரு முலைநின் மெய்யா முதலெழுத் தைம்பத்
[தொன்றில்
திகழ்தரும் ஆகா ராதி ஹாகார மீருச் செப்பிப்
புகழ்தரு நாற்பத் தெட்டும், நாற்பத்தெண் புலவ ராகி
அகழ்தரு கடல்சூழ் ஞாலத் தவதரித் திடுவ வாக. 8

## அகரத்திற்குத் தலைவராகச் சோமசுந்தரக் கடவுள் தோன்றுதலும் சங்கப் புலவராதலும்

அத்தகு வருண மெல்லாம் ஏறிநின் றவற்ற வற்றின்
மெய்த்தகு தன்மை யெய்தி வேறுவே றியக்கந் தோன்ற
உய்த்திடும் அகாரத் திற்கு முதன்மையா யொழுகு நாதர்
முத்தமிழ் ஆல வாயெம் முதல்வரம் முறையான் மன்றோ. 9

தாமொரு புலவ ராகித் திருவுருத் தரித்துச் சங்க
மாமணிப் பீடத் தேறி வைகியே நாற்பத் தொன்ப
தாமவ ராகி யுண்ணின் றவரவர்க் கறிவு தோற்றி
ஏமுறப் புலமை காப்பா ரென்றனன் கமலப் புத்தேள். 10

## நாற்பத்தெட்டு எழுத்துகளும் வேறு வேறு மக்களாய்த் தோன்றிப் புலமை பெறுதல்

*அக்கர நாற்பத் தெட்டும் அவ்வழி வேறு வேறு*
*மக்களாய்ப் பிறந்து பன்மாண் கலைகளின் வகைமை தேர்ந்து*
*தொக்கவா ரியமும் ஏனைச் சொற்பதி னெட்டும் ஆய்ந்து*
*தக்கதென் கலைநுண் தேர்ச்சிப் புலமையில் தலைமை*
*[சார்ந்தார்.* **11**

*கழுமணி வயிரம் வேய்ந்த கலன்பல வன்றிக் கண்டிக்*
*கொழுமணிக் கலனும் பூணுங் குளிர்நிலா நீற்று மெய்யர்*
*வழுவறத் தெரிந்த செஞ்சொன் மாலையா லன்றி யாய்ந்த*
*செழுமலர் மாலை யானுஞ் சிவார்ச்சனை செய்யு நீரார்.* **12**

## சோமசுந்தரக் கடவுள் மதுரையை நோக்கி வருதல்

*புலந்தொறும் போகிப் போகிப் புலமையால் வென்று*
*[வென்று*
*மலர்ந்ததண் பொருனை நீத்த வளங்கெழு நாட்டில் வந்து*
*நிலந்தரு திருவி னன்ற நிறைநிதிச் செழியன் செங்கோல்*
*நலந்தரு மதுரை நோக்கி நண்ணுவார் நண்ணு மெல்லை.* **13**

*பற்பல கலைமாண் தேர்ச்சிப் பனுவலின் பயனாய் நின்ற*
*அற்புத மூர்த்தி எந்தை ஆலவாய் அடிக ளங்கோர்*
*கற்பமை கேள்வி சான்ற கல்வியின் செல்வ ராகிச்*
*சொற்பதங் கடந்த பாதம் இருநிலந் தோய வந்தார்.* **14**

*அவ்விடை வருகின் றாரை நோக்கிநீ ராரை நீவிர்*
*எவ்விடை நின்றும் போது கின்றனிர் என்ன வன்னார்*
*வெவ்விடை யனையீர் யாங்கள் விஞ்சைய ரடைந்தோர்*
*[பாவம்*
*வெளவிடு பொருனை நாட்டின் வருகின்றே மென்ன லோடும்.* **15**

## சங்கப் புலவர்கள் இறைவனை மதுரைக்கு அழைத்தல்

*தனிவரு புலவர் நீவிர் தண்டமி ழால வாயெங்*
*கனிவரு கருணை மூர்த்தி கனைகழ லிறைஞ்சல் வேண்டும்*
*இனிவரு கென்ன நீரே யெங்களுக் களவில் கோடி*
*துனிவரு வினைகள் தீர்க்குஞ் சுந்தரக் கடவு ளென்றார்.* **16**

## இறைவன் மறைதலும், புலவர்கள் வணங்குதலும்

மறையினு ளெழுகும் பன்மாண் கலைகள்போல் மாண்ட [கேள்வித்
துறையினு ளெழுகுஞ் சான்றோர் சூழமீண் டேகிக் கூடற்
கறையினுர் கண்டத் தாரைப் பணிவித்துக் கரந்தார் ஒற்றைப்
பிறையினுர் மகுடந் தோற்ரு தறிஞராய் வந்த பெம்மான். 17

விம்மித மடைந்து சான்றோர் விண்ணிழி விமான மேய
செம்மலை வேறு வேறு செய்யுளாற் பரவி யேத்திக்
கைம்மலை யுரியி ளுர்தங் கால்தொழு திறைஞ்சி மீண்டு
கொய்ம்மலர் வாகைச் செவ்வேற் செழியனைக் குறுகிக் [கண்டார். 18

## பாண்டியன் புலவர்களைப் போற்றுதல்

மறமலி நேமிச் செங்கோன் மன்னவன் வந்த சான்றோர்
அறமலி கேள்வி நோக்கி அவைக்களக் கிழமை நோக்கித்
திறமலி யொழுக்க நோக்கிச் சீரியர் போலு மென்னு
நிறைமலி யுவகை பூத்த நெஞ்சினு னிதனைச் செய்தான். 19

திங்களங் கண்ணரி வேய்ந்த செக்கரஞ் சடில நாதன்
மங்கலம் பெருகு கோயில் வடகுட புலத்தின் மாடோர்
சங்கமண் டபமுண் டாக்கித் தகைமைசால் சிறப்பு நல்கி
அங்கமர்ந் திருத்தி ரென்ன இருத்தினுன் அறிஞர் தம்மை. 20

## சங்கப் புலவர்கள் பழைய புலவர்களை வெல்லுதலும் சோமசுந்தரக் கடவுளை அடைந்து வேண்டுதலும்

வண்டமிழ் நாவி னுர்க்கு மன்னவன் வரிசை நல்கக்
கண்டுளம் புழுங்கி முன்னைப் புலவரக் கழகத் தோரை
மண்டினர் மூண்டு மூண்டு வாதுசெய் தாற்றன் முட்டிப்
பண்டைய புலனுந் தோற்றுப் படருழந் தெய்த்துப் போனுர். 21

இனையர்போல் வந்து வந்து மறுபுலத் திருக்குங் கேள்வி
வினைஞரு மதமேற் கொண்டு வினுவ்வினுய் வாதஞ் செய்து
மனவலி யிளைப்ப வென்று வைகுவோ ரொன்றை வேண்டிப்
புனையிழை பாக நீங்காப் புலவர்மு னண்ணி னுரே. 22

### சங்கப் பலகை வேண்டல்

முந்துநூன் மொழிந்தார் தம்மை முறைமையால் வணங்கி
[யெம்மை
வந்துவந் தெவரும் வாதஞ் செய்கின்றார் வரிசை யாக
அந்தமில் புலமை தூக்கி யளப்பதா யெம்ம னோர்க்குத்
தந்தருள் செய்தி சங்கப் பலகையொன் றென்று தாழ்ந்தார். 23

### சிவபெருமான் சங்கப் பலகை அளித்தல்

பாடிய பாணற் கன்று வலியவே பலகை யிட்டார்
பாடிய புலவர் வேண்டிற் பலகைதந் தருளார் கொல்லோ
பாடிய புலவ ராகும் படியொரு படிவங் கொண்டு
பாடிய புலவர் காணத் தோன்றினர் பலகை யோடும். 24

சதுரமா யளவி ரண்டு சாணதிப் பலகை யம்ம
மதியினும் வாலி தாகு மந்திர வலியதாகும்
முதியநும் போல்வார்க் கெல்லா முழம் வளர்ந் திருக்கை
[நல்கும்
இதுநுமக் களவு கோலா யிருக்குமென் றியம்பி ஈந்தார். 25

### புலவர்கள் சங்கப் பலகையைப் பெற்றுப் பூசித்து ஏறுதல்

நாமக ளுருவாய் வந்த நாவலர் தமக்கு வெள்ளைத்
தாமரை யமளி தன்னைப் பலகையாத் தருவ தென்னக்
காமனை முனிந்தார் நல்கக் கைக்கொடு களிறு தாங்கும்
மாமணிக் கோயி றன்னை வலைந்துதங் கழகம் புக்கார். 26

நாறுபூந் தாம நாற்றி நறும்பனி தோய்ந்த சாந்தச்
சேறுவெண் மலர்வெண் டூசு செழும்புகை தீப மாதி
வேறுபல் வகையாற் பூசை வினைமுடித் திறைஞ்சிக் கீரன்
ஏறினன் கபில னோடு பரணனு மேறி னானே. 27

### சங்கப் பலகை புலவர்க்கெல்லாம் இடமளித்தல்

இருங்கலை வல்லோ ரெல்லாம் இம்முறை ஏறி யேறி
ஒருங்கினி திருந்தார் யார்க்கும் ஒத்திடங் கொடுத்து நாதன்
தருஞ்சிறு பலகை யொன்றே தன்னுரை செய்வோர்க்
[கெல்லாஞ்
சுருங்கிநின் றகலங் காட்டித் தோன்றுநூல் போன்ற தன்றே. 28

## சங்கப் புலவர்களின் பெருமையும் பாக்களின் சிறப்பும்

மேதகு சான்றோர் நூலின் விளைபொருள் விளங்கத் தம்மில்
ஏதுவு மெடுத்துக் காட்டு மெழுவகை மதமுங் கூறும்
போதவை தெளிந்த கிள்ளை பூவையே புறம்பு போந்து
வாதுசெய் வார்கள் வந்தான் மறுத்துநேர் நிறுத்து மன்னோ. 29

ஆய வாறெண் புலவரும் ஆய்ந்துணர்
பாய கேள்விப் பயன்பெற மாட்சியால்
தூய பாடல் தொடங்கினர் செய்துகொண்
டேய வாறிருந் தாரந்த வெல்லைவாய். 30

பலருஞ் செய்த பனுவலு மாண்பொருண்
மலருஞ் செல்வமுஞ் சொல்லின் வளமையுங்
குலவுஞ் செய்யுட் குறிப்புமொத் தோன்றியே
தலைம யங்கிக் கிடந்தவத் தன்மையால். 31

## புலவர்களுக்குள் மாறுபாடு தோன்றுதல்

வேறு பாடறி யாது வியந்துநீர்
கூறு பாட லிதுவென்றுங் கோதிலென்
தேறு பாட லிதுவென்றுஞ் செஞ்செவே
மாறு பாடுகொண் டார்சங்க வாணரே. 32

## இறையனார் புலவராய்த் தோன்றுதல்

மருளு மாறு மயக்கற வான்பொருள்
தெருளு மாறுஞ் செயவல்ல கள்வர்சொற்
பொருளு மாமது ரேசர் புலவர்முன்
அருளு நாவல ராய்வந்து தோன்றினர். 33

## புலவர்கள் தத்தம் பாடல்களை இறைவர்முன் வைத்தலும் இறைவன் தேர்ந்தெடுத்தலும்

வந்த நாவலர் வந்திக்கு நாவலர்
சிந்தை யாகுலஞ் செய்ய மயக்குறும்
பந்த யாப்பைக் கொணர்கெனப் பாவலர்
எந்தை ஈங்கிவை என்றுமுன் இட்டனர். 34

தூய சொல்லும் பொருளின் தொடர்ச்சியும்
ஆய நாவலர் அவ்வவர் தம்முது
வாய பாடல் வகைதெரிந் தவ்வவர்க்
கேய வேயெடுத் தீந்தனர் என்பவே. 35

## இறைவனுர் புலவர்கள் நடுவில் சங்கப் பலகையில் இருத்தல்

வாங்கு சங்கப் புலவர் மனங்களித்
தீங்கு நீரெம ரோடும் ஒருத்தராய்
ஓங்கி வாழ்திரென் றுல்லெனத் தங்களைத்
தாங்கு செம்பொன் தவிசில் இருத்தினர். 36

பொன்னின் பீடிகை என்னும்பொன் னுரமேல்
துன்னு நாவலர் சூழ்மணி யாகவே
மன்னி னுர்நடு நாயக மாமணி
என்ன வீற்றிருந் தார்மது ரேசரே. 37

நதிய ணிந்தவர் தம்மொடு நாற்பத்தொன்
பதின்ம ரென்னப் படும்புல வோரெலாம்
முதிய வான்றமிழ் பின்னு முறைமுறை
மதிவி ளங்கத் தொடுத்தவண் வாழுநாள். 38

## வங்கியசேகரன் சிவபதம் அடைதல்

வங்கிய சேகரன் வங்கிய சூடா மணிதன்னைப்
பொங்கிய தேசார் முடிபுனை வித்துப் புவிநல்கி
இங்கியல் பாச வினைப்பகை சாய விருந்தாங்கே
சங்கியல் வார்குழை யானடி யொன்றிய சார்புற்ருன். 39

—பரஞ்சோதி முனிவர்

## குறிப்புரை

மதுரையில் கோயில் கொண்டுள்ள சோமசுந்தரப் பெருமான், அடியார்களின் பொருட்டுப் பற்பல காலங்களில் செய்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் பற்றிக் கூறுவது திருவிளையாடற்புராணம்.

மக்களால் செய்தற்கரிய செயல்களை எல்லாம் எளிதாக விளையாட்டுப் போலச் செய்து, அடியார்கட்கு நன்மை விளைவித்த செயல்களானமையால், சோமசுந்தரப் பெருமான் செய்தவை, 'திருவிளையாடல்' எனப் பெயர்பெற்றன.

வடமொழியில் உள்ள 'ஆலாசிய மகாத்துமியம்' என்னும் நூலில் கூறப்பட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழில் இந்நூல் எழுந்தது.

இந்நூல் மதுரைக் காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க் காண்டம் என்னும் மூன்று காண்டங்களைக் கொண்டது.

**நூலாசிரியர்:** இதனை இயற்றியவர் பரஞ்சோதி முனிவர். இவர் சோழநாட்டுத் திருமறைக்காட்டில் (வேதாரணியத்தில்) பிறந்தவர்; தந்தை மீனாட்சி சுந்தர தேசிகர்; வேளாளர் குலம்; சைவ சமயம்; காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு. இவர் இயற்றிய வேறு நூல்கள்: மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா, வேதாரணிய புராணம்.

## அருஞ்சொற்பொருள்

1. மேரு வில்லி - மேரு மலையை வில்லாகக் கொண்ட சிவபெருமான்; தன் நாமக்கோல் எய்து - தனது திருப்பெயர் எழுதிய அம்பினை எய்து; ஆடு அமர் - வெற்றியுடைய போர்; துரந்த - துரத்திய.

2. வங்கிய சேகரன் கோல் வாழும் நாள் - வங்கிய சேகர பாண்டிய மன்னனுடைய செங்கோல் செல்லும் காலத்தில்; மேல் ஓர் வைகல் - முன்பு ஒரு பொழுது; பங்கய முளரிப் புத்தேள் - தாமரையை இருக்கையாகவுடைய பிரமன்; வாம் பரி மா - தாவுகின்ற குதிரை; பரிமா வேள்வி - குதிரையை வைத்துச் செய்யும் வேள்வி, அசுவமேத யாகம். வாவும் பரி என்பது வாம்பரி என நின்றது. பரிமா - இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

3. மநு - மந்திரம் (காயத்திரி மந்திரவடிவாக உள்ளவள்). வரம்பு என்பது வரப்பு என (வலித்தல் விகாரம்) நின்றது.

4. நானம் - மயிர்ச் சாந்து; வானம் ஆறு - வான் வழி; கானம் ஆறு - இசை வழி; கமல யோனி - திருமாலின் உந்திக் கமலத்தில் பிறந்த பிரமன்; வால் அறிவன் - தூய அறிவுடையவன், பிரமன்.

5. பா மகள் - கலைமகள் (சரசுவதி); அம்புயத்து அண்ணல்- பிரமன்.

6. இனைய தீங்கை - இத்தகைய குற்றத்தை; புலம்பு கொண்டு அவலம் பூண்டாள் - புலம்பித் துன்பமுற்றாள். உற்றனே - முற்றெச்சம்.

7. வெண்கமலச் செல்வி - வெண்டாமரையில் வீற்றிருக்கும் கலைமகள்; சதுர் முகத்தலைவன் - நான்கு முகங்களையுடைய பிரமன்.

8. வடமொழி முதலெழுத்துகள் ஐம்பத் தொன்றும் நாமகளின் உடலாக அமைந்தன என்று கூறப்படுகிறது. வடமொழி உயிரெழுத்துகளுள் அகரம் நீங்கலாக ஆகாரம் முதலிய பதினைந்தும், மெய்யெழுத்துகளில் ககரம் முதலிய முப்பத்து மூன்றும் ஆக நாற்பத்தெட்டு எழுத்துகள். வடமொழி மெய் யெழுத்துகளில் இம்முப்பத்து மூன்று தவிர ஏனைய கூட்டெழுத்து களாதலின் அவை விலக்கப்பட்டன.

9. வருணம் - எழுத்து, அகரம் எல்லா எழுத்துகளுடனும் கலந்து நிற்றல் கூறப்படுகிறது.

10. ஏமுற - அரணுக. 'அகரத்திற்கு முதல்வராகிய சோம சுந்தரக் கடவுள் ஒரு புலவராகிச் சங்கப் பலகையில் ஏறியிருந்து நாற்பத்து ஒன்பதாம் புலவராகி அவரவர்க்கு அறிவைத் தோற்று விப்பார்' என்று பிரமன் கூறினார்.

11. அக்கரம் - அட்சரம், எழுத்து; சொல் பதினெட்டு - பதினெட்டு மொழிகள். அவை தமிழ், சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம் என்பன. அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம்,

சிங்களம், சிந்து, சீனம், கோனகம், திராவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம் ஆகியவற்றைப் பதினெண் மொழிகள் எனக்கூறுவாரும் உளர்.

12. கழுமணி - சாணைபிடிக்கப்பட்ட மாணிக்கம்; கண்டி - உருத்திராக்கம்

13. புலம் - நாடு; போகி - போய்; பொருநை - தாமிரவருணி யாறு; நீத்தம் - வெள்ளம்; ஆன்ற - மாட்சிமைப்பட்ட; செழியன் - பாண்டியன், வங்கிய சேகர பாண்டியன்.

14. சொல் பதம் கடந்த - சொல் அளவு அல்லது சொல்லும் பொருளும் கடந்த.

15. புலவராக வந்த சோமசுந்தரர் நாற்பத்தெட்டு புலவர் களையும் சந்தித்து அளவளாவினர். விஞ்சையர் - புலவர்; வெவ் விடை - விருப்பம் தரும் காளை; வெளவிடும் - போக்கும்.

16. தனிவரு புலவர் - சோமசுந்தரக் கடவுள்; துனி வரும் - துன்பந்தரும்; கனை கழல் - வினைத்தொகை. இங்கு வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாக இறைவன் திருவடியைக் குறித்து நிற்கிறது.

17. மறையின்ஆறு - வேதத்தின் வழி; பண்மாண் கலைகள் - வேதத்தின் ஆறு சாத்திரங்கள்; மகுடம் - சடை முடி.

18. விம்மிதம் - வியப்பு; விண் இழி விமானம் - வானினின்று இறங்கிய இந்திர விமானம்; கைம் மலை - யானை; உரி - தோல்; செவ்வேல் - செம்மைவேல், பண்புத்தொகை.

19. நேமி - சக்கரம்; திறம் மலி - சிறப்பு மிக்க.

20. தகைமைசால் - தகுதிக்கு அமைந்த; சிறப்பு - வரிசை.

21. வண் தமிழ் நாவினோர்க்கு - வளம் பொருந்திய தமிழ் அறிவுமிக்க செந்நாப் புலவர்களாகிய நாற்பத்தெண்மர்க்கும்; அக்கழகத்தோர் - அச்சங்கப் புலவர்கள்; ஆற்றல் முட்டி - வாதம் செய்து தமது வலிமை குன்றி; படர் - துன்பம்; எய்த்து - (மனம்) இளைத்து; மண்டினர் - முற்றெச்சம்; மூண்டு மூண்டு - அடுக்குத் தொடர்.

22. இனையர் போல் - இந்நாட்டுப் புலவர்களைப் போல; மறுபுலம் - வேற்று நாடு; கேள்வி வினைஞர் - புலவர்; மதம் - தருக்கு; ஒன்று - ஒரு பொருள், அது புலவர்களைச் சீர்தூக்கும் கருவியாகிய சங்கப் பலகை.

23. தூக்கி - ஆராய்ந்து.

24. வலியவே - கேளாமலே வந்து.

25. இரண்டு சாணது இப்பலகை - இரண்டு சாண் அளவுள்ளது இப்பலகை; வாலி - வெண்ணிறமுடையது.

26. நாவலர் - சங்கப் புலவர்; அமளி - இருக்கை, ஆசனம். இப்பாட்டில் உவமையணி வந்துள்ளது.

27. தாமம் - மாலை; சாந்தம் - சந்தனம்; சேறு - குழம்பு; தூசு - ஆடை; நக்கீரர், கபிலர், பரணர் முறையே பலகையில் ஏறினர்.

28. சுருங்கி - எழுத்தால் சுருங்கி; அகலம் - விரிவுரை.

29. சங்கப் புலவர்கள் கூறுவதைக் கேட்டுக் கேட்டு அறிவு முதிர்ந்த கிளியும் நாகண வாய்ப்புள்ளும் வாதிடுவோர்களுடன் வாதஞ்செய்தனவாம். ஏது - காரணம், ஆதாரம். எழுவகை மதம் - உடன்படல், மறுத்தல், பிறர் தம் மதம் மேற்கொண்டு களைதல், தான் நாட்டித்தனது நிறுத்தல். இருவர்மாறுகோள் ஒருதலைதுணிவு, பிறர் நூற்குற்றங்காட்டல், பிறிதொருபடான் தன்மதங் கொளல்.

30. ஏயவாறு - தமக்கு இயைந்தவாறு ; எல்லைவாய் - அப்பொழுது.

31. பனுவல் - பாட்டு ; குறிப்பு - செய்யுட் குறிப்பு ; தலை மயங்கி - வேறுபாடு அறியமுடியாதவாறு மயங்கி நின்று.

32. செஞ்சவே - ஒருசேர, நிறைய.

33. மருள் - மயக்கம்; தெருளுதல் - தெளிதல்; சொற்பொருளுமாம் - சொல்லும் பொருளுமாக இருக்கும் சொக்கலிங்கப்பெருமாள்.

34. வந்த நாவலர் - சோமசுந்தரப் பெருமானாகிய புலவர்; வந்திக்கும் - வணங்கும் ; நாவலர் - சங்கப்புலவர்கள் ; ஆகுலம் - வருத்தம் ; பந்தம் - தளை; யாப்பு - செய்யுள்.

35. முதுவாய பாடல் - பொருள் முதிர்ச்சி அமைந்த பாடல்.

36. ஒல் என - விரைந்து; தவிசு - பலகை, இருக்கை.

37. பீடிகை - இருக்கை, பலகை; பலகையாகிய பொன்னு ரத்தில் நாற்பத்தொன்பது புலவர்களும் சுற்றிலும் பதித்த மணி களாக விளங்க, சோமசுந்தரப் பெருமான் நடுநாயகமணியாக வீற்றிருந்தார் என்பது செய்யுளுக்குப் பொருள்.

38. முதிய - தொன்மையான; வான் தமிழ் - பெருமைமிக்க தமிழ்.

39. வங்கிய சேகர பாண்டியன் மகன் - வங்கிய சூடாமணி; இங்கு - இம்மை ; சங்கு இயல் வார் குழையான் - சங்காலான நீண்ட குழையணிந்த சிவபெருமான்; சார்பு - வீடுபேறு.

# 10. இரட்சணிய யாத்திரிகம்

## ஆதி பருவம்

### குரு தரிசனப் படலம்

வித்தக வாத்தும விசாரி யிவ்வணம்
தத்துற லடைந்துயிர் தன்னை நாடியிங்
கெய்த்திடு முடலென விளைந்து சில்பகல்
மத்தரிற் கழித்தன னுண்டொர் வைகல்வாய். 1

தண்ணளி தயங்கிய முகத்துத் தாமரைக்
கண்ணிணை மல்கிய கருணை காட்டிட
உண்ணிறை யன்புமிக் கொழுகிற் றென்னவே
வண்ணவான் மொழிச்சுவை யமிர்து வார்ந்துக. 2

எண்ணருந் துயர்க்கெலா மிறுதி காட்டுமெய்ப்
புண்ணியம் உருக்கொடு பொலிந்தி லங்கிய
வண்ணமென் றுணர்வுளார் மனங்க ளிப்புற
நண்ணினன் னிருஞ்சுவி சேஷ நாமத்தன். 3

உருகிமெய் விசாரியை யுற்று நோக்கிநின்
றருகணைந் தியாரைநீ யவலிக் கின்றனை
பெருகுமித் துயருனக் குற்ற பெற்றியென்
திருகலில் சிந்தையாய் செப்பு கென்றனன். 4

ஐயகேள் நாசதே சத்த ளுங்கமர்
வெய்யரில் வெய்யன்யான் வெகுளித் தீவிழுந்
தொய்யென விவணெலா மொருங்க விந்தபின்
மெய்யுற வருநடுத் தீர்வை வேந்தனுல். 5

ஆயிடைக் கருணைவேந் தானை மீறிய
தீயரைத் தீச்சிறைப் படுத்தல் திண்ணமென்
ருயுமிச் சுருதிநூ லியம்பு கின்றதை
ஆயவித் துயர்க்கட லமிழ்ந்தி னேனரோ. 6

நன்றிகொன் றிறைவனை மறந்து நாடொறும்
புன்ருெழில் புரிந்துவீண் பொழுது போக்கிய
வன்றலைப் புலையனேன் மருவு தண்டனைக்
கின்றுநின் றிரங்குவ தியாவ தாங்கொலோ. 7

சாகவு மனமிலைத் தண்ட னைக்கெதிர்
போகவுந் துணிவிலைப் புறத்து ளாரைப்போல்
ஏகவும் புகலிலை யீடு செய்யவோர்
பாகமும் பலமிலைப் பதைக்கின் றேனென்ருன். 8

அஞ்சுவி சேஷனி யறைந்த யாவையும்
வஞ்சமின் றுண்மையே மருவு மிம்மையில்
எஞ்சரு வேதனை யியைதல் கண்டுமேன்
அஞ்சுதி சாவதற் கமைதி கூறெனு. 9

சென்மநாட் டொடங்கியான் செய்த தீவினை
என்முது குளுக்குற விறுத்த தாற்புலைக்
கன்மிகள் குழுமுதீக் கடற்கி டங்கிடை
அம்மையி லமிழ்த்துமென் றஞ்சு கின்றனன். 10

பலகலை கற்றுணர் பரம யோகியிவ்
வுலகமன் னவரெமை யொறுத்தற் கஞ்சுதும்
நிலவுல கியாவையு நிறுத்த நீதிமன்
அலகறு தண்டனைக் கஞ்சிடேங் கொலோ. 11

இனையசிந் தனையென திதயத் தூன்றலால்
வனைபொலன் கழலினுய் வருந்து வேனென
அனையவை யறிந்தடுத் தவர்க்கு நன்மையே
நினைசுவி சேஷனு நிகழ்த்து வானரோ. 12

நன்றுநன் றுன்னிலை நாச தேசத்து
நின்றுநின் றித்துணை தாழ்த்தல் நீதியோ
பொன்றிடர் வருமுனம் புகலி டம்பெறச்
சென்றிடா திவணுழல் சிந்தை யென்னென்ருன். 13

உய்வழி இதுஇதென் றுழறும் பல்வழி
பொய்வழி யவ்வழி போகு வேனலன்
தெய்வநா யகன்திரு நகர்க்குச் செல்வழி
எவ்வழி யவ்வழி யின்னுந் தேர்கிலேன் 14

ஆதியான் திருநகர் அடுக்குஞ் சீவநற்
பாதைநீ யறிதியேல் பகர்தி யாலென
வேதியர் குரவனை வினவி னனவன்
ஓதுவல் கேட்டியென் றுரைத்தல் மேயினுன். 15

—எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை

## குறிப்புரை

'இரட்சணிய யாத்திரிகம்' என்பது, 'ஆன்ம ஈடேற்றத்தை விரும்புகிறவர், தம் உள்ளத்தே அப்பேறு கிட்டுமாறு, வைதிக நெறியில் செய்யும் சிந்தனை யாத்திரை,' என்று பொருள்படும்.

இக்கருத்தை விளக்கி ஆங்கிலத்தில் எழுந்த 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்னும் நூலையும், அதைத் தொடர்ந்து தமிழில் வழங்கிய 'மோட்சப் பிரயாணம்' என்னும் நூலையும் தழுவி இரட்சணிய யாத்திரிகம்' எழுதப்பட்டது.

இஃது ஏசு கிறிஸ்துவின் பெருமைகளையும் கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளையும் விளக்கிக் கூறும் தொடர்நிலைச் செய்யுள் (பெருங்காப்பியம்) ஆகும்; இராமாயணம், திருவிளையாடற் புராணம், பாரதம் போன்றமைந்த பெருநூலாகும். 'இந்நூலின் செய்யுள் நடை பெரும்பாலும் கம்பராமாயணச் செய்யுள் நடையையும் அதன் போக்கையும் அநுசரித்தே இயன்ற மாத்திரம் அமைக்கப்பட்டது,' என்று இந்நூலாசிரியரே இதன் அமைப்பைப் பற்றிக் கூறுகிருர்.

இதில் 3800 செய்யுள்கள் உள்ளன. இஃது இரண்டு பருவங்களையும், இருபத்து மூன்று படலங்களையுங் கொண்டது.

**நூலாசிரியர்**: இந்நூலை இயற்றியவர் எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை. இவர்தம் பெற்றோர் சங்கரநாராயண பிள்ளை - தெய்வநாயகி அம்மாள். முன்னுள் சமயம் வைணவம்; இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் கிருஷ்ணன் என்பது. இவர்தம் மூதாதையர் ஊர் திருநெல்வேலியையடுத்த இரெட்டியாபட்டி என்பது. இவர் பிறந்த ஊர் கரையிருப்பு என்னும் ஊராகும். இவர் 1827 ஏப்ரல் 23 இல் பிறந்தார். இவர்தம் தந்தை பெருந் தமிழ்ப்புலவராவார். அவரிடம் இவர் தமிழிலக்கியங்களையும், மாணிக்கவாசகத்தேவர் என்னும் புலவரிடம் இலக்கணத்தையும், பில்வண ஜோசியர் என்னும் வடமொழிப் புலவரிடம் சமஸ்கிருதத்தையும் பயின்றார்; சாயர்புரம் மிஷன் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றினார். 1858இல் இவர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவினார். அதன் பிறகு இவர் 'ஹென்றி ஆல்பிரெட்' என்னும் பெயர் சூட்டப்பெற்றார். கிறித்துவக் கம்பர் என்னும் இக்கவிஞர் 1900 பிப்ரவரி 3 இல் காலமானார்.

இவர் இயற்றிய பிற நூல்கள், இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணியக்குறள் என்பன.

பாடப்பகுதி : குருதரிசனப் படலம், முதற்பருவத்தில் மூன்றாம் படலம். இஃது ஆன்ம ஈடேற்றம் விரும்பியவன் குருவைத் தரிசித்த வரலாறு கூறுவது.

## அருஞ்சொற்பொருள்

1. வித்தகம் - ஞானம்; தத்துறல் - சஞ்சலம்; எய்த்திடும் - களைப்புறும் ; இனைந்து - வருந்தி ; மத்தரின் - பைத்தியக்காரர் போல.

2. தண்ணளி - அருள்; வண்ண - அழகிய; வான் - சிறந்த.

3. இறுதி - முடிவு ; உருக்கொடு - உருவம் கொண்டு ; இலங்கிய - விளங்கிய; சுவிசேஷ நாமத்தான் - சுவிசேஷகன் என்னும் பெயருடையவன்.

4. அவலிக்கின்றனை - வருந்துகின்றாய்; திருகல் இல் - மாறுபாடு இல்லாத.

5. நாச தேசத்தன் - நாச தேசத்தில் இருக்கின்றவன்; வெய்யர் - கொடியவர் ; வெகுளித் தீ - இறைவனின் கோபமாகிய நெருப்பு; ஒய்யென - கடுக; இவண் எலாம் - இவ்விடம் எல்லாம்; நடுத்தீர்வை - நியாயத் தீர்ப்பு; வேந்தன் - பரலோக நாதன்.

6. ஆய - ஆராய; 'அரோ' - அசை.

7. நன்றி கொன்று - நன்றி மறந்து; புன் தொழில் - இழிந்த செயல் ; வன்தலை - கொடிய; மருவு - வந்தடையும்; இரங்குவது யாவது ஆம் கொலோ - வருந்துவதால் என்ன பயன் உண்டாகும்? கொல், ஓ - இரண்டும் அசை நிலைகள்.

8. தண்டனைக்கு எதிர் போதல் - தண்டனையை ஏற்காது எதிர்த்தல்; புகல் - புகலிடம்; ஓர் பாகமும் - சிறிதும்.

9. அம்சுவிசேஷன் - அழகிய சுவிசேஷகன் ; எஞ்சுறு - குறைவுபடாத.

10. முதுகு உளுக்குற - முதுகு வருந்துமாறு; இறுத்ததால் - தங்கினதால்; புலைகன்மிகள் - புலைத்தன்மையுடைய கருமிகள்; குழுமு - கூடியிருக்கும்; கடல் கிடங்கு - கடலாகிய கிடங்கு; அம்மை - மறுமை.

11. ஒறுத்தல் - தண்டித்தல்; நீதி மன் - நீதி மிக்க மன்னன் (இறைவன்) ; அலகறு - அளவற்ற. கொல் ஓ - அசை நிலைகள்.

12. வனை - செய்யப்பட்ட, அணியப்பட்ட ; பொலன் - பொன்; நிகழ்த்துவான் - சொல்லுவான்.

13. பொன்று இடர் - கொல்லும் துன்பம்.

14. உய்வழி - ஈடேறும் வழி, இரட்சிப்பின் மார்க்கம்; உழறும் - உளறுகின்ற; தேர்கிலேன் - அறியேன்.

15. ஆதியான் - கடவுள்; பகர்தி - சொல்வாயாக; குரவன் - குரு; ஓதுவல் - சொல்லுகிறேன்; கேட்டி - கேட்பாயாக.

# 11. காசிக் கலம்பகம்

## மடக்கு

விழைகுவ தன்பர கஞ்சுகமே
　　வெங்கரி யின்னுரி கஞ்சுகமே
தொழிலடி கட்குள மாலயமே
　　தூமுனி வோருள மாலயமே
அழகம ரும்பணி யென்பணியே
　　ஆட்கொள மேற்கொள்வ தென்பணியே
மழகளி றீன்றவ ளம்பதியே
　　வாழ்வது காசிவ ளம்பதியே. 1

## ஊர்

பாவலரும் நாவலரும் பண்மலரக் கண்மலரும்
காவலரு மேடவிழ்க்குங் காசியே—தீவளரும்
கஞ்சக் கரத்தான் கலைமறைக்கு நாயகமாம்
அஞ்சக் கரத்தா னகம். 2

## அம்மானை

கலைமதியின் கீற்றணிந்த காசியகி லேசர்
சிலைமதனைக் கண்ணழலாற் செற்றனர்காண் அம்மானை
சிலைமதனைக் கண்ணழலாற் செற்றனரே யாமாகின்
மலைமகட்குப் பாகம் வழங்குவதேன் அம்மானை
வழங்காரோ அப்பாலு மாலானல் அம்மானை. 3

## மறம்

வையமுழு தொருங்கீன்ற விடப்பாகர்
　　ஆனந்த வனத்தில் வாழும்
வெய்யதறு கண்மறவர் குலக்கொடியை
　　வேட்டரசன் விடுத்த தூதா
கையிலவன் திருமுகமோ காட்டிருகண்
　　தொட்டுமுட்டைக் கதையில் தாக்கிச்
செய்யகொடி றுடைத்தகல்வாய் கிழித்தரிவோம்
　　நாசியொடு செவியுந் தானே. 4

## தூது

குருகை விடுத்தா ளெனக்குருகே
கூறாய் சுகத்தை விடுத்தாளென்
றருகு வளருஞ் சுகமேசென்
றறையாய் நிறைநீர் தெரிந்துபால்
பருகும் அனமே அனம்விடுத்த
படிசென் றுரையாய் படிவருளத்
துருகு பசும்பொன் மதிற்காசி
யுடையார் வரித்தோல் உடையார்க்கே 5

—குமரகுருபர அடிகளார்

### குறிப்புரை

கலம்பகம் என்பது தமிழில் அமைந்துள்ள 'சிறுநூல் தொகுப்பு' வகையைச் சார்ந்ததாகும். இது பிரபந்தம் எனப்படும். தொண்ணூற்றாறு வகைப்படும் பிரபந்தங்களைச் சிற்றிலக்கியம் என்பர். கோவை, உலா, கலம்பகம், பிள்ளைத் தமிழ், அந்தாதி, குறம், குறவஞ்சி, தூது, மாலை என்றிவை போன்றவை, பிரபந்த வகையின்பாற்படும்.

கலம்+பகம்=கலம்பகம். கலம் - பன்னிரண்டு; பகம் - ஆறு, பன்னிரண்டிற்பாதி ஆறு; 12+6=18. இது புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டு உறுப்புகள் அமையப் பாடப்பெறும் நூலாகும். பாடல்கள், அந்தாதியாக அமையும். நால்வகைப் பாக்களும் பாவினங்களும் கலந்துவரும். சொற்சுவை, பொருட் சுவை அமையப் பாடப்பெறும்.

**காசிக் கலம்பகம்** : இது காசியிற் கோயில் கொண்டுள்ள இறைவனைப் பாட்டுடைத் தலைவனாக அமைத்துப் பாடப்பட்டது. இதில் **தூது, புயவகுப்பு, பிச்சியார், கொற்றியார், ஊர், அம்மானை, சித்து, களி, குறம், மறம், மதங்கியார், ஆற்றுப்படை, கைக்கிளை, சம்பிரதம்,** ஆகிய உறுப்புகள் இடம் பெற்றுள்ளன.

**ஆசிரியர் :** காசிக் கலம்பகத்தை இயற்றியவர் குமரகுருபர அடிகளார்; இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டத்தில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்தவர். பெற்றோர் சண்முகசிகாமணிக் கவிராயரும் சிவகாம சுந்தரியும் ஆவர். குமரகுருபரர் பிறந்து ஐந்தாண்டு வரை ஊமையாக இருந்தார். திருச்செந்தூரில் முருகன் அருளால் ஊமை நீங்கப் பெற்று, 'கந்தர் கலிவெண்பா' என்னும் நூல் பாடினார்.

பின்னர் இவர்பல தலங்களுக்கும் சென்று நூல்கள் பல இயற்றினார்; தருமபுரத்திலுள்ள திருக்கயிலாய பரம்பரை ஆதீனத் தலைவராக விளங்கிய மாசிலாமணி தேசிகரிடம் அருளுரை பெற்றுத் துறவு மேற்கொண்டார்; காசிக்குச் சென்று, அங்கிருந்த டில்லி பாதுஷாவின் அன்பைப் பெற்று, அவருதவியால் காசியில் மடம் அமைத்துத் தங்கினார். அம்மடத்திற்குக் குமாரசாமி மடம் என்பது பெயர்.

குமரகுருபரருக்குப் பிறகு அம்மடத்துத் தலைவர்களாக விளங்கியவர்களுள் ஒருவரான தில்லை நாயக சுவாமிகள் தஞ்சை மாவட்டத்துத் திருப்பனந்தாளில் ஒரு மடம் அமைத்தார். அதுவே இன்றளவும் குமரகுருபர சுவாமிகளின் வழி மரபாக விளங்கி வருகிறது.

இவர் 1625இல் தோன்றி 1688இல் மறைந்தார். இவர் இயற்றிய நூல்கள், கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, பண்டார மும்மணிக் கோவை, காசிக் கலம்பகம், சகல கலாவல்லிமாலை, மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சியம்மை குறம் முதலியன.

## அருஞ்சொற்பொருள்

1. **மடக்கு:** ஒரு பாட்டில் வந்த சில சொற்கள் மீண்டும் மீண்டும் மடங்கி வந்து, தனித்தும் பிரிந்து நின்றும் வெவ்வேறு பொருள் தந்து நிற்பது.

விழைகுவது அன்பர் அகம் சுகமே — அகம் - மனம்; சுகம் - இன்பம்; வெம்கரியின் உரி கஞ்சுகமே — கரி - யானை; உரி - தோல்;

கஞ்சுகம் - சட்டை; தொழில் அடிகட்கு உள் மா லயம் — மாலயம் - மகா சங்காரம்; பெரிதும் அழித்தல்; தூ முனிவோர் உளம் ஆலயம்; அழகு அமரும் பணி என்பு அணி — பணி - அணிகலன்; என்பு அணி - எலும்பு அணிகலன்(மாலை); ஆட்கொள மேற்கொள்வது என் பணி — ஆட்கொள - ஏற்றுக்கொள்ள; என் பணி - எனது தொண்டு; மழகளிறு ஈன்றவள் அம்பதி — மழ களிறு - விநாயகர்; ஈன்றவள் - ஈன்றவளாகிய உமை; அம்பதி - அழகிய நாயகர்; காசி வளம் பதி - காசியாகிய வளமை மிக்க ஊர்.

2. **ஊர்**. ஊரின் சிறப்பைக் கூறுதல். பா அலரும் - பாக்கள் தோன்றப் பெற்ற; நாவலர் - புலவர்; பண் - இசை; கண்மலர் - கள் + மலர் - தேன் விரியும்; கா அலரும் - சோலையில் மலர்கின்ற; ஏடு அவிழ்க்கும் - ஏட்டினை விரிக்கும்; கஞ்ச கரத்தான் - தாமரை மலர் போன்ற கைகளையுடையவன்; அஞ்சு அக்கரத்தான் அகம் - ஐந்து எழுத்துடையான் இருப்பிடம்; அஞ்சு - ஐந்து; அக்கரம் - அட்சரம், எழுத்து, பஞ்சாட்சரம் (சிவாய நம).

பாஅலரும் நாவலர் ஏடு அவிழ்க்கும்; பண் மலரக் கள் மலரும் கா அலரும் ஏடு அவிழ்க்கும் எனக் கூட்டுக.

3. **அம்மானை**: மகளிர் விளையாடும் ஒரு விளையாட்டு. மூன்று நான்கு பெண்கள் அம்மானைக் காய் உருட்டி விளையாடுங்கால் ஒருத்தி ஒரு செய்தியை முதலில் சொல்வாள்; அதற்கு மற்றொருத்தி வினா எழுப்புவாள்; வேறொருத்தி அதற்கு விடை கூறுவாள். கலை மதி - கலைகளையுடைய சந்திரன்; கீற்று - பிறைமதி; சிலை மதன் - வில்லையுடைய மன்மதன்; கண் அழல் - நெற்றிக் கண்ணாகிய நெருப்பு; செற்றனர் - அழித்தார்; செற்றனரே யாமாகின் - அழித்தாலும்; மலைமகள் - உமை; பாகம் - உடலில் இடப்பகுதி; அப்பாலும் - அதற்குப் பிறகும், அந்தப் பக்கமும்; மால் ஆனால் - காம மயக்கம் ஆனால்.

'மன்மதனை நெற்றிக் கண்ணால் சிவபெருமான் எரித்தார் காண்,' என்று ஒருத்தி கூறினாள் 'மன்மதனை எரித்தவர் பெண்ணாசையின்றி இருத்தல் வேண்டும்; ஆனால், சிவனோ உமையம்மைக்குத் தம் உடலில் பாதியை வழங்கியது அதற்கு மாறானதன்றோ,' என்று மற்றொருத்தி வினவினாள். 'அப்பாலும் (மன்மதனை எரித்த பின்னும்) அவர் காம மயக்கமுடையவராயிருந்தார். அதனால் உமைக்குப் பாகம் தந்தார்,' என்று மூன்றாவது பெண் விளக்கந் தந்தாள்.

4. **மறம்** : மறவர் (வேடர்) குலப்பெண்ணை மணம் பேசி வருமாறு ஓர் அரசன் தூதனுப்ப, அங்ஙனம் வந்த தூதனை வெகுண்டு நோக்கி மறவர் தலைவன் தன் குலப் பெருமை, வீரம், கடவுள் நெறி முதலியவற்றைக் கூறுதல். வையம் - உலகம்; இடப் பாகர் - உமையை இடப்பாகத்தில் உடையவர்; வெய்ய - கொடிய; தறுகண் - அஞ்சாமை; வேட்டு - விரும்பி; திருமுகம் - ஓலை, அழகிய முகம்; கண்தொட்டு - கண்களைத் தோண்டி; முட்டு - எலும்பு மூட்டு; கதை - ஓர் ஆயுதம்; செய்ய - சிவந்த; கொடிறு - கன்னம்; அரிவோம்; அறுப்போம்; நாசி - மூக்கு.

5. **தூது** : தலைவி தலைவன் பால் தூது விடுதல். குருகு - வளையல்; குருகை - வளையலணிந்த கையையுடைய பெண்; குருகே - நாரையே; சுகம் - இன்பம், கிளி; சுகத்தை விடுத்தாள் - இன் பத்தைத் துறந்தாள்; அருகு வளரும் சுகமே - பக்கத்தில் வளரும் கிளியே; அறையாய் - சொல்வாயாக; அனமே - அன்னமே; அனம் விடுத்தாள் - அன்னத்தை (சோற்றை) உண்ணாமல் துறந்தாள்; படிவர் உளத்து - தவ வேடம் உடையவர் உள்ளத்தைப் போல; வரித் தோல் உடையார் - புலித்தோலாகிய உடையை உடைய இறைவன் (அகிலேசர்).

## 12. தமிழ் விடு தூது

சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரந்
தேர்கொண்ட சங்கத் திருந்தோரும்—போர்கொண் 1

டிசையுந் தமிழரசென் றேத்தெடுப்பத் திக்கு
விசையஞ் செலுத்திய மின்னும்—நசையுறவே 2

செய்யசிவ ஞானத் திரளேட்டி லோரேடு
கையி லெடுத்த கணபதியும்—மெய்யருளாற் 3

கூடல் புரந்தொருகாற் கூடற் புலவரெதிர்
பாடலறி வித்த படைவேளும்—வீடகலா 4

மன்னுமூ வாண்டில் வடகலையுந் தென்கலையும்
அன்னைமுலைப் பாலி னறிந்தோரும்—முன்னரே 5

மூன்றுவிழி யார்முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்
ஈன்றுதரச் சொல்லி னிசைத்தோரும்—தோன்றயன்மால் 6

தேடிமுடி யாவடியைத் தேடாதே நல்லூரிற்
பாடி முடியாப் படைத்தோரும்—நாடிமுடி 7

மட்டோலைப் பூவணையார் வார்ந்தோலை சேர்த்தெழுதிப்
பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும்—முட்டாதே 8

ஒல்காப் பெருந்தமிழ்மூன் றோதியருண் மாமுனியும்
தொல்காப் பியமொழிந்த தொன்முனியும்—மல்காச்சொற் 9

பாத்திரங்கொண் டேபதிபாற் பாய்பசுவைப் பன்னிரண்டு
சூத்திரங்கொண் டேபிணித்த தூயோரும்—நேத்திரமாம் 10

நீதில் கவிதைத் திருமா ளிகைத்தேவர்
ஆதி முனிவ ரனையோரும்—சாதியுறும் 11

தந்திரத்தி னாலொழியாச் சார்வினையைச் சாற்றுதிரு
மந்திரத்தி னாலொழித்த வல்லோரும்—செந்தமிழிற் 12

பொய்யடிமை யில்லாப் புலவரென்று நாவலர்சொல்
மெய்யடிமைச் சங்கத்து மேலோரும்—ஐயடிகள் 13

காடவருஞ் செஞ்சொற் கழறிற் றறிவாரும்
பாடவருந் தெய்வமொழிப் பாவலரும்—நாடவரும் 14

கல்லாதார் சிங்கமெனக் கல்விகேள் விக்குரியர்
எல்லாரு நீயா யிருந்தமையால்—சொல்லாரும் 15

என்னடிக ளேயுனைக்கண் டேத்தினிடர் தீருமென்றுன்
பொன்னடிக ளேபுகலாப் போற்றினேன்—பன்னியமென் 16

பஞ்சிபடா நூலே பலர்நெருடாப் பாவேகேண்
டெஞ்சியழுக் கேறா வியற்கலையே—விஞ்சுநிறம் 17

தோயாத செந்தமிழே சொல்லே றுழவரகம்
நீயாது சொல்விளையுஞ் செய்யுளே—வீயா 18

தொருகுலத்தும் வாரா துயிர்க்குயிராய் நின்றாய்
வருகுலமோ ரைந்தாயும் வந்தாய்—இருநிலத்துப் 19

புண்ணியஞ்சே ருந்திப் புலத்தே வளிதரித்துக்
கண்ணிய வாக்காங் கருப்பமாய்—நண்ணித் 20

தலைமிடறு மூக்குரத்திற் சார்ந்திதழ்நாத் தந்தம்
உலைவிலா அண்ணத் துருவாய்த்—தலைதிரும்பி 21

ஏற்பமுதன் முப்பதெழுத் தாய்ச்சார் பிருநூற்று
நாற்ப தெழுத்தா னிபிறந்தாய்—மேற்படவே 22

எண்முதலா கப்பகரு மீரா றெனும்பருவம்
மண்முதலோர் செய்து வளர்க்குநாட்—கண்மணிபோற் 23

பள்ளிக்கூ டத்தசையாம் பற்பலதொட் டிற்கிடத்தித்
தள்ளிச் சிறுர்கூடித் தாலாட்டி—உள்ளிலகு 24

மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்—மஞ்சரையே 25

பன்னியொரு பத்துப் பருவமிட்டு நீவளர்த்தாய்
உன்னை வளர்த்துவிட வொண்ணுமோ—முன்னே 26

நினையும் படிப்பெல்லா நின்னைப் படிப்பார்
உனையும் படிப்பிப்பா ருண்டோ? 27

## குறிப்புரை

**தூது :** இது தொண்ணூற்றாறு சிறு நூல் வகைகளுள் ஒன்று. தலைவனைப் பிரிந்த ஒரு தலைவி பிரிவிற்கு வருந்தி, தலைவன் பால் தூது அனுப்புவதாகப் பாடுவது.

கிளி, அன்னம், குயில், மயில், மான், வண்டு, நெஞ்சம், தமிழ் முதலியவற்றைத் தூது அனுப்புவதாகப் பாடுவது மரபு. வெண்டளை விரவிய கலிவெண்பாவால் தூது நூல் பாடப்படுதல் வேண்டும். பாட்டின் இரண்டடிகளைக் கண்ணி என்பர்.

**தமிழ் விடு தூது:** தமிழ் மொழியை மதுரைச் சொக்கநாதப் பெருமானிடம் தூது அனுப்புவதாகப் பாடப்பட்டது இந்நூல். இதில் தமிழின் சிறப்பைப் பலவகையிலும் எடுத்துக் கூறுகிற திறம் போற்றத்தக்கதாகும்.

இதைப் பாடிய ஆசிரியர் பெயர், வரலாறு தெரியவில்லை.

## அருஞ்சொற்பொருள்

1. சீர்கொண்ட - சிறப்புப் பொருந்திய; கூடல் - மதுரை; சிவராசதானிபுரம் - சிவபெருமான் உறையும் தலைநகரமாகிய மதுரை; புரந்து - காப்பாற்றி; ஏர் - அழகு, பெருமை.

2. மின் - தடாதகைப் பிராட்டியார்; நசை - விருப்பம்.

3. 'சிவபெருமான் உமைக்கு உபதேசம் செய்த போது அதைப் பராமுகமாக அவள் கேட்க, சிவபெருமான் அவளைச் சபித்தார். அதுகண்டு விநாயகர் சினங்கொண்டு அங்கிருந்த வேதாகமச்சுவடிகளைக் கடலில் எறிவதற்கு எடுத்தார்' என்று கதை கூறப்படுகிறது.

4. படைவேள் - முருகன்; கூடல் புரந்து - மதுரையை ஆண்டு; கூடல்புலவர் - சங்கப் புலவர்.

5. முலைப்பாலின் அறிந்தோர் - திருஞானசம்பந்தர்.

6. இசைத்தோர் - சுந்தரமூர்த்தி நாயனார்.

7. நல்லூர் - திருநல்லூர்; பாடி - திருச்சத்தி முற்றத்தில் பாட்டுப்பாடி; படைத்தோர் - திருநாவுக்கரசு நாயனார்.

8. மட்டு - தேன்; ஓலைப்பூ - தாழம்பூ; வனையார் - அணியார் தவர், சிவபெருமான் (சிவபெருமான் தாழம்பூ அணியமாட்டார்); வார்ந்து - வாரி; சேர்த்து - நூலாகச் சேர்த்து; பட்டோலை - குறிப் பெழுதும் ஓலை; பகர்ந்தோர் - மாணிக்கவாசகர்; முட்டாதே - குறையாதே. இக்கண்ணியில் மாணிக்கவாசகர் பாடிய திருக்கோவையாரைச் சிவபெருமான் ஓலையில் எழுதிய வரலாறு கூறப்பட்டுள்ளது.

9. மா முனி - அகத்தியர்.

10. பா + திரம் = பாத்திரம் — செய்யுள்களின் நிலை; பதி - இறைவன்; பசு - ஆன்மா, உயிர்; பன்னிரண்டு சூத்திரம் - சிவ ஞானபோதம்; இறைவனை நோக்கிப் பாய்கின்ற உயிர்களைச் செந் நெறியில் செலுத்துதற்குப் பன்னிரண்டு சூத்திரங்கள் வாயிலாகக் கட்டுப்படுத்திய திறம். தொனிப்பொருள். தலைவன் மேற் பாய்கின்ற பசுவைப் பன்னிரண்டு கயிற்றாற் கட்டியது என்பதாம். சூத்திரம் - நூற்பா, கயிறு. தூயோர் - மெய்கண்ட தேவர்.

11. ஆதி முனிவர் - திருவிசைப்பாப் பாடியவர்கள்.

12. தந்திரம் - நூல், சூழ்ச்சி; வல்லோர் - திருமூலர் (மூவாயிரம் பாடல்களையுடைய 'திருமந்திரம்' என்னும் நூலை இயற்றியவர் திருமூலர்.)

13. சங்கத்து மேலோர் - நக்கீரர், கபிலர், பரணர் முதலிய புலவர்கள்.

14. ஐயடிகள் காடவர்கோன் நாயனர்; கழறிற்றறிவர் - சேரமான் பெருமாள் நாயனர்; தெய்வமொழிப் பாவலர் - திருவள்ளுவர்.

15. கல்லாதார் சிங்கம் - கல்வியறிவில்லாதவர்க்கு அச்சந் தரும் சிங்கம் போலிருத்தல்; நீ என்றது தமிழை; சொல் - புகழ்.

16. பொன் அடிகள் - அழகிய திருவடிகள், செய்யுள் அடிகள்; பன்னிய - சுகிர்ந்த, சிக்கறுத்த.

17. பஞ்சி - பஞ்சு; நெருடா - தடவாத; கீண்டு - கிழிந்து; கலை - ஆடை, நூல்வகை. இக்கண்ணியில் நூல், பா, கலை ஆகிய இச்சொற்கள் ஆடைக்கும், செய்யுளுக்கும் சிலேடையாக அமைந்துள்ளன.

18. சொல் ஏர் உழவர் - புலவர்; தீயாது - கரிந்து போகாமல், தீமையில்லாது; சொல் - சொற்கள், நெல்; செய்யுள் - பாட்டு, வயல்; வியாது - அழியாமல். இக்கண்ணியில் புலவர்க்கும் உழவுக்கும் சிலேடையமைந்துள்ளது.

19. ஒரு குலத்தும் வாராது - ஒரு குலத்திலும் பிறவாது; வருகுலம் ஓர் ஐந்து - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்ற ஐவகைப் பாவாகிய குலம்.

20. உந்திப்புலம் - கொப்பூழிடம்; வளி - (உடலிலுள்ள) உதான வாயு; வாக்கு - பரை முதலிய நான்கு.

21. மிடறு - கழுத்து; உரம் - மார்பு; இதழ் - உதடு; நா - நாக்கு; தந்தம் - பல்; அண்ணம் - மேல் உள்வாய்; தலை திரும்பல் - ஒலி எழுத்தின் தோற்றம், கருவிலிருந்து வரும் குழந்தையின் தோற்றம்.

22. முதல் முப்பது எழுத்து - உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆக முப்பது முதலெழுத்துகள்; சார்பெழுத்து இருநூற்று நாற்பது.

23. எண் முதலிய பன்னிரண்டு: எழுத்திலக்கணத்தின் பகுதிகளாகிய எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதனிலை, இடைநிலை, ஈற்றுநிலை, போலி, பதம், புணர்ச்சி என்பவை.

24. அசை - சுவடித் தூக்குப் பலகை. அசை தொட்டிலாக உருவகம் செய்யப்பட்டது. தால் ஆட்டி - நாவை அசைத்து; (தால் - நாக்கு), தாலாட்டுப் பாட்டுப் பாடி; இலகு - விளங்கும்.

25. மஞ்சள் குளிப்பாட்டல், மையிடல், முப்பால் புகட்டல் என்பன சுவடிக்கும் குழந்தைக்கும் பொதுவாகக் கூறப் பட்டன. படிக்கத் தொடங்குகையில் எழுதிய ஏட்டில் மஞ்சள் பூசுதலும், எழுத்துகள் விளங்க மை பூசுதலும் பண்டைக் கால வழக்கம். முப்பால் - குழந்தைக்கு; தாய்ப்பால், பசுவின்பால், ஆட்டின் பால்; தமிழுக்கு அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றும்; மஞ்சர் - மைந்தர்.

26. பத்துப் பருவம் - குழந்தையின் பத்துப் பருவங்கள், பிள்ளைத் தமிழ் நூல் பாடுங்கால் கூறப்படும் பத்துப் பருவங்கள்.

27. நினையும் படிப்பு - படிக்க நினைக்கும் படிப்பெல்லாம்.

2. தந்தையார் பாண்டியனுக்குக் கூறிய அறிவுரை யாது?

3. 'உயிர்களிடத்து அன்பு செலுத்தவேண்டும்,' என்பதைத் தந்தையார் எவ்வாறு விளக்கினர்?

4. தேவதத்தன் சான்றோர்முன் கொண்டுசென்ற வழக்கு யாது?

5. சான்றோர் வழக்கினை எவ்வாறு தீர்த்து வைத்தார்?

II. பிரித்தெழுது:

இன்பமாக, தடுத்திருக்கிறேன், ஆருயிர்கட்கெல்லாம்.

III. சேர்த்தெழுது:

சிறை+படுவது, ஆடு+குட்டி, அறிவு+உரை.

IV. தெரிந்துகொள்:

'முடியாது' என்பது முற்றுப்பெருதகைக் குறிக்கும். 'நாளைக்கு வர முடியாது,' என்பது தவறு. 'நாளைக்கு வர இயலாது,' என்பதே சரி.

## இலக்கணம்

### மாத்திரை

**1. கிளி  2. உயிர்  3. நாள்**

மேலே உள்ளவற்றுள் முதற்சொல்லில் உள்ள முதல் எழுத்தை ஒலிக்க எவ்வளவு நேரமாகும்? இரண்டாம் சொல்லில் உள்ள 'ர்' என்னும் எழுத்தை ஒலிக்க எவ்வளவு நேரமாகும்? மூன்றும் சொல்லில் இருக்கும் முதல் எழுத்தை ஒலிக்க எவ்வளவு நேரமாகும்? மூன்று எழுத்துகளையும் தனித்தனியாக ஒலிக்கும்போது கால அளவில் வேறுபாடு காண்கிறுயன்றே?

இலக்கண அறிஞர்கள், ஒவ்வோர் எழுத்தையும் ஒலிக்கும் கால அளவை வரையறுத்துள்ளார்கள். அதற்கு **மாத்திரை** என்பது பெயர். நாம் இயல்பாகக் கண்ணிமைக்கும் நேர அளவையும், கைந்நொடிக்கும் நேர அளவையும் மாத்திரை என வழங்குகிறோம்.

உயிர்க்குறிலும் உயிர்மெய்க் குறிலும் ஒவ்வொரு மாத்திரை பெறும்; உயிர் நெடிலும், உயிர்மெய் நெடிலும் இரண்டிரண்டு மாத்திரை பெறும்; ஆய்த எழுத்தும், மெய்யெழுத்தும் அரையரை மாத்திரை பெறும்.

'கிளி' என்னும் சொல்லில் 'கி', 'ளி' ஆகிய இரண்டு உயிர் மெய்க்குற்றெழுத்துகள் உள்ளன. கி—ஒரு மாத்திரை. ளி—ஒரு மாத்திரை. 'உயிர்' என்னும் சொல்லில் உயிர்க் குறில் ஒன்றும் உயிர்மெய்க் குறில் ஒன்றும் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாத்திரை. அச்சொல்லில் உள்ள 'ர்' என்னும் மெய்யெழுத்துக்கு மாத்திரை இல்லை. ஏனெனில், சொல்லில் இடம் பெறும்போது மெய்யெழுத்து மாத்திரை பெறாது. 'நாள்' என்னும் சொல்லில் மெய்யெழுத்துக்கு மாத்திரை இல்லை.'

**பயிற்சி:**

1. மாத்திரை என்பது யாது?
2 கீழே காணும் சொற்களில் உள்ள எழுத்துகளின் மாத்திரைகளை எண்ணிக் கூறு:

மாணிக்கம், வாய்பாடு, சிலப்பதிகாரம்.

# 5. பழந்தமிழர் பண்பாடு

உடை, உணவு, உறையுள், அணிகள், ஊர்திகள், வீடு, நகரம் உள்ளிட்ட புறத்தேவைகளின் சிறப்பினை 'நாகரிகம்' என வழங்குவர். உள்ளத்தின் சிறப்பினைப் 'பண்பாடு' என வழங்குவர். உள்ளத்துச் சிறப்பான பண்பாடு, உரையாலும் செயலாலும் வெளிப்படும்.

நாகரிகம், நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், காலத்துக்குக் காலம் வேறுபடும் இயல்புடையது. பண்பாடு எல்லார்க்கும் என்றும் பொதுவாக அமைவது. சங்ககாலத் தமிழர் உடுத்த உடையை நாம் உடுத்துவதில்லை; உடுத்தவேண்டும் என்று வற்புறுத்துவதுமில்லை. சங்ககாலத் தமிழர் உண்ட உணவையே நாம். உண்பதில்லை; உண்ணவேண்டும் என்று வற்புறுத்துவதுமில்லை. ஆயினும், அக்காலத் தமிழரின் ஒழுக்கத்தை நாமும் கடைப்பிடிக்கிறோம்; கடைப்பிடிக்கவேண்டும் என்றும் வற்புறுத்துகிறோம்;

வருங்கால மக்களும் அதை மேற்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறோம். எனவே, பண்பாடு நிலையான ஒன்றாகும்.

பண்பாட்டைத் தருவது பெரும்பாலும் கல்வியே. அதனால், தமிழர் கல்வியைப் போற்றிக் கூறினர்; 'யாவரும் விரும்பிச் சேர்க்கும் செல்வத்தினும் கல்வி சீரியது,' என்றனர். 'ஒரு தாய், தான் பெற்ற பிள்ளைகளுள் கற்றவனையே மற்றவரைவிட அதிகமாக விரும்புவாள்; சமுதாயத்தில் கற்றவன் தாழ்நிலையில் இருப்பவனாயினும், மேல் நிலையில் உள்ளவனும் கல்வி கற்க அவனை நாடுவான்; அரசனும் கற்றவன் மொழி கேட்டு அதன்வழி நிற்பான்,' என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், கல்வியின் சிறப்பை நம் உள்ளம் கொள்ளுமாறு உரைத்துள்ளான்.

தமிழர், விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்று, அகமலர்ச்சியோடு உபசரிப்பர். விருந்தினர் புறத்தே இருக்க, அமிழ்தமாயினும் தாம் மட்டும் தனித்து உண்ணார்; 'மேல் உலகம் கிட்டாவிட்டாலும், ஈவது நன்று; இரப்பது தீது,' என்ற கொள்கையுடையவராயிருந்தனர்; இரப்பவனுக்கு இல்லை என்று சொல்வது இறப்பதைவிட இன்னாததெனை எண்ணினர். ஈதலும் இசைபட வாழ்தலும் அவர்கள் இலக்குகளாகும்.

தமிழர்க்கு ஒழுக்கம் உயிரைக் காட்டிலும் விழுப்பமுடையது. கல்வியை மறந்துவிட்டால், பின்னர்க் கற்றறியலாம்; ஒழுக்கம் தவறிவிட்டால், அதனால் வரும் இழுக்கை நீக்குவது அரிது. ஒழுக்கத்தால் எவரும் மேம்பாடு எய்துவர்.

தமிழரின் பண்பாட்டில் தலைசிறந்தது மானம். மானமாவது, தம் நிலையிலிருந்து தாழாமல் இருத்தலும், தாழ்வு வரும்போது உயிர் வாழாமையும் ஆகும். நல்லவர் புகழ் தேடும் நெறியிலும் ஒவ்வாத

செயல்களைச் செய்யமாட்டார். மானத்தைக் காப்பதில் தமிழர், மயிர் நீத்தால் உயிர்நீங்கும் கவரிமான் போன்றவர். சேரமான் கணைக்கால் இரும்பொறை, மானம் அழியப் பெற்ற நீரைப் பருகாது தன்னிலைக்கு நாணி உயிர்விட்டான். பெருஞ்சேரலாதன் என்னும் மன்னன், கரிகாற்சோழனோடு பொருதான். சோழன் எறிந்த வேல், சேரன் மார்பில் நுழைந்து, முதுகு வழி வெளிப்பட்டமையால், முதுகிலும் புண் ஏற்பட்டது. அதைப் புறப்புண்ணாகக் கருதிச் சேரலாதன் வடக்கிருந்து உயிர் துறந்து மானத்தைக் காத்துக்கொண்டான்.

குறமகள் இளவெயினி என்னும் பெண்பாற்புலவர் பாடிய பாடல் ஒன்று, தமிழர் பண்பாட்டினை விளக்குகிறது: தம்மைச் சார்ந்தோர் தவறு செய்யின், அதைப் பொறுத்துக்கொள்வதும், பிறரது வறுமை நிலைக்குத் தாம் நாணமுறுவதும், படைக்குப் பழி தாராத வீரம் பெற்றிருப்பதும் தமிழர் பண்பாட்டின் கூறுகளாகும்.

பண்பாடு அமையப்பெற்றவரைச் 'சான்றோர்' என்று வழங்குவர். 'அச்சான்றோர், தேவர்க்குரிய அமிழ்தம் தமக்குக் கிடைத்தாலும், அதை இனிது என்று தாம் மட்டும் தனித்து உண்ணாதவர்; பிறர் அஞ்சத்தக்க துன்பத்திற்குத் தாமும் அஞ்சி, அதைத் தீர்த்தற்கு முயல்பவர்; புகழ் கிட்டும் செயலாயின், அதற்குத் தம் உயிரையும் தருவர்; பழி வரும் செயலாயின், அதனால் உலகமே பரிசாகக் கிடைப்பதாயினும், அதைச் செய்யார்; கவலையற்றவர்; வலிய முயற்சி பெற்றிருந்தும், தமக்கென முயலாமல் பிறர்க்கென முயல்பவர். அத்தகைய சான்றோர் இருப்பதாலேயே இவ்வுலகம் அழியாமல் இருக்கிறது,' என்று கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்னும் அரசன் கூறியுள்ளான். 'சான்றோர் தம் சான்றாண்மையிலிருந்து தவறி விட்டால், அதனை இவ்வுலகம் பொறுத்துக்கொள்ளாது,' என்று வள்ளுவரும் எச்சரிக்கை செய்துள்ளார்.

'ஒரே உலகம்' என்னும் பரந்த மனப்பான்மை, இந்த இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய இலட்சியமாகப் பாராட்டப்படுகிறது. இதே இலட்சியத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பழந்தமிழ்ப் புலவர் ஒருவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அப்புலவர் பெயர் கணியன் பூங்குன்றனார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்,' என்பது அவர் பாடிய பாடலின் அடி. இது பழந்தமிழர் பண்பாட்டினைப் படம்பிடித்துக்காட்டுகின்றது எனலாம்.

தமிழர்கள் இறைப்பற்று மிக்கவர்கள். பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் தமிழ் நிலத்தை ஐந்து திணைகளாகப் பிரித்து இலக்கணம் கூறுகிறது. இந்த ஐந்து திணைகளுக்கும் தனித்தனித் தெய்வங்களைக் கூறுகிறார் தொல்காப்பியர். இத்தெய்வங்களைப் பண்டைத் தமிழ் மக்கள் வழிபட்ட நிகழ்ச்சிகளைச் சங்க இலக்கியங்களில் நாம் பரக்கக் காணலாம்.

சுருங்கச் சொன்னால், அனைத்திலும் அறம் போற்றுவதும், என்றும் யாருக்கும் தீது நினையாமையும், தம் நிலையில் தாழாமையும் அனைவரிடத்தும் அன்பு பாராட்டலும் தமிழர் பண்பாடாகும். அப்பண்பாட்டு நெறியைப் பின்பற்றி வாழ்வதே தமிழர் கடமையாகும்.

## அருஞ்சொற்பொருள்

சீரியது - சிறப்புடையது, இரப்பது - பிச்சையெடுப்பது, இசை - புகழ், விழுப்பம் - உயர்வு, இழுக்கு - குற்றம், பொருதான் - போரிட்டான், புறப்புண் - முதுகில் பெறும் போர்க் காயம், வடக்கிருத்தல் - உண்ணா நோன்பு மேற்கொண்டு வடக்கு நோக்கி அமர்ந்து உயிர் துறத்தல்.

## பயிற்சி

I. விடை எழுது:

1. நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்கு.

2. நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் உள்ள வேற்றுமை யாது?
3. கல்வியின் சிறப்பு யாது?
4. தமிழரின் விருந்தோம்பலையும் ஈகையையும் விளக்கு.
5. தமிழரின் ஒழுக்கம், மானம் பற்றி நீ அறிவன யாவை?
6. குறமகள் இளவெயினி கூறும் பண்பாட்டின் கூறுகள் யாவை?
7. சான்றோர் என்பவர் யாவர்? அவர் பண்புகள் யாவை?

II. பிரித்தெழுது:

உண்பதில்லை, கல்விக்காக, ஒழுக்கமற்ற.

III. சேர்த்தெழுது:

விரும்பி+கற்க, தேடி+போனார், வர+சொன்னார், சுருங்க+சொன்னால், போய்+பார்த்தார், பேசுவதாக+கூறினார்.

IV. தெரிந்துகொள்:

அன்று. இன்று—அன்று என்பது வேறொன்றுள்ளதைக் குறிக்கும்; இன்று என்பது முழுதும் இல்லாமையைத் தெரிவிக்கும்.

எ-டு: நீ சொன்னது இது அன்று.
கல்வியைக்காட்டிலும் சிறந்தது இன்று.

## இலக்கணம்

## குற்றியலுகரம்

'துறந்து' என்னும் சொல்லைக் கவனி. இதில் முதல் எழுத்தும் ஈற்றெழுத்தும் 'து' என்னும் எழுத்தாகவே அமைந்துள்ளன. ஆனால், 'துறந்து' என்று படிக்கும் போது முதலெழுத்தையும் ஈற்றெழுத்தையும் ஒரே அளவாய் உச்சரிக்கிறாயா? இல்லையன்றோ? முதலெழுத்தை உச்சரிப்பதற்கான நேரத்தினும் ஈற்றெழுத்தை உச்சரிக்கும் நேரம் குறைவு. இவ்வாறு தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் உகரம் **குற்றியலுகரம்** எனப்படும்.

தனி நெட்டெழுத்தைச் சார்ந்தோ, பல எழுத்துகளைச் சார்ந்தோ, ஒரு சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின் மேல் ஊர்ந்து நிற்கும் 'உ' என்னும் எழுத்துத் தனக்குரிய ஒலியில் குறைந்து ஒலிக்கும். அதுவே குற்றியலுகரம் எனப்படும். குற்றியலுகரத்திற்கு உச்சரிப்புக் கால அளவு அரை மாத்திரை.

குற்றியலுகரம் தன் அயலெழுத்தை நோக்க ஆறு வகைப்படும் அவையாவன:

1. வன்றொடர்க் குற்றியலுகரம்—நீக்கு, கேட்டு.
2. மென்றொடர்க் குற்றியலுகரம்—விருந்து, கண்டு.
3. இடைத்தொடர்க் குற்றியலுகரம்—சால்பு, நெய்து.
4. நெடிற்றொடர்க் குற்றியலுகரம்—ஆடு, தீது.
5. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்—பண்பாடு, ஈவது.
6. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்—அஃது, எஃகு.

### பயிற்சி

1. குற்றியலுகரமாவது யாது?
2. குற்றியலுகரத்தின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு.

## 6. தங்கப்பன் உணர்ந்த தவறு

பள்ளிக்கூடத்தின் மணி ஒலித்தது. ஏழாம் வகுப்பில் பாடம் நடத்திக்கொண்டிருந்த கணக்காசிரியர், தம் பாடத்தை முடித்துவிட்டு வெளியே சென்றார். அது வரை அமைதியாய் இருந்த மாணவரிடையே சல சலப்புத் தோன்றியது. அது ஒரு நிமிடந்தான் நீடித்தது. அதற்குள் அந்த வகுப்பினுள் தமிழாசிரியர் நுழைந்தார். மாணவர் எழுந்து நின்று மரியாதை செய்தனர். தமிழாசிரியர். 'உட்காருங்கள்,' என்றார். மாணவர் உட்கார்ந்தனர். வகுப்பறையின் சலசலப்பு மறைந்தது. மீண்டும் அங்கே அமைதி குடிகொண்டது.

தமிழாசிரியர் வரும்போது பாட நூலுடன், விடைத் தாள் கட்டினையும் கொண்டுவந்திருந்தார். அதை மாணவர் காணத் தவறவில்லை. கடந்த வாரம் எழுதிய தமிழ்த்தேர்வின் விடைத்தாள் கட்டே அது என்பதும் மாணவர்களுக்குத் தெரியும். அதனால், ஒவ்வொரு வரும் தாம் பெற்ற மதிப்பெண்ணை அறிந்துகொள்ளும் ஆவல் மிக்கவராயினர். எனவே, மாணவர் அனைவர் பார்வையும் விடைத்தாள் கட்டின்மீது பதிந்திருந்தது. மாணவரின் ஆவலை அறிந்துகொண்ட தமிழாசிரியர், விடைத்தாள் கட்டினைக் கட்டியிருந்த நூலை அவிழ்த் தார்; பின்னர் ஒரு விடைத்தாளை எடுத்தார்; அதன் மீது எழுதியிருந்த மாணவன் பெயரைப் படித்தார் உடனே அப்பெயருக்குரிய மாணவன் எழுந்து நின்றான். 'நீ பெற்ற மதிப்பெண் நாற்பது. எப்போதும் நாற் பது மதிப்பெண் மட்டுமே பெறுவது போதுமா? வளர்ச்சி வேண்டாமா? அடுத்த முறை குறைந்தது ஐம்பது மதிப்பெண் பெறவேண்டும்,' என்று கூறிய வாறு விடைத்தாளை எடுத்து நீட்டினார். அதற்குரிய மாணவன் நாணத்தோடு வந்து விடைத்தாளைப் பெற்றுச் சென்றான்.

இவ்வாறே ஒவ்வொரு மாணவன் பெயரையும் படித்து, அவனவன் விடைத்தாளைப்பற்றி விமரிசனம் செய்து, பிறகு கொடுத்து வந்தார் ஆசிரியர். இந்தக் காட்சியைக் கண்ட முன் வரிசையில் அமர்ந்திருந்த தங்கப்பன், தணலில் அமர்ந்தவன் போலத் தவித்தான்; அடுத்தது தன் விடைத்தாளாய் இருக்குமோ என்று எண்ணியெண்ணித் துன்புற்றான். அதற்குக் காரணம், அவன் தேர்வு எழுதிய முறையே ஆகும்.

கடந்த வாரம் தமிழ்த்தேர்வு நடந்தபோது, தங்கப்பன் தேர்வுக்குரிய வினாத்தாளைப் பெற்றான். அதில், அவன் படித்திருந்த சில வினாக்களுள் ஒன்றுகூட இல்லை. அதனால், அவன் சிறிது நேரம் திகைப்போடு

உட்கார்ந்திருந்தான்; அப்போது மெல்ல இடப்பக்கம் திரும்பினான்.

அங்கே அமர்ந்திருந்த அழகன், அவனைப் போலத் திகைத்துச் செயலற்றிராமல், மளமளவென்று விடைகளை எழுதிக்கொண்டிருந்தான். தங்கப்பன் தன் வலப் பக்கம் பார்த்தான். அங்கே அமர்ந்திருந்த முத்து, முத்துமுத்தான கையெழுத்தால் விரைந்து விடைகளை எழுதிக்கொண்டிருந்தான். அழகனும் முத்துவும் தமிழில் எப்போதும் சிறந்த மதிப்பெண் பெறும் இயல்பினர். அதனால், அவன் அவர்களைப் பார்த்து விடை எழுதினால் தேர்ச்சிக்குரிய மதிப்பெண்ணை எளிதாகப் பெறலாம் என்று எண்ணினான்; உடனே மிக்க எச்சரிக்கையோடு, ஆசிரியரோ மாணவரோ அறியாதவாறு, சில விடைகளை அழகனைப் பார்த்து எழுதினான்; சில விடைகளை முத்துவைப் பார்த்து எழுதினான்; எந்த வினாவையும் விட்டுவிடாமல் எல்லாவற்றுக்கும் விடைகளை எழுதி முடித்தான்; அதனால், உறுதியாகத் தேர்ச்சிக்குரிய மதிப்பெண் தனக்குக் கிடைக்கும் என்று நம்பினான். ஆயினும், தான் பார்த்தெழுதியதை ஆசிரியர் கண்டுபிடித்திருப்பாரோ என்னும் கவலை வாட்டியதால், தங்கப்பன் அன்று வகுப்பில் கலங்கிய நிலையில் அமர்ந்திருந்தான்.

தமிழாசிரியர் அடுத்த விடைத்தாளை எடுத்தார்; 'தங்கப்பன்' என்று அதன்மீதிருந்த பெயரைப் படித்தார். தங்கப்பன் அஞ்சியவாறு எழுந்தான். அவன் உடலும் உள்ளமும் மெல்ல நடுங்கின. ஆசிரியர் விடைத்தாளை உடனே கொடுத்துவிடவில்லை; அதை முதலிலிருந்து முடிவுவரை ஒரு முறை புரட்டிப் பார்த்தார். அவர் முகம் மலர்ந்தது. பின்பு தங்கப்பனைப் பார்த்தார்; 'தங்கப்பா, நீ ஐம்பது மதிப்பெண் பெற்றிருக்கிறாய்; இதற்கு முன்னர் 30, 35 என்று குறைவாக மதிப்பெண் பெற்றாய். முயன்று படித்துச் சிறந்த மதிப்பெண் பெறவேண்டும் என்று சென்ற முறை

வற்புறுத்திக் கூறினேன். அதன்படி படித்துச் செம்மை யாக எழுதிச் சிறந்த மதிப்பெண் பெற்றிருக்கிறாய். உன்னைப் பாராட்டுகிறேன்!' என்றார். தங்கப்பன் ஒன்றும் பேசாமலே நின்றான். 'பார்த்து எழுதியதை ஆசிரியர் கண்டு பிடித்துவிடுவாரோ!' என்று அஞ்சிக் கலங்கிய தங்கப்பன், 'ஐம்பது மதிப்பெண்ணா?' என்று நம்பமுடியாமல் தன்னைத் தானே கேட்டுக்கொண்டான்.

ஆசிரியர் வகுப்பைப் பார்த்துப் பேசினார். 'மாண வர்களே, வழக்கமாகக் குறைந்த மதிப்பெண் பெறும் தங்கப்பன், இந்தத் திங்கள் ஐம்பது மதிப்பெண் பெற் றிருக்கிறான். அப்படியானால், தங்கப்பன் எவ்வளவு உழைத்துள்ளான் என்பதை எண்ணிப்பாருங்கள். உழப்பின் வாரா உறுதிகள் இல்லை. முயன்றால், எது வும் முடியும். இம்முதுமொழிகளுக்கு ஏற்ற எடுத்துக் காட்டாய் நம் தங்கப்பன் இலங்குகிறான். நீங்களும் தங்கப்பனைப்போல உழைத்து, ஐம்பது, அறுபது என் னும் மதிப்பெண் பெற முயலுங்கள்,' என்று தமிழாசிரி யர் மேலும் தங்கப்பனைப் புகழ்ந்தார்.

,ஆசிரியர் புகழுரைகளைக் கேட்ட தங்கப்பனின் உள்ளம் கூசியது. 'பார்த்து எழுதிய எனக்குப் பாராட்டா! தவறு செய்த என்னை மற்றவர்கள் பின் பற்ற வேண்டுமா? கூடாது! கூடாது!' என்று தனக்குள் கூறிக்கொண்டான் தங்கப்பன். ஆசிரியரோ, தம் புகழுரையை இன்னும் முடிக்கவில்லை. அவருரை அவனை வருத்தியது. 'தங்கப்பா, இப்புகழுரை உனக்குத் தகுமா?' என்று அவன் மனம் அவனை இடித்துக் கேட்டது. தங்கப்பன் அதற்கு மேலும் அமைதியாக நிற்கவில்லை; 'ஐயா,' என்று கண்கலங்க, குரல் நடுங்க ஆசிரியரை அழைத்தான்.

உவகையோடு புகழ்ந்துகொண்டிருந்த ஆசிரியர், தங்கப்பனது தழுதழுத்த குரலைக் கேட்டு, அவன் கண்கள் கலங்கியிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார்;

'தங்கப்பா, ஏன் உன் கண்கள் கலங்கியுள்ளன?' என்று கேட்டார்.

தங்கப்பன் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டு, வெளிக்கிளம்பும் அழுகையை அடக்கிக் கொண்டு, ஆசிரியரிடம் பேசினான். 'ஐயா, நான் உங்கள் புகழுரைக்குத் தகுந்தவன் அல்லேன். உங்கள் அன்புச் சொற்கள் என் மனத்தை முள்ளைப் போலக் குத்தின! மேலும் அமைதியாக இருக்க இயலவில்லை. உண்மையைச் சொல்லிவிடுகின்றேன்: ஐயா, நான் உழைக்கவில்லை; படிக்கவில்லை. அதனால், ஒரு விடையும் எழுத இயலாத நான், என் இரு பக்கத்திலும் அமர்ந்து தேர்வு எழுதிய அழகனையும் முத்துவையும் பார்த்தே எல்லாவற்றையும் எழுதினேன். பார்த்து எழுதியபோதுகூட அதைப் பிழையாகக் கருதவில்லை. ஆனால், நீங்கள், நான் செய்த தவற்றை அறியாமல், புகழ்ந்தபோது நான் என் பிழையை உணர்ந்தேன்; 'ஆசிரியரை ஏமாற்றுகிறோமே!' என்று வருந்தினேன்; ஐயா, நான் எனக்குத் தகுதியில்லாப் புகழுரையை ஏற்கக் கூசுகின்றேன். என்னை இம்முறை மன்னித்து விடுங்கள்! இனிமேல் பார்த்து எழுதமாட்டேன்; நன்றாக உழைத்துப் படித்து எழுதுவேன். அடுத்த முறை தவறு செய்யாமல் தேர்வு எழுதி ஐம்பது மதிப்பெண்ணை பெறுவேன் என்று உறுதி கூறுகிறேன்,' என்று கூறினான் தங்கப்பன். அதற்குள் அவன் கண்கள் மீண்டும் கலங்கி விட்டன. கண்ணீர் பெருகியது.

தங்கப்பனின் சொற்கள் ஆசிரியரின் உள்ளத்தை உருக்கின. அவர் தம்மிடத்திலிருந்து தங்கப்பன் அருகே வந்தார்; அவன் கண்களைத் தம் கையால் துடைத்தார்; 'தங்கப்பா, காந்தி அடிகள் என்ன கூறி யிருக்கிறார் தெரியுமா? ''தவறு செய்வதில் பிழையில்லை. ஆனால், தவறு செய்ததை அறிந்துகொண்ட பிறகு, அதைத் திருத்திக்கொள்ளாமல் இருப்பது தவறு,'' என் பது அவ்வறிஞர் அருளிய உரை. நீ ஒரு தவறு செய்

தாய்; அதை உணர்ந்து திருந்திவிட்டாய். அது மட்டுமா? செய்த தவற்றை என்னிடம் தனியாகக் கூறு யுல், அனைவரும் அறிய வகுப்பிலேயே கூறினாய். அந்த ஆண்மையைப் பாராட்டுகிறேன்! தங்கப்பா, இப்போது நீ தணலில் இட்ட தங்கம் போல மாசற்றவனாய் மாறி விட்டாய். இனி எப்போதும் தவறு செய்யாதே! இது உன் விடைத்தாள். பெற்றுக்கொள். உன் மதிப் பெண் இப்போதும் ஐம்பதே. இந்த ஐம்பது மதிப் பெண் உன் பாடத்துக்கன்று; உன் பண்புக்குக் கொடுத் தது,' என்று கூறியவாறு விடைத்தாளைத் தங்கப்பனி டம் கொடுத்தார்.

திருந்திய தங்கப்பன், அந்த விடைத்தாளைப் பெற்றுக் கொண்டான். 'தங்கப்பனது பண்புக்கு, ஐம்பது என்ன; இன்னும் அதிகமான மதிப்பெண்ணும் தரலாம்,' என்றே எல்லா மாணவரும் எண்ணினர்.

## அருஞ்சொற்பொருள்

குடி கொண்டது - நிலவியது, செயலற்று - ஒன்றும் செய்யா மல், திங்கள் - மாதம், உழப்பு - முயற்சி, கூசியது - வெட்கியது.

## பயிற்சி

I. விடை எழுது:

1. 'அடுத்தது நம் விடைத்தாளாய் இருக்குமோ!' என்று எண்ணித் தங்கப்பன் துன்புற்றது ஏன்?

2. தங்கப்பனைத் தமிழாசிரியர் முதலில் எவ்வாறு பாராட்டினார்?

3. தங்கப்பன் உண்மையை ஏன் உரைத்தான்?

4. தங்கப்பன் செய்த தவற்றை அறிந்தும், ஆசிரியர் அவனைப் பாராட்டியது ஏன்?

II. பிரித்தெழுது:

கூறியவாறு, அதற்குரிய இவ்வாறே.

**III.** சேர்த்தெழுது:

தலை + அணை, அறியாத + ஆறு, விட + இல்லை, எ + ஆறு.

**IV.** தெரிந்துகொள்:

'அன்று' என்பது, அஃறிணை ஒருமை வினைமுற்று.
'அல்ல' என்பது, அஃறிணைப்பன்மை வினைமுற்று.

எ-டு: நீ கொண்டுவந்தது நான் கேட்ட நூல் அன்று; வேறு ஒன்று. நான் கேட்டவை இந்த நூல்கள் அல்ல; வேறு நூல்கள்

**குறிப்பு**: 'நான் அல்ல, நீ அல்ல, அவர் அல்ல, அவள் அல்ல, அது அல்ல' என்று எழுதுவது தவறு. 'நான் அல்லேன், நீ அல்லை, அவன் அல்லன், அவள் அல்லள், அது அன்று, அவையல்ல' என்று எழுதுவதே சரி.

## இலக்கணம்

## குற்றியலிகரம்

தவறு—இச்சொல்லின் ஈற்றெழுத்துக் குற்றியலுகரம் என்பதை அறியலாம். குற்றியலுகரத்தைப் போலவே **குற்றியலிகரம்** என்பதும் உண்டு. தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் இகரம், குற்றியலிகரம் எனப்படும்

குற்றியலுகரத்திற்கு முன்னே, யகர வருக்க எழுத்தை முதலாகக் கொண்ட சொல் வரும்போது, அக்குற்றியலுகரம் இகரமாய்த் திரிந்து குறைந்து ஒலிக்கும். 'மியா' என்னும் ஓர் அசைச்சொல் உண்டு. அதில் முதலில் உள்ள இகரமும் குற்றியலிகரமாகும்.

எ-டு: தவறு+யாது—தவ**றி**யாது?
கொக்கு+யாது—கொக்**கி**யாது?
கேள்+மியா—கேண்**மி**யா.

### பயிற்சி

குற்றியலிகரம் என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்கு.

# 7. ஒருமைப்பாடு

இந்தியா உயரமான மலைகளையும் பேராறுகளையும் செழிப்பான சமவெளிகளையும் கொண்ட நாடு; உலகத்தில் உள்ள நாடுகளுள் ஏழாவது பெரிய நாடு. வடக்கில் இமயமலையும் கிழக்கில் வங்காள விரிகுடாவும் தெற்கில் இந்து மாக்கடலும் மேற்கில் அரபிக்கடலும் இந்தியாவைச் சூழ்ந்துள்ளன.

இன்று ஒரே நாடாய்த் திகழும் இந்தியா, பண்டைக் காலத்தில் பல நாடுகளாய்ப் பிரிந்திருந்தது. என்றாலும், இந்தியர் அனைவரும், ஒரு நாட்டினர் என்னும் உணர்வு பெற்றிருந்தனர். அந்த உணர்வு பெறவேண்டும் என்பதை அக்காலச் சான்றோர் வற்புறுத்தினர்.

தென்னிந்தியாவில் தோன்றிய ஆதி சங்கரர், இந்தியா முழுவதிலும் பரவலாகத் தம் மடங்களை அமைத்தார். புனிதப்பயணம் மேற்கொள்ளும் மக்கள், காசி முதல் இராமேசுவரம் வரை வந்து சென்றார்கள். இமயம் முதல் குமரி வரை உள்ள பெருநாடு, கலையாலும் பண்பாட்டாலும் ஒரு நாடெனவே கருதப்பட்டது.

ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட போதுதான் இந்தியா முழுவதும் ஓராட்சியின்கீழ் அமைந்தது. ஆங்கிலேயரின் ஆட்சி அகன்று, அடிமைத்தளை அறுந்து, நாம் உரிமை பெற்றபோது, சிறுசிறு சமஸ்தானங்களும் இந்தியக் குடியரசில் இணைந்துவிட்டன. இதனால், ஒரே இந்தியா உருவானது.

இந்தியாவில் பல மொழிகள் வழங்குகின்றன; பல மதத்தினர் வாழ்கின்றனர். அவர்கள் மொழியால், மதத்தால், உடையால், உணவால் வேறுபட்டாலும், உணர்வால் ஒன்றுபட்டவர்கள். இதையே நம் பாரதியார்,

'முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் — இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள் — எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்,'

என்று பாடினர்.

ஒவ்வொரு மொழியினரும் தத்தம் மொழியைச் செழிக்கச் செய்யவேண்டும்; ஒவ்வொரு மாநிலத்தாரும் தத்தம் மாநிலம் எல்லா வளமும் பெற்று முன்னேற உழைக்கவேண்டும்; ஆனால், அனைவரும் 'நமது நாடு இந்தியா; நாம் இந்தியர்,' என்னும் உணர்வையே பெற வேண்டும்; தம் மொழியையும், மாநிலத்தையும் உயர்த்தும் வேகத்தில் இந்திய ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளையுமாறு செய்தல் கூடாது.

சீனா நமது நாட்டின்மீது படையெடுத்தபோதும், பாக்கிஸ்தான் நமது நாட்டின்மீது படையெடுத்த போதும் இந்தியரின் ஒருமைப்பாட்டுணர்வு வெளிப்பட்டது. வேறுவேறு கொள்கைகளுடன் நாளும் மோதிக் கொண்ட பல்வேறு அரசியற்கட்சியினரும் ஒன்றுபட்டு, பகையை வீழ்த்தும் முயற்சியில் பல்லாற்றானும் துணை நின்றனர். போர்க்காலத்தில் தோன்றிய அதே ஒற்றுமை உணர்வு அமைதிக் காலத்திலும் நிலவுதலே நாட்டின் நல்வாழ்வுக்கு ஏற்றது.

இந்தியன் ஒருவன், இந்தியாவின் எந்த மாநிலத்திலும் வாழலாம்; தொழில் செய்யலாம். அந்த இந்தியன் வாக்குரிமையுடையவனானால், பாராளுமன்றத்தேர்தலில் அவன் விரும்பும் எந்தத் தொகுதியிலிருந்தும் போட்டியிடலாம். இந்தியா இந்தியரின் உடைமை. அதைப் பேணிக் காப்பது இந்தியரின் கடமை.

நாம் மொழியால் தமிழர்; மாநிலத்தால் தமிழர்; ஆயினும், நாட்டால் இந்தியர்; பாரதத்தாயின் மக்கள். இதனை என்றும் நினைவுகூரவேண்டும்.

'பாரத நாடு பார்க்கெலாம் திலகம்;
நீரதன் புதல்வர்;இந் நினைவகற்றுதீர்!'

என்னும் பாரதியார் மொழியை நாம் ஏற்று நடக்க வேண்டும்.

ஒரு மாநிலத்தார் தம் மாநிலத்தை மட்டும் வளப் படுத்துதல் போதும் என்றோ, தாம் மட்டும் எல்லாத் துறையிலும் சிறந்திருத்தல் போதும் என்றோ எண்ணு வது, உடலுறுப்பில் ஒன்று மட்டும் நலம் பெற்றிருத்தல் போதும் என்று எண்ணுவது போலப் பிழையானது. 'நம் மாநிலமும் முன்னேறவேண்டும்; பிற மாநிலங் களும் முன்னேறவேண்டும்,' என்றே யாவரும் நினைந்து செயலாற்றவேண்டும். அப்போதுதான் இந்தியா முன்னேறும்.

**வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!**
**வாழிய பாரத மணித்திரு நாடு!**

—பாரதியார்

## அருஞ்சொற்பொருள்

மொய்ம்பு - வலிமை, சிந்தனை - எண்ணம், ஊறு - துன்பம், பல்லாற்றானும் - பல வழிகளாலும்.

## பயிற்சி

I. விடை எழுது:

1. பண்டைக்கால இந்தியரின் ஒருமைப்பாட்டுணர்வை விளக்கு.
2. பாரதியார் ஒருமைப்பாட்டை எவ்வாறு விளக்கு கிறார்?
3. நாட்டின் நலத்துக்கு ஏற்றது எது?
4. இந்தியா இந்தியரின் உடைமை என்பதை விளக்கு.
5. இந்தியா எப்போது முன்னேறும்?

II. பிரித்தெழுது:

முகமுடையாள், மொய்ம்புற, நீரதன்.

**III.** சேர்த்தெழுது:

ஓர்+ஆட்சி, ஒருமைப்பாடு+உணர்வு, ஒருமைப்பாட்டிற்கு ஊறு.

## இலக்கணம்

## போலி

### நிலம்—நிலன்

இச்சொற்கள் இரண்டிற்கும் எழுத்தில் வேற்றுமை உள்ளது. ஆனால், பொருளில் வேற்றுமை இல்லையன்றோ? '**ம்**' என்னும் எழுத்தைப் போலவே '**ன்**' என்னும் எழுத்து இங்கே இடம் பெற்றுப் பொருள் தருகிறது. எனவே, **ம**கர மெய்க்கு **ன**கரமெய் போலியாகும். அஃறிணைப் பெயர்களின் ஈற்றில் நிற்கும் மகர மெய்க்குப் பதில் னகரமெய் நிற்பது போலி என வழங்கப்படுகிறது. இம்மகரமெய், இரு குறில்களை அடுத்து வருவதாகும்.

எ-டு: அக**ம்**—அக**ன்**
நல**ம்**—நல**ன்**
வள**ம்**—வள**ன்**

மென்றொடர்க் குற்றியலுகரப் பெயரின் இறுதி உகரத்திற்குப்பின் '**அர்**' என்பதும், சில பெயர்களின் ஈற்றில் நிற்கும் '**ல்**' என்னும் எழுத்திற்குப் பதில் '**ர்**' என்பதும் போலியாக வரும்.

எ-டு: சுரும்பு - சுரும்**பர்**    பந்தல் - பந்**தர்**
வண்டு - வண்**டர்**    சாம்பல் - சாம்**பர்**

மேற்கண்ட போலிகள் யாவும் **கடைப் போலி** என வழங்கப்படும்.

சொல்லின் முதலிலும் இடையிலும் ஓரெழுத்துக்குப் பதிலாக வேறு ஓர் எழுத்து வருவதை முறையே **முதற்போலி, இடைப் போலி** என வழங்குவர்.

எ-டு: மஞ்சு - **மை**ஞ்சு } முதற்போலி
மயல் - **மை**யல்

இலஞ்சி - இ**லை**ஞ்சி } இடைப்போலி
அரயர் - அ**ரை**யர்

**பயிற்சி**

1. போலி என்பது யாது?
2. போலியின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு.

## 8. இராசராசன்

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழ வளநாட்டை விசயாலயச் சோழன் ஆண்டான். அவன் வழி வந்து சோழ நாட்டை ஆண்ட அரசர்களைப் **பிற்காலச் சோழர்** என்று வழங்குவர். பிற்காலச் சோழருள் பெயரும் புகழும் பெற்றுச் சீரும் சிறப்புமாய் ஆண்ட தன்னிகரற்ற தார் வேந்தன், **இராசராசன்**. பிற்காலச்சோழர் காலத்தில் இராசராசன் காலமே **பொற்காலம்** எனப் போற்றப்படுகிறது.

இராசராசனது இயற்பெயர் **அருண்மொழி வர்மன்**. அப்பெயருடனே அவன் அரசனானான்; ஆனால், குறுகிய காலத்தில் பெருவெற்றிகளைப் பெற்றுச் சிறப்புற்றமை யால், 'அரசர்க்கு அரசன்' என்று பொருள்படும் 'இராசராசன்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். அப்பெயரே அவனது இயற்பெயர்போல வழங்கி, நிலைத்துவிட்டது. அவனுக்குப் பின்னர், 'இராசராசன்' என்னும் பெயரோடு சோழ மன்னர் சிலர் ஆண்டமை யால், அவனை முதலாம் இராசராசன் என்று வரலாற்று ஆசிரியர் வழங்கினர்.

இராசராசன் தந்தை பெயர், இரண்டாம் பராந் தகச் சோழன்; தாயின் பெயர், வானவன் மாதேவி. பராந்தகச்சோழன் இறந்த பிறகு, அவன் மகனான இராசராசன் அரியணையில்; அமரவில்லை. இராச ராசனுக்குச் சிறிய தந்தையான உத்தமச் சோழன் அரசனானான். உத்தமச் சோழன் மறைந்த பின்னர், கி.பி. 985இல் இராசராசன் சோழ நாட்டிற்கு அரசனானான்.

இராசராசன் ஐப்பசித்திங்கள், சதய நாளில் பிறந்தவன்; காண்பவர் கருத்தைக் கவரும் தோற்றப் பொலிவும், பகைவர் நடுங்கும் ஆற்றலும் பெற்றவன். சோழநாட்டு மக்கள், இராசராசனே, தம் மன்னனாக வேண்டும் என்று பெரிதும் விரும்பினார்கள். மக்களின் அன்பையும், அரசியல் அதிகாரிகளின் ஒத்துழைப்பையும், தனக்குட்பட்ட சிற்றரசர்களின் பெருந்துணையையும் பெற்ற இராசராசன், சோழ நாட்டின் எல்லையை விரிவாக்கி, இணையற்ற புகழை ஈட்டினான்.

இராசராசன் பெருவீரன். அவன் அளவிலும் ஆண்மையிலும் நிகரற்ற படையைப் பெற்றிருந்தான்; அப்பெரும்படையுடன், கடலைக் கடந்து சென்று போரிடக் கப்பற்படையும் வைத்திருந்தான். அவன் மணி முடி சூடி மன்னனான நான்காம் ஆண்டில் சேர நாட்டின்மீது படையெடுத்துச் சென்றான். இராசராசன் அனுப்பிய தூதன் ஒருவனைச் சேர மன்னன் பாஸ்கர ரவிவர்மன் அவமதித்ததோடு அமையாது, அவனை உதகை என்னும் ஊரில் சிறையிட்டான். அதனால் சீற்றம் கொண்ட இராசராசன், சேரனோடு போரிட்டான்; அப்போரில் கடற்கரைப் பட்டினமான காந்தளூர்ச்சாலையில் சேரனுக்குரிய கலங்களைச் சிதைத்தான்; அதனால், 'காந்தளூர்ச்சாலை கலம் அறுத்தருளியவன்' என்னும் புகழ் பெற்றான்; பின்னர் உதகை என்னும் வலிமை மிக்க ஊரைத் தாக்கி, அதன் அரண்களைத் தகர்த்து வெற்றி பெற்று, அவண் சிறைப்பட்டிருந்த தன் தூதனை விடுவித்தான்; சேரனுக்கு நண்பனான பாண்டிய மன்னனான அமரபுயங்கனோடு அமர் செய்து, அவனையும் வென்றான்; குடமலை நாடு, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைப்பாடி, மேலைச் சளுக்கிய நாடு, தெலுங்குச் சோழர்க்குரிய சீட்புலி நாடு, பாகி நாடு, கலிங்க நாடு உள்ளிட்ட பல்வேறு நாடுகளை வென்று, சோழ நாட்டின் புகழை உயர்த்தினான்; கப்பற்படையின் துணையால் ஈழ நாட்டைவென்று, அதற்கு

'மும்முடிச் சோழ மண்டலம்' என்னும் பெயரிட்டுத் தனது ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தான்; சேர நாட்டின் தென்மேற்கே, அரபிக்கடலில் உள்ள 'முந்நீர்ப் பழந் தீவு பன்னீராயிரம்' என வழங்கப்படும் மாலைத் தீவுகளையும் வென்றான். இவ்வெற்றிகளுக்கு அவனுடைய மகன் இராசேந்திரன் உற்ற துணையாய் விளங்கினான். சில போர்களில் இராசேந்திரனே தலைமை வகித்துப் படைநடத்தி வெற்றி பெற்றான். அதனால், இராசராசனது ஆட்சி, தமிழ்நாட்டிற்கு வெளியிலும் கடல் கடந்தும் பரவியிருந்தது.

இராசராசன் போரில் மட்டும் ஆர்வம் கொண்டவன் அல்லன்; நாடு செழிக்கவும் மக்கள் நல்வாழ்வு வாழவும் ஆவன செய்தான். போர்க்காலத்திற்கூட அவன் நாடு வளத்தோடு திகழ்ந்தது. மக்கள் மகிழ்ச்சியும் மனநிறைவும் கொண்டு விளங்கினார்கள். மொழி செழித்தது. கலைகள் வளர்ந்தன. சிற்பமும் ஓவியமும் சிறந்தன.

இராசராசன் வரலாற்று ஆசிரியர்களுக்குப் பெருந்துணைபுரிந்த அரசனவன். கல்வெட்டுகளில் தன் ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்று உண்மைகளை இனிய தமிழில் அகவற்பாவில் அமைத்துப் பொறிக்கும் பழக்கத்தை இராசராசனே தொடங்கினான். அதற்கு **மெய்க்கீர்த்தி** என்பது பெயர்.

இராசராசனுக்குப் பின் ஆண்ட மன்னர்களும் அவனைப் பின்பற்றித் தங்கள் கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்தியைப் பொறித்தார்கள். அம்மெய்க்கீர்த்தியினால் ஓர் அரசனுடைய சிறப்புகளை வரலாற்று ஆசிரியர்கள் பிழையற உணர இயலும்.

முதற்கண்டராதித்த சோழன் மனைவியும் இராசராசனின் பாட்டியுமான செம்பியன் மாதேவியிடம் இராசராசன் பேரன்பு செலுத்தினான்; தன் தமக்கை குந்தவையிடம் மட்டற்ற அன்பும் மதிப்பும் கொண்

டிருந்தான். செம்பியன் மாதேவியும் குந்தவையும் அவனைச் சமயநெறியில் ஊக்கினர். அதனால், இராசராசன் பல்வேறு கோயில் திருப்பணிகளைச் செய்தான். அவற்றுள் மிகச் சிறந்தது, தஞ்சாவூரில் அவன் எழுப்பிய கோயில். அது 'பெரிய கோயில்' என வழங்கப்படுகின்றது. அவன் அவ்வரிய கோயிலுக்கு 'இராசராசேச்சரம்' என்னும் பெயர் சூட்டினான்; அளவிடற்கரிய பொன்னும், பொருளும், நவமணியும், பெரும் பொருள் வருவாய் தரும் ஊர்களும் அக்கோயிற்பணிக்கு அளித்தான்.

அவன், தன் காலத்தில் வாழ்ந்த **நம்பியாண்டார் நம்பி** என்னும் அடியவரைக்கொண்டு தேவாரத் திருமுறைகளையும் தொகுப்பித்தான்.

இராசராசன் சைவ சமயத்தவனாயினும், சமயப் பொறை அமையப் பெற்றவன்; அதனால், பெங்களூரைச் சார்ந்த மணலூரிலும், தலைக்காட்டிற்கு அண்மையில் அமைந்த ஓர் ஊரிலும் திருமாலுக்குக் கோயில் கட்டிச் சிறப்பித்தான்; கடாரத்தின் அரசன் சூளாமணி வர்மனால் நாகபட்டினத்தில் கட்டத் தொடங்கப்பட்டு அவன் மகனால் முடிக்கப்பட்ட புத்த விகாரத்திற்கு, **இராசராசப் பெரும்பள்ளி** என்று தன் பெயர் சூட்ட இசைந்தான்; அப்பள்ளிக்கு **ஆனைமங்கலம்** என்னும் ஊரைப் பள்ளிச்சந்தமாக உள்ளமுவந்து அளித்தான். இச்செயல்கள் இராசராசன் பிற சமயங்களையும் மதிக்கும் மாண்பினன் என்பதை உணர்த்துகின்றன.

இராசராசன் தன் ஆட்சிக்காலத்தில் சோழ நாட்டு முழுவதையும் அளந்தான். அவன் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பைத் தெளிவாக அளந்தறிந்தமையால், நில வரியை ஒழுங்குபடுத்தி முறையாகப் பெற இயன்றது.

இராசராசனின் பட்டத்தரசியின் பெயர், **உலக மாதேவி** என்பது. இராசராசன் மக்கள் மூவரைப்

பெற்றுப் பெருமையுற்றான். அவர்களுள் இருவர் மகளிர்; ஒருவன் ஆடவன். மூத்த மகளின் பெயர் **மாதேவடிகள்**; இளைய மகளுக்கு இராசராசன், தன் தமக்கையிடம் கொண்ட பேரன்பால், அவள் பெயரை இட்டுக் **குந்தவை** என வழங்கினான். அதனால், தமக்கை குந்தவையைப் பெரிய குந்தவை என்றும், மகள் குந்தவையைச் சிறிய குந்தவை என்றும் வழங்கினர். மகன் பெயர் **இராசேந்திரன்** என்பது. அவன் பின்னர்க் 'கங்கை கொண்ட சோழன்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன்.

இராசராசனின் பல்வேறு சிறப்புகளைக் குறிக்கும் சிறப்புப் பெயர்கள் பல, கல்வெட்டுகளில் காணப் படுகின்றன, 'உய்யக்கொண்டான், மும்முடிச்சோழன், நிகரிலி சோழன், சனநாதன், கீர்த்திப் பராக்கிரமன்' என்பவை அவற்றுள் சில.

இன்றும் தஞ்சாவூரில் உள்ள பெரிய கோயில் அவன் புகழை அவனிக்கு உணர்த்தி நிற்கின்றது. மக்கள் அவன் பிறந்த நாள் விழாவைப் பெருமையோடு கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

### அருஞ்சொற்பொருள்

தார் வேந்தன் - தனக்குரிய மாலையை அணிந்த மன்னன்; சோழனுக்குரியது ஆத்தி மாலை. அவண் - அங்கு, அகவற்பா - நால்வகைப் பாக்களுள் ஒன்று; பிற மூன்று பாக்கள், 'வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா' என்பவை. மெய்க்கீர்த்தி - உண்மையான புகழ், சமயப் பொறை - பிற சமயங்களை வெறாமல் இருத்தல், பள்ளிச்சந்தம் - சமண, பௌத்தக் கோயில்களுக்கு வரியில்லாமல் வழங்கப்படும் நிலம் அல்லது ஊர், உய்யக்கொண்டான் - பிழைக்குமாறு அருள் செய்தவன், பராக்கிரமன்- பெருவீரன்.

### பயிற்சி

I. விடை எழுது:

1. 'முதலாம் இராசராசன்' என்னும் பெயரை விளக்கு.

2. இராசராசன் சேரனுடன் போரிட்டது ஏன்? அப் போரின் விளைவுகள் யாவை?

3. இராசராசன் பெற்ற வெற்றிகளை விளக்கு.

4. இராசராசன் காலத்தில் சோழநாடு எவ்வாறு திகழ்ந்தது?

5. வரலாற்று ஆசிரியர்க்கு இராசராசன் எவ்வாறு துணை செய்தான்?

6. இராசராசன் சைவ சமயத்திற்குச் செய்த பணிகள் யாவை?

7. 'சமயப்பொறை அமையப்பெற்றவன் இராசராசன்.' என்பதை விளக்கு.

8. இராசராசன் மனைவி மக்களைப் பற்றி நீ அறிவன யாவை?

9. இராசராசன் பெற்ற சிறப்புப் பெயர்கள் சிலவற்றை எழுது.

II. பிரித்தெழுது:

நூற்றாண்டு, பொற்காலம், இயற்பெயர், சிறப்புற்று, அரியணை.

III. சேர்த்தெழுது:

சிறப்பு + பெயர், தோற்றம் + பொலிவு,
கப்பல் + படை, அகவல் + பா.

### இலக்கணம்

## மொழி முதல் எழுத்துகள்

'இராசராசன்' வடமொழிப் பெயர். வடமொழியில் 'ராசராசன்' என வழங்கப்படும். 'ரா' என்னும் எழுத்துத் தமிழ் மொழியில் மொழிக்கு முதலில் (மொழி - சொல்) வாராது. அதனால், 'இ' என்னும் எழுத்தைச் சேர்த்து 'இராசராசன்' என வழங்குகிறோம். மொழிக்கு முதலில் இன்ன எழுத்துகளே நிற்கவேண்டும் என்று புலவர் வரையறுத்துள்ளனர். அவையே **மொழி முதல் எழுத்துகளாகும்.**

(அ) உயிரெழுத்துகள் பன்னிரண்டும் மொழிக்கு முதலாக அமையும்.

எ-டு: அரசன், ஆட்சி, இயல்பு, ஈழம், உதகை, ஊர், எழுப்பினான், ஏற்றான், ஐந்து, ஒலி, ஓவியம், ஔவையார்.

(ஆ) உயிர்மெய் எழுத்துகளில் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ என்னும் ஒன்பது உயிர்மெய் வருக்கங்களுக்கும் மொழிக்கு முதலாகும். வருக்கம் என்பது தொகுதியைக் குறிக்கும். 'க' முதல் 'கௌ' வரையுள்ள பன்னிரண்டு உயிர்மெய் எழுத்துகள் **கவ்வருக்கம்** எனப்படும்.

'க, ச, த, ந, ப, ம' என்னும் ஆறு எழுத்துகளின் வருக்க எழுத்துகள் யாவும் மொழிக்கு முதலாய் அமையும்.

எ-டு: **கவ்வருக்கம்:** கல், காலம், கிளி, கீற்று, குறி, கூற்று, கெண்டை, கேள்வி, கைகள், கொக்கு, கோயில், கௌவை (பொறாமை).

**சவ்வருக்கம்:** சங்கு, சான்று, சிற்பம், சீர், சுட்டு, சூழ்ச்சி, செயல், சேய்மை, சைகை, சொல், சோழன், சௌகரியம்.

**தவ்வருக்கம்:** தமிழ், தார், திங்கள், தீவு, துடுப்பு, தூண், தெற்கு, தேர், தையல், தொண்டு, தோள், தௌவை (மூதேவி).

**நவ்வருக்கம்:** நலம், நாள், நிலம், நீர், நுட்பம், நூல், நெல், நேர், நைதல், நொடி, நோக்கு, நௌவி (மான்).

**பவ்வருக்கம்:** பழைமை, பார், பிடி, பீலி, புகழ், பூனை, பெயர், பேணல், பையன், பொன், போர், பௌவம் (கடல்)

**மவ்வருக்கம்:** மண், மாண்பு, மின், மீட்சி, முதல், மூத்தோன், மென்மை, மேழி, மைந்தன், மொழி, மோர், மௌவல் (காட்டு மல்லிகை).

**வவ்வருக்கம்:** வரலாறு, வாள், விண், வீரம், வெற்றி, வேலை, வையம், வௌவால்.

(வு, வூ, வொ, வோ என்னும் நான்கும் மொழிக்கு முதலில் வாரா.)

**யவ்வருக்கம்:** யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

(யி, யீ, யெ, யே, யை, யொ என்னும் ஆறும் மொழிக்கு முதலில் அமையா.)

**ஞவ்வருக்கம்:** ஞமலி, ஞாயிறு, ஞிமிறு (வண்டு), ஞெகிழி (கொள்ளிக்கட்டை), ஞேயம், ஞொள்கல் (இளைத்தல்).

(ஞீ, ஞு, ஞூ, ஞை, ஞோ, ஞௌ என்னும் ஆறும் மொழிக்கு முதலில் வாரா.)

(தனி மெய்யெழுத்துகள் (க் முதல் ன் வரை) மொழிக்கு முதலில் வாரா; 'ட, ண, ர, ல, ழ, ள, ற, ன' என்பவற்றின் வருக்க எழுத்துகளும் மொழிக்கு முதலில் வாரா.)

**ஙவ்வருக்கம்:** ஙகரம் மட்டும் மொழிக்கு முதலாக வரும்.

எ-டு: ஙப்போல் வளை.

**பயிற்சி**

1. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் யாவை?
2. மொழிக்கு முதலில் வாராத எழுத்துகள் யாவை?

# 9. காஞ்சியும் காசியும்

பாரதப் பெருநாட்டில் பழமையும் பெருமையும் வாய்ந்த வளநகரங்கள் சில உள. அவற்றுள் காஞ்சியும் காசியும் மிகப் பழங்காலந்தொட்டே புகழ் சிறந்து விளங்கும் புண்ணிய நகரங்களாகும். முத்தி தரும் நகரங்கள் ஏழனுள் காஞ்சியும் காசியும் முக்கியமான நகரங்களாகக் கொள்ளப்படுகின்றன. இந்த இரண்டு நகரங்களுமே கல்வியின் சிறப்பினாலும் சமயச் சார்பினு

லும் பெருமை பெற்று விளங்குகின்றன. பழங்காலந் தொட்டே பல்வேறு கலைகளுக்கும் பண்பாடுகட்கும் இருப்பிடமாய், பல தேச மக்களும் கல்வியின் காரண மாக ஒன்றுகூடி ஆராயும் கல்விப் பெருநகரங்களாயும் இவை விளங்கின. எனவேதான் தேசியகவி பாரதியார்,

"காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்ப தற்கோர் கருவி செய்வோம்,"

என்று குறித்துள்ளார்.

காஞ்சி நகரம், காஞ்சிபுரம், கச்சி, கச்சிப்பேடு என வழங்கப்படுகிறது. காசியினை 'வாரணாசி' என வழங்கு வர். செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரமாகக் காஞ்சிபுரம் இன்று விளங்குகிறது. இது சென்னையி லிருந்து தென்மேற்கே 77 கி.மீ. தொலைவில் உள்ளது. சான்றோர் பலர் வாழ்ந்து சிறப்பித்த தொண்டை நாட் டில் பாலாற்றங்கரையில் அமைந்துள்ளது. உத்தரப் பிரதேசத்தின் இரண்டாவது பெரிய நகரம் காசி யாகும். இது காசி மாவட்டத்தின் தலைநகராகவும் உள்ளது. காசியும் உத்தரப் பிரதேசத்தில் கங்கை யாற்றங்கரையில் அமைந்துள்ளது. எனவே, இவ்விரு நகரங்களையும் ஆற்றங்கரை நாகரிக நகரங்கள் என்று அழைக்கலாம்.

காஞ்சி சங்க காலத்திற்கும் முற்பட்ட பழைமை வாய்ந்த பதியாகும். சங்க கால வரலாற்றில் தனிப் பெரும் சிறப்புடன் விளங்கும் கரிகாற்சோழன், காஞ்சி யின் வளத்தினையும் சிறப்பினையும் கேள்வியுற்று, அந்நகரைத் தனக்கு உரியதாக்கிக்கொண்டான். அந் நகரைச் சுற்றிலும் குன்றுபோன்ற மதில்களை எழுப்பிச் செப்பனிட்டு, வளத்தைப் பெருக்கினான். பின்னர்த் தொண்டைமான் இளந்திரையன் என்னும் பெரு மன்னன் இந்நகரினை ஆண்டான். பல்லவப் பேரரசர் களான மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன், நந்தி வர்மன் ஆகியோர் காஞ்சி மாநகரையே தம் தலை

நகரங்களாகக்கொண்டு ஆட்சி செலுத்தினர். இந்திய வரலாற்றில் சிறப்பிடம் பெறும் அசோக மன்னரின் கற்றூண் ஒன்று காஞ்சியில் காணப்பட்டது என்று கி.பி. ஏழாம் நூற்ருண்டில் காஞ்சிக்கு வந்த சீன அறிஞரான 'யுவான்-சாங்கு' குறிப்பிட்டுள்ளார்.

வேத காலந்தொடங்கியே காசி புகழ்பெற்ற நகரமாகும். 'மகாபாரதம், இராமாயணம்' முதலிய பழம்பெரும் இதிகாசங்களில் காசியின் பெருமை கூறப்பட்டுள்ளது. மேலும், நம் பாரதத் திருநாட்டில் இப்பொழுது நடைபெற்றுவரும் 'குடியரசு' ஆட்சி முறை, புத்தர் பெருமான் தோன்றுவதற்கு முன் கி.மு. ஏழாம் நூற்ருண்டிலேயே காசியில் நிலவியதாகக் கூறுவர். அந்நாளில் மிகப்புகழ் வாய்ந்த இந்தியப் பேரரசுகளாகத் திகழ்ந்த மௌரிய, குப்தப் பேரரசுகளின் முக்கியமான வாணிக நிலையமாகக் காசி விளங்கியது.

காஞ்சி மாநகரில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்னும் சமயங்கள் தழைத்தோங்கின. அதனால், அது சிவ காஞ்சி, விஷ்ணு காஞ்சி, சமண காஞ்சி, பௌத்த காஞ்சி என்னும் பிரிவுகளைக் கொண்டதாய்த் திகழ்கின்றது. செந்தமிழும் சமஸ்கிருதமும் அத்திரு நகரில் செழித்து வளர்ந்தன. 'தேவாரம்' பாடிய மூவரும் இந்நகரில் கோயில் கொண்டுள்ள ஏகாம்பர நாதரைப் போற்றியுள்ளனர். பொய்கையாழ்வார் முதலிய ஆழ்வார்களும் இந்நகரில் விளங்கும் திருமாலைப் புகழ்ந்து பல பாசுரங்களைப் பாடியுள்ளனர். சைன, பௌத்த மதங்கள் ஓங்கியிருந்த காலத்தில் அம்மதங்களைச் சார்ந்த பெரியார் பலர் பல்வேறு நூல்களை ஆக்கி அளித்துள்ளனர். மணிமேகலை இந்நகரத்திற்கு வந்து சமய உண்மைகளைக் கேட்டறிந்தாள் என்று 'மணிமேகலை' கூறுகிறது.

பௌத்த மதப் பெரியார் பலர் இந்நகரிலிருந்து பல நூல்களைச் செய்ததோடு இந்தியாவின் பல பாகங்களுக்

கும் திபெத்து, சீனு முதலிய இடங்களுக்கும் சென்று தொண்டு புரிந்துள்ளனர்.

காஞ்சியைப் போலவே காசி மாநகரிலும் பல சமயத்தவரும் வாழ்ந்துள்ளனர். பண்டை நாளில் புத்தர் காசிக்கு அண்மையில் உள்ள சாரநாத்தில் இருந்து அறவுரை வழங்கினுர். தென்னுட்டில் பிறந்த சங்கராச்சாரியார் பாரத தேசம் எங்கும் கால்நடையாய்ச் சென்று வேதாந்த மதத்தைப் பரப்பினுர். இவர் காசியில் பல நாள் தங்கிச் சமய போதனைகள் செய்துள்ளார். இவர் நிறுவிய 'காஞ்சி காமகோடி பீடம்' என்னும் திருமடமும் காஞ்சியில் உள்ளது.

பதினேழாம் நூற்றுண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்த சைவப் பெரியாராகிய குமரகுருபரர் காசிக்குச்சென்று சில காலம் தங்கினுர்; அங்கு வழங்கிய இந்துஸ்தானி மொழியைக் கற்று அங்குள்ளோருக்குச் சைவ சமயப் பெருமைகளை எடுத்துரைத்தார்; சைவ மடம் ஒன்றையும் அங்கு நிறுவியுள்ளார். அஃது அவர் பெயரால் 'குமார சுவாமி மடம்' என்று இப்பொழுதும் வழங்கி வருகிறது.

காஞ்சியிலும் காசியிலும் பல தொழில்கள் நடைபெறுகின்றனவெனினும் நெசவுத் தொழிலுக்கு இரு நகரங்களும் பெயர் பெற்று விளங்குகின்றன. இந்நகரங்களில் நெய்யப்படும் பட்டுச் சேலைகள் எல்லா இடங்களிலும் மக்களால் விரும்பி ஏற்கப்படுகின்றன.

முன்னுளிற்போலவே இந்நாளிலும் இந்நகரங்கள் கல்விக்கு இருப்பிடமாய் உள்ளன. அன்னி பெசண்டு அம்மையார், பண்டித மதன்மோகன் மாளவியா முதலியோர் முயற்சியினுல் நிறுவப்பெற்ற காசி இந்துக் கல்லூரி இன்று, 'காசி இந்துப் பல்கலைக் கழக'மாய்ச் சிறப்புடன் இயங்கிவருகிறது.

சென்ற நூற்றுண்டில் காஞ்சிபுரத்தில் பிறந்தவராகிய வள்ளல் பச்சையப்பர் அறக்கொடையால் நிறுவப்

பெற்ற கல்வி நிலையங்கள் பல. அவற்றுள் காஞ்சியி லுள்ள பச்சையப்பர் கல்வி நிறுவனங்கள் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன.

இந்த இரு பெருநகரங்களைப்பற்றி எழுந்த இலக்கியச் செல்வங்களும் பலவாகும். சிவஞான முனிவரும் கச்சி யப்ப முனிவரும் பாடிய 'காஞ்சிப் புராண'ங்களும் அதி வீரராம பாண்டியர் பாடிய 'காசிக் காண்ட'மும் தலப்பெருமை கூறும் புராண இலக்கியங்களாகும். காஞ்சிபுரத்தில் வாழ்ந்த கச்சியப்ப சிவாச்சாரியார் முரு கன் பெருமை கூறும் 'கந்த புராண'த்தைத் தந்துள்ளார். அந்தாதி, கலம்பகம், உலா போன்ற சிற்றிலக்கியங் களும் இந்நகரங்களைப் புகழ்கின்றன.

இன்றும் இவ்விரு நகரங்களும் நம் பாரதப் பண் பாட்டிற்குச் சிறந்து எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின் றன.

### அருஞ்சொற்பொருள்

பதி - வாழ்விடம், பாசுரம் - தெய்வப்பாடல், குன்று - சிறு மலை, இதிகாசம் - பழங்கால வரலாறு, வேதாந்த மதம் - 'உயி ரும் இறைவனும் ஒன்றே' என்று கூறும் சமயம்.

### பயிற்சி

1. விடையெழுது:

   1. 'காஞ்சி நகரம்' என்னென்ன பெயர்களால் வழங்கப் படுகிறது?
   2. காஞ்சியையும், காசியையும் ஆற்றங்கரை நகரங்கள் என்று அழைப்பது ஏன்?
   3. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர் கள் யார் யார்?
   4. காஞ்சிக்கு வருகைபுரிந்த சீன அறிஞர் யார்? அவர் கூறிய குறிப்பு யாது?

5. காசியின் சிறப்பைக் கூறுக.

6. காஞ்சி மாநகரின் சமயச் சிறப்புகளை விளக்குக.

7. காசிக்குச் சென்று சைவப் பெருமைகளை எடுத்துரைத்த பெரியார் யார்? அவருடைய தொண்டுகளைக் குறிப்பிடுக.

8. காசி இந்துக் கல்லூரியும், காஞ்சியின் கல்வி நிறுவனங்களும் எவ்வெவரால் நிறுவப்பட்டன?

9. காஞ்சியைப்பற்றிக் கூறும் தமிழ் இலக்கியங்கள் யாவை?

II. பிரித்தெழுது:

பாலாற்றங்கரை, கற்றூண், தேவாரம், சிற்றிலக்கியம், இந்நகர்.

III. சேர்த்தெழுதுக:

பல்கலை+கழகம், அறம்+கொடை, முன்+நாளில், பெருமை+மன்னன்.

### இலக்கணம்

## மொழி ஈற்று எழுத்துகள்

காஞ்சி மாநகர்க்கு வந்த சீன அறிஞரின் பெயர் 'யுவான் சாங்' என்பது. ஆனால், அவர் பெயர் நமது பாடத்தில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைப் பாருங்கள். 'யுவான் சாங்கு' என்றன்றோ உள்ளது? இம்மாற்றத்திற்குக் காரணம் என்ன? தமிழில் ஒரு சொல்லின் இறுதியில் 'ங்' என்னும் மெய்யெழுத்து வாராது. எனவே, 'சாங்' என்னும் சொல் 'சாங்கு' எனத் திரித்து எழுதப்பட்டுள்ளது. வேறு பாடங்களில், 'சிங்' என்னும் பெயர் 'சிங்கு' என்று எழுதப்பட்டுள்ளமைக்கும் இதுவே காரணமாகும்.

மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துகளைத் தமிழிலக்கணம் வரையறுத்துள்ளது. அவற்றை இங்கே அறிந்து கொள்வோம்.

(அ) உயிரெழுத்துகளுள் 'எ, ஒ' அல்லாத பிற பத்து உயிரெழுத்துகளும் மெய்யெழுத்தின்மீது ஊர்ந்து மொழிக்கு இறுதியில் நிற்கும்.

எ-டு: சில, நிலா, கச்சி, தீ(த்+ஈ), நாடு, பூ(ப்+ஊ), தே (த்+ஏ), பழைமை, போ(ப்+ஓ), வௌ (வ்+ஔ).

(ஆ) மெய்யெழுத்துகளுள், 'ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள்' என்பவை மொழியின் ஈற்றில் நிற்கும் எழுத்துகளாகும்.

எ-டு: உரிஞ் (உராய்), கண், வெரிந் (முதுகு), அறம், தேன், வாய், ஏர், கால், தெவ் (பகை), வாழ், நாள்.

(வல்லின மெய்களாகிய 'க், ச், ட், த், ப், ற்' ஆறும், மெல்லின மெய்களுள் 'ங்' என்பதும் மொழிக்கு இறுதியில் நில்லா.)

**பயிற்சி**

1. மொழிக்கு ஈற்றில் நிற்கும் உயிரெழுத்துகள் எவை?
2. மொழிக்கு ஈற்றில் நிற்கும் மெய்யெழுத்துகள் எவை?
3. மொழிக்கு ஈற்றில் நில்லாத உயிரெழுத்துகள் எவை? மெய்யெழுத்துகள் எவை?

# 10. இராசா ராம் மோகன் ராய்

அறிவியல் மேதைகளையும், ஆற்றல் மிக்க விடுதலை வீரர்களையும், கல்விக்கடலெனத் தக்க சான்றோர்களையும் பெற்றுப் புகழுற்ற மாநிலம் வங்காளம். அவ்வங்காளத்திலேயே நாட்டுக்கும் மக்களுக்கும் நற்றொண்டாற்றிய **இராசா ராம் மோகன் ராய்** பிறந்தார். அவர், வங்காளத்தில், பர்துவான் மாவட்டத்தில் இராதா நகரம் என்னும் ஊரில் 1772ஆம் ஆண்டு, மேத் திங்கள், 22ஆம் நாள் பிறந்தார். அவர் தந்தையார், **இராமகாந்தர்**, தாயார், **புல்தாகு ராணி**.

இராமகாந்தர் குடும்பம், பழைமையில் மிகுந்த பற்றுக்கொண்டது; சடங்குகள், வழிபாட்டு முறைகள், பிற பழக்கவழக்கங்கள் ஆகியவற்றுள் எதையும்

மீறுமல் பின்பற்றுவது. அக்குடும்பத்தில் தோன்றிய இராம் மோகனே, எதையும் ஆழ்ந்து சிந்தித்துத் தெளியும் கூரிய அறிவு பெற்றவராய்த் திகழ்ந்தார்; அதனால், இளமையிலேயே புதுமையான பல கருத்து களை எடுத்துச் சொன்னதோடு அமையாது, நூலாக எழுதும் முயற்சியிலும் ஈடுபட்டார்.

இராம் மோகன், 'ஒன்றே தெய்வம்' என்னும் உயர்ந்த உண்மையை ஏற்றுக்கொண்டார்; ஆனல், உருவ வழிபாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. பள்ளி யில் பயிலும் சிறுவரான தம் புதல்வர், உருவ வழி பாட்டை எதிர்த்து நூலெழுதும் அளவுக்கு வந்து விட்டதை அறிந்த இராமகாந்தர், சினம் கொண்டு, அவரை வீட்டை விட்டு வெளியேறச் சொன்னர். இராம் மோகன் சிறிதும் தயங்காமல் உடனே வீட்டை விட்டு வெளியேறினர். அறிவு வேட்கையும் எதை யும் ஆய்ந்தே ஏற்கும் இயல்பும் பெற்ற இராம் மோகன், இந்தியாவின் பல மாநிலங்களிலும் திபெத் திலும் சுற்றித் திரிந்தார்; சென்ற இடங்களிலெல் லாம் தாம் கண்ட புதிய நெறியை விளக்கிக் கூறினர். அதனல், அவர் பல துன்பங்களுக்கு ஆளானர். எனி னும், அவர் பட்டறிவையும் பல சமய உண்மைகளை யும் பெற்றவராய் வீட்டுக்குத் திரும்பினர்.

இராம் மோகன் முதலில் பாடலிபுரத்தில் படித் தார்; வீட்டை விட்டு வெளியேறித் திரும்பி வந்த பிறகு காசியில் படித்தார். வேதங்களையும் உபநிடதங் களையும் கற்றும் அவர் மனத்தில் வேரூன்றிய கொள்கை கள் மாறவில்லை. அவர் தமது முதல் நூலை 'ஒரு வனே இறைவன் என்று நம்புவோர்க்கு அன்பளிப்பு' என்னும் உரிமையோடு வெளியிட்டுத் தம் கொள்கை யைப் பரப்பினர்.

அப்போது நம் நாட்டை ஆண்டு வந்த கிழக்கிந் தியக் கம்பெனியில் இராம் மோகன் சில ஆண்டுகள்

இன்னுஞ் சிறிது தொலை சென்றால் ஆண்டு ஒரு வீடு தென்படும். அது வேளாளர் வீடு போலத் தோற்றுகிறது. புதிய வைக்கோலால் அவ் வீடு வேயப்பட்டு இருக்கிறது. பல பசுங் கன்றுகளைத் தாமணியாற் சேர்த்துத் தறிகளில் கட்டியிருக்கிறார்கள். அவ்வீட்டில் சில பெரிய நெற்குதிர்கள் காணப்படுகின்றன. அக்குதிர்களைக் கூடுகள் என்கிறார்கள். அவை ஏணிக்கு எட்டாத உயரமுடையன. முகட்டைத் திறந்து பழைய நெல் சொரியப்பட்டுள்ள கூடுகள் நிரம்பியிருக்கின்றன. அவ் வீட்டுச் சிறுவர் சிறுதேர் உருட்டி விளையாடிச் சோர்ந்து போய்ச் செவிலித் தாயரிடத்துப் பால் நிறைய அருந்திப் படுக்கையிலே துயில்கிறார்கள். அங்கே சென்றால் வெண்ணெல்லிலிருந்து எடுத்த அரிசியாலான இனிய சோற்றைப் பெட்டைக் கோழிப் பொரியலோடு பெறலாம்.

இவை போன்ற பழங்கால நாட்டுப்புறச் செய்திகளும் நகரச் செய்திகளும் சங்க இலக்கியங்களால் அறியப்படுகின்றன.

# 4. சமய இலக்கியங்களில் அறநெறி

**[தவத்திரு. குன்றக்குடி அடிகளார்]**

மனிதனின் ஏற்றத்தாழ்வு, பெருமை, சிறுமை ஆகியன மனத்தையே சார்ந்திருக்கின்றன. மனம், விந்தையானது. மனம் நன்மையும் செய்யும்; தீமையும் செய்யும். மனம் நல்வழியில் பழக்கப்படுத்தப்பட்டால் அஃது இனிய துணையாக அமையும். மனிதனின் பொறிகள், புலன்கள் அனைத்தும் மனத்தின்வழி இயங்குபவை. மனம், புத்தியால் இயக்கப்படும். புத்தி, சிந்தையால் சிறப்படையும். சிந்தனை, புத்தி, மனம் ஆகியவை ஒருங்கிணைந்து நன்னெறியிற் செயற்படுமானால் மனத்தூய்மை வந்தமையும். தூய்மையான மனத்தால் இயக்கப் பெறும் பொறிகளும் புலன்களும் அறநெறியில் நிற்கும்; ஒழுகும்; மகிழ்வைத்தரும்; வாழ்வை இன்பமயமாக்கும்.

மனம் இயல்பில் மயங்கும் தன்மையது ; எளிதில் கவர்ச்சி வசப்படும் ; தெளிவில்லாமல் ஒன்றினைப்பற்றும் அல்லது விடும். மனத்தின் அவலத்திற்கு அடிப்படை இன்பவிழைவு. அதனால், இன்ப விழைவு தீயதென்று கொள்ளுதல் கூடாது. வாழ்க்கையின் நோக்கமே இன்ப விழைவுதான். ஆனால், மயங்கிய மனம் இன்பமல்லாதனவற்றை இன்பம் என்று கருதுகிறது; அடைய முயல்கிறது. மனம் தெளிவில்லாமல் குழப்பமடைந்து விடுவதால் இன்பத்தைத் துன்பம் என்றும் துன்பத்தை இன்பம் என்றும் முறை பிறழக் கருதுகிறது ; நாடி முயல்கிறது.

ஒரு குடிசை ; அந்தக் குடிசையில் வாழ்வோர் உயிரிரக்க வொழுக்கத்தில் வளராமையால் புலாலுண்பவர்கள் ; ஆமையைச் சமைத்து உண்பவர்கள். அவர்கள் அந்தக் குடிசையின் அடுப்பில் உலைப்பானையை ஏற்றித் தீமூட்டி எரித்தனர்; உயிருள்ள ஆமை ஒன்றை உலைப்பானை நீரில் அவிக்க இட்டனர். உலை நீரில் இளஞ்சூடு ஏறியபொழுது அந்த ஆமை கொள்ளை இன்பம் கண்டது. குளிர்நீரில் கிடந்து மரத்துப்போன ஆமைக்கு இதமான இளஞ்சூடு, இன்பக்கிளர்ச்சியைத் தந்தது. பானையில் கிடந்த ஆமை அவ்வின்பக்கிளர்ச்சியில் திளைத்து மகிழ்ந்து விளையாடியது. ஐயோ, பாவம்! நீர் இளஞ்சூட்டில் இருக்கும்பொழுது மகிழ்வைத் தருகிறது. அடுப்பில் நெருப்பு எரிதலால் நீரின் கொதிநிலை மாறும்; சுடுநீராகும்; ஆமை அழியும். இப்படி எண்ணிப்பார்க்க ஆமைக்கு மனம் இல்லை. ஏன்? ஆமையின் அறிவு சூழ்நிலைகளுக்கு இசைந்ததே; கட்டுப் பட்டதே. சூழ்நிலைகளை மாற்றியமைத்துக்கொள்ளும் அளவுக்கு விலங்குகளின் அறிவுத்திறன் வளரவில்லை ; அமையவில்லை.

" .................................உலையை ஏற்றித்
தழல்எரி மடுத்த நீரில்
திளைத்துநின்(று) ஆடு கின்ற
ஆமைபோல் தெளிவி லாதேன் "

என்றார் அப்பரடிகள்.

இந்த வாழ்க்கையை மனித வாழ்க்கையோடு பொருத்திப் பாருங்கள். வாழ்க்கையென்பது அடுப்பு. அனுபவம் என்பது பானை. ஆசையென்பது தீ. ஆமை என்பது உயிர். அவ்வப் பொழுது பெறும் சிறுபொழுதின்பம் இளஞ்சூடு. சிறு

பொழுதின்பங்கள் அனைத்தும் சிறுமை பொருந்திய வழி வருவனவேயாம். சிறுமை பொருந்திய இன்பங்கள் அன்பைக் கெடுக்கும்; உறவைப் பிரிக்கும்; பகையை வளர்க்கும். தெளிவற்ற மனமுடையோர் இங்நெறிநின்று அலமருவர். தெளிவுடையார் சிறுபொழுதின்பத்தை விரும்பார்; நிலையான இன்பத்தையே விரும்புவர். நிலையான இன்பம் என்பது கால எல்லையைக் குறிப்பதன்று. எங்கும் எல்லோருக்கும் இன்பமாக இருப்பதுதான் உண்மையான இன்பம்; அறநெறியின்பாற் பட்ட இன்பம். ஆதலால், சிந்தையில் தெளிவு தேவை. சிந்தையில் தெளிவுடையாராலேயே அறநெறியில் நிற்றற்கு இயலும். இதனை அப்பரடிகள்,

"சிந்தையும் தெளிவு மாகித்
தெளிவினுட் சிவமு மாகி"

என்றார்.

தெளிந்த அன்புடையார் அன்பு நெறியில் நின்று வாழ்வர். அன்பில் விளைவதே அறநெறி. அன்பும் அறமும் பிரிக்க இயலாத இரட்டைப்பண்புகள்; ஒன்றையொன்று தழுவி நிற்பன. அன்பு, மனிதகுலத்தின் கற்பு. அன்புதான் சிவம்; சிவம்தான் அன்பு. அன்பு, ஆற்றல் மிக்குடையது. "ஆற்றல் மிக்க அன்பு" என்று அப்பரடிகள் பாராட்டியுள்ளார். அன்பில் தோய்ந்த மனம் அறநெறியில் நிற்கும். கடவுளை நம்பிச் செய்கின்ற சடங்குகள், கடவுளுக்காகச் செய்யப்பெறுவன அல்ல. அன்பினைத் தோற்றுவித்து வளர்க்கச் சடங்குகள் பயன்படும். சமயச் சடங்குகளுள் சிறப்பான சடங்காகக் கருதப்பெறுவது வற்றாத நீர்ப்பெருக்குடைய நீர் நிலைகளில் குளிப்பது; தீர்த்தம் ஆடுவது; கங்கைக்குச் சென்று குளித்தல்; காவிரிக்குச் சென்று குளித்தல்; குமரிக்கடல் துறைக்குச் சென்று குளித்தல்.

இந்நீர்நிலைகளிற் சென்று குளிப்பது மிகுந்த பயனைத் தரத் தக்கது. எப்படி? அங்குச்சென்று குளித்தலால் மட்டுமே பயன் விளையாது. கங்கை, காவிரி போன்ற ஆறுகளை நாடிச்செல்லும் பொழுது அந்தப் பயணத்தில் பல்வேறு மனிதர்களைச் சந்தித்தல், அவர்களுடன் பழகுதல், அதுபோழ்து ஏற்படும் புகழ்ச்சி இகழ்ச்சிகளைப் பொருட்படுத்தாதிருத்தல், பயண வழியில் பெறும் இன்பதுன்பங்களிற் சமநிலை உணர்வைப் பெறுதல்

ஆகிய அறநெறிப்பண்புகள் கிடைக்கும். ஆறு, கடல் ஆகியன தூய்மையின் சின்னங்கள்; பொதுமையைக் கற்பிக்கும் கழகங்கள். எந்த நாட்டிலும் குட்டைகள் தீர்த்தமாவதில்லை. ஏன்? அவை எல்லைக்குள் முடக்கப்பட்டவை. அவை தேக்கமுடையன. அவைகட்குப் போக்கும் இல்லை, வரவும் இல்லை. ஆனால், ஆறு அப்படியா? கங்கை, இமயமலையின் உச்சியில் தோன்றி மண்ணில் வீழ்ந்து பல நூறுகல் தொலைவு ஓடிச்சென்று கடலைச்சார்கிறது. உயர்ந்த இலட்சியப் பயணத்தின் பெருக்கன்றோ கங்கை? மலையினின்றும் அது மண்ணுக்கு வருகிறது. ஏன்? அது மண்ணுக்கு வளம் சேர்க்கவும் மனிதகுலத்திற்கு வாழ்வளிக்கவும் வருகிறது. இந்த உயர்ந்த இலட்சியத்தோடு அது தடைகளைக் கடந்து, வளைவுகளைக் கடந்து உயிர்க்குலம் அனைத்துக்கும் வாழ்வளித்துக் கடலைச் சார்கிறது. இடையில் அதனைத் தீர்த்தம் என்று போற்றிக் குளிப்பாரும் உளர்; அறியாமையால் அதனை மாசுபடுத்துவாரும் உளர். எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு அது பயணம் செய்துகொண்டிருக்கிறது. இந்த நினைப்புக்களோடு கங்கையிற் குளித்தால், கங்கை நீரால் உடல் தூய்மையாகிறது. கங்கையின் பெருந்தன்மையை, இலட்சியப் பயணத்தை உயிர்க்குலமனைத்துக்கும் கைம்மாறு கருதாது வாழ்வளிக்கும் பண்பாட்டைத் தூய்மையின்மையையே தூய்மையாக்கிக் கொண்டு வாழ்வளிக்கும் நிகழ்ச்சிகளை நினைக்கும் பொழுது மனம் தூய்மையாகிறது. அங்ஙனம் மனம் தூய்மையானால் "இங்கு ஈசன்; அங்கு ஈசன்" என்று சொல்லார். அவர்கள், 'ஈசன் எங்கும் இருக்கிறான்; எல்லா உயிர்களிடத்தும் இருக்கிறான்' என்று கருதி அன்பு செய்வர். இந்த அன்பு நெறியே அறநெறி. இதனை அப்பரடிகள்,

"கங்கை ஆடில்என்? காவிரி ஆடில்என்?
கொங்கு தண்கும ரித்துறை ஆடில்என்?
ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடில்என்?
எங்கும் ஈசன் எனாதவர்க்(கு) இல்லையே"

என்று பாடியருளினர்.

இத்தகைய அன்புநெறியில் நிற்பவர் தொண்டு நெறியில் தலைப்படுவர். அன்பு என்பது ஓர் உணர்வு, அது செயல் வழிதான் வெளிப்படும். அன்பின் வழியதாகச் செய்யப் பெறும் செயலே தொண்டு. அன்பின் வழியினர் தம்

உடைமையைத் தனிஉடைமை என்று கருதார். அவர்தம் உடைமை பயன்படும் வகையால் பொதுவுடைமைப்பாங்கினைப்பெறும். அறநிலைப்பொருளுடைமை என்பதைத்தான் 'தர்மகர்த்தா முறை' என்று பொருளியல் மேதைகள் கூறுகிறார்கள். அண்ணல் காந்தியடிகள் இந்திய சமூகப் பொருளாதாரத்திற்கு அறநிலைக் கொள்கையையே வற்புறுத்தினர். நம் நாட்டின் இன்றைய பாரத அரசியல் சிந்தனையும் இந்தக் கொள்கை வழி நின்று முன்னேற முயல்கிறது. நடைமுறையில் இந்தக் கொள்கை வெற்றிபெறுவது எளிதன்று. ஏன்? நம்முடைய சமூகப் பழக்க வழக்கங்கள் நெகிழ்ந்து கொடுப்பனவாக இல்லை. அறநிலையங்கள் என்று பெயர் விளங்கி நிற்பனவற்றின் பொருளுடைமைகள் கூட மக்களுக்குப் பயன்படாமல் இருப்பதைக் காண்கிறோம். அவற்றிலேயே குறைகள் மலிந்தமையால் அவை அறவழியிற் செயல்படாமல் நெறிமுறைப்படுத்த வேண்டிய அளவுக்குத் தாழ்ந்து போயின. ஆயினும், அறநிலைப் (தர்மகர்த்தா) பொருளாதார முறை நடைமுறைக்கு வந்தால் நாடு நன்மையுறும். இந்த அறநிலைப் பொருட் கொள்கை (தர்மகர்த்தா முறை) ஏழாம் நூற்றாண்டில் அப்பரடிகளாலேயே எடுத்துக்கூறப் பெற்றது. ஒருவர் மருத்துவம் பயின்றார். தம் சொந்தப் பொறுப்பிலேயே மருத்துவ மனை அமைத்தால் அம்மருத்துவ மனையில் அவருடைய சொந்தப் பொருளிலேயே மருந்துகளை வாங்கி வைத்தார். மருந்துகள் அவருக்குச் சொந்தமானவையே. அவர் உரிமை கருதி அந்த மருந்துகளையெல்லாம் தாமே உண்பாரா? பிணியுடையாரின் பிணியை நீக்கத்தானே அந்த மருந்துகள் பயன்பட வேண்டும். அங்ஙனமின்றி உரிமை கருதி அவரே அந்த மருந்துகளை உண்பாரானால் அவர் மரணமடைவார். வறுமைக்குப் "பிணி" என்றும், செல்வத்திற்கு "மருந்து" என்றும் பெயருண்டு. வறுமையுடையார் "பிணி"யுடையார். செல்வமுடையார் "மருந்து"டையார். செல்வமுடையார் செல்வத்தைத் துய்த்தற்கு இயலாது; வறுமையுடையாரே துய்த்தற்கு இயலும். அதனாலன்றோ புறநானூறும்,

"செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே தப்புந பலவே"

என்று பாடிற்று? இக்கருத்தினை அப்பரடிகள்,

"இரப்பவர்க்(கு) ஈய வைத்தார் ;
ஈபவர்க்(கு) அருளும் வைத்தார்"

என்று அருளிச் செய்தார். ஆதலால், கடின உழைப்பால் செல்வத்தை ஈட்டுதலும், ஈட்டிய பொருளைப் பசிப்பிணியால் வருந்துவோர்க்கு வழங்கி வாழ்வித்தலும் உயர்ந்த அற நெறிகளாகும்.

இங்ஙனம் வருந்துவோர்க்கு உதவிசெய்து வாழ்வளிப்பதில் வேறுபாடுகள் காட்டுவது கூடாது. உயிர்க்குலம் ஒன்றேயாம். நாடு மொழி ஆகிய வேறுபாடுகள் இயற்கையாக அமைந்தவை. அவை பொருட்படுத்தத்தக்கன அல்ல. சமய வேறுபாடுகள் சிந்தனை வளர்ச்சியாலும் தத்துவ வளர்ச்சியாலும் உருவானவை. இவையும் பொருட்படுத்தத்தக்கன அல்ல. குல வேறுபாடுகளோ பண்புவழி அமைந்தன. ஆனால், அவை மாறுபாடுகளுக்கும் பிரிவினைக்கும் உரியன அல்ல. சாதி வேறுபாடுகள் செயற்கை முறையில் தன்னல நாட்டத்துடன் கற்பிக்கப்பெற்றவை. ஆகவே, சாதி வேற்றுமை தீது; சாபக்கேடு. எந்தக் காரணத்தாலும் உயிர்க்குலத்தின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக நினைப்பதும் பேசுவதும் ஒழுகுவதும் தீமைகளாகும். எவ்வளவு பெரியவராகத் தெரிந்தாலும் சாதி வேற்றுமைகளை மேற்கொண்டொழுகுபவராயின் அவர் தீயோரே! சமயங்கள் மனித உலகத்தைச் செழுமைப்படுத்தத் தோன்றியவையே. ஆனால், சமயங்களை மையமாகக்கொண்டே மாறுபாடுகளும் முரண்பாடுகளும் பகையும் வளர்க்கப்படுமாயின், சமயங்கள் பயன் தாரா. இதனை அருளால் உணர்ந்த வள்ளற்பெருமான், சமயங்களைக் கடந்த பொது நெறிக்கு மக்களை அழைத்துச் சென்றார். அந்நெறிதான் சன்மார்க்க நெறி. அப்பரடிகள் "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்றார். இது மனித உலக ஒருமைப்பாட்டின் முழக்கம் மட்டுமன்று ; உயிர்க்குல ஒருமைப்பாட்டின் குரலுமாகும். அப்பரடிகள், பிறப்பினால் சாதிவேற்றுமை பாராட்டும் பொய்ச் சாத்திர நெறியைக் கடுமையாகச் சாடியுள்ளார். சாத்திரங்களைக் காட்டி, ஊழ்வினையைக் காட்டி உணவுப் பங்கீட்டு அட்டை(Ration Card)யை உவமையாகக் காட்டிப் பிறப்பில் ஏற்றத் தாழ்வாக அமைந்துள்ள இன்றைய சமுதாயக் கொடுமைகளைக் கட்டிக் காப்பாற்ற அன்றும் பலர் முயன்றனர் ; இன்றும் சிலர் முயன்று வருகின்றனர். அவர்கள் ஆதாரமில்லாமலா

பேசுகின்றனர்? ஒரு வகுப்பினர் ஆவுரித்துத் தின்று உழல்கின்றனராம். அவர் புலையராம்; அதனால், தீண்டத்தகாதவராம். இங்ஙனம் கூறுபவர்கள் என்ன செய்கிறார்கள்? இவர்கள் மனித இரத்தத்தையன்றோ உறிஞ்சிக் குடிக்கின்றனர்? நாட்டின் நல்லூழின்மையால் ஏற்பட்ட விபத்துக்களால் இவர்கள் உயர்ந்த இடத்தில் ஒதுக்கப்பட்டுவிட்டனர். இருக்கும் இடம் உயர்ந்தது என்பதாலேயே உபதேசமும் உயர்ந்ததாகிவிடுமோ? அப்படியானால், ஆவுரித்துத் தின்று உழல்வது தவறா? இல்லையா? தவறு தான்! தவழ்ந்து நடப்பவர் தவறித்தான் வீழ்வர். ஏற்றமுடையவர் அவரை எடுத்தாளவேண்டாவா? வேண்டும் என்பதனால்

"ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே"

என்றார் அப்பரடிகள். சாத்திரங்களைக்காட்டிக் குலகோத்திர வேற்றுமையைக் கற்பிப்பதும் காப்பதும் அறநெறியல்லவே. எல்லாவுயிர்களும் இறையருள் பெறுதற்குரிய பாத்திரங்களே என்று கருதி அன்பு செய்தல் — அவ்வுயிர்களுக்கு உரியனவற்றைச் செய்து உதவுதல்—ஒப்புரவுக்கொள்கை. அதுவே சமய இலக்கியங்கள் காட்டும் அறநெறி.

தென்னாட்டுக்குச் சிவனாகவும், மற்றெல்லா நாடுகளுக்கும் இறைவனாகவும் உள்ள பெருமான் உயர்த்தியுள்ள கொடி, எருதுக் கொடி. எருது ஒரு சின்னமே! சின்னத்தின் பின்னணியில் சிந்தனை மாட்சியிருக்கிறது. வேளாண்மைக்குத் துணை செய்வது எருது. அது தன் உழைப்பினால் விளைந்த உயர் நெல்லையும், காய்களையும், கனிகளையும் மனிதகுலம் உண்டு மகிழ அளிக்கிறது. ஆனால், அது மனிதருக்குப் பயன்படாத வைக்கோலைத் தின்று வாழ்கிறது. எருதின் குணங்களைப் போன்ற பண்பாடுடையார் நெஞ்சில் பெருமான் எழுந்தருள்வான் என்பதே எருது ஊர்தியின் தத்துவம்.

சமய இலக்கியங்கள் சிந்தனையைத் தருகின்றன; புத்தியைப் புதுமைப்படுத்துகின்றன; மனத்தைத் தூய்மை செய்கின்றன; அன்பினைத் தருகின்றன. அன்பிற் பொதுவுடைமை மலர்கிறது; ஒப்புரவுக்கொள்கை உயர்ந்து விளங்குகிறது; உயிர்க்குலம் ஒன்றாக இணைகிறது. இது சமய இலக்கியங்கள் காட்டும் அறநெறி.

# 5. இயற்கைக் காட்சிகள்

[திரு. கி. வா. ஜகந்நாதன்]

பரந்து விரிந்த மணற்பரப்பு, கடற்கரை. உலகிலே அழகிய கடற்கரைகளுள் இரண்டாவது என்னும் பெருமை பெற்றது சென்னை கடற்கரை. அந்த மணற்பரப்புக்குப் பெருமை தருவது கடல்தான். கடற்காற்று மாலை வேளையில் தண்ணென்று வீசும் போது உடலெல்லாம் தழுவி இன்புறுத்துகிறது. அந்தக் கடற்கரையில் ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் கிழவரும் அமர்ந்து உரையாடுகிறார்கள். குழந்தைகள் ஓடிக்குதித்து விளையாடுகின்றன. இந்தக் கூட்டத்தைத் தம்முடைய வியாபாரத்துக்கு ஏற்றதாகக் கருதி முறுக்கு, சுண்டல் முதலிய தின்பண்டங்களைக் கூடையில் வைத்து, குரல் எழுப்பியபடி அங்கும் இங்கும் திரிந்து கொண்டிருக்கின்றனர் சிலர்.

இவ்வளவு பேர் இங்கே இருந்தும் இந்தக் கடற்கரைக்குப் பொலிவை ஊட்டும் கடலை யார் பார்க்கிறார்கள்? சூடான பட்டாணிக் கடலை விற்கிறவனை அழைத்து அதை வாங்கி உண்கிறார்கள். கடற்கரையில் நாளடைவில் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்கின்றன; கட்டடங்கள் எழும்புகின்றன; புதிய வழிகளைப் போடுகிறார்கள். ஆனால், அந்தக் கடலோ அன்றிருந்த மேனிக்கு அழிவு வாராமல் நீலப்பரப்பாக, அலைகள் கொந்தளித்துப் பாயும் தோற்றத்தோடு நிலவுகிறது. அதன் அழகை, அந்த அலைகளின் தோற்றத்தைக் கண்டுகளிப்பவர் மிகச்சிலரே. சிலர் செயற்கைக் கூட்டங்களின் அமைப்பைக் கண்டு வியக்கிறார்கள்; புதிய பாதைகளையும், இருமருங்கும் வளர்க்கும் பூஞ்செடிகளையும் கண்டு மகிழ்கிறார்கள். ஆனால், இயற்கையாக யாராலும் மாற்றப்படாமல் விரிந்திருக்கும் நீலக் கடலைப்பார்ப்பவர் மிகவும் சிலரே.

அதைக் கண்டுகளிக்கிறான் ஒரு கவிஞன். இயற்கையின் எழிலைக் கண்டுகளிக்கும் கண் அவனுக்கு இருக்கிறது. அவன் பரந்த கடலையும் மோதும் அலைகளையும் கண்டு மகிழ்கிறான்; நமக்கும் காட்டுகிறான். 'அதோ கடல்! அதோ அலை!' என்று காட்டினால் நாம் ஈடுபட மாட்டோம். அவன் நம் மனத்தை

இழுக்கும்படி! ஒரு கற்பனையைப் புகுத்திக் கடலைக் காட்டுகிருன்: "அதோ பார்த்தீர்களா? கடல் என்னும் நீல எழில் நங்கை, அலைகள் என்னும் கைகளைக் கொட்டி முழங்குகிருள்! பாருங்கள்" என்கிருன்.

**"வெள்அலைக் கைகளைக் கொட்டி முழங்கும் கடலினை"**

என்று அவன் கவிதையாலே சொல்லும் போது, நாம், "ஆம்!" என்று தலையை அசைக்கிருேம்; "ஆ! எவ்வளவு பொருத்தமான உவமை!" என்று வியக்கிருேம். இப்போது நாமும் கடலைப் பார்த்து மகிழ்கிருேம்; வெறும் கடலாக அன்று; வெள் அலைக் கைகளைக் கொட்டி முழங்கும் கடலாகப் பார்க்கிருேம். கவிஞன் கடலை உண்டாக்கவில்லை; அலைகளையும் படைக்கவில்லை. ஆனல், இதுவரையில் கண் இருந்தும் காணுமல் குருடாக இருந்த நமக்கு கவிஞன் அவற்றின் அழகை ஓர் உவமையினுல் சுவை படக் காட்டிவிடுகிருன். இப்படிக்காட்டின கவிஞன் பாரதி.

இவ்வாறு இயற்கையிலே உள்ளத்தைப் பறி கொடுத்து இன்புறும் கவிஞன், தன்னுடைய கவிதையிலே அவற்றைப் பதித்து உவமை, உருவகம் முதலிய அணிகளைப் பெய்து நம் உள்ளத்தைக் கவரும்படி காட்டி விடுகிருன். சங்ககாலக் கவிஞர் முதல் பாரதி வரையில் எல்லாக் கவிஞர்களும் இயற்கைக் காட்சியின் எழில் நலங்களை நம் உள்ளத்தில் ஓவிய மாகப் பதித்து விடுகிருர்கள். சிலவற்றைப் பார்க்கலாம்.

நாம் மூங்கிலைப் பார்த்திருக்கிருேம். மூங்கிலின் கணுக்களில் சிறிய சிறிய பாளை இருக்கும். மூங்கில் முதிர்ந்து வளர வளர அந்தப் பாளைகள் உதிர்ந்துவிடும். அந்தப்பாளைகளை நாம் மிகுதி யாகக் கவனிப்பதில்லை. பாளை இருப்பதையே நாம் மறந்து விடுகிருேம். கவிஞன் அதைப் பார்க்கிருன். அது கழன்று உதிரும் நிலையில் இருக்கிறது. அந்த இயற்கையான பொருளைப் பார்க்கும்போது அவனுடைய உள்ளத்தில் மற்ருேர் இயற்கை யான பொருள் காட்சி அளிக்கிறது. இதுவும் அதுவும் தோற்றத் தில் ஒத்து நிற்கின்றன. சிறிய மானுடைய செவியும் மூங்கிலின் கணுவில் முதிர்ந்து உதிரும் நிலையில் உள்ள பாளையும் ஒரே வடிவாகக் காட்சி தருகின்றன. உடனே பாடுகிருன்:

**"நுண்பொறி மான்செவி போல வெதிர்முளைக்**
**கண்பொதி பாளை கழன்றுஉகும்."**

'நுண்ணிய புள்ளிகளையுடைய மானினது செவியைப்போல் மூங்கிலின் கணுவிலே பொதிந்த பாளை கழன்று உதிரும்' என்பது இதன் பொருள். [பொறி-புள்ளி, வெதிர்முளை-மூங்கில் முளை, கண்-கணு.]

மூங்கிற்பாளையையும் மான் செவியையும் ஒரு சேர இணைத்துப் பார்க்கும் போது இரண்டுக்கும் உள்ள ஒப்புமையையும் கண்டு வியந்து பாராட்டத் தோன்றுகிறது. இரண்டு இயற்கைப் பொருளின் எழிலையும் நுகரும்படி செய்துவிடுகிறான் கவிஞன். கலித்தொகையில் (43) கபிலர் பாடிய செய்யுளில் வரும் பகுதி இது.

ஓர் இயற்கைப் பொருளுக்கு ஒரு செயற்கையான நிகழ்ச்சியை உவமை கூறுவது ஒருவகை உத்தி.

மாலைநேரம் வருகிறது. கதிரவன் மறைகிறான். திங்கள் தண்ணிலாப் பரப்பி வான வீதியில் உலாவருகிறது. கதிரவன் ஒளியில் மலர்ச்சி பெற்றுப் பொலிவுடன் விளங்கிய மரங்கள் நிலவின் தண்ணொளியில் தூங்குவன போல இலைகள் கூம்ப நிற்கின்றன. அவை துயில்வது போன்ற தோற்றமளிக்கின்றன. கிளைகள் சாய்ந்து நிற்கின்றன. கவிஞன் இந்தக் காட்சியை நமக்குக் காட்டுகிறான்; ஓர் உவமையைச் சொல்லிக் காட்டுகிறான். சான்றோர்கள், யாரேனும் தம்மைப் புகழ்ந்தால் நாணுவார்கள்; தலையைக் குனிந்து கொள்வார்கள். 'இந்த மரங்கள், தம்முடைய புகழைக் கேட்ட சான்றோர்கள் தம் தலையைத் தாழ்த்திக் கொள்வது போலத்தம் தலைகளைச் சாய்த்துத் துஞ்சுகின்றன' என்கிறான் கவிஞன்.

" தம்புகழ் கேட்டார்போல் தலைசாய்த்து மரம்துஞ்ச "

(கலித்தொகை 118)

இது நல்லந்துவனார் பாடியபாடற்பகுதி.

இயற்கை வளம் கொஞ்சிக் குலுங்கும் அழகிய சூழ்நிலையில் உள்ள மரம், செடி, கொடி, விலங்கு, பறவை முதலிய எல்லாவற்றையும் ஒரு சேர இணைத்துக் காணும் காட்சி மிக மிக இனியது. தனியே ஒரு சித்திரத்தைப் பார்ப்பதை விடப் பல வகை ஓவியங்களும் இணைந்து நிலவும் சித்திரப் படலம் ஒன்றைப் பார்ப்பது மிக்க இன்பத்தைத் தரும். அதுபோலப்

பல வகையான இயற்கைப் பொருள்கள் செறிந்து பரந்த காட்சியும் மிகுதியான மகிழ்ச்சியை உண்டாக்கும். அத்தகைய காட்சிக்கு உவமையாகவும் உருவகமாகவும் வேறு ஒரு சிறந்த பெருங்காட்சியைக் கவிஞன் அமைத்துக் காட்டும்போது நமக்கு இரட்டிப்பு இன்பம் உண்டாகிறது. புறக்கண்ணால் காணும் விரிவான காட்சிக்கு அகக் கண்ணால் மற்றொரு விரிவான காட்சியை உவமையாக்கிக் கவிதையில் கவிஞன் தீட்டும் போது நாம் இருவகைக் காட்சிகளையும் அகக் கண்ணால் காண்பதோடு, அவற்றிடையே உள்ள ஒப்புமையை உணர்ந்து உணர்ந்து இன்புறுகிறோம்.

குறிஞ்சி நிலத்துக்காட்சிகளைக் கோலம் செய்து காட்டுவதில் வல்லவரான கபிலர் அகநானூற்றில் ஒரு பாட்டில் அழகான இயற்கை ஓவியம் ஒன்றைக் காட்டுகிறார். அவர் அந்தக் காட்சியை உவமைகளோடு பொருத்திக் காட்டுகிறார். உவமையை முதலில் பார்த்துப் பிறகு இயற்கையில் நிகழும் நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம்.

ஓர் இனிய நடன நிகழ்ச்சி நடைபெறுகிறது. அந்த நடனத்தில் இசைக்கருவிகள் முழங்குகின்றன. குழல் இசைக்கிறது. முழவு இன்னொலி எழுப்புகிறது. பெரிய குழல்—நாயனம் போன்றது — ஒலிக்கிறது. யாழ் ஒருபால் இசை பரப்புகிறது. இந்த இசைச் சூழலினிடையே அவையில் உள்ளோர் வியப்புடன் இசையைக் கேட்டும் கூத்தைக்கண்டும் களிக்கின்றனர். அவ்வாறு களிக்கும்படி நடுநாயகமாக ஓர் அழகிய நங்கை ஆடுகிறாள். குழல், முழவு, பெருங்குழல், யாழ் ஆகிய இசைக்கருவிகளும் அவையினரும் ஆடும் நங்கையும் இணைந்த இந்த விரிவான சூழலைப்போல இருக்கிறது மலைச் சாரலிலே நிகழும் நிகழ்ச்சிகளின் தோற்றம்.

அந்த இயற்கை நிகழ்ச்சிகள் எவை தெரியுமா?

மலைச்சாரலில் மூங்கில்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. காற்றிலே அவை அசைகின்றன. அந்த மூங்கிலை வண்டுகள் துளைத்திருக்கின்றன. மேல் காற்று வீசும்போது அந்தத் துளையினூடே புகுந்து புறப்படுகிறது. அப்போது புல்லாங் குழலிலிருந்து எழுவது போன்ற இன்னிசை எழுகிறது. இங்கே நிகழும் ஆடல் நிகழ்ச்சிக்கு இதுவே குழலாக இருக்கிறதாம்.

**" ஆடுஅமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்**
**கோடை அவ்வளி குழலிசை ஆக "**

*[ஆடுகின்ற மூங்கில்களில் உண்டாக்கிய, விளங்கும் துளைகளின் வழியே வீசும் மேற்காற்றின் ஒலியே புல்லாங்குழலிசையாக. அமை—மூங்கில், கோடை அவ்வளி—கோடையென்னும் அந்த மேல் காற்று.]*

*மலைச்சாரலில் சலசல என்று இடையருமல் அருவி ஓசையை எழுப்புகிறது. மிக உயரத்திலிருந்து விழாமல் சிறிது உயரத்திலிருந்து விழுவதனல் மிருதங்கம் வாசிப்பது போலச் சலக் சலக் என்று ஒலிக்கிறது.*

**" பாடு இன் அருவிப் பனிநீர் இன் இசை**
**தோடு அமை முழவின் துதைகுரல் ஆக "**

*[ஒலி இனியதாக உள்ள அருவியின் குளிர்ச்சியான நீர் விழும் இனிய ஓசை தொகுதியை உடைய மிருதங்கத்தின் இசைந்த குரலாக இருக்க. பாடு—ஒலி. தோடு—வார்முதலிய தொகுதி. துதை—பொருந்திய.]*

*அங்கே கூட்டமாக உள்ள மான்கள் முழங்குகின்றன. அந்த ஒலி ஊதுகொம்பு போன்ற பெருங்குழலின் இசையை ஒத்திருக்கிறது.*

**" கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு "**

*[கூட்டமாக உள்ள மான்கள் முழங்கும் மிகுதியான குரலாகிய ஊதுகொம்பின் முழக்கத்தோடு. கலை — மான். இகுக்கும் — முழங்கும். தூம்பு — கொம்பு, பெருங்குழல்.]*

*அந்த மலர் நிறைந்த மலைச்சாரலில் அந்த மலர்களில் உள்ள தேனை நுகர்வதற்காக வண்டுகள் வருகின்றன; அந்த மலர்களில் படிந்து முரல்கின்றன. அவற்றின் இசையாழிசையைப் போல இருக்கிறது.*

**" மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ் ஆக "**

*[பூக்கள் உள்ள மலைச்சாரலில் முரலும் வண்டின் ஒலி யாழின் இசையாக.]*

*இந்த இசைகளைக் கேட்டும் கூத்தைப் பார்த்தும் மகிழும் அவையினர் யார்? அங்கங்கே மரங்களில் உள்ள குரங்குக் கூட்டமே அந்த அவையினர். இனிய பல கருவிகளின் இசை*

யினைக்கேட்டு அவை ஆரவாரிக்கின்றன; கூத்தை வியப்புடன் பார்க்கின்றன.

**" இன்பல் இமிழ்இசை கேட்டுக் கலி சிறந்து**
**மந்தி நல்அவை மருள்வன நோக்க. "**

[இனிய பலவகை முழங்குகின்ற இசையைக்கேட்டு மகிழ்ச்சியால் ஆரவாரம் மிக்கு, மந்தியின் கூட்டமாகிய நல்ல அவை வியப்புடையனவாகப் பார்க்கும்படி. கலி—ஆரவாரம். மருள்தல்—வியத்தல்.]

இவற்றின் நடுவே ஆடுகிறது அழகிய மயில். அது ஆடுகின்ற விறலியைப் போலக் காட்சி தருகிறது.

**" கழைவளர் அடுக்கத்து இயலி ஆடும் மயில்**
**நனவுப்புகு விறலியின் தோன்றும்."**

[மூங்கில்கள் வளரும் மலைப்பக்கத்தில் இயங்கி ஆடுகின்ற மயிலானது, விழிப்பு நிலையில் நம் கண் முன் வந்து ஆடும் விறலியைப் போலத்தோன்றும். கழை—மூங்கில். அடுக்கம்—பக்கம். விறலி—ஆடும் பெண்.]

துளையுள்ள மூங்கில், அருவி, மான், வண்டு, குரங்கு, மயில் இவற்றைத்தனித்தனியே பார்த்து இன்புறலாம். ஆனால் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்படி ஓர் அழகிய நிகழ்ச்சியை உவமையாக்கிக் கற்பனையினால் எல்லாவற்றையும் பொருத்தமுற இணைத்துக்காட்டும்போது, அந்தப்பாடல், நம் உள்ளத்தில் இருவேறு சித்திரங்களை அருகருகே பதித்து ஈடு படுத்திப்பன்மடங்கு இன்பத்தை ஊட்டிவிடுகிறது. இப்போது பாட்டுப்பகுதி முழுவதையும் பார்க்கலாம்.

**" ஆடுஅமைக் குயின்ற அவிர் துளை மருங்கின்**
**கோடை அவ்வளி குழலிசை ஆக,**
**பாடுஇன் அருவிப் பனிநீர் இன்இசை**
**தோடுஅமை முழவின் துதைகுரல் ஆக,**
**கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு**
**மலைப்பூஞ் சாரல் வண்டுயாழ் ஆக,**
**இன்பல் இமிழ் இசை கேட்டுக் கலிசிறந்து**
**மந்தி நல்அவை மருள்வன நோக்க,**
**கழைவளர் அடுக்கத்து இயலி ஆடும்மயில்**
**நனவுப்புகு விறலியின் தோன்றும்."**

—அகநானூறு 82

சீவக சிந்தாமணியில் ஏமாங்கத நாட்டின் இயற்கை வளத்தை வருணிக்க வருகிறார் திருத்தக்க தேவர். அழகான சோலையில் பலவகை மரங்கள் ஓங்கிவளர்ந்திருக்கின்றன. எல்லா மரங்களையும் விடத் தென்னமரங்கள் காய்க்குலைகள் தொங்க மிக உயர்ந்து ஓங்கி நிற்கின்றன. அவற்றுக்கு அடுத்தபடி சற்றுத்தாழக் கமுக மரங்கள் உள்ளன. அவற்றில் தேனடை களை வண்டுகள் வைத்திருக்கின்றன. அவற்றுக்கு அடுத்தபடி பலாமரங்கள் பழுத்துக்குலுங்குகின்றன. அவற்றைவிடச் சற்றுத் தாழ்ந்து நல்ல இனிய கனிகளுடன் மா மரங்கள் செழித்து வளர்ந்து நிற்கின்றன. அவற்றின் கீழ் வாழை மரங்கள் பழக்குலைகளுடன் காட்சியளிக்கின்றன. இப்படிப் படிப்படியாக, தென்னை, கமுகு, பலா, மா, வாழை ஆகிய மரங்கள் வளர்ந்த அந்தச் சோலையை வருணிக்கிறார் ஆசிரியர். இந்த மரங்கள் உயரத்தில் ஒன்றைவிட ஒன்று தாழ்வாகப் படிப்படியாக நிற்கின்றன என்று சொல்லவில்லை. ஒரு நிகழ்ச்சியைச் சொல்லி அந்த மரங்கள் அவ்வாறு இருப்பதை நாம் உணரும்படி செய்கிறார்.

காய்கள் பருத்துக் குலையாக உள்ள தென்னமரத்திலிருந்து ஒரு பழுத்த தேங்காய் விழுகிறது. கமுக மரத்தின் உச்சியிலே அது விழுகிறது. அங்கே உள்ள தேனடையை விழுந்த வேகத்தால் குலைத்து விட்டுக் கீழே போகிறது. அடுத்துள்ள பலா மரத்தின் மேல் விழும்போது அந்த மரத்தில் நன்றாக முதிர்ந்து கனத்த பழத்தில் தாக்கி அதைப் பிளந்து விடுகிறது. அப்பால் கீழே சென்று மாமரத்தில் உள்ள கனியைக் குத்துகிறது. கடைசியாக வாழைக் குலையில் விழுந்து அதன் பழங்களை உதிரச் செய்கிறது. அந்தப் பழுத்த தேங்காயின் கீழ்நோக்கிய பயணத்தில் நாமும் கலந்துகொண்டு கமுகின் உச்சியிலுள்ள தேனடையையும், பலாப்பழத்தையும், தேமாங்கனியையும், வாழைப்பழத்தையும் சுவைத்துவிட்டு அந்த நாட்டின் நில வளத்தை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

> " காய் மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
> பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
> தேமாங் கனிசி தறிவாழைப் பழங்கள் சிந்தும்
> ஏமாங் கதம் என்று இசையால்திசை போயது உண்டே."
>
> —சீ. சிந்தாமணி, நாமகள் 2

[காயினுற் சிறப்புப்பெற்ற தென்னமரத்தின் பழம் விழ, அது கமுகின் உச்சியிலே பூவிலே சிறந்த இனிய தேனைத் தேனீக்கள் தொகுத்து வைத்த அடையைக் கிழித்து, பின்பு பலாமரத்திலுள்ள பழத்தைப் பிளந்து சென்று, பிறகு இனிய மாம்பழத்தை உதிரச் செய்து, அப்பால் வாழைப்பழங்களைச் சிந்தும்படி செய்யும் நிலவளத்தையுடைய ஏமாங்கதம் என்று புகழால் திசைமுழுவதும் பெயர் போன நாடு ஒன்று உண்டு. தேன்தொடை — தேனடை, வருக்கை — பலாப்பழம்.]

இந்தப்பாட்டில் உவமையில்லாவிட்டாலும் ஐந்து வேறு மரங்களை ஒரு நிகழ்ச்சியால் இணைத்துக்காட்டிய அழகைக் காண்கிறோம்.

அந்த நாட்டின் நெல்வயலைக் காட்டுகிறார் ஆசிரியர். நெற் பயிர் வளர்கிறது. அவர் அதன் மூன்று நிலைகளைக் காட்டுகிறார்; ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உவமையைச் சொல்லி இன்புறுத்துகிறார்.

நெல் கருக்கொள்கிறது. அதன் நுனிப்பகுதி சற்றே திரட்சியடைகிறது. சூல்கொண்ட பச்சைப்பாம்பைப் போல அப்போது அது தோற்றுகிறது. பிறகு பூட்டைவிட்டு நெல் லின் பசுங்கதிர் தலைவிரித்து நிமிர்ந்து நிற்கிறது. செல்வச் செருக்குடைய கீழ்மக்கள் தலையெடுப்பாக இருப்பது போல இருக்கிறது, அந்தக் காட்சி. பிறகு நெற்கதிர் முதிர்ந்து தலை சாய்கிறது. கல்வி கற்றுத் தெளிந்த அறிவுடையவர்கள் எப்படிப் பணிவுடன் நிற்பார்களோ அப்படி அது நிற்கிறதாம்.

**" சொல்அரும் சூல் பசும் பாம்பின் தோற்றம்போல்**
**மெல்லவே கரு இருந்து, ஈன்று மேலலார்**
**செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த நூற்**
**கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே."**

[நெற்பயிர்கள் கண்ணுக்குப் புலப்படற்கரிய சூலையுடைய பச்சைப்பாம்பின் தோற்றத்தைப் போல மெல்லக் கருக் கொண்டு, பிறகு பசுங்கதிரை ஈன்று கீழ்மக்கள் செல்வம் பெற்ற நிலையைப் போலத் தலையை மேலெடுத்து நின்று. அப் பால் மெய்ப்பொருளை ஆராய்ந்த நூற்கல்வியையுடைய மக்களைப்போல வளைந்து விளைந்தன. சொல் — நெல், கரு — கருப்பம். தலைநிறுவி — தலைநிமிர்ந்து. இறைஞ்சி — வளைந்து.]

இங்கே மூன்று நிலைகளில் முதல நிலைக்கு மற்றோர் இயற்கைப்பொருளையும், மற்ற இரண்டுக்குக் கீழ்மக்கள், கற்ற மேலோர் ஆகியோர் இயல்பையும் உவமையாக ஆள்கிறார் ஆசிரியர்.

நெல்லைக்கண்டு பண்பின்மையும் பண்புடைமையையும் நினைக்கச் செய்கிறார் திருத்தக்கதேவர். அதே நெற்பயிரைக் கண்டு சிவபக்தர்களை நினைக்கிறார் சேக்கிழார். அவர் பக்திச் சுவை நனி சொட்டச்சொட்டப் பாடுகிறவர். தொண்டர் சீரைப் பரவுவதில் வல்லவர் அவர். தொண்டர்களின் பெருமையைத் தனியே எடுத்துச் சொல்வதோடு, இயற்கைக்காட்சிகளைச் சொல்லும்போதும் அவர்களின் இயல்பை உவமையாக எடுத்து ஆள்வார்.

நெல்வயல்களை வருணிக்கிறார் சேக்கிழார். வரப்புகளின் இருமருங்கும் வயல்கள் உள்ளன. நெற்பயிர்கள் கதிர் முற்றித் தலைவளைந்து நிற்கின்றன. வரப்பில் ஒரு பக்கத்தில் உள்ள நெற்பயிர்கள் வரப்பை நோக்கி வளைந்துள்ளன. வரப்பின் மறு பக்கத்தில் உள்ளவையும் இந்த வரப்பை நோக்கியே வளைந்துள்ளன. இரண்டு வயல்களில் உள்ள நெற்பயிர்களும் எதிரெதிரே வளைந்து காட்சி அளிக்கின்றன. பக்தி மிகுதியுடையவர்களாய் இறைவனுக்கு ஆட்பட்ட தொண்டர்கள் ஒருவரையொருவர் கூடும்போது தலை தாழ்ந்து ஒருவரைஒருவர் வணங்குவது போல இருக்கிறது அந்தக்காட்சி. அவர்கள் எவ்வாறு பக்தியிலே முதிர்ந்து விளைந்து விளங்குவார்களோ அப்படி நெற்பயிர் முதிர்ந்திருக்கிறதாம்.

> **" பத்தியின் பால ராகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர்**
> **தத்தமில் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்**
> **மொய்த்தநீர் பத்தி யின்பால் முதிர்தலை வணங்கி மற்றை**
> **வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி எல்லாம்."**

[பக்தியின் வசப்பட்டவர்களாகிப் பரமனுக்கு ஆளாகிய அன்பர்கள் தம்தம் முன்னே கூடினவர்கள் தலையினால் வணங்குமாறு போல, நெற்பயிரெல்லாம், தழைத்து நீண்ட வரிசையான வரம்பை நோக்கி முதிர்ந்த தலை வணங்கி, அந்த மெய்யறிவாளரைப்போல முதிர்ந்து விளைந்தன. நீள்பத்தி — நீண்ட வரப்பு, நீண்டவரிசை எனலும் ஆம். சாலி — நெல்.]

திருத்தக்கதேவர் நெற்கதிர் வளைந்ததற்குக் கல்வி சேர் மாந்தரை உவமையாக்கினுர். பக்தர் பெருமையைப் பாடவந்த சேக்கிழாரோ இறைவன் அடியாரை உவமையாக்கினுர்.

இனி, கம்பர் தரும் இயற்கைக்காட்சி ஒன்றைப் பார்ப்போம். அவர் கோசல நாட்டை வருணிக்கிருர்; அங்குள்ள மருதத்திணையைப் பாடுகிருர். மருதமென்னும் அரசன் தன்னுடைய ஓலக்க மண்டபத்தில் தன் பெருமைக்கு ஏற்ற சூழ்நிலையில் பொலிவுடன் வீற்றிருக்கிருனும். அப்படி ஓர் உருவகத்தை அமைக்கிருர் அப்புலவர்.

அரசவையில் ஆடல்மகளிர் ஆடுவார்கள், பாவைகள் விளக்கை ஏந்தி நிற்கும், முழவொலி முழங்கும். அவையினர் கண்களை மலர விழித்து அழகிய காட்சிகளைக் கண்டு மகிழ்வார்கள். அழகிய திரைகள் அங்கங்கே கட்டப்பட்டுத் தொங்க விடப்பட்டிருக்கும். யாழோசை இனிதாக இசைக்கும். இந்தச் சூழ்நிலையில் அரசன் வீற்றிருப்பான்.

இங்கே மருத நிலமென்னும் அரசனும் அப்படித்தான் திருவோலக்கம் கொண்டிருக்கிருனும். வயலை அடுத்த சோலையில் மயில்கள் ஆடல் மகளிரைப் போல ஆடுகின்றன. பொய்கையில் உள்ள தாமரைகள் விளக்கைப் போலச் செக்கச் செவேலென்று மலர்ந்து நிற்கின்றன. மேகங்கள் முழவைப் போல முழங்குகின்றன. குவளைகள் மலர்ந்து அவையினர் கண்ணை மலர்த்திப் பார்ப்பது போல இருக்கின்றன. அலைகள் சுருண்டு மடிந்து திரைகளைப் போலக் காட்சியளிக்கின்றன. வண்டுகள் இனிய யாழைப் போல முரலுகின்றன.—இப்படி மருதம் வீற்றிருக்கிறதாம்.

**" தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க,**
**கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,**
**தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்**
**வண்டுகள் இனிது பாட, மருதம்வீற் றிருக்கும் மாதோ! "**

[சோலைகளில் மயில்கள் ஆடல்மகளிரைப்போல ஆடவும், தாமரை விளக்கெடுப்பதைப்போல மலரை ஏந்தவும், மேகங்கள்

முழவைப்போல ஒலிக்கவும், குவளைமலர்கள் அவையினர் கண் விழித்தாற்போலத் தோற்றம் அளிக்கவும், தெளிவான அலைகள் திரைச்சீலையின் காட்சியைத் தோற்றுவிக்கவும், இனிமையைத் தரும் மகரயாழைப்போல வண்டுகள் இனிதாகப் பாடவும் மருதம் என்னும் அரசன் வீற்றிருக்கிறான், தண்டலை — சோலை, ஏங்க — ஒலிக்க, எழினி — திரைச்சீலை, தேம்பிழி — இனிமையைத் தரும்.]

இவ்வாறு புலவர்கள் இயற்கைக்காட்சிகளை எழிலுற எடுத்துக்காட்டி, உவமையாலும் உருவகத்தாலும் வேறு காட்சிகளையும் ஒப்பு நோக்க வைத்து, இலக்கிய இன்பத்தை ஊட்டுகின்ற இடங்கள் தமிழ் இலக்கியங்களில் அளவற்றனவாக உள்ளன. புலவர்களுக்கு இயற்கையெழிலில் உள்ள ஈடுபாடும், அந்த எழிலை மேலும் மிகுதிப்படுத்தி இன்புறுத்தும் அவர்கள் கவித்திறனும் வியந்து பாராட்டுவதற்குரியவை.

# 6. விடுதலைப் போராட்டக் கவிஞர்

**[திரு. கா. திரவியம்]**

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது; சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்," என்னும் துடிப்புமிக்க பாடலுடன் தமிழ்நாட்டுக்கு அறிமுகமான தேசியக்கவி, நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை. ஏழு பெண் குழந்தைகள் அணிசெய்த எட்டு வேங்கடராமப் பிள்ளை குடும்பத்தில், 'எட்டாவது குழந்தை தட்டாமல் ஆண்தான்,' என்று பெரியவர் ஒருவர் வாழ்த்தியதற்கு இணங்க, பிறந்த எட்டாவது பிள்ளைக்கு அவர் அன்னை இட்ட பெயர், கருப்பண்ணன்; தந்தை இட்ட பெயர் இராமலிங்கம்; நாடு பின்னர் சூட்டிய பெயர் நாமக்கல் கவிஞர். தேசிய இயக்கத்தால் ஈர்க்கப்படும் முன்பே அவர் நாடகப் பாடல்கள் பல இயற்றி, உள்ளூரில் பெயர் பெற்றவர்.

1914 ஆம் ஆண்டு, தூத்துக்குடியில் 'கோகலே பரிசு' என்ற பரிசை வழங்க ஒரு கவிதைப் போட்டி நடந்தது. பரிசுக் குழுவினர் நாட்டுப்பற்றை ஊட்டக்கூடிய ஒரு நூறு பாடல்களைப் பாமர மக்களுக்கேற்ற கும்மி மெட்டில் ஆக்க வேண்டுமென்றும், சிறந்த பாடல் தொகுப்புக்கு ஐந்நூறு ரூபாய் பரிசு தரப்படும் என்றும் அறிவித்திருந்தனர். 'நாட்டுக்கவி' என்று தலைப்பிட்டுப் பாடல்கள் இயற்றிப் போட்டியில் கலந்து கொண்டார் இராமலிங்கர். தம் பாடல்கள் சிலவற்றை நீக்க இராமலிங்கர் இசைந்தால், பரிசு அவருக்கு அளிக்கப்படுமென்று பொருள் தொனிக்கும்படி பரிசுக்குழுச் செயலாளர் கடிதம் எழுதினார். இராமலிங்கர், மறுக்கவே பரிசை இழந்தார். விலக்கப்பட வேண்டியனவாகக் குறிப்பிடப்பட்ட பாடல்கள் கடவுள் வாழ்த்தாக அமைந்திருந்தன. துதிப்பாடல்கள் மூன்றை நீக்க வேண்டுமெனப் பரிசுக் குழுவினர் நிபந்தனை யிட்டது; பகுத்தறிவுக் கொள்கையைப் பின்பற்றி அன்று. சிலேடை மூலமாக, அரவிந்தர், திலகர், காந்தி ஆகியோர் அப் பாடல்களில் காட்சி அளித்ததே, கோகலே பரிசு என்று ஏற்படுத் திய நிதானவாதிகள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாய் இல்லாததே காரணமாகும்.

"நீதி நிலைக்க நினைத்தவனும் - அருள்
ஜோதி உருக்கொண்ட மேனியனும்
ஆதி அறத்தை அளித்திடுவான் - எங்கள்
அரவிந்த நாதனைப் போற்றுங்கடி."

பிரமன் துதியாக எழுதப்பட்ட இந்தப் பாடல், அன்று நாட்டு இளைஞரை ஆட்கொண்டிருந்த அரவிந்த கோஷுக்கு அஞ்சலி யாகவும் அமைந்து விட்டது.

"ஆலம் உண்டாலும் அசையாதான் - பர
காலனடி குண சீலனடி
பாலை முனிந்த பனிமொழியாள் - பதி
பால கங்காதரன் பாடுங்கடி."

சிவபிரானுக்கும் திலகர் பெருமானுக்கும் பொருந்திய சிறப் பான சிலேடை இது.

"தீதுசெய் வேந்தரைச் சீர்திருத்தம் - செய்யத்
தூது நடந்திடும் தூயனடி
கோதில் குணத்தவன் கோகுலத்தில் - வந்த
கோபால கிருஷ்ணனைப் பாடுங்கடி."

இதில் கோகுலகிருஷ்ணனுக்கும் கோபாலகிருஷ்ண கோகலே யுக்கும் பொருந்தும் வகையில் சிலேடை பின்னப்பட்டிருந்தது.

"கந்தமலர் ஒரு மேலவர்க்கும் - ஞானக்
கைப்பலம் காட்டிய கந்தனடி
கந்தம் மணக்கின்ற ஜோதியடி - புகழ்
காந்தியடி வெகு சாந்தனடி."

தந்தைக்கு உபதேசம் அருளிய கந்தனுக்கும், தலைவர்களுள் மூத்தோர்க்கும் முற்போக்கு வழி காட்டவல்ல காந்திக்கும், இப்பாடல் அஞ்சலி செலுத்தியது. தென்னப்பிரிக்க சத்தியாக் கிரகத்திற்குத் தலைமை ஏற்றுப் புகழ் பெற்ற காந்தி, இந்திய நாட்டில் தம் இணையற்ற தலைமையைத் தோற்றுவிக்காத காலமது. காந்தியுகம் இந்தியாவில் தோன்று முன்பே, காந்திக்குக் கவிதையைக் காணிக்கையாக்கும் ஆர்வத்தால் ஆட்கொள்ளப்பட்டிருந்தார் கவிஞர்.

போட்டியில் பரிசை இராமலிங்கர் பெறுவிடிலும், அவர் நண்பர்களுள் சிலர் அப்பாடல்களை அச்சடித்து வெளியிட்டதால் பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற்றார். சேலம் விஜய ராகவாச்சாரியார் அப்பாடல்களைக் கேட்டபின், அவருக்குச் சூட்டிய புலவர் பட்டம், பின்னர் நாட்டிலே நிலைத்து, சுதந்தரம் பெற்றபின் தமிழக 'ஆஸ்தானக் கவி'யாகும் நிலைவரை அவருக்குத் துணை நின்றது.

காந்தியடிகள் தண்டி உப்புச் சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கியபோது, நாமக்கல் கவிஞரின் 'கத்தியின்றி ரத்த மின்றி' என்னும் பாடல், அவரை நாடறிந்த கவிஞராக்கியது. ராஜாஜி தலைமையில், வேதாரணியம் என்று வழங்கும் திருமறைக்காட்டை நோக்கிப் புறப்பட்ட தமிழ்நாட்டு சத்தியாக் கிரகத்தண்டு, இப்பாடலை வழிநடைப் பாட்டாகப் பயன்படுத் தியது, ராஜாஜி, அப்போது கவிஞருக்கு எழுதிய கடிதத்தில், "இந்தச் சமயத்தில் சுப்பிரமணிய பாரதியார் இல்லையே என்று

எண்ணினேன். அந்தக் குறையை நீங்கள் நீக்கி விட்டீர்கள்,'' என்று மனமுருகப் பாராட்டினர். பாரதிக்குப் பின் தேசியக் கவிதைத் தேருக்குப் பாகராய் விளங்கியவர் நாமக்கல்லார்.

'பிறந்த நாட்டில் பிறர்க்கு அடிமையாய் உழல்வது ஒரு வாழ்வா ? அதில் எத்துணை நலன்கள் கிட்டினாலும் அவை தன்மானத்துக்கு இழுக்கல்லவா ?' என்ற கேள்விக் கணைகளைக் கவிதையாகப் பொழிந்தார் கவிஞர் :

'' இச்சைபோல் இருந்து வாழ
ஈப்புழு எறும்பும் கோரும் ;
உச்சமாம் மனித ஜென்மம்
சுதந்தர உணர்ச்சி யின்றி
நச்செனும் அடிமை வாழ்வை
நயந்திட ஞாய முண்டோ....? ''

என்று புழுவுக்கு இருக்கும் சுதந்தரம் கூடப் புல்லடிமை மனிதனுக்கு இல்லாத பொல்லாத நிலைகண்டு பொருமினர்.

'' கண்ணொளி யின்றி மற்றக்
கட்டழ கிருந்தா லென்ன
திண்ணிய சுதந்த ரத்தின்
தெரிசனம் இல்லா வாழ்க்கை ''

என்று அவர் பாடிய போது,

'' கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினுற்
கைகொட்டிச் சிரியாரோ ? ''

என்ற பாரதியாரின் வரிகளில் பதிந்திருந்த உணர்வு எதிரொலிப்பதை அறிகிறோம்.

'' ஆண்டவன் உனக்கென்ற நாட்டில்
அன்னியர்க் கரசளித் தடிமை
பூண்டுடல் வளர்த்தனை நெஞ்சே
புண்ணியம் உனக்கிலை ''

என்னும் பாட்டு, அடிமைத்தனம் ஒரு சாபம் மட்டுமன்று, கொடிய பாபம் என்பதையும், அரசியலுக்கு மட்டுமன்று அறவாழ்வுக்கும் அது முரணனது என்பதையும் இடித்துரைக்கிறது.

'தாய்நாட்டில் தகைமைசால் வாழ்வு வாழத் தமக்குள்ள உரிமையில் தலையிட எவர்க்கும் தகுதியில்லை, அது தர்மமன்று, அன்னிய ஆட்சித்தருக்கைத் தாங்கிப் பணிவது தன்மானத் துக்குக் களங்கம்' என்னும் உணர்வு, கவிஞரின் பாடல்களில் ஊடோடி நிற்கிறது.

"மன்னவன் நானே மந்திரி என்சொல்
மற்றவர் யாருக்குச் சுற்றமிது?
என்னுடை நாடு என்னுடை வீடு
யாரிதில் என்னை மிரட்டுவது?
அன்னியர் இங்கே உள்ளவர் யாரும்
அண்டிப் பிழைத்திட வந்தவரே!
என்னுடை ஏவல் சொன்னதைச் செய்தோர்
என்னை அடக்குதல் இன்னுமுண்டோ?"

வாழ்வும் தாழ்வும் நாட்டு மக்கள் கையில் உள்ளன என்பதையும் தாய்நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமையும் பொறுப் பும் அவர்களுக்கே உற்றவை என்பதையும் எளிய, ஆனால் எழுச்சிமிக்க,சொற்களில்,இடித்துஇடித்து உரைக்கிறார் கவிஞர்.

"என்னுடைப் பெட்டி என்னுடைத் துட்டு
யாரிடம் சாவி இருத்தல்சரி?
பொன்னையும் வெள்ளிச் செம்பென் றுலும்
பூட்டவும் நீட்டவும் என்பொறுப்பு...."

என் வீட்டில் நானே அதிகாரி என்ற உரிமை உணர்வை ஏழை யின் நெஞ்சிலும் ஊன்றிப் பதித்தன, உணர்ச்சிமிக்க அவர் பாடல்கள்.

"அன்னியர் ஆள்வதில் நன்மைவந் தாலும்
அடிமையின் வாழ்விது நரகம்எந் நாளும்;
என்னுடை வீட்டுக்கு நான்அதி காரி
என்பது தான்சுய ராச்சிய பேரி"

வழிவழியாய் மக்கள் போற்றிவந்த வாழ்க்கை நெறியோடும், பாமரரும் ஏத்திய பண்புகளோடும், அற வாழ்வின் ஆதார உண்மைகளோடும், விடுதலை வேட்கையைப் பின்னிப் பிணைத் துப் பண்ணிசைத்தார் கவிஞர்.

"கற்புடைப் பெண்கட் கெல்லாம்
கணவனே தெய்வ மென்பார்;
சொற்பொருள் அறிந்தோர்க் கெல்லாம்
சொன்னசொல் தெய்வ மென்பார்;
மற்பெரும் வீரர்க் கெல்லாம்
மானமே தெய்வ மாகும்;
நற்பெயர் நாட்டிற் காக்கும்
நமக்கிந்தக் கொடியே தெய்வம்."

கற்பு, வீரம், அறம், பண்பு, அனைத்துக்கும் மேலாக, தேசியக் கொடியைக் கவியின் இலட்சியக்கண் கண்டு போற்றுகிறது.

நாட்டை அரித்த ஒற்றுமைக் குலைவையும், பிளவையும் பிரிவையும், பிணக்கையும் பூசலையும் பயன்படுத்திக் கொண்டு அன்னிய ஆதிக்கம் தழைப்பது தர்மமா? பங்காளிச் சண்டைகளைப் பயன்படுத்திப் பறங்கிக்காரர் ஆட்சி நிலைப்பது நியாயமா? சரக்கு விற்க வந்த சீமை வணிகன் தாயாதிச் சண்டையில் தலையிட்டு, உரிமையைப் பறித்து, ஊராள்வது அடுக்குமா? உணர்ச்சிப்பெருக்கு உரிமை முறுக்காய் உருவாகிறது. "ஆயிரமுண்டிங்கு ஜாதி-எனில் அன்னியர் வந்து புகலென்ன நீதி" என்று பாரதியார் கேட்ட கேள்வியையே நாமக்கல்லார் அடித்துக் கேட்கிறார்.

"பாரத நாடென்றன் பாட்டன்றன் சொத்து
பட்டயத் துக்கென்ன வீண்பஞ்சா யத்து?"

பாட்டன் சொத்து என்று பாடும் போது, தந்தை காலத்தில் அதைத் தவறவிட்டு, தன்னுடைய காலத்தில் மீண்டும் தன் வசப்படுத்தும் தன்மான உணர்வு துளிர்த்து எழுந்துள்ளதைக் குறிப்பாக உணர்த்துகிறார் போலும் கவிஞர்,

"சுதந்தரம் இல்லா ஒருநாடு
சூழ்புலி பேய்மிகும் பெருங்காடு"

என்று சூழும் கேட்டினைச் சுட்டிக்காட்டிப் பொதுவாகப் பாடினார் புலவர். ஆனால், பாஞ்சாலப் படுகொலையின் போது மட்டுமன்றிப் பாரத நாட்டின் பற்பல பகுதிகளிலும், உரிமை

எழுச்சியை ஒடுக்கப் பெண்கள், குழந்தைகள் உள்படப் பல்லா யிரக்கணக்கானவர் சுட்டு வீழ்த்தப்பட்ட சூழலிலே, வெதும்பிய உள்ளத்திலிருந்து வீராவேசப் பாடல் எழுந்தது.

"கோயில் குளங்களை இடித்தெறியும்
குழந்தைகள் பெண்களைக் கொலைபுரியும்
பேயின் கூத்தினைத் தடுத்திடவே
பெரிதும் சுதந்தரம் தொடுத்திடுவோம்."

சுதந்தரம் ஒரு முடிவன்று, ஒரு தொடக்கமே. சீராக அதை நிர்வகித்து, செம்மையாக ஆட்சி நடத்தி, உழைப்புக்கும், உயர்வுக்கும் உத்தரவாதம் அளித்து, உண்மைக்கு மதிப்புக்கொடுத்து, கடமையின் அடிப்படையில் உரிமை பெறவும், தொண்டின் அடிப் படையில் தலைமை பூணவும் குடிமக்கள் தங்களைப் பக்குவப்படுத் திக்கொள்ளப் படிப்பினைப் புகட்டினார் அவர். அப்பாடல் இது:

"விடுதலை அடைந்தது சுதந்தரம் இல்லை;
வெற்றிகள் என்பதும் வெறிதரும் தொல்லை;
கெடுதலை நீக்கிடக் கிருபைகள் செய்யும்
கேண்மையின் வடிவே சுதந்தரத் தெய்வம்."

சுதந்தரம் சமதர்மத்திற்கு அடிகோல வேண்டும் என்பதனையும் நாட்டு மக்கள் அனைவரும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதனையும் உணர்த்த, அவர் சமதர்ம சமுதாயத்திற்கு இலக்கணமே வகுக்கிறார் தமது பாடலில்.

"அவரவர் உழைப்பின் பலன்களை முழுதும்
அவரவர் உரிமையால் அடைந்து
சுவையுள வாழ்க்கைக் கவசிய மான
பொருளெலாம் சுலபமாய்க் கிடைத்துப்
புவியினில் எல்லா வசதியும் பெற்றுப்
பூரண வளர்ச்சியிற் பொலிதல்
எவரொரு பேர்க்கும் மறுக்கொணா உரிமை
இந்தியர் எமக்குமாம் இதுவே."

கவி காணும் சமுதாயப் புரட்சி, காந்திய நெறி கனிந்த புரட்சி; வன்முறை ஆதரிக்கும் வழியன்று. புரட்சிக்குப் புதுப் பொருள் கண்டு புது இலக்கணம் வகுத்துப் புது வழிகாண வேண்டுமென்னும் உண்மையைப் புகட்டுகின்றார் அவர்.

" புரட்சி வேண்டும் புரட்சி வேண்டும்
புரட்சி வேண்டுமடா!
புரட்சி என்னும் சொல்லின் பொருளிலும்
புரட்சி வேண்டுமடா!"

கட்டுத்தளைகள் நீங்கிய பின்பும், கட்டுப்பாடுகள் வேண்டுமே. அயலார் விதித்த ஆணைகளுக்குப் பதிலாக, அகத்தில் தோன்றி, அறத்தைச் சார்ந்த, அன்பில் தோய்ந்த கட்டுப்பாடுகளாய் அவை இருக்கவேண்டும். போராட்டம் முடிந்துவிட்டதென்று பொறுப்பற்று நடக்கலாமா? உரிமை கிடைத்தபின், உன்மத்த வாழ்வில் உழலலாமா? விடுதலை எய்திவிட்டோமென்று விபரீதப் போக்குகளை வளர்க்கலாமா? நெறிகெட்ட பொது வாழ்வினால் நேரிடும் நலிவுகளை நினைப்பூட்டுகிறார் அவர்.

" நீரில் குளித்திடும் ஆசையால் - சேற்றை
நிறையத்தன் மேனியில் பூசல்போல்
ஊரைத் திருத்திட எண்ணினோம் - சொந்த
ஊழல் மிகுந்திடப் பண்ணினோம்."

நம் கேடுகள் அனைத்திற்கும் அடிமைத்தனம் மட்டும் காரணமன்று. அதை அகற்றிய பின்னும், நம்மிடையே புகுந்துவிட்ட சீர்கேடுகள், ஒழுக்கச் சிதைவுகள், எண்ணச் சிறுமைகள் ஆகியவற்றைக் களைய வேண்டுமெனக் கவிஞர் அறிவுறுத்துகின்றார்.

" சத்தியம் நம்மிற்குறைந்ததால் - பல
சங்கடம் வந்து நிறைந்ததே;
பத்தியம் விட்டுப் பிரிந்திடில் - என்ன
பயனுள வாகும் மருந்துகள்?

இனிய, எளிய, நடையில், துடிப்புமிக்க சொற்களைக் கோத்து, பிடிப்புக்கொண்ட பாடல்களை யாத்த நாமக்கல் கவி, தேசியத் தமிழ் வரலாற்றிலும், இலக்கிய வரலாற்றிலும் அழியாச் சிறப்பை நிலைநாட்டியுள்ளார். பாரதி தோற்றுவித்த பரம்பரையை நாமக்கல்லார் வளர்த்துப் போற்றிப் பலப்படுத்தினார். அவர் சொல்லாட்சியில் பல குறைகளும் கொச்சை

வழக்குகளும் குறுக்கிடுகின்றன என்று குறை கூறுவோர் உண்டு. எதுகை மோனையை நாடியும், சந்தத்தின் சாக்கிலும், ஏற்பில்லாத சில சொற்களை இழுத்துப்போட்டு நிரவல் செய்துள்ளார் என்று நிந்தனை சொல்லப்படுகிறது. " பாரத நாடென்றன் பாட்டன்தன் சொத்து, பட்டயத்துக்கென்ன வீண் பஞ்சாயத்து" என்று தொடங்கும் பாட்டில், "வாரவர் போறவர் யாரையும் நம்பி, வாடின காலங்கள் ஓடின தம்பி", என்று, 'பாரத' என்னும் சொல்லுக்கு ஏற்ப, 'வாரவர் போறவர்' என்னும் வாய்மொழி வழக்கை வலுக்கட்டாயமாக வரவழைக்கின்றார். மற்றொரு பாடலில் 'எவரொரு பேர்க்கும் மறுக்கொணு உரிமை' என்னும் வரியில் 'எவரொரு பேர்க்கும்' என்னும் சொற்றொடரும் ஒலி நயம் கருதி ஊடுருவல் செய்ததே ஆகும். "சாந்த வாழ்விற்கும் சாத்விகப்போர்க்கும், ஜனங்களைத் தகுதியாக்கிடவும்' என்னும் வரிகளிலும், "எட்டியமட்டும் ஜனங்களுக்குள்ளே சமரச எண்ணமே பரப்பி," என்னும் வரிகளிலும் மட்டுமல்லாமல், அடிக்கடி 'ஜனங்கள்' என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. அதுபோலவே, 'இங்கிலிஷ்காரர், எஜமான், கியாதி' என்பவையும் இடையிடையே புகுந்து விளையாடுகின்றன.

"தமிழ்முனிவன் பொதிகைமலை தன்னிலெங்கள் வீடு
தரணியெல்லாம் சுற்றிடுவோம் தைரியம்தான் ஜோடு"

என்னும் வரிகளில், 'வீடு'க்கு ஈடு கொடுக்க 'ஜோடு' என்னும் சொல்லைப் பாடுபட்டு இழுத்து வரும்போது, இமயமலையில் உலவிக்கொண்டிருந்த நம்மைப் பரங்கிமலைக்குத் தள்ளிவிட்ட எண்ணம் ஏற்படத்தான் செய்கிறது.

"பேயின் கூத்தினைத் தடுத்திடவே
பெரிதும் சுதந்தரம் தொடுத்திடுவோம்"

என்னும் வரிகளில் உணர்ச்சி வலுவை, 'பெரிதும்' என்னும் சொல் அரித்து விடுகிறது. 'சுதந்தரம் தொடுத்திடுவோம்' என்னும் சொற்களிலும், ஒலி இசைவு நிற்கிற போதிலும், பொருள் நயம் படுத்துவிடுகிறது.

"பொதுஜன நாயக முறைகாணும்
பூரண சுதந்தரம் பெறவேணும்"

என்னும் வரிகளில் 'வேணும்' என்னும் கொச்சை வழக்கு வேண்டுமா என்னும் வினு எழ இடமுண்டு. 'சாதிகள் சமயச் சமரச சல்லாப வாழ்வு' என்பதில், சல்லாப வாழ்வு என்னும் சொற்றொடரில் பொல்லாத போக்குத் தொனிக்கக்கூடுமன்றோ?

இவ்வாறு ஒரு சிலவற்றைக் குறித்துக் காட்டலாமெனினும் இவற்றைக்கொண்டு கவிதைச் சிறப்பைக் குறைத்துக் கூறுவது கொள்ளத்தக்க கருத்தன்று. கிளர்ச்சியும் கொந்தளிப்பும் ஓங்கிய சூழலிலே, எழுச்சியின் வேகம் எதிர்கொண்டு அழைக்க, மக்களிடையே உணர்ச்சியையும் உறுதியையும் ஊட்ட உருவாக்கப்பட்ட பாடல்கள் இவை. கருத்தும் கவர்ச்சியும் கலந்து நிற்க, எண்ணமும் எழுச்சியும் இணைந்து செல்ல, நடையில் நயம் நடனமிட, வேகத்துக்கு விளக்கம் ஈடுகொடுக்க, கொள்கைப்பதிவும் கருத்துச் செறிவும் கூடி அமைய, உணர்ச்சிக்கு உண்மை மெருகு கொடுக்க, அமைதியால் ஆழம் வளம்பெற்று விளங்க, அறத்திஞல் வீரம் தரம் உயர்ந்து துலங்கப் படைக்கப்பட்டுள்ள நாமக்கல் கவியின் பாடல்கள் சிந்தையை அள்ளிச் செயலை ஆளும் வல்லமை மிக்கன. ஒரு காலக்கட்டத்துக்கு மட்டும் உரிய பொழுதுப் பாடல்கள்' அல்ல அவை; எல்லாக்காலத்திலும் ஊன்றிநிற்கும் 'விழுதுப்பாடல்கள்' அவை. அவர் பாடல் பளிச்சிட்டு மறையும் மின்னல் ஓட்டமன்று; பலன் தரு தூய ஒளிஊட்டம். அவர் சொல்லிலே கடுமை இல்லை; கனிவு இருக்கிறது; எள்ளல் இல்லை; கவிதைத்துள்ளல் இருக்கிறது. அவர் கவிதை வெறும் வாய்வீச்சன்று; வாய்மையின் உயிர் மூச்சு. கற்றவர்க்கே உரியது கவிதை என்னும் நிலையை மாற்றி, மற்றவரையும் உணர்வு உற்றவராக்கி, அவர்கள் உள்ளத்தின் அடித்தளத்தில் கிடந்த உணர்ச்சிகளுக்கு உருக்கொடுத்து, சமூக சக்தி வளங்களாக அவற்றைக் கூட்டிக் குவித்து, நாட்டுக்குக் காணிக்கையாக்கியது அவர் கவிதை. நாமக்கல்லார் கல்லார்க்கும் உரிய கவி; எல்லார்க்கும் ஏற்ற இனிய கவி. அவர் ஏட்டுக்கவியல்லர்; எழுச்சிக்கவி; இதயக்கவி; இலட்சியக்கவி; நம்முடைய நாட்டுக்கவி.

# 7. ஏறு தழுவுதல்

[கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை]

தண்டமிழ் நாட்டு மக்களிடத்துப் பண்டைக் காலத்துச் சிறந்து விளங்கிய வீரச் செயல்களுள் ஏறு தழுவுதல் என்பதும் ஒன்றாகும். இது, அக்காலத்து ஒரு விழாவாகவே கொண்டாடப் பட்டு வந்துள்ளது.

பாரத காலத்துக் கண்ணபிரான் நப்பின்னையாரை ஏழு ஏறுகளைத் தழுவி மணந்திருப்பதனையும், சங்க நூல்களில் இவ்வேறு தழுவுதல் கூறப்பட்டிருப்பதனையும் நோக்கின் இதன் பழமை ஒருவாறு விளங்கும்.

இங்ஙனம் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் இச்செயல், காலந்தோறும் பிறழ்ந்தும் குறைந்தும் வந்திருப் பினும், இன்றும் நமது நாட்டுப் புறங்களில் ஒருவாறு நடை பெற்று வருகின்றது. அங்கு, இவ்வேறு தழுவற் கிளர்ச்சிகளை, முன்பனிக்காலமாகிய மார்கழி - தைத் திங்கள்களில் நாளைக்குங் காணலாம். இக்கிளர்ச்சி மேற்குறித்தபடி முன்பனிக்காலம் முழுவதும் காணப்பெறினும், தைத்திங்கள் இரண்டாம் மூன்றாம் நாளில், ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு வீட்டிலும் இவ்விழா நிகழக் காணலாம்.

பண்டைக்காலத்தே ஐந்திணை நிலங்களுள் ஒன்றாகிய முல்லை நிலத்தே, அத்திணைக்குரிய மக்களாகிய ஆயரிடத்தே மட்டும் நிகழ்ந்து வந்த இது, இக்காலத்தே எத்திறத்தாரிடத்தும் ஒப்ப நிகழக் காணப்பெறுகின்றது.

இவ்விழா, பண்டைத் தமிழரின் அரிய செயல்களுள் ஒன்றை நமக்கு நினைவூட்டி, ஊக்கம், வீரம் முதலியவற்றை விளைவிப்ப தொன்றாகும். இவ்விழாவினைப்பற்றிய பண்டைய நிகழ்ச்சிகள் முல்லைக்கலி, சிலப்பதிகாரம் என்னும் நூல்கள், அவற்றின் உரைகள் ஆகிய இவைகளைக் கொண்டு விரிவாக உணரலாம்.

'தென்னவன் தொல்லிசை நட்ட குடியொடு நல்லினத்து ஆயர்', 'இருங்குடி ஆயர்' என்றெல்லாம் தொன்னூல்களிற் சிறப்பிக்கப்பெறும் ஆயர்குடியினர், தங்கள் பெண்மக்களுக்குத்

தக்கவராய வீர மணமக்களைத் தேர்ந்து கொள்ளுதற்கு, மணத் தேர்தலாக இந்த ஏறு தழுவுதலைக் கையாண்டு வந்தனர்.

இவ்வாயர் குடியில் ஒரு பெண்மகவு பிறக்கின், அதே காலத்து அக்குடியினர்க்குரிய ஆநிரையிற் பிறந்துள்ள ஏற்றிளங் கன்றுகளைத் தம்மூட்டாக, பால் கறவாது, தம் போக்காக விட்டு வளர்த்து வந்து, அம்மகளின் மணப்பருவத்தே இவ் விடைகளைத் தழுவி வலியடக்குவானுக்கு அம்மகளை மணஞ் செய்துதருவது அவர்கள் வழக்கம்.

இக்காலத்தே இதனை மணத் தேர்தலாகக் கொள்வது இன்று. ஏனினும், இந்நாளில் சில அரிய பணையங்கள் வைத் தேனும் இவ்வேறு தழுவுதல் நடத்தப்படுகிறது.

இவ்விழா, பண்டு ஆண்டுதோறும் குறித்த காலங்களி லாவது, ஆயர் மகள் ஒருத்தியை மணம் விரும்பினவன் உரிய ஏற்றினைத் தழுவ முன்வந்து வேண்டிக் கொண்ட காலத் திலாவது நிகழ்ந்தது.

ஏறுகட்கு உரியோரும், தழுவுவோருமாகிய ஆயர்கள் பிடவம், செங்காந்தள், காயா, கொன்றை, வெட்சி, முல்லை, கஞ்சங்குல்லை, குருந்து முதலிய மலர்களாலும் கொத்துக் களாலும் ஆகிய மாலைக் கண்ணிகளைத் தரித்துச் செந்துவராடை பூண்டு திரண்டு கூடுவர். முல்லை நிலக் கடவுளாகிய மாயோனை யும், அவ்வூர் நீர்த்துறைகளிலும் மரங்களின் கீழுமுள்ள ஊர்த் தெய்வங்களையும் பரவித் தத்தம் அலுவல்களை மேற்கொள்வர்.

இவ்வாயர் குலமகளிர், முல்லை நிலத்திற்குச் சிறந்த குடிப் பிறப்பும் கற்பும் முதலாய உயர் சிறப்புக்கள் உடையவர். சிலர், 'விரிநீர் உடுக்கை உலகம் பெறினும் — அருநெறி ஆயர் மகளிர்க்கு — இருமணங் கூடுதல் இல்லியல்பன்றே' என்று பாராட்டப்படுபவர் ; தாம், 'தெய்வத்திற்குப் பலியாகச் சமைக்கும் பாலொடு காமன் கோயிலிலே செல்லின், அக் காமனும் நெஞ்சழிந்து தன் கையிற் படையைக் கீழே போகட்டு மயங்குதற்கேற்ற பேரழகினர்;' 'கொலையுண்கட் கூரெயிற்றுக் கொய்தளிர்மேனியினை வனப்பின் மாயோய் நின்னிற் சிறந்தார் — நிலவுலகத் தின்மைதெளிநீ' — என்றெல்லாம் பாராட்டப் படுவர் ;' பூங்கரை நீல ஆடை நிலந்தாழ உடுத்து மயிலோடு

மாறுகொள்ளும் சாயலவர்; குயிலொடு மாறுகொள்ளுங் **கொம்பனார்**'; 'மாணவுருக்கிய நன்பொன் மணியுறீஇப் பேணித் துடைத்தன்ன மேனியர்'.

இவ்வாயர் மகளிர் தொன்றுதொட்டு வரும் மிக்க திருவின ராகியிருப்பினும், தம் முயற்சியாலீட்டும் பொருளினையே துய்த்து மகிழ்பவர். ஒரு சிறுமி மணல்வீடு கட்டி விளையாடுங் காலை, ஒரு சிறுவன் போந்து, 'நல்லாய்! யானும் வீடு கட்டித் தருவன்' எனக் கூறிக் கட்டப் புக, 'எம்போல்வாரை மணந்து ஓர் இல்லமைத்து அறம் நடாத்தும் தன் முயற்சி இல்லாதவனாகிய நீயோ எனக்கு வீடு கட்டித்தருவது' என்று நகையாடிக் கூறினாள். இச்செய்தியை,

'முற்றிழை யேஎர் மடநல்லாய் நீயாடும்
சிற்றில் புனைகோ சிறிதென்றான், எல்லாநீ
பெற்றேம்யாம் என்று பிறர்செய்த இல்லிருப்பாய்
கற்ற திலைமன்ற'

என்ற முல்லைக் கலியான் (செய். 111) உணர்தலாகும்.

இங்ஙனம், இவ்வாயர் மகளிரிடத்துக் காணலாகும் உயர் குணங்கள் மிகப் பல.

இன்னவர், தத்தம் காதலர் ஏறுதழுவும் காட்சியைக் காண வந்தீண்டுவர். இம்மகளிர் நன்கு வீற்றிருந்து காணப் பக்கலில் பரண் அமைக்கப் பெற்றிருக்கும்.

அவ்வேறுகள், வானிடத்து விரிந்த திங்கள் போலவும், திருமாலினிடத்துள்ள சங்கு போலவும், அழகிய நெற்றிச் சுட்டியையுடைய கரிய நிறமுடைய **காரிகள்**; கரிய மஞ்சு சூழும் மலையிடத்து நின்று வீழ்கின்ற அருவிகள் போல அழகிய வெள்ளைக் கால்களையுடைய **காரிகள்**; பலராமன் திருமார்பில் விளங்கும் சிவந்த மாலைபோலச் சிவந்து நீண்ட கொடி மறுவினையுடைய **வெள்ளைகள்**; விண்மீனுடன் விளங்கும் செவ்வானம் போல அழகிய வெள்ளைப் புள்ளிகளையுடைய சிவந்த நிறத்தனவாகிய **சேய்கள்**; சிவபெருமான் திருமிடற்றின் கண் தோன்றுங் கருமை போலக் கரிய கறையினையுடைய கழுத்தினையும் உயர்ந்து வளர்ந்த திமிலினையுமுடைய கபில

நிறத்தனவாகிய குரால்கள்; விளக்கமாகத் தோன்றும் சிவந்த சிறு புள்ளிகளையுடைய வெள்ளைகள் எனப் பலவகைப்படும் உருவச் சிறப்பினையுடையனவாகும்.

அவை, மதம் பொருந்திய களிற்றினும் அஞ்சாமையை யுடையன; இடையறுது காலாலே தரையினை வெட்டித் தூளி யெழுப்புவன; கொம்பாலே குத்திக் கோட்டு மண் கொள்வன; ஒன்றேடொன்று தாக்கியும் மீண்டும் அடியால் மண்ணைப் பறித்தும் கூரிய கொம்புகளால் குத்தியும் பொருது கொண் டிருப்பன; மெய்யினின்றும் வடிகின்ற குருதியால் மூடப் பெற்றுச் சிவந்த மேகங்கள் போல்வன.

அவற்றை அவ்வவற்றிற்குரிய ஆயர்கள் பிடித்து, பரமன் கணிச்சிப் படையென, முள்ளின் முனையெனக் கொம்புகளைச் சீவி, வழுக்குமாறு நெய் தடவி, நீராட்டித் தொழுவினுட் கொண்டுய்ப்பர். அவை கூற்றுவனையும் அவன் ஏவலரையும் ஒப்பச் சினந்து, மருண்டு, சுழன்று கொண்டிருக்கும்.

குறித்த நேரத்தே பறையும், கொம்பும், முழவும், பிறவும் இணைந்து இடிக்கூட்டமென இயம்பும். இந்நிலையில் தொழுவினைத் திறந்து விடுப்பர். ஏறு தழுவுவோர் தாம்தாம் குறித்த ஏறுகளின்மீது புலியெனப் பாய்ந்து பிடிப்பர். உடன் பெரும்போர் நிகழும்.

அப்போர் நிகழ்ச்சி வருமாறு: ஏறுகளின் மீது பாய்ந்தோர் கொம்பை இறுகப் பற்றியும், கொம்பிடை வீழ்ந்து கழுத்தினைப் பற்றியும், கழுத்திடத்திலே மாலை போல் அடங்கிக் கிடந்தும், கொண்டை முறியும்படி தழுவியும், தங்கள் தோளுக்கு நடுவே அவற்றின் கழுத்தைப் புகுத்தி விட்டுப் பிடித்தும், நெருங்கிக் கொம்புகள் தம்மேலே படுதலை ஏற்றுக் கொண்டும் எங்ஙனமும் தப்பாது பிடிப்பர்.

ஒரு வெள்ளேற்றின் பக்கத்தே ஒடுங்கிக் கிடப்பான் ஒருவன், திங்களிற் கிடக்கின்ற மறுப்போலக் காணப்படுவான். ஒரு மறுவினையுடைய ஏற்றின் மீதேறி ஒடுங்கி விடாது செல்வான், நீர்த்துறையினிடத்துத் தெப்பத்தின்மீது கிடந்து அதனைத் தள்ளுகின்றவனை ஒப்பான். தன்மீது கடிது ஓடி வந்த ஒரு காரியை அதன் வலியடங்கத் தழுவி வருத்தி அதன் மேலே தோன்றும் ஒருவன், கூற்றுவனை உதைத்துத் தள்ளி

அவன் உயிரை வாங்கும் பரமனைப் போல்வான். நீங்காத சினத்துடன் தன்மேலே பாய்ந்த ஒரு சிவந்த ஏற்றைக் கொம்பைப் பிடித்து அதன் வலியைப் போக்கி அடக்கினவன், கஞ்சன் தன்னைக் கொல்ல ஏவிய குதிரையின் வாயைக் கிழித்துக் கொன்ற கண்ணபிரானை நிகர்ப்பான்.

இங்ஙனம் ஏறு தழுவுவோர் வெற்றியுறுவர். இங்ஙனமின்றித் தோல்வியுறுவதும், ஒரோவழி வீரர் பதம் புகுவதும் உண்டு.

இங்ஙனம் ஏறு தழுவுதற்குரிய நாளின் முன்னாள் மாலையிலாவது, ஏறு தழுவும் நாளன்று மாலையிலாவது ஊர்ப்பொது மன்றமாகிய தாதொரு மன்றத்தே ஒரு குரவைக் கூத்து நிகழும்.

குரவைக் கூத்தாவது: ஆடவரும் பெண்டிரும் சேர எழுவரோ ஒன்பதின்மரோ கூடிக் கைகோத்து வளைந்து நின்று பாடியாடுவது. குரவைக் கூத்து நிகழும் இடமே, காதலர்கள் தடையின்றி ஒன்று பட்டுத் தம் உள்ளக் கருத்துக் களை வெளிப்படுத்தும் இடமாகும்.

ஏறு தழுவும் நாளின் முன்னாளாயின், தம் காதலரை ஏறு தழுவுவதற்குத் தூண்டும் பாட்டுக்களும், ஏறு தழுவிய நாளாயின், தம் காதலர் வெற்றியைக் கொண்டாடிப் பாடும் பாட்டுக் களும் நிகழும். 'எம் தந்தையார் குறித்துள்ள ஏறுகளைத் தழுவினார்க்கே யாம் உரியேம்; ஆகவே, காதலர் முனைந்து தழுவி எம்மையடையும் கடப்பாடுடையர்' என்னும் குறிப்பினைத் தம் காதலர்க்குப் பாடித் தெரிவிப்பார்கள் காதலிகள்.

இன்னும் காதலிகள் தங்கள் காதலரை மிக வற்புறுத்தித் தூண்ட வேண்டுமிடத்து, 'காதலீர்! எமக்குரிய ஏற்றினை நாளை நீர் தழுவ அஞ்சுவீரேல், எம்மை இம்மையில் மட்டுமன்றி, மறுமையிலும் அடைதல் அரிது' என்று குறிப்பிடுபவராய்,

> 'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
> புல்லாளே ஆய மகள்'

என்றும்,

> 'அஞ்சார் கொலையேறு கொள்பவரல்லதை
> நெஞ்சிலார் தோய்தற்கரிய..........ஆய்மகன் தோள்'

என்றும் பாடுவர்.

மேலும், ஆயர் பெண்கள் தங்கள் காதலர் எய்திய வெற்றி யும் வெற்றியுடையாரையே மணக்கும் தங்கள் மேன்மையும் தங்கள் ஆயர் குடிக்குப் புதியனவல்லவாகலின், ஏறுகளை அஞ்சும் ஆயர்களும், அங்ஙனம் அஞ்சுவார் உளரேல் அவர்களை மணக்கும் ஆய்ச்சியர்களும் தமது குடியில் இல்லை என்னும் பெருமித உணர்வோடு பாடியும் மகிழ்வர்.

இங்ஙனம், ஏறு தழுவுதல் பற்றித் தங்கள் குறிப்புக்கள் எல்லாம் வெளிப்படப் பாடியபின், ஆயர் மகளிர் முல்லைத் தெய்வமாகிய மாயோனை உன்னி,

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி !"

என்ற குரவைப் பாட்டுப் பாடி, அம்மாயோனைத் தங்கள் வாழ்வினைக் கடைக்கணித்தருள வேண்டிக் கொண்டு, அந்திக் காலத்தே தத்தம் இல்லம் சென்று மகிழ்வர்.

# 8. இலக்கிய மரபு

### [டாக்டர் தமிழண்ணல்]

ஒருவரால் எடுத்தாளப்பட்டது பலரால் பின்பற்றப் பட்டால், அதற்கு 'மரபு' என்பது பெயர். மரபு திடீரென்று தோன்றுவதில்லை. அது சிறிது சிறிதாகக் கால்கொண்டு வளர் கிறது; ஒன்று பலவாய்க் கிளைவிட்டுப் பல்குகின்றது; பிறகு மாறி மறைகிறது. சமுதாய மரபு, இலக்கிய மரபு என்று அதனை இரண்டாகப் பிரிக்கலாம். ஒரு குறிப்பிட்ட இனத்தாரிடம் காணப்படும் பழக்க வழக்கங்கள், சடங்குமுறைகள் சமுதாய மரபு எனப்படும். இலக்கியத்தில் ஒரு குறிப்பிட்ட மொழியினர் வழிவழியாகப் பின்பற்றிவரும் உத்திகள் அனைத்தும் மரபு வழிப்பட்டவை ஆகும். சமுதாய மரபில் அரசியல் மரபுகள், வணிக மரபுகள் என எத்தனையோ பிரிவுகள் உண்டு. இலக்கி யத்திலும் யாப்பு, பொருள், உத்திக்கெனத் தனித்தனி மரபு வகைகள் உண்டு. இலக்கிய மரபிற்கும் சமுதாய மரபே அடிப்படையாகும்.

தொல்காப்பியர் காலத்தில் வணிகரிடம் ஒரு மரபிருந்தது. 'உப்புளதோ வணிகரே ? என்று கேட்டால், அவரிடம் உப்பில்லை யாயின் 'இல்லை' என்று கூறமாட்டார். 'பருப்புளது!' என்பார் அவர். அஃதாவது, எதனையும் 'இல்லை' என்ற மங்கல மில்லாச் சொல்லாற் குறிப்பிடாமல், இருக்கும் பொருளைக் குறிப்பிடுவது வணிக மரபு; அது வணிகத் திறமையும் ஆகிறது.

"எப்பொருளாயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்" (518)

என்பது தொல்காப்பியம். எப்பொருளாயினும் தன்னிடம் உள்ளதல்லாத ஒன்றை, இல்லை எனக் கூறவேண்டுமேல், நேரே கூருமல் 'பருப்பல்லதில்லை' என்றோ, 'பருப்புளது' என்றோ கூறுதல் வேண்டும். இவ்வணிக மரபே, மொழியில் ஏறுகிறது. இதுபோல, மக்கள் வாய்மொழியாகத் தொன்று தொட்டு வழங்கிவரும் 'நாட்டுப்பாடல் இலக்கியம்' சமுதாய மரபில் கிளைத்ததாகும். அந்நாட்டுப்பாடல் மரபே, வரிவடிவ இலக்கியத்தை வளர்த்துள்ளது.

### மரபுத் தோற்றமும் வளர்ச்சியும்

மரபைத் தனியொருவர் மட்டும் தோற்றுவிக்க இயலாது; ஏனெனில் பலராலும் பின்பற்றப் பட்ட பிறகுதான் அது மரபாகிறது. தான் தொடங்கும் ஒன்றைப் பிறர் பின்பற்ற வேண்டும் என்று எவரும் வற்புறுத்தவியலாது. தொடங்கப் படும் ஒன்று சிறப்புடையதாயின், அதுதானே பிறரால் ஏற்கத் தக்கதாகி மரபாகிவிடும். இவ்வாறு தொன்மையானது, பலராலும் ஏற்கப் படுவது, நிலைபேறுடையது எதுவோ, அதுவே மரபாகிறது.

மரபை முற்றிலும் மாற்றுவது, மரபை விட்டு முற்றிலும் விலகிப் போவது என்பனவெல்லாம் வீண் கற்பனைகள். மரபு என்பது கிளைகளுக்கு அடிமரமும் கொம்புகளுக்குக் கிளையும், அரும்புகளுக்குக் கொம்பும் மலர்களுக்கு அரும்பும் போன்றது, ஒருவர் மரபைவிட்டு முற்றிலும் மாறி விடுவாரானல், அவர் பிறரால் விளங்கிக் கொள்ள முடியாதவர் ஆவார்.

குழந்தை, மகிழ்வுந்தினைப் 'பூம்பூம்' என்னும் சொல்லால் குறிப்பிடுவதைக் கேட்டிருக்கிறோம். மோட்டார்க்கார் 'பூம்பூம்' என ஒலியெழுப்புவதால், அப்பெயர் அதற்குப் பொருத்தமே. ஆனால், அதே குழந்தை பெரியவன் ஆனதும், தொலைபேசி மூலம் வாடகைக்கார் கொணருமாறு கேட்பதானால், 'எனக்கொரு பூம்பூம் கொண்டுவா' என்று கேட்பதில்லை. 'டாக்சி' கொண்டுவா என்றுதான் அவ்விளைஞர் கேட்கின்றார். அஃதாவது அறிவு வளர்ந்ததும் சமுதாய மரபோடு ஒத்துப் போய் விடுகிறது அக்குழந்தை; தன் சொந்தப் படைப்பை விட்டு விடுகிறது. சமுதாயத்தால் தான் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும் என்பதே முக்கிய காரணம். எவர்தாம் தாம் சமுதாயத்தால் விளங்கிக் கொள்ளப்படாமலும், சமுதாயம் தம்மை விளங்கிக்கொள்ளாமலும் போக ஒருப்படுவர்? தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவை நிலைநிறுத்து வது மரபேயாகும்.

மரபுடன் தனித்திறன் இணையும்போது மரபு மாற்றங்கள் ஏற்பட, மரபு வளர்ச்சி உண்டாகிறது. புதிய மரபுகள் என்பன இங்ஙனம் கிளைப்பனவே தவிர, 'முன்பில்லாத புதியன' என எவையும் பொத்தென்று குதிப்பதில்லை.

### மரபும் திறனும்

இலக்கியத்தில் மரபு கவிஞனின் தனித்திறமையை அழித்து விடும் என்று சிலர் கருதுவர். அது தவறான கருத்து. முன்னதை அப்படியே படியெடுப்பதன்று மரபு. புதியன படைப்பதைத் தடை செய்வதன்று மரபு. இலக்கியத்தில் மரபைப் பின்பற்றுவதுதான் கடினம்; உடைப்பது எளிது. முன்னையவற்றை எல்லாம் கற்று, அவை தன்னுள் இரண்டறக் கலக்கும்படி செய்பவன்தான் மரபை அறிந்தவன் ஆகின்றான். முன்னையவற்றைத் தெரிந்து வைத்திருப்பதுமட்டும் மரபுணர்ச்சி ஆகிவிடாது. உண்ட சோறு செரித்துக் குருதியுடன் கலப்பது போல, அறிவு மரபுடன் ஒன்றியிணையவேண்டும். அவர் களாலேதான் புதுமையைப் படைக்க முடியும். எனவே, மரபும் திறனும் (Tradition and Individual Talent) ஒன்றற்கொன்று எதிரானவையல்ல; இணைந்தும் பிணைந்தும் வளர்பவையாகும்.

'அம்பு போன்ற கண்கள்' என்பது மரபுவழியாகக் கூறப்பட்டு வருகிற ஓர் உவமை. கபிலர் இதனைத் தமது கற்பனைத் திறத்தால் சொற்சித்திரமாக்கிக் காட்டுகிருர்.

"ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி அன்ன சேயரி மழைக்கண்" (நற். 13)

தினைப்புனம் காப்பவர் விலங்கினை எய்து வீழ்த்தி, அதன் உடம்பினின்றும் பறித்த அம்பு, அங்ஙனம் பறித்தவுடன் முனையிற் குருதி கசிய ஈரமாய்ச் சிவந்து காட்சியளிக்கும். கடை சிவந்த, செவ்வரியோடிய, குளிர்ந்த கண்ணுக்கு இதை விடப் பொருத்தமான உவமை கூறமுடியாது. எல்லாரும் கூறுகிற உவமையைத்தான் கபிலர்தாமும் எடுத்துக்கொண்டாராயினும் அதில் தம்முடைய தனித் திறமையைக் கூட்டிப் புதுமையுடையதாக்கிவிட்டார்.

தொன்மையான காப்பியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போல்வன ஆசிரியம் என்னும் பாவடிவத்தைப் பின்பற்றியிருக்கவும், திருத்தக்க தேவர் தம் சீவக சிந்தாமணியை விருத்தம் என்னும் யாப்பினுல் ஆக்கியிருப்பதை மரபுப்புதுமை என்று குறிப்பிடலாம். அவருக்குப் பின்வந்த சேக்கிழாரும் கம்பரும் விருத்த யாப்பினையே பின்பற்றினர். தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் தம் சிறுகாப்பியமாம் பாஞ்சாலி சபதத்தைச் சிந்து யாப்பில் எழுதியது மரபுப்புரட்சி என்றே குறிப்பிடற்பாலது. இங்ஙனம் பெரும்புதுமை படைப்பதைப் புரட்சி எனலாமேயன்றி, மரபைத் தகர்ப்பதும் உடைப்பதும் புரட்சியாகா. இதுபோலவே மரபுமாற்றங்களும் மரபுத்திரிபு என்னுமளவு இடம் பெறுவதுண்டு. அகத்திணைப் பாடல்களில் வரும் மாந்தர்களைத் தலைவன், தலைவி, தோழி எனப் பொதுவாகக் குறிப்பிடுவதன்றி, அவர்களுக்குப் பெயர் குறிப்பிடுவதில்லை.

"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெருஅர்" (1000)

என்று தொல்காப்பியர் கூறுகிருர். நிலைபெற்ற மரபுகளே இலக்கணம் ஆகின்றன. மக்களைப் பொதுவாகக் கருதிப் பாடப்படும் அகத்திணைப் பாடல்களில் ஒருவரது இயற்பெயரைச்

சுட்டிக் கூறுவதில்லை. ஒருவரது பெயர் மட்டுமன்றிக் குடிப் பெயரும் ஊரும் அடையாள மாலையும் பிறவும் கூடச் சொல்லப் படுவதில்லை என இம்மரபு வளர்ந்தது. பின்னர் இவற்றுள் ஏதேனும் ஒன்றைச் சொல்வதும் குறிப்பால் புலப்படுத்துவது மாகிய மரபு மாற்றங்கள் ஏற்பட்டன. நக்கீரர் நெடுநல் வாடையை அகப்பாடலாகவே எழுதிக் கொண்டுவந்தார், எனினும், அவர் தம் பாடலில் இடம் பெறும் மன்னன் பாண்டி யனே என மறைமுகமாக உணர்த்திவிட்டார். அம்மன்னனுக்கு முன்னே சென்றுகொண்டிருந்த வீரன் கையில் இருந்த வேலில், வேப்பஇலை செருகப்பட்டிருந்தது.

"வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்"(176)

என்னும் அடியில் இக்குறிப்பு வருவது தமிழ்ப் புலவர்களால் மிகப்பெரிய மரபு மாற்றமாகக் கருதப்பட்டது. அடையாளப் பூவைச் சுட்டியதாலேயே, இது பாண்டியன் என வெளிப்படுத்தி விட்டதால் புறப்பாடல் வரிசையில்தான் இதனைச் சேர்க்க வேண்டும் என்று அவர்கள் விவாதித்தனர். சில சமயங்களில் சில பாடல்கள் பழைய மரபிற்கு முற்றிலும் முரணாக அமை வதும் உண்டு.

பெண்கள் மடலேறுவதாகப் புனைவது தமிழ் மரபன்று. ஆண்களும் தங்கள் காதல் நிறைவேறாதபோது, மடலேறி உயிர் நீப்பதாக அச்சுறுத்துவர். அவ்வாறு அச்சுறுத்துவ தோடு அமையாமல், உண்மையிலேயே மடலேறிவிட்டால் அது பெருந்திணைப்பாற்படும். பெண்கள் மடலேறுவதாகச் சொல் வதும் நாகரிகமாகாது என்பதைத் தொல்காப்பியர்,

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை இன்மை யான"(981)

என்றார். திருவள்ளுவரும்,

"கடல் அன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணின் பெருந்தக்கது இல்" (1137)

என்று பெண்மையைப் பெருமைப்படுத்தினர். சங்கப் புலவர் கள் யாரும் இம்மரபை மீறவில்லை. திருமங்கையாழ்வார் இம் மரபை மீறிப் பெண் மடலேறுவதாகப் பாடியதுடன், தாம் அங்ஙனம் மீறுவதையும் வெளிப்படையாகவே குறிப்பிட்டார்.

" அன்ன நடையார் அலர்ஏச, ஆடவர்மேல்
மன்னும் மடல்ஊரார் என்பதோர் வாசகமும்
தென்உரையில் கேட்டறிவ துண்டு, அதனையாம்
[தெளியோம்
மன்னும் வடநெறியே வேண்டினோம்"(38:40)

என்பது அவர் பாடிய பெரிய திருமடலில் இடம் பெறும் வாசகம். இங்ஙனம் அவரவர் திறனுக்கேற்ப மரபு வளர்ச்சி பெற உதவியுள்ளனர்.

### மரபின் மூன்று நீர்மைகள்

கடலுக்கு 'முந்நீர்' என ஒரு பெயருண்டு. ஊற்றுநீர், ஆற்றுநீர், வேற்றுநீர் (மழைநீர்) என மூன்றும் கலந்ததே கடலாகும். இலக்கிய மரபிலும் தொன்றுதொட்டு வருவது; அவரவர் தனித்திறனால் உருவாவது, வேற்றுமொழி இலக்கியத் தாக்கத்தால் வந்து சேர்வது என மூன்று நீர்மைகள் உண்டு. தமிழில் உரைநடை வளர்ச்சியிலும் கதை இலக்கியப் படைப்பிலும் இன்றைய 'புதுக்கவிதைத் தோற்றத்திலும் இவ்வேற்று மொழி இலக்கிய மரபுத் தாக்கத்தை நாம் காணுதல் கூடும்.

### எழுத்து மரபும் சொல் மரபும்

மொழியிலும் இலக்கியத்திலும் மரபு என்பது அவற்றின் உயிர் போன்றது. 'அ' என்னும் எழுத்திற்கும் அதன் ஒலிப்புக்கும் தொடர்பென்ன? வேற்றுமொழியினர் பலர், வேறுவேறு குறியீடுகளை எழுதி 'அ' என்றே ஒலிக்கக் காண்கிறோம். எனவே, வரிவடிவ எழுத்துக்கும் வாய்மொழி ஒலிப்புக்கும் ஏற்பட்டுள்ள இணைவு தொன்றுதொட்டு வருவது; மக்களனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது; எல்லாரும் விளங்கிக் கொள்வது. இதனை மேனாட்டார் அடிப்படை மரபு (Basic Convention) என்பர். தொல்காப்பியர் எழுத்துக்களின் பெயர், வரிசை, மாத்திரை போன்ற அடிப்படை இலக்கணம் கூறும் முதல் இயலுக்கு 'நூன்மரபு' என்றே பெயர் இட்டார்.

தொல்காப்பியத்தின் இறுதி இயல் 'மரபியல்' என்பது. சொற்களை ஆளும் மரபை அது விளக்குகிறது. ஆடு மேய்ப்பவனை இடையன் என்றும் யானை மேய்ப்பவனைப் பாகன் என்றும்

ஏன் கூற வேண்டும்? ஏன் மாற்றிக் கூறக் கூடாது? தொன்று தொட்டுச் சொற்களை எந்த முறையில் எடுத்தாண்டு வருகின்றனரோ, அந்த முறையில் பயன்படுத்தினால்தான் பொருள் எளிதில் விளங்கும். கவிதையில் இச்சொல்மரபு பெரிதும் பின்பற்றப்படவேண்டும்; இன்றேல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாய் ஒருவருக்கும் விளங்காமற் போகும், என்பது தொல்காப்பியர் கருத்து.

" மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான "(1590)

" மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்"(1591)

நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவரும் இடைக்காலத்தில் இக்கருத்தை மிகவும் வற்புறுத்தியுள்ளார்.

" எப்பொருள் எச்சொலின் எவ்வா று உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே "(380)

என்பது அவர் வாக்கு. மேலும் மரபுகள் மாறுதலும் கழிதலும் புதியன புகுதலும் தன்னியல்பாக நிகழ்வன. அவை பரிணமம் அல்லது கூர்தலறம் (Evolution) என்னும் இயற்கை நிகழ்ச்சியாகக் கொள்ளப்படவேண்டும்.

" பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே "(462)

என்று பவணந்தியார் இதனைச் சுருக்கமாகக் கூறியுள்ளார்.

## கதவு பேசுகிறது

" காதலில் கண்கள்தான் பேசும். கதவு பேசுமா?" என்று கேட்பார்கள். கதவும் பேசும் என்பது காதலர்களுக்கும் கவிஞர்களுக்கும்தான் தெரியும். எல்லோர் உள்ளங்களையும் உய்த்துணர வல்லவர்களும் கற்பனைத்திறன் மிக்கவர்களுமாகிய கவிஞர்கள், பிறரினும் கூர்மை மிக்க ஐம்புலன்களை உடையவர்கள் ஆவார்கள். அவர்களால் காதலர் உள்ளத்தே கதவு பேசுவதைக் கேட்கவும் முடியும்; பாடவும் இயலும்.

பொதுவாகப் பிரிந்துசென்ற தலைவன் எப்பொழுது 'வருவான் வருவான்' என்று தலைவி எதிர்பார்ப்பாள்; சார்த்திய கதவை அடிக்கடி திறந்து பார்ப்பாள்; பிறர்வரும் காலடியோசை கேட்பினும் கூடத் தலைவனே என ஐயுறுவாள்; அவன் வரக்கூடிய திசையையே உற்றுற்றுப் பார்ப்பாள். இங்ஙனம் கதவடியில், வாயிலருகே காதலனுக்காகக் காத்துக் கிடக்கும் காதலியை அன்றுதொட்டு, வழிவழியாகப் புலவர்கள் பாடிவந்துள்ளனர்.

## முத்தொள்ளாயிரத்தில் கதவு

சங்கம் மருவிய காலத்தது எனப்படும் முத்தொள்ளாயிரம் மூவேந்தரைப் பற்றியது. சேரமன்னன் உலாவரும்போது, அம்மன்னன்மீது காதல் கொண்ட தலைவி, வேறு ஏதோ காண்பாள்போல அடிக்கடி சென்று கதவைத் திறக்கின்றாள். இதைக் குறிப்பாலுணர்ந்த தாயும் அடிக்கடி சென்று கதவைத் தாழிட்டுவிட்டு வருகின்றாள். இதில் கட்டு மீறிய காதலியும், கட்டுப்பாடு ஒன்றே வேண்டும் தாயும் கதவுக்கு எமனாக விளங்கக் காண்கிறோம்:

"தாயர் அடைப்ப
மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த
குடுமியவே—ஆய்மலர்
வண்டுலாஅம் கண்ணி
வயமான்தேர்க் கோதையைக்
கண்டுலாஅம் வீதிக்
கதவு."

தாயின் ஆணையை மீறிக் காதல் வெள்ளம் பொங்கி வருகிறது. அதனால் அடைபட்ட கதவு திறக்கிறது. அதன் குடுமி தேய்கிறது. அத்தேய்வு காதலின் சிறப்பைப் பேசுகிறது!

## கலிங்கத்துப்பரணியில் கதவு

கலிங்கத்துப்பரணி கற்பனை வளம் மிக்க சிற்றிலக்கியம் ஆகும். இந்நூலின் முதற்பகுதி 'கடைதிறப்பு' எனப்படும்.

போருக்குச் சென்ற வீரர்கள் வெற்றியுடன் வீட்டுக்குத் திரும்பி வந்து, தங்கள் மனைவிமார்களைக் கதவைத் திறக்குமாறு வேண்டுகின்றனர். அவர்களோ தம் கொழுநரை எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றனர்.

"வருவார் கொழுநர் எனத்திறந்தும்
வாரார் கொழுநர் எனவடைத்தும்
திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ!"

'கணவன் வந்துவிடுவான்; வெற்றிச்செய்திதான் வந்து விட்டதே' என்று ஆவலோடு கதவைத் திறக்கின்றனர்; வாராமையால் 'இனி எப்போது வருவாரோ' என எரிச்சலோடு சார்த்துகின்றனர். இவ்வாறு இரவு முழுவதும் கதவைத் திறந்தும் மூடியும் மறுகியதால், அதன் குடுமி தேய்ந்துவிட்டதாம்! காதலின் ஆர்வத்தைக் கதவின் மேலிட்டுப் பேசுகிறார் செயங்கொண்டார். முத்தொள்ளாயிரத்திலும் கலிங்கத்துப் பரணியிலும் கதவின் குடுமிதான் தேய்கிறது என்றாலும் இரண்டிற்கும் வேறுபாடு உளது. முன்னது களவுக் காதல்; தாயின் தடை கடந்து பொங்கியெழும் இளமைக்காதல்! பின்னது கற்புக் காதல்; மனைவியின் ஆர்வமிகுதியைப் புலப்படுத்தும் கனிந்த காதல்!

## பாரதிதாசனின் கற்பனை

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாவேந்தர் பாரதிதாசனார் இக்காதலின் சிறப்பை, மேலும் ஒரு படி கற்பனை செய்து பாடுகிறார். 'கதவு பேசுமா?' என்னும் தலைப்பிலமைந்த இப்பாடல், முன்னைய இரு பாடல்களின் கற்பனையோடு போட்டியிட வல்லதாக இருக்கிறது. வீட்டிற்கு ஓடோடி வந்த தலைமகன் தன் மனைவியைக் கூப்பிடாமல்—ஏதும் உரையாமல் தெருக் கதவில் கைவிரலை ஊன்றினான். ஊன்றியதுதான் தாமதம், 'திறந்தேன்' என ஒரு சொல் வரக்கேட்டான். அவனுக்கு ஒரே வியப்பு! "ஆஅ மரக்கதவும் பேசுமோ?"

இங்ஙனம் அவன் 'என்ன புதுமை!' என்றேங்கி நிற்கையிலே, நொடிப் பொழுதில் கதவு திறந்தது. அங்கு 'மனைவியின் தாவுமலர்க் கை' கண்டான்! அவளுடைய 'புன்முறுவல்

கண்டு உள்ளம் பூரித்தான்!' அவளிடம், "கதவைத் தட்டு முன்பே தாழ் திறந்தாயே! நான் வந்து விடுவேன் என்று உனக்கு எப்படித் தெரியும்? என் குரல் கேட்குமுன்பே, நான் வந்திருப்பது உனக்கு எப்படித் தெரிந்தது?" என்றெல்லாம் அவன் வினவினான். அதற்கு அவள் அளித்த விடைதான், அவளுடைய அழியாத காதல் உள்ளத்தைப் புலப்படுத்துகிறது.

"—என்னேடி,
தட்டுமுன்பு தாழ்திறந்து விட்டாயே? என்றுரைத்தான்.
'விட்டுப் பிரியாதார் மேவும் ஒரு பெண்நான்
பிரிந்தார் வரும்வரைக்கும் பேதை, தெருவில்
கருமரத்தாற் செய்த கதவு' (இரண்டாம் தொகுதி)

என்பது காதலியின் மறுமொழி. காதலன் பிரிந்தபிறகு, கதவை அடிக்கடி திறந்து நோக்கும் காதல் ஒன்று! கதவடியிலேயே காதலனுக்காக் காலமெல்லாம் காத்திருக்கவைக்கும் காதல் பிறிதொன்று! ஆனால், பாரதிதாசனார் காட்டும் காதலியோ, கதவடியில் காத்திருக்கவில்லை; கதவாகவே மாறி விட்டாள்! முன்னைய கற்பனைகளை விடவும் இது மிகவும் வளர்ச்சி பெற்றதாயிருக்கிறது. இங்ஙனம் கதவைத் தொடர்பு படுத்திக் காதலைப் புனைவது, மரபுவழிப்பட்ட கற்பனைதான். அதில்,

" பிரிந்தார் வரும்வரைக்கும் பேதை தெருவில்
கருமரத்தாற் செய்த கதவு "

என்பது, காதலுணர்வின் நிலைபேற்றையும், ஆழத்தையும் காட்டும் சித்திரமாக இலங்குகிறது. அவள் "நீங்கள் வரும் வரை கதவடியிலேயே காத்திருந்து காத்திருந்து நான் அக் கதவாகவே மாறிவிட்டேன். அதனால்தான் கதவில் உங்கள் விரல்பட்டதும் நான் தாழ்திறந்தேன்" என்றாள். சென்ற கணவன் திரும்பிவந்து கதவைத் தட்டித்தட்டி ஓய்ந்தாற்கூட, மனைவி தாழ் திறக்கக் காலம் தாழ்க்கும் உலகத்தில், இப்படிப் பட்ட மனைவி போற்றுதற்குரியவளே!

'கருமரத்தாற் செய்த' என்றதனால் காதலியின் மன உரமும் திண்மையும் நிறையும் கற்பும் பொலிவும் புலனாகின்றன. எங்ஙனம் நோக்கினாலும் பழைய மரபுவழி போற்றும்

பாரதிதாசன், கவிஞருக்குரிய தனித்திறமையும் உடையவர் என்பதும் முன்னைய இலக்கியங்களைப் பார்த்தெழுதாமல் அவற்றினும் வளர்ச்சிநிலை காட்டவல்லவர் என்பதும் இதனால் விளங்கும். முத்தொள்ளாயிரம் போன்ற பழங்காலக் கவிதைக்கும் கலிங்கத்துப்பரணி போன்ற இடைக்காலக் கவிதைக்கும் மரபு வளர்ச்சியில், இக்காலக் கவிதை இளைத்ததன்று என்பது, பாரதிதாசனார் இயற்றிய இக்கவிதையால் மெய்ப்பிக்கப் பட்டுள்ளது.

# 9. மூதின் மகளிர்

**[பேராசிரியர் கோ. சுப்பிரமணியப் பிள்ளை]**

'தாயைப் போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை,' என்பது தமிழ் முதுமொழி. ஒரு நாட்டு மைந்தர்களின் குணகுணங்கள் அந்நாட்டுப் பெண்டிரைப் பொறுத்தே அமையும். பெண் கல்வி சிறந்திருக்கும் நாட்டில் அங்குள்ள ஆடவரின் கல்வியைப் பற்றிக் கேட்கவேண்டியதேயில்லை. அம்மங்கையர், வீரமும் உரனும் படைத்து அச்சமென்பதை அறியாத அறிவாளிகளாய் இருப்பாராயின், அவர்கள் ஈன்றெடுத்துப் பேணிவரும் இளைஞர்களும் வீரமும் திறனும் வாய்ந்து மானம் படைத்த மறவர்களாய் மாண்புகழ் எய்துவர். ஆங்கிலம் படித்த மாணவர்கள் ஸ்பார்டா நாட்டுத் தாய்மார்களின் வீரச் செயல்களைப் படித்துவிட்டு நாக்கை மொச்சு மொச்சென்று சுவைத்துக் கொள்வர். ஏன்? அவர்களுக்கு நம் தமிழ்த் தாயாரின் மூதிற் சிறப்புச் சிறிதும் தெரியாத காரணம்தான். மலைதோன்றிப் பூமி தோன்றாத காலத்திருந்தே வாளோடு முன் தோன்றி மூத்த குடியாகிய மறக்குடியிற் பிறந்த மகளிர் தம் உயிரினும் வீரத்தையே சிறப்பாகக் கொண்டனர்; தாங்கள் பெற்றெடுத்த புதல்வர்களுக்குத் தக்க கல்வியை உதவுதல் தம் கணவர் கடமையென்றும், தம் அரசர் காட்டும் நெறியைக் கடைப்பிடித்து, வேலெடுத்துப் போரில் யானையைக் கொன்று புகழ்மாலை சூடி

மீளுதல் தம் புதல்வர் கடனென்றும் நம்பியிருந்தனர். தன் மகன் போரிற்குப் பயந்து புறங்கொடுப்பானேல், தமிழ்த்தாய் உயிர்வாழ்வாள் அல்லள்; அவனையுங் கொன்று தானும் சாவாள். ஒரு முதியோள் வாளொடு போர்க்களஞ் சென்று, தன் மகன் மார்பில் வடுப்பட்டு மடிந்து கிடப்பதைக் கண்டு அவனைப் பெற்ற நாளினும் பெருமகிழ்வெய்திய செய்தி அறியாத தமிழனும் உண்டோ? முள் நிறைந்த சுழற்காய் போற் பகழிகளால் மூடப்பட்டுப் போரில் விழுந்த நெடுங்கோளனின் தாயும் இறந்துபட்ட தலைப்பெயல் நிலையைத் தகடூர் யாத்திரையிற் படிப்போர், நெஞ்சம் கரைந்துருகுவரல்லரோ? கைவேலைக் களிற்றோடு போக்கி வெறுங்கையோடு மீண்ட மகனைக் கண்டு வருந்தி, என்றுமிலாக் குடிப்பழி வந்ததென்று, வயிறலைத்து மோதிய தாயும் தமிழ் மகள் அல்லளோ?

பெண்டிர் உளத்தைப் பெண்டிரே நன்கறிவர். இம்மூதின் முல்லையாகிய மகளிரது வீரத் திறத்தை, ஔவையார், பொன்முடியார், மாசாத்தியார், நச்செள்ளையார், நன்முல்லையார் முதலிய பல பெண் புலவர்கள் சுவையுள்ள பல பாக்களாக நமக்களித்திருக்கின்றனர். அப்பாக்களில் அக்கால மகளிரது உள்ளக் கிடக்கையும், வாழ்வின் சீரிய நோக்கங்களும், மானமும் அறமும் இழந்து பின் உயிர் வாழாத அவர்களது உத்தம குணமும், இன்னும் பல சிறப்புக்களும் இனிது தீட்டப்பட்டிருக்கின்றன. அவ்வரிய பாக்களை ஒவ்வொரு தமிழ் மகனும் நன்கு கற்று அதன்படி ஒழுகப் பயிலல் வேண்டும். அக்காலம் எப்பொழுது கிட்டுமோ அப்பொழுதுதான் நம் நாடு முன்னேற்றமடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

ஊற்றுநீர் அல்லது வேற்றுநீர் அறியா ஒரு சிற்றூர். அங்கு ஓரிளம்பெண். அவள் காசறு கூந்தலை உடையாள்; மாசறு நுதலை உடையாள்; கடவுளைக் கைதொழுது நிற்கிருள். போரில் மடிந்து துறக்கமெய்திய ஒரு வீரனின் நடுகல்லே அவளது கடவுள். அதுவே அவளது குலதெய்வம். அக்கடவுளைப் பல முறையும் பணிந்து மன்ருடி இரண்டு வரம் வேண்டுகிருள். அவளது பிரார்த்தனை என்ன? 'வைகலும் விருந்தினர் தவிராது என் வீட்டிற்கு வர, யான் அவர்களை உபசரிக்கவேண்டும். ஒரு பெரிய அரசன் பகைவனுக்கக் கிடைத்து,

அவனை என் கணவன் போரில் எதிர்க்கவேண்டும்' என்று கோருகிருள். அவ்வேண்டுகோளைக் கீழ்வரும் பாடலில் காண்க:

'' களிறுபொரக் கலங்கு கழல்முள் வேலி
அரிதுண் கூவல் அம்குடிச் சீறூர்
ஒலியென் கூந்தல் ஒள்நுதல் அரிவை
நடுகற் கைதொழுது பரவும் ; ஒழியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே ; என்னையும்
ஒ . . . . . . . . . . . . . . . . வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே.''

ஓர் அரசனை எதிர்த்தாலே தன் கணவன் பெரிய செழிப்புள்ள நாட்டை வென்று கைக்கொள்ளமுடியும் என்பது அவளுடைய எண்ணம். தன் கணவன் நிச்சயமாக வெற்றி யடைவான் என்று துணிந்தே இவ்வாறு வேண்டுகிருள். அவ்விதம் பெரிய நாட்டைத் தன் கணவன் வென்று கைக்கொண்டால், தான் அதிக மான விருந்தினரை இனிது உபசரிக்க முடியும் என்பது அவ ளுடைய குறிப்பு. அவள் மறப் போரும் அறப் போராகவே இருக்கவேண்டும் என்னும் அவாவினுல், தன் கணவன் 'பகை எய்துக' என்கிருள். 'என் ஐயும்' என்று அவள் தன் கணவனைக் குறிப்பது அவள் அகத்திருந்தெழும் அன்பின் முதிர்ச்சியைக் காட்டுவதேயாகும். இதனுல் பெண்களுக்கு ஈகைக் குணமும், விருந்தினரை உபசரிப்பதில் அவர்களுக்குள்ள ஆர்வமும், அவ்வீகை தியாகமேயாகும் என்பதும், தியாகமும் ஒரு வீரமே யாகி மகளிர்க்குச் சிறப்புக் கொடுத்து நிற்கும் என்பதும் தெளி வாகும். இவ்விதச் சிறந்த குணம் ஒரு பெண்ணிற்கமைவது கல்வியால் நிரம்பிய அறிவின் பயனேயாகும். இதைக் கம்பநாடர் கீழ்வருஞ் செய்யுளில் அழகுறக் கூறியிருப்பது காண்க :

'' பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்(கு) ஈதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே, ''

மாசாத்தியார் என்னும் பெண்புலவர் புறம் 279ஆம் பாட லில் ஒரு தாயின் வீரச் செய்கையைக் கூறி, 'கெடுக சிந்தை கடிதிவள் துணிவே' என்று விம்மிதங் கொள்கிருர். அதே

செய்தி புறப்பொருள் வெண்பா மாலையிலும் எடுத்தாளப் பட்டுள்ளது. அக்காலத்தவரும் அதைக் கண்டு வியப்பெய்தி னர். நாமும் இக்காலத்திற் சொல்லிச் சொல்லி வாயார முடிவதில்லை. ஒரு பெண்ணின் தமையன் முதல்நாட் போரில் விழுந்திறந்தான். பகைவர் ஆனிரையைக் கவர்ந்து செல்லலுற்ற னர். மறுநாள் அவள் கணவன் அவ்வானிரையை மீட்டு வரச் சென்று, வீரத்துடன் பொருது மாண்டான். மூன்ருவது நாட் காலையிலும் போர்க்கு அழைக்கும் முரசம் அறையப்பெற்றது. அப்பெண் அதனைக் கேட்டுப் பொங்கி எழுந்தாள். வீட்டில் எஞ்சி நின்றவன் தன் ஒரே மகன். அவனும் பாலருவாயன். அவள் அவனைத் தன் அருகழைத்து அன்போடணைத்து உச்சி மோந் தாள்; தலைக்கு எண்ணெய் இட்டுச் சீவி முடித்தாள்; தும்பைப் பூப்போன்ற தூய்ய ஆடையைச் சுற்றிக் கட்டினுள்; அவன் கையில் நிமிர்த்துத் திருத்தின வேலைக் கொடுத்துப் போர்க் களத்தைக் காட்டிச் செல்லும்படி விடுத்தாள். என்னே பெண் ணின் துணிவும், வீரமும், தியாகமும்! பொதுச் சமுதாய வாழ்க் கைக்கு ஓர் இடுக்கண் வந்த போது தன் ஒரே மகனையும் நாட்டின் நலத்திற்காகத் துறந்து, போர்க்கு விடுத்த இவ்வீரத் தாயின் சமுதாய உணர்ச்சியையும் தியாகத்தையும் அறிஞர் போற்றுவாராக!

போர் முடிந்தவுடன் வீரர்களின் தாயாரும் பெண்டிரும் போர்க்களஞ் சென்று, அங்கு விழுந்து கிடப்போரின் நிலையை அறிவது தமிழ் வழக்கம். இவ்வழக்கம் மிகச் சமீப காலமான கி.பி. 1800 வரை, தமிழ்நாட்டில் நடந்துவந்ததென்று சொல்ல லாம். இது சிலருக்கு வியப்பை விளைவிக்கக்கூடும். ஆனுல், கால்டுவெல் என்பவர் எழுதியிருக்கிற தமிழ் நாட்டுச் சரித் திரத்தைப் படிப்பவர்களுக்கு இதன் உண்மை விளங்கும். தமிழ் நாட்டுச் சரித்திரத்தில் அநேகப் போர்கள் நடந்திருக்கின்றன. அவற்றுள் மிகச்சிறப்பு வாய்ந்தவைகளுள் ஒன்று தலையாலங் கானத்துப் போர். அப்போரிற் பாண்டியன் நெடுஞ்செழியன் இருபெருவேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் வென்று வாகை சூடினுன். போர்க்களத்திற்கு மகளிர் சென்று பிணங்களைப் புரட்டி ஆராயலுற்றனர். அம்மகளிர் அங்குத் தன் கணவன்மார் களும், புல்லிய தலையையுடைய பொன்போற் புதல்வரும் வாள் வெற்றியையுடையோராய், மடிந்து கிடப்பதைக் கண்டு,

'இச்சிறப்பு வாய்ந்த வெற்றியும் நமக்குக் கிடைத்ததா !' என்று இன்புற்று உவகை எய்தினர்; ஆனால், அங்குச் சில அம்பு தைத்துப் புண்பட்ட யானைகளின் துதிக்கை அறுபட்டுக் கிடப் பதைக் கண்டு, அது மறத்திற்கு இழிவென்று கொண்டு, இரங்கி அழத் தொடங்கினர். அக்காட்சியைக் கொடிய கூற்று வனும் கண்டிருந்தால் நாணி இரங்கி இருப்பான். குடபுலவியனார் என்னும் புலவர் அவ்வஞ்சத்தக்க போர்ச் செய்தியைக் கூறி யிருக்கும் கவி வருமாறு :

'' குன்றத்து இறுத்த குரீஇயினம் போல
அம்புசென்று இறுத்த அரும்புண் யானைத்
தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து
நாஞ்சில் ஒப்ப நிலமிசைப் புரள
எறிந்துகளம் படுத்த ஏந்துவாள் வலத்தர்
எந்தையொடு கிடந்தோர்எம் புன்றலைப் புதல்வர்
இன்ன விறலும் உளகொல் நமக்கென
மூதிர் பெண்டிர் கசிந்தழ நாணிக்
கூற்றுக்கண்ணோடிய வெருவரு பறந்தலை ''

(புறம் 19)

இவ்விதம் போர்க்களஞ் சென்று தேடும் பெண், தன் கண வன் இறந்துபட்டிருப்பானாயின், தானும் உயிர்வாழமாட்டாள். கணவன் மார்பைப் பொருத்தி, முகத்தோடு முகம் வைத்து முயங்கி அந்நிலையே உயிரை விடுவாள். இவ்வித வீரப் பெண் கள் கைம்மை விரதம் பூண்டு உயிர் வாழ்வதைக் கைக்கொள்வ தில்லை.

'' .....................பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே ''

(புறம் 62)

இது மட்டுமன்றி உடன் கட்டையேறும் வழக்கமும் தமிழ் நாட்டில் இருந்ததென்பது பூதப்பாண்டியன் தேவி தீப்பாய்ந்த செய்தியிலிருந்து நாம் உணர்ந்துகொள்ளலாம்.

போரிற் பொருது புண்பட்டு வீடு திரும்பும் வீரர்களை அவர் மகளிர் உளமகிழ்ந்து குதூகலத்துடன் விரைந்தேற்று,

அப்புண்களுக்குச் சிகிச்சை செய்வது ஒரு சிறந்த திருவிழாக் கொண்டாட்டமாகவே இருக்கும். வீட்டின் கூரையிலும், வாயில் நிலைகளிலும் இரவந் தழைகளும், வேப்பந் தழைகளும் தோரணமாகத் தொங்கவிடப்பட்டிருக்கும். வீடு முழுவதும் தூபங் காட்டி நறும்புகை கமழும். வெண் சிறுகடுகையும் நெருப்பிலிட்டுப் புகைப்பர். மணிகள் கல்லென ஒலித்து நிற்கும். மகளிர் பலவகை வாத்தியங்களிலிருந்தும் இன்னிசை இயக்கி, யாழை வாசித்துக் காஞ்சிப் பண்ணைப் பாடுவர். புண் பட்டோர் உடலை இரவிற் பேய்கள் தீண்டித் துன்புறுத்து மென்று ஒரு நம்பிக்கை இருந்தது, ஐயவிப் புகையையும், வேப்பந்தழை முதலியவற்றையும் கண்டு பேய்கள் பயந்து கிட்ட நெருங்கமாட்டா என்று இவ்வாறெல்லாம் செய்தனர். எங்கும் ஆரவாரமாய் இருக்கும். இவ்வித அரிய தொண்டாற்று வதில் மகளிர்க்குள்ள மகிழ்ச்சியும் உற்சாகமும் இவ்வளவென்று அளவிட வியலாது. இச்செய்தி பின்வரும் அழகிய செய்யுளில் மிகவுந் திறமாகச் சித்திரிக்கப்படுகிறது :

'' தீங்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்குமருப் பியாழொடு பல்லியங் கறங்கக்
கைபயப் பெயர்த்து மையிழு திழுகி
ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
' காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே ?''

(புறம் 281)

போரில் அரசனுக்கு நேராக வந்த படைக்கலங்களைத் தானே ஏற்றுக்கொண்டு புண்பட்டவன் அவ்வீரன். அத்தகைய வீரன் காலில் பூத்தொழில் அமைந்த கழலை அணிந்திருந்தான். அது அவன் மனைவிக்குக் கண்கொள்ளாக் காட்சியாகவே இருக்கும். அவ்வீரனது புண்களின் துயரைத் தன் இன்குரலில், இசை மதுரச் சுவையாலே தணித்து ஆறுதல் அளிக்கும் **தமிழ் மகளின் பெருமையை விளக்க வேறு சான்று வேண்டுவது மிகையே யன்றோ !**

# 10. குறள் காட்டும் நெறி

**[திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்]**

*[தெய்வப் புலவர் திருவள்ளுவர் தமிழகத்துச் சான்ருேர் களுள் ஒருவர்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த பெருமகனுர்; கடைச்சங்க காலப் புலவர்; பாண்டிய மன்னனது அரண்மனையிலிருந்து அரசனது கருத்தை யானைமீது ஏறிப் பறையறைந்து மக்களுக்கு அறிவித்து அதனுல் வள்ளுவர் என்ற பட்டத்தைப் பெற்றுப் பின் நெய்தல் தொழிலையும் மேற்கொண்டு இல்லற வாழ்வில் வாழ்ந்தவர்; ''தெய்வப் புலவர்'' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றவர். அவர் இயற்றிய நூல் திருக்குறள்.]*

## பொய்யாமொழி

அறம் 38, பொருள் 70, இன்பம் 25 என மூன்று பிரிவுகளாக 133 தலைப்புகளில் 1330 குறட்பாக்களைக் கொண்டது திருக்குறள். அந்நூல் முழுவதும் 4303 சொற்களே காணப்படுகின்றன. இவற்றுள் சில சொற்கள் பலமுறை வந்து ஏறத் தாழ 12000 சொற்களாகக் காட்சியளிக்கின்றன.

ஒன்றே முக்காலடியில் அமைந்த மிகவும் குறுகிய பா, குறள் வெண்பா. இக்குறட்பாவால் இயற்றப்பட்டது திருக்குறள். ஆதலின் குறள் என்னும் சொல் ஆகுபெயராகக் குறள் நூலைக் குறிக்கும். இதில் கூறப்பெற்றுள்ள கருத்துக்கள் அனைத்தும் அன்றும், இன்றும், என்றும் பொய்யாது நிலைத்திருப்பவை. ஆதலின் இந்நூல் ''பொய்யாமொழி'' என்னும் பெயரையும் பெற்றிருக்கிறது.

## குறள் நெறி

நெறி பலவகை. குறள் நெறி தனிவகை. நெறி என்பது ''வழி'' எனப் பொருள் பெறும். நெறி என்ருலே அது நன்னெறியை மட்டுமே குறிக்கும். இதனை ''வழியே ஏகுக வழியே மீளுக'' என்பதனுல் நன்கறியலாம். சான்ருேர் தீ நெறியைக் குறிக்கும்பொழுதும் ''நெறியல்லா நெறி'' என்றே குறிப்பிட்டுள்ளனர். வள்ளுவருடைய மிகப் பெரிய ஆசை

"மக்களாகப் பிறந்தவர்கள் மக்களாகவே வாழவேண்டும்" என்பது. அதன் விளைவாகத் தோன்றியதே திருக்குறள். அது காட்டும் நெறியே குறள் நெறி.

### கற்றதனால் ஆய பயன்?

"இறைவனை வணங்கு; இன்றேல் கற்றதனால் பயன் ஒன்றுமில்லை" எனக் குறள் கூறுகிறது. இவ்வுலகில் மக்கள் உடல் நலத்தோடும் புகழோடும் நீண்டநாள் வாழ இரண்டு வழிகளைக் குறள் காட்டுகிறது. ஒன்று "இறைவனது திருவடியைச் சேர்ந்தவர் நிலமிசை நீடு வாழ்வார்" என்பது. மற்றொன்று "ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார்" என்பது. இவை இறை நெறி.

### கற்க கசடற

இச்சொற்கள் இரு பொருள்களைத் தாங்கி நிற்கின்றன. ஒன்று "பிழையறப்படி" என்பது. மற்றொன்று "மனத்திலுள்ள அழுக்கு அறப்படி" என்பது. இச்சொற்களால் தொடங்கும் குறளில் ஆறு கருத்துக்கள் உள்ளன: (1) படி, (2) படிக்கவேண்டியவற்றை படி, (3) பிழையறப் படி, (4) குற்றம் நீங்கப் படி, (5) படித்தபின் உணர், (6) பின் அதன்படி நட என்பன. இவை ஆறும் ஆறு கட்டளைகளாகவே அமைந்துள்ளன. இவற்றை வள்ளுவர் மெல்லோசை, இடையோசை உள்ள எழுத்துக்களாலல்லாமல் வல்லோசையுடைய க ச ட த ப ற என்னும் ஆறு எழுத்துக்களைக் கொண்டே கூறியிருப்பது நம்மை வியப்படையச் செய்கிறது. அதைவிட வியப்பு, அவ்வளவு அழுத்தமாகக் கூறியிருந்தும், அது நம்மிற் பலருடைய உள்ளத்திற் பதியாதிருப்பது. இது கல்வி நெறி.

### வாழ்வாங்கு வாழ்தல்

பிறந்தோரெல்லாம் வாழ்ந்து விடுவதில்லை. நேற்று இருந்தவர் இன்று இல்லை என்னும் பெருமையைப் பெற்றது இவ்வுலகு. எல்லோரும் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், இறக்கிறார்கள் என்று சொல்லுவது தவறாகும்; ஏனெனில், சிலர் மட்டும்தான் வாழ்கிறார்கள். எப்படியும் வாழ்ந்து விடலாம் என்று நினைப்பது வாழ்வாகாது. இப்படித்தான் வாழவேண்டும் எனத் திட்டமிட்டு வாழ்வதே வாழ்வாகும். இதனையே குறள், 'வாழ்வாங்கு வாழ்தல்' எனக் கூறுகிறது. வாழ்வாங்கு வாழ்தல்

என்பது வாழவேண்டிய முறைப்படி வாழ்தல் எனப் பொருள் படும். வாழ வேண்டிய முறை என்பது தனக்காக, தன் குடும்பத்திற்காக என்று மட்டுமல்லாமல் "பிறர்க்காகவும் வாழ்தல்" என அமையும். இது வாழ்வு நெறி.

## பிறர்க்காகவும் வாழ்தல்

பிறர்க்காக வாழும் வாழ்க்கை தன்னலம் கருதாத வாழ்க்கை யாகும். இதைத் "தியாகம்" என வடமொழியாளர் கூறுவர். இதற்கு எடுத்துக்காட்டாக, உண்பதற்கு ஏற்ற உணவுப் பொருள்களையெல்லாம் விளைவித்துக்கொடுத்து, இறுதியில் தானும் உண்ணும் நீராக மாறி, மக்களின் வயிற்றில் போய்ச் சேர்ந்து, அவர்களை வாழவைத்துத் தான் மடிந்து போகிற மழை நீரையும், நோய் வாய்ப்பட்ட மக்களை உயிர்ப்பித்து வாழ வைத்துவிட்டு, தான் அடியோடு அழிந்துபோகிற மருந்துச் செடியையும் குறள் காட்டுகிறது. மழை நீரைப் போல— மருந்துச் செடியைப் போல, பிறர்க்காகவே வாழ்ந்து மடிய நம்மால் முடியாவிட்டாலும், உயிரோடிருந்து பிறருக்காகவும் வாழ நம்மால் முடியுமன்றோ? இவ்வாறு வாழ்கின்ற மக்கள் மக்களாக இருப்பினும் தெய்வமாகக் கருதப்படுவார்கள் எனக் குறள் காட்டுகிறது. இது வாழும் நெறி.

## உள்ளத்தனையது உயர்வு

மக்கள் சமுதாயத்தில் ஒருவன் உயர்ந்து காணப்பட வேண்டுமானால் முதலில் அவன் தன் உள்ளத்தை உயர்த்திக் கொள்ளவேண்டும். இதற்கு உவமையாக வள்ளுவர் ஒரு தாமரைக் குளத்தையே காட்டுகிறார். அக்குளத்தில் தண்ணீர் இரண்டடி இருந்தபோது தாமரை மலர் இரண்டடி உயரத்தில் இருந்தது. பிறகு நான்கடித் தண்ணீர் வந்ததும் மலரும் நான்கடி உயரத்திற்கு வந்துவிட்டது. பின் 5,7,9 அடி எனத் தண்ணீர் உயர உயர, மலரும் 5,7,9 அடியென உயர்ந்துவிட்டது. இதனைச் சுட்டிக்காட்டியே வள்ளுவர், "வெள்ளம் உயர உயர மலர் உயரும்; உள்ளம் உயர உயர நீ உயர்வாய்" எனக் கூறு கிறார். இதனைக் கண்டும் நாம் நம் உள்ளத்தை உயர்த்திக் கொள்ளாமல் கடுகு உள்ளத்தோடும் துவரை உள்ளத்தோடும் இருந்தால்நாம் வாழ்வில் உயர முடியுமா என்பது சிந்தனைக் குரியது. இது உயர்வு நெறி.

## உள்ள உடைமைகள்

பட்டாடைகளும், பொன் அணிகளும் நம் உடலை அழகு செய்வன. அவை மட்டும் போதா. நம் உள்ளத்தையும் அழகு செய்ய இன்னும் பல உடைமைகள் தேவை. அவை அன்புடைமை, அறிவுடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை ஆள்வினையுடைமை, ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நாணுடைமை, பொறையுடைமை, பண்புடைமை என்பன. இந்தப் பத்து உடைமைகளையும் பத்துத் தலைப்பின்கீழ் உள்ள நூறு குறள்களும் நம்மை அணியும்படி வற்புறுத்துகின்றன. இது உடைமை நெறி.

## நல்ல உடைமை

மேற்கூறிய உடைமைகளுக்கும் மேலாக "நல்ல உடைமை" என ஒன்றுண்டு. அது "நா நலம் என்னும் நலனுடைமை" எனக் குறள் கூறுகிறது. அந்த உடைமைகளுள் எதையும் நல்ல உடைமை எனக் கூறாது நா நலத்தை மட்டும் நல்ல உடைமை எனக் கூறியிருப்பது எண்ணிப் பார்க்கவேண்டிய ஒன்று. அப்படிப் பார்த்தால் அது உண்மையையே பேசுதல், நினைத்துப் பார்த்தே பேசுதல், செய்யக் கூடியதையே சொல்லுதல், இனியவற்றையே கூறுதல், கடிய-கொடிய-தீய சொற்களைச் சொல்லாதிருத்தல் எனப் புலப்படும். இதையே ஔவையார் "ஓதுவ தொழியேல், கண்டொன்று சொல்லேல், சித்திரம் பேசேல், சுளிக்கச் சொல்லேல், நயம்பட உரை, நொய்ய உரையேல், பழிப்பன பகரேல், பிழைபடப் பேசேல், மிகைபடக் கூறேல், மொழிவது அறமொழி, வாது முற்கூறேல், வெட்டெனப் பேசேல், ஓரஞ் சொல்லேல்" என விளக்கியிருக்கிறார். இது சொல் நெறி.

## பத்துக் கட்டளை

பொய் சொல்லாதே, புலால் உண்ணாதே, கள்ளைக் குடியாதே, களவை நினையாதே, காமங் கொள்ளாதே, கொலையைச் செய்யாதே, சூதை விரும்பாதே, புறங் கூறாதே, பேராசையடையாதே, பொறாமை கொள்ளாதே என்னும் பத்துக் கட்டளைகளையும் 10 தலைப்பின் கீழ் மக்களின் நல்வாழ்வுக்காகக் குறள் இன்றும் கூறிக்கொண்டிருக்கிறது. இது ஒழுக்க நெறி.

## தோற்றத்தைக் கண்டு மயங்காதே

கறுப்பாக இருக்கிறது, கோணலாக இருக்கிறது, நாரும் நரம்புமாக இருக்கிறது என்று வெறுத்து விடாதே வீணையை. நீ இன்பத்தை இழந்து விடுவாய். சிவப்பாக இருக்கிறது, அழகாக இருக்கிறது, நேராக ஒழுங்காக இருக்கிறது என்று நெஞ்சில் வைத்து விடாதே அம்பை. அது உன் உயிரையே கொன்றுவிடும். இவை இரண்டை மட்டுமல்ல. வேறு எதனையுமே தோற்றத்தைக் கண்டு மயங்கி விடாதே. வாழ்வு பாழாகிவிடும். குணம் ஒன்றைக் கொண்டே ஏற்றுக் கொள் என்று குறள் எச்சரிக்கை செய்கிறது. இது ஆய்வு நெறி.

## தந்தையாகிய பாதகன்

தன் மக்களைக் கல்வி, கேள்விகளில் அறிவுடையவர்களாகச் செய்ய வேண்டியது தந்தையின் கடன். இன்றேல், அப்பிள்ளைகள் "துள்ளித் திரிகின்ற காலத்திலே என் துடுக்கடக்கி, பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே" என வைது வருந்தி, அலைய நேரிடும். மகன் தந்தைக்குச் செய்யவேண்டிய உதவி "இவனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தானோ!" எனக் கண்டோர் வியந்து பாராட்டும் அளவுக்கு நடந்து கொள்ளவேண்டியதே. இன்றேல், இவனைப்பற்றிப் பெற்றோரும் பிறரும் வருந்த வேண்டிவரும். இது கடமை நெறி.

## பிறந்த மகனுக்கு இழிவு

பெற்ற தாயின் வயிறு பசிக்கக் காண்பது பிறந்த மகனுக்கு இழிவு. எப்பாடு பட்டேனும் அத்தாயின் வயிற்றுப் பசியைப் போக்கவேண்டியது பிறந்த மகனின் கடமை. ஏனெனில், அது அவன் குடியிருந்த கோயில். ஆனாலும், அந்த நிலையிலும் ஒருவன் தவறான வழியில் பொருள் தேடி வந்து தாயின் பசியைப் போக்க எண்ணுவது தவறு. எண்ணினால், அத்தகையோரைச் சான்றோர் பழித்து, ஒதுக்கி விடுவர் எனக் குறள் கூறுகிறது. இது அற நெறி.

## ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' என்பது அரைக் குறள். இதற்கு மூன்று பொருள்கள் உள்ளன. ஒன்று, ஆடை, அணி பொன், மணி, பட்டம், பதவி முதலியவற்றால் எவரும் மேன்மை

யடைய முடியாது. ஒழுக்கம் ஒன்றினாலேயே அதையடைய முடியும் என்பது. மற்றொன்று, ஒழுக்கத்தினால் உயர்ந்துவிட்ட ஒருவன் பின் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்ய நேர்ந்தாலும் உலகம் அதை நம்பாது. அப்போதும் அவனுக்கு மேன்மையே உண்டாகிறது என்பது. இன்னொன்று, ஒழுக்கத்தினால் உயர்ந்த ஒருவர் பின் வறுமையால் தாழ்ந்து போனாலும் கண்டோர் அவரை " நன்றாக வாழ்ந்தவர் " என்றே பெருமையோடு கூறுவர் என்பது. " இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி " என்பது மறுபாதிக் குறள். இதற்கும் மூன்று பொருள்கள் உள்ளன. ஒன்று, ஒழுக்கம் தவறியவன் எல்லாராலும் பழிக்கப் படுவான் என்பது. மற்றொன்று, ஒழுக்கம் தவறியவன் பின் திருந்தி ஒரு காலத்தில் நல்ல காரியங்களைச் செய்தாலும் உலகம் நம்பாது. அவன் முன் செய்த பாவங்களைப் போக்கவே இவ்வாறு செய்கிறான் என்றே பலரும் பழி தூற்றுவர் என்பது. இன்னொன்று, அவன் செய்யாமல் – பிறர் செய்த தவற்றுக்கும் அவனே பழி ஏற்க நேர்ந்துவிடும் என்பது. இம்மூன்றாவது கருத்தை இக்குறளிலுள்ள "எய்துவர் எய்தாப் பழி" என்னும் சொற்றொடர் நமக்கு நன்கு அறிவிக்கின்றது. இது மேன்மை நெறி.

## என்ன பயத்ததோ சால்பு ?

ஒருவனை ஒருவன் அடித்துத் துன்புறுத்தி வாழ்வது விலங்கினது குணம். தன்னலங் கருதி உயரப் பறந்துகொண்டிருப்பது பறவைக் குணம். தீமை செய்தவர்க்குத் தீமை செய்வது தேள், பாம்பு இவற்றின் குணம். தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்க் குணம். தீமை செய்தவரை மன்னித்து வாழ்வது மனித குணம். இவ்வாறு பிற நூல்கள் கூறுகின்றன. " தீமை செய்தவரை மன்னிப்பதோடு விட்டுவிடாதே; அவருக்கு நன்மையும் செய் " என்று குறள் ஒரு தனி நெறியைக் காட்டுகிறது. இவ்வாறு செய்யாவிடில் " சால்பு என்னும் நற்குணத்தால் அடையும் பயன்தான் என்ன ?" எனக் குறள் நம்மைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இது குறள் நெறிகளுள் மிக உயர்ந்த நெறி.

## யார் பெரியர் ?

செல்வம் மிக்கார், நிலமுள்ளார், முதன்மை மிக்கார் பெரியர் என முன்னொரு காலத்தில் நினைத்திருந்தோம். அடுத்து, படித்த

வர், பட்டம் பெற்றவர், பதவியில் இருப்பவர் பெரியர் என எண்ணினேம். பின், வயதில் முதிர்ந்தோர் பெரியோர் எனக் கருதி வந்தோம். அண்மைக்காலத்தில், நடிகர், எழுத்தர், பேச்சாளர் பெரியர் எனக் கருதி வருகிறேம். இவர்களுள் யார் பெரியர் என்னும் கேள்விக்கு வள்ளுவர் கூறும் விடை, "செய்வர் பெரியர்" என்பதே. இதிலிருந்து மலையளவு பேசுவதை விடக் கடுகளவு செய்வதே நல்லது என்பது தெரிகிறது. ஆம், கோடையிடி இடிப்பதனுலேயே குளம் நிறைந்து விடுவதில்லை யன்றே? இது புது நெறி.

## எது வினைத் திட்பம்?

ஒரு நல்ல செயலைச் செய்வதற்கு வேண்டுவன பொருளுதவி, நண்பர்களின் உதவி, மனைவி மக்களின் ஒத்துழைப்பு, அரசாங்கத்தின் ஆதரவு என நாம் எண்ணி வருகிறேம். ஆனல், எல்லாவற்றையும் விட முதலில் ஒருவனுக்கு வேண்டுவது மன உறுதியே என்பதை "வினைத் திட்பம் என்பது மனத் திட்பம்" என்னும் குறள் காட்டுகிறது. இது உறுதி நெறி.

## சிதைவிடத்து ஒல்கார் உரவோர்

ஒரு நற்செயலைச் செய்ய முன் வருபவனுக்கு மிகுந்த ஆற்றல் வேண்டும். அதற்கு இடையூறுகள் வரும். பலர் துன்புறுத்திக்கொண்டிருப்பர். இவற்றைக் கண்டு கலக்கமுற்றுச் சோர்வு அடைபவர்களால் எதனையும் செய்ய இயலாது. செய்யவேண்டுமானல், மன உரம் தேவை. "காட்டில் வாழும் யானையுங்கூடத் தன் உடல் முழுவதும் வேடர்களின் அம்புகளால் தாக்கப்பெற்றுக் குருதி ஒழுகிக்கொண்டிருந்தாலும் அஞ்சி நடுங்காமல் பீடுநடை நடந்து தன் பெருமையை நிலைநிறுத்தும். அதைப்போலவே மன உரம் படைத்த மக்களும் துன்பம் வந்த காலத்துச் சோர்வடைவதில்லை என வள்ளுவர் காட்டு யானையைக் காட்டி நாட்டு மக்களுக்கு ஊக்கம் அளிக்கிறர். இது ஊக்க நெறி.

## எது நட்பு?

வாழ்வு வளமாக அமையவேண்டுமானல், நட்புத் தேவை என வள்ளுவர் கருதுகிறர். ஒவ்வொரு கருத்துக்கும் ஒவ்வொரு தலைப்புக் கொடுத்துக் கூறி வந்த வள்ளுவர் நட்பின் தேவையை

வலியுறுத்த ஆறு தலைப்புகளின் கீழ் அறுபது குறள்களைக் கூறி யிருக்கிறார். அவை நட்பு, நட்பு ஆராய்தல், தீ நட்பு, கூடாநட்பு, சிற்றினஞ் சேராமை, பெரியாரைத் துணைக் கோடல் என்பன. 'எது நட்பு' என்ற கேள்விக்கு "முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகம்நக நட்பதே நட்பு" என விடை கூறுகிறது குறள். அது மட்டுமன்று. "ஒருவனோடு சேர்ந்து நகைத்துக் கொண்டிருப்பது நட்பன்று. அவன் தவறு செய்யும்பொழுது கடிந்து, இடித்துக் கூறித் திருத்துவதே நட்பு" எனவும் கூறு கிறது. நட்பின் தன்மைக்கு இத்தனை தலைப்புகளிலும் கூருத ஓர் உவமை "நிலையாமை" என்னும் தலைப்பில் காணப்படு கிறது. அது "உடம்போடு உயிரிடை நட்பு" என்பது. உடலில் ஊசி குத்தினாலும் உயிர் துடியாய்த் துடிக்கிறது. உயிர் பிரிந்து விட்டாலும் உடம்பு தானே அழுகி, அழிந்து போய்விடுகிறது. எப்படி நட்பு? இத்தகைய நட்பையும் நன்கு ஆராய்ந்து கொள்ளுதல் நல்லது. இன்றேல், தான் சார்கின்ற அளவுக்குத் துன்பத்தையும் துயரத்தையும் அடையவேண்டி வரும் என்கிற எச்சரிக்கையும் இக்குறளில் காணப்படுகிறது. இது நட்பு நெறி.

## எது செயல் ?

நட்புக்கு 6 தலைப்புகளைக் கொடுத்த வள்ளுவர் செயல் திறனுக்கு 12 தலைப்புகளைக் கொடுத்து 120 குறள்களைக் கூறி மகிழ்ந்திருக்கிறார். அவை ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை, ஊக்கமுடைமை என மூன்று; இடம் அறிந்து செய்தல், காலம் அறிந்து செய்தல், வலியறிந்து செய்தல் என மூன்று; தெரிந்து செயல் வகை, தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என மூன்று; வினை செயல் வகை, வினைத் திட்பம், வினைத் தூய்மை என மூன்று; ஆக 12. இவை அனைத்தும் செயல் திறமையின் அருமை பெருமைகளைக் கூறுகின்றன. எண்ணுவதைப் பெரிதாக எண்ணு; செய்வதையும் பெரியதாகச் செய். முயல் வேட்டைக்குப் போய் வெற்றி பெறுவதைவிட யானை வேட்டைக்குப் போய்த் தோல்வியடைவது சிறப்பு எனக் கூறிக் குறள் மக்களைச் செயல் திறனில் ஊக்கிவிடுகிறது. இது மட்டுமன்று; இன்னும் ஒன்று உண்டு. "செய்யவேண்டிய வற்றைச் செய்யாவிடினும் கெடும்; செய்யத் தகாதவற்றைச் செய்தாலும் கெடும்" எனக் குறள் நம்மை எச்சரிக்கை செய்து கொண்டிருக்கிறது. இது செயல் நெறி.

**குன்றின் அனையாருங் குன்றுவர்**

''சான்றோர்களால் பழிக்கத் தகுந்த தீயசெயல்களைக் குன்றி மணியளவு செய்தாலும் குன்றைப் போன்று உயர்ந்தவர்களும் குறுகிக் குன்றிப்போய்விடுவர். அவரது மானம் அழிந்துவிடும். 'மானத்தை இழப்பதா? உயிரை இழப்பதா?' என்னும் ஒரு நிலை ஏற்படுமானால், உயிரை இழந்தேனும் மானத்தைக் காப்பாற்று. ஏனெனில் உயிர் நிலையாதது. மானம் என்றும் நிலைத்து நிற்பது'' என்கிறது குறள். இது பெரு நெறி.

எடுங்கள் குறளை; படியுங்கள் நன்றாக; சிந்தியுங்கள் ஆழ்ந்து. அந்த அளவோடு விட்டுவிடாமல் குறள் காட்டும் நெறியிலும் நடை பயிலுங்கள். உங்கள் வாழ்வில் ஒளி வீசும்.

# 11. கொடி காட்டும் குறிப்புகள்

**[நீதிபதி மு. மு. இஸ்மாயில்]**

அணி என்னும் சொல்லுக்கு அழகு, ஒப்பனை, ஆபரணம் என்னும் பொருள்கள் உண்டு. அழகுபடுத்திக்கொள்வதற்கு உடை உடுத்திக் கொள்கிறோம்; ஆபரணங்கள் அணிந்து கொள்கிறோம். ஆகையினாலேயே அணி என்னும் சொல்லுக்கு இந்த மூன்று பொருள்களும் அமைந்திருக்கின்றன. எப்படி உடலுக்குச் செய்யப்படும் அலங்காரம் அணி எனப்படுகிறதோ அப்படியே கவிதைக்குச் செய்யப்படும் அலங்காரமும் அணி எனப்படும். ஒரு கவிதை சிறப்பாக இருக்கவேண்டுமானால் பொருள் செறிந்ததாகவும், சொல்நயம் மிகுந்ததாகவும் மட்டும் இருப்பது போதாது. கவிதை, படிப்பவர்களுடைய உள்ளத்தைக் கவர்ந்து அவர்கள் மனத்திலே நிலைபெறவேண்டுமானால் அது இன்பம் பயப்பதாக இருக்கவேண்டும். அப்படி இன்பம் பயப்பதற்குச் சொல் அலங்காரங்கள் தேவை. அத்தகைய அலங்காரத்தையே அணி என்று சொல்வார்கள். இந்த இலக்கணத்திற்கு அணி இலக்கணம் என்பது பெயர். ஆக, செய்யுளுக்கு அணி செய்து நிற்பதை அணி என்று பொதுவாகச் சொல்லிவிட முடியும். இந்த அணி, சொல்லணி, பொருளணி என்று இரு வகைப்படும். இதனையே வடமொழியில் 'சப்தாலங்காரம், அர்த்தாலங்காரம்' என்று கூறுவார்கள்.

சொல்லை அழகுபடுத்துவதைச் சொல்லணி என்றும், பொருளை அழகுபடுத்துவதைப் பொருளணி என்றும் கூறுவது வழக்கம். சொல்லணியாவது யமகம், சித்திர கவி ஆகியவற்றைக் குறிக்கும். யமகத்தைத் தமிழில் மடக்கு என்பர். சித்திர கவி என்பது மாலை மாற்று, நாகபந்தம் முதலியவற்றைக் குறிக்கும். பொருளணியாவது தன்மையணி, உவமையணி, உருவக அணி, வேற்றுமையணி, வேற்றுப்பொருள் வைப்பணி, தற்குறிப் பேற்ற அணி முதலாகப் பல வகைப்படும். தற்குறிப்பேற்ற அணி என்பது இயற்கையாக உள்ள ஒரு பொருளிடத்துக் கவி தனது கற்பனையை ஏற்றிக் கூறுவது. ஏதோ ஒன்று இயற்கையாக நடந்துகொண்டிருக்கிறது. அதற்கும் கவி பாட வந்த நிகழ்ச்சிக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஆனால், கவிஞன் தன்னுடைய திறமையினால் ஒரு தொடர்பையும், பொருத்தத்தையும் கற்பித்துவிடுகிறான். இயற்கையாக நடக்கின்ற ஒரு நிகழ்ச்சியைப் புலவன் தான் பாட வந்த நிகழ்ச்சியோடு தொடர்புபடுத்திக் கூறுவதுதான் தற்குறிப்பேற்ற அணி எனப்படும். சிறந்த இலக்கியங்கள் அனைத்திலும் இந்த அணி பெரிய அளவில் இடம்பெற்றிருக்கும். எந்த அளவுக்குக் கவிஞன் குறிப்பிடுகின்ற பொருத்தம் இயற்கையாகவும் நயம் பயப்பதாகவும் அமைகிறதோ அந்த அளவுக்கு அவன் திறமையும் மேலோங்கி நிற்கிறது.

இங்கே பற்பல காலத்தில் வாழ்ந்த கவிஞர்கள் ஒரு சிறு நிகழ்ச்சியை எப்படித் தாங்கள் பாட வந்த கதையோடு பொருத்தி அமைத்துக் காட்டியிருக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம். அதுவும், ஒரே தன்மைத்தான திறமைக்கு ஏற்ப, அவர்களுடைய கற்பனையை அதன்மீது ஏற்றிப் பாட எவ்வாறு உதவியிருக்கிறது என்பதை ஆராய்வது சிறப்பாக இருக்கும். **நம்முடைய இலக்கியங்களில் பாடப்படுகின்ற எல்லா நகரங்களும் மதில் சூழ்ந்த நகரங்களாகவே இருக்கின்றன.** அந்த நகரங்களிலுள்ள மாட மாளிகைகளிலும் கூடகோபுரங்களிலும் கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன. இந்தக் கொடிகள் காற்றடிக்கும்போது மடங்குகின்றன, அசைகின்றன; சில சமயங்களில் காற்றின் வேகத்திற்கு ஏற்பப் படபடவெனத் துடிக்கின்றன. கொடிகளுடைய இந்தத் தன்மையைத் தங்கள் கதையோடு இணைத்துப் பாடியிருக்கும் கவிஞர்களுடைய சில கற்பனைகளை இப்போது பார்க்கலாம்.

இளங்கோவடிகள் பாடியது சிலப்பதிகாரம். கோவலனும் கண்ணகியும் பூம்புகாரை விட்டு மதுரை மாநகரை நோக்கிச் செல்கிறார்கள். அப்படிச் சொல்லும்போது வையை ஆற்றை அடைந்து, அதைத் தொழுது, புணை ஏறி அக்கரை சென்று மதில் சூழ்ந்த மதுரையில் முனிவருடைய இருக்கையில் தங்குகிறார்கள். இப்படி அவர்கள் வரும்போது மதுரைப் பதியின் புறமதில் உச்சியிலே கொடிகள் பறக்கின்றன. அந்தக் கொடிகள் பறப்பது இயல்பே. ஆனால், அந்தக் கொடிகள் கோவலனையும் கண்ணகியையும் மதுரை நகரத்திற்குள் வரவேண்டாமென்று சொல்லுவதுபோலப் பறந்தன என்று இளங்கோவடிகள் கூறுகிறார். காரணம் அந்த மதுரை நகரத்தில்தான் களவுக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலைத் தண்டனைக்கு ஆளாகி அநியாயமாகக் கோவலன் இறக்கிறான். அதன் காரணமாகவே கண்ணகியும் தன் கற்பின் திறத்தால் மதுரையையே கொளுத்திவிடுகிறாள். துன்ப நிகழ்ச்சிகள் அவர்கள் மதுரைக்குச் சென்றதாலேயே நிகழ்ந்தன. அவர்கள் மதுரைக்குச் செல்வதைத் தவிர்த்திருந்தால் அந்த நிகழ்ச்சிகள் நடந்திரா. ஆகவே, அந்த நிகழ்ச்சிகள் நடக்கப்போவதை முன்கூட்டியே உணர்ந்து, அவர்கள் இருவரையும் மதுரை நகரத்திற்குள் வர வேண்டாமென்று அக்கொடிகள் எச்சரிக்கை செய்ததாக இளங்கோவடிகள் காட்டுகிறார்.

**"போர்உழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி**
**வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட .. "**

என்னும் இரண்டு அடிகளே இளங்கோவடிகளுடைய இந்தக் கருத்தைத் தாங்கிக் கொண்டிருப்பன.

'போர் உழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி' என்பதற்குப் 'பகைவர் அழியும் போரினைச் செய்து வாகை சூடி, அதற்கு அறிகுறியாக அரிய புறமதில் உச்சியிலே உயர்த்திய கொடிச் சீலைகள்' என்பது பொருள். 'வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட' என்னும் சொற்றொடருக்கு 'நகரத்திற்குள் வாராதீர்கள் என்று கைகளை மடக்கிக் கூறுவன போன்ற' என்பது பொருள். "மறித்துக் கை காட்ட" என்ற செயல் பறக்கின்ற கொடியின்மேல் ஏற்றப்படுகிறது. கோவலனும் கண்ணகியும் வடக்கேயிருந்து தெற்கு நோக்கிச் செல்கிறார்கள். தென்றல் வீசுவதாலே கொடிச் சீலைகள் வடதிசை நோக்கி அசைகின்றன.

அப்படி அவை அசைவது தென்திசை நோக்கி வரும் கோவலனை யும் கண்ணகியையும் இங்கு வரவேண்டாம் என்று கைகளை அசைத்துத் தடுப்பது போல இருந்தது என்பது கவிஞனின் கற்பனை. "மறித்துக் கை காட்ட" என்னும் சொற்றொடரில், கைகள் கொடிக்கு உவமை. அந்தக் கொடிகள் காற்றினால் அசைக்கப்படுவது, கைகளை மறித்துக் காட்டுவதற்கு உவமை. தென்றல் வீசுவதும், அதன் காரணமாகக் கொடிகள் வடதிசை நோக்கி அசைவதும் இயற்கை நிகழ்ச்சி. ஆனால், இந்த நிகழ்ச்சி யோடு கோவலன் கண்ணகி கதையைப் பொருத்தி, கதைக்கு இயைந்தவாறு ஒரு கற்பனையை இந்தக் கொடியின்மீது கவிஞன் ஏற்றுகிறான்.

கம்பனுடைய இராமாயணம் கி. பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதிலும் இப்படி ஒரு கொடிக்காட்சி தோன்று கிறது. இந்தக் கொடிக்காட்சியின்மேல் தன்னுடைய கதைக்கு இயைந்தாற்போலக் கம்பன் ஒரு கற்பனையை ஏற்றுகிறான். இராமனும் இலக்குவனும் விசுவாமித்திர முனிவரோடு மிதிலை மாநகரை நோக்கிச் செல்கிறார்கள். கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன. அந்த மிதிலை நகரத்தில்தான் ஜனக மன்னன் மகளான சீதை இருக்கிறாள். அந்தச் சீதை இருக்கும் இடத்தை நோக்கி இப்போது இராமன் செல்கிறான்; சென்று சிவதனுசை ஒடித்துச் சீதையை மணம் புரிந்துகொள்ளப் போகிறான். இது பின்னர் நடக்கப்போகும் நிகழ்ச்சி. அது மட்டும் அல்லாமல் மிதிலையில் தங்கி இருக்கும் சீதை இலக்குமி யின் அவதாரம் என்பதும், இப்போது மிதிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இராமன் திருமாலின் அவதாரம் என்பதும் இராமாயணக் கதையின் அடிப்படை. ஆகையால், முன்னர்த் திருமாலாகவும், இலக்குமியாகவும் இருந்தவர்கள் இப்போது பிரிந்து மண்ணுலகில் இராமனாகவும் சீதையாகவும் வெவ்வேறு இடங்களில் பிறந்திருக்கிறார்கள். அப்படிப் பிறந்த இருவரும் இனி, திருமணத்தினால் மீண்டும் ஒன்றுகூடப் போகிறார்கள். இந்நிகழ்ச்சி சீதாகல்யாணமாக இனி நடக்கப் போகிறது. மிதிலை நகரத்தின்மீதுள்ள பல கட்டடங்களின்மேல் பறந்துகொண்டிருக்கும் கொடிகளின்மீது இப்போது கம்பன் தன் கதைக்குப் பொருத்தமான ஒரு கற்பனையை ஏற்றுகிறான். "இந்த ஊரில்தான் இலக்குமியாகிய சீதை இருக்கிறாள். ஆகை யினால், நீ விரைவிலே வா!" என்று அந்த மிதிலை நகரம்,

அதன் மதில்களின்மேல் பறந்துகொண்டிருக்கும் கொடிகளாகிய கைகளை நீட்டி அழைப்பதுபோல இருந்தது என்பதுதான் கம்பனின் கற்பனை.

'மையறு மலரின் நீங்கி, யான்செய்மா தவத்தின் வந்து,
செய்யவள் இருந்தாள்' என்று, செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர், கமலச் செங்கண்
ஐயனை, 'ஒல்லை வா !'வென்ற ழைப்பது போன்ற தம்மா !

(மிதிலைக் காட்சிப் படலம் 1)

நகரில் பறந்துகொண்டிருக்கும் கொடிகளை அந்த நகரின் கைகளாக உருவகப்படுத்தி, கொடிகள் அசைவதை நகர் தன் கைகளை நீட்டி 'விரைவில் வா !' என்று இராமனை அழைப்பது போன்று இருந்தது என்று கம்பன் கூறுகிறான். பாடலில் 'கடிநகர்' என்னும் சொல் காவலையுடைய மிதிலை நகரைக் குறிக்கும். அந்த நகர் இராமனைப் பார்த்து "செந்நிறம் உடைய திருமகள், நான் செய்த பெரிய தவப்பேற்றினால், குற்றமற்ற தாமரை மலரை விட்டு நீங்கி என்னிடத்தில் அவதரித்திருக்கிறாள் ; விரைவில் வா !" என்று அழைக்கிறதாம். இது யாரை அழைக்கிறது என்று சொல்லுமிடத்து இராமனைக் கமலச் செங்கண் ஐயன், அதாவது தாமரை மலர்போன்ற சிவந்த கண்களையுடைய ஐயன் என்று கவிஞன் குறிப்பிடுகிறான். இப்படி அந்த நகர் அழைப்பது, வாய்ச் சொற்களைக் கொண்டு அன்று; 'செழுமணிக் கொடிகள்' என்னும் கைகளை நீட்டி என்று கவிஞன் பாடுகிறான்.

ஆக, சிலப்பதிகாரத்தில் கொடி அசைவது குறிப்பிட்ட இருவரை நகருக்குள் வரவேண்டாம் என்று சொல்வது போல இருந்தது என்று இளங்கோவடிகள் காட்டினார். இங்கோவெனில் இராமபிரானை நகரத்திற்குள் விரைவாக வரவேண்டும் என்று கொடிகள் அழைப்பது போல இருந்தது என்று கம்பன் காட்டுகிறான்.

14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியினராகக் கருதப்படுகிற வில்லிபுத்தூரார், தாம் பாடிய பாரதத்தில் இதே கொடிக் காட்சிக்கு வேறு ஒரு கற்பனையை வழங்குகிறார். துவாரகாபுரியில் கண்ணன் ஆண்டுவருகிறான். அந்தக் கண்ணனைப் பாரதப் போரில் தனக்குத் துணைபுரியவேண்டும் என்று கேட்பதற்குத்

துரியோதனன் துவாரகாபுரிக்குச் செல்கிருன். மதில், அகழி ஆகியவற்றை வருணித்த பிறகு அந்த நகரத்து மதில்கள் மேலுள்ள கொடிகள் இயற்கையாக அசைந்து பறந்துகொண்டிருப்பதைக் கவிஞர் வருணிக்கிருர். ஆனல், கவிஞர் கற்பனையின்படி, அந்தக் கொடிகளின் அசைவு துரியோதனன் அங்கு வருவதைத் தடுப்பதைப் போல இருக்கிறது. வில்லிபுத்தூரார் சொல்கிருர்: "விசாலமான அந்நகரத்து மதில்களின் சிகரங்களில் எல்லாம் காணப்படுகின்ற மிக அழகிய கொடிச்சீலைகள் இந்நகரத்திற்கு நீ வந்தாலும் அழகையுடைய, மேகம் போன்ற நிறத்தைக் கொண்ட, எங்கள் தலைவனை கண்ணபிரான் பாண்டவர்களுக்குத் துணையாக இருப்பானே அல்லாமல் உனக்குத் துணையாக இருக்கமாட்டான்; ஆகையால் இங்கு நீ வருவதில் பயனில்லை; திரும்பிப் போய்விடு என்று மீண்டும் மீண்டும் தம் கைகளால் தடுப்பது போல இருந்தன". இந்தக் கருத்தினை விளக்கும் பாடல் இது:

**"ஈண்டுநீ வரினும் எங்கள் எழிலுடை எழிலி வண்ணன்,**
**பாண்டவர் தங்கட் கல்லால் படைத்துணை ஆக மாட்டான்**
**மீண்டுபோ கென்றென் றந்த வியன்மதில் குடுமி தோறும்**
**காண்டகு பதாகை ஆடை கைகளால் தடுப்ப போன்ற"**

வியன்மதில் என்பதற்கு விசாலமான மதில் என்பது பொருள். குடுமி என்னும் சொல், உச்சி அல்லது சிகரம் என்று பொருள்படும். பதாகை என்னும் சொல்லுக்குக் கொடி என்பது பொருள்.

"என்று, என்று" என்பதில் என்று என்னும் சொல் இரட்டிப்பது கொடிகள் காற்றிலே பறந்து அசைந்து ஆடிக் கொண்டிருப்பதை அழகுபடக்குறிக்கும். இங்கும் கூட வில்லிபுத்தூரார் இந்தக் கொடிச்சீலைக் காட்சியில் குறிப்பிட்ட ஒரு தனி மனிதனுகிய துரியோதனனுக்கு "நீ இங்கு வருவதால் பயனில்லை. திரும்பிப்போய் விடு" என்று அந்தக் கொடிச் சீலைகள் யோசனை கூறியதாகவே கற்பனை செய்கிருர்.

**உமறுப் புலவர்** என்பவர் எட்டையபுரத்தைச் சேர்ந்தவர். அவர் ஏறத்தாழ இன்றைக்கு 340 ஆண்டுகளுக்கு முன்னல் **சீருப்புராணம்** என்னும் காவியத்தை இயற்றினர். இந்தக் காவியம் **இஸ்லாம்** என்னும் மதத்தைப் பரப்பிய **முகம்மது நபி**

அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றியது. அவர்கள் தம்முடைய இளமைக் காலத்தில் வாணிகத்தின் பொருட்டு **ஷாம்** தேசத்திற்குச் சென்றார்கள். **ஷாம்** தேசமென்பது இன்றுள்ள சிரியா 'என்னும் நாடாகும். இந்த நிகழ்ச்சியை 'ஷாம் நகர் புக்க படலம்' என்பதில் உமறுப்புலவர் பாடுகிறார். இந்த ஷாம் நகரத்திலே கொடிகள் பறந்துகொண்டு இருக்கின்றன. அது எப்படி இருந்ததென்றால், அந்த ஷாம் நகரத்தில் இருக்கிற பல்வேறு அரசர்களையும் பார்த்து நீங்கள் முகம்மது நபி அவர்களை எதிர்கொண்டு அழைப்பதற்கு உடனே புறப்பட்டுச் செல்லுங்கள் என்று அவர்களைக் கையசைத்து அவசரப்படுத்தியது போல இருந்ததாம். அதாவது அந்த ஷாம் நகரத்தின் கோட்டைக் கொடிமரத்தில் கட்டியிருக்கிற கொடிகள் நுடங்கி நுடங்கி அசைந்து அடிப்பது "எல்லாப் படைப்புக்கும் ஒப்பாகிப் பேரொளி பொருந்திய முகம்மது நபி அவர்கள் வருகிற வழி நடுவில் அவர்களை எதிர்கொண்டு, தங்கத்தால் பொதிந்து கட்டிய இரத்தின ஆபரணங்களைக் காணிக்கையாக எடுத்துக் கொண்டு விரைந்து செல்லுங்கள்" என்று குதூகலத்துடன் அவசர அவசரமாகக் கைகளை அசைத்துக் காட்டுவது போல இருந்தது என்பது கவிஞரின் கற்று. இந்தக் கருத்தினை,

> **"முதிர்ந்த பேரொளி முகம்மது வருநெறி முன்னி,**
> **எதிர்ந்தி றைஞ்சுதற் கிந்நகர் உறைந்திடும் அரசீர்**
> **பொதிந்த பூணொடு ஏகுமின், எனக்களி பொங்கி**
> **அதிர்ந்தி டக்கரம் அசைத்தல்போல் அசைந்தன கொடிகள்"**

என்னும் பாடலில் உமறுப் புலவர் வெளிப்படுத்துகிறார்.

அக் கொடி அசைவு, அந்த நாட்டில் இருக்கிற அரசர் போன்ற வலிமையும், பெருமையுமுள்ள வளமார் மக்களை ஊர்ப் புறத்துச் சென்று நகர் நோக்கி வருகிற முகம்மது நபி அவர்களை எதிர்கொள்ளுமாறு ஊக்குவிப்பதாக இருந்தது. அதே சமயத்தில் அந்தக் கொடிகளின் அசைவு, முகம்மது நபி அவர்களை ஊருக்குள் வருக வருக என்று அழைப்பது போன்றும் இருந்தது என்றும், வேறு ஒரு பாட்டில் உமறுப் புலவர் கூறுகிறார் :

> **"சிவந்த பாதபங் கயநபி திருநகர்ப் புறத்துக்**
> **கவிந்த கார்க்குடை நிழலிட வருவது கண்டு**
> **நிவந்த வெண்சுதைப் பளிக்குமே னிலைவயி னின்று**
> **குவிந்த கைவிரித் தழைத்தபோல் அசைந்தன கொடிகள்."**

"சிவந்த பாத தாமரை பொருந்திய முகம்மது நபி அவர்கள் கார்மேகம் குவிந்து குடையிடும் நிழலிலே அழகிய ஷாம் நகர்ப் புறத்து வருவது கண்டு உயர்ந்த வெள்ளைச் சுண்ணம் பூசி அங்குக் குவிந்த மண்டபங்களின் மேல் ஆடிக்கொண்டிருந்த கொடிகள், குவிந்திருந்த கைகளை விரித்து முகம்மது நபி அவர்களை வருக! வருக! என்று அழைப்பது போல அசைந்தன" என்பது உமறுப் புலவர் இங்கே எடுத்துக் காட்டும் கருத்து. ஆக, கொடியின் அசைவுக்கு இருவிதமான கருத்துக்களை உமறுப் புலவர் காட்டுகிறார். ஒன்று நகரத்திலுள்ள தலைமக்களை எல்லாம் வருகின்ற முகம்மது நபி அவர்களை வரவேற்கப் போகுமாறு வெருட்டுவது; இன்னொன்று வருகின்ற முகம்மது நபி அவர்களை வருக! வருக! என்று குவிந்த கைகளை விரித்து அழைப்பது. இப்படி இரண்டு விதமாகக் கூறுவதிலும், ஒரு சிறப்பு இருக்கிறது. நகர மக்கள் அனைவரும் வருகிறவரை எதிர்கொண்டு அழைப்பதற்காக நகரை விட்டுப் போய்விட்டால், வருகின்றவர் நகருக்குள் நுழையும்போது, அவரை அங்கு வரவேற்க யாரும் இருக்க மாட்டார்கள். இது முறையுமன்று. நகரப் பெருமக்கள், சில குடிமக்களோடு சென்று எதிர்கொண்டு அழைப்பதும் பிற குடிமக்கள் நகரிலேயே தங்கியிருந்து வரும் விருந்தாளியை வரவேற்பதுமே முறை. இந்த முறையைத்தான் உமறுப் புலவர் கையாள்கிறார். ஆகையால்தான், முந்தின பாடலில், "அரசீர்" என்று விளித்து, அவர்களையே முகம்மது நபியவர்களை "எதிர்த்து இறைஞ்சுதற்கு, பொதிந்த பூவொடு ஏகுமின்" என்று விரைவுபடுத்துகிறார்.

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நாகூரில் 1833ஆம் ஆண்டில் பிறந்து 1908ஆம் ஆண்டில் காலமானவர் **குலாம் காதிறு நாவலர்** என்பவர். இவர் இயற்றிய நூல் ஒன்றின் பெயர் **நாகூர்ப் புராணம்** என்பது. நாகூரில் அடக்கம் ஆகியிருக்கின்ற, 'நாகூர் ஆண்டவர்' என்றும், 'நாகூர் மீரான் சாகிபு ஆண்டவர்' என்றும் சொல்லப்படுகிற 'ஹலறத்து மீரான் சுல்தான் சையது அப்துல் காதிறு ஷாகுல் ஹமீது பாதுஷா சாகிபு' அவர்களைப் பற்றிய புராணம் இது. இங்கும் ஒரு கொடி அசைவுக் காட்சியைக் காட்டி அதன்மேல் ஒரு கற்பனையை ஏற்றுகிறார் 'குலாம் காதிறு நாவலர்'. நாகூரிலே அமைந்திருக்கும் தர்காவில் இந்த நாகூர் ஆண்டவர் என்னும் பெரியார்

சமாதி இருக்கிறது. இந்த தர்காவிற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் திரளாக வந்துகொண்டிருக்கிறார்கள். அங்குப் போவதன் மூலமாகத் தங்களுடைய துன்பங்களும், பிணிகளும் நீங்கிவிடுகின்றன என்பது பலரின் நம்பிக்கை. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்திருக்கிறது நாவலரின் கற்பனை. இந்த நாகூரில் இருக்கும் மாடங்களிலுள்ள கொடிகள் ஆடிக்கொண்டு இருக்கின்றன. அப்படி ஆடுகின்ற கொடிகள் "எங்களூருக்கு வாருங்கள்" என்று பலரை அழைப்பது போல இருக்கிறது. யாரை அந்தக் கொடிகள் அழைக்கின்றன என்றால், வருந்தியவர்களை அழைக்கின்றன. வருந்தியவர்களைப் பார்த்து, "இந்த ஊரில் அடக்கமாகி இருக்கிற பெரியவருடைய பாதங்களைப் போற்றினால் மாபெருந் துன்பங்களும், சிறிதும் குறையாத வறுமையும் தொலையும். ஆகையால், நீங்கள் எங்களூருக்கு வாருங்கள்" என்று அந்தக் கொடிகள் அழைப்பது போல இருக்கிறது. இதை நாவலர்!

> **" கூருமா அழுங்கலும் குலைந்தருத இன்மையும்**
> **சீருலாவும் எம்பிரான் செழும்பதம் பழிச்சினால்,**
> **தீருமால், வருந்தினீர்! திருக்கலந்த எங்களூர்**
> **வாரும்என் றழைப்பதொக்கும் மாடம் ஆடும் தோகையே!"**

என்று பாடுகிறார்.

அழுங்கல் என்னும் சொல்லுக்குத் துன்பம், மனக்கவலை என்பது பொருள். கூர்தல் என்பதற்கு வளர்தல் என்று பொருளாகையால், "கூருமா அழுங்கல்" என்பது மேலும் மேலும் பெருகும் இயல்புள்ள பெருந்துன்பம் என்று பொருள் படும். "இன்மை" என்றால் வறுமை. அந்த வறுமையோ, குறையாத, தீராத வறுமை. அத்தகைய கவலையும், துன்பமும், வறுமையும் நாகூரில் அடக்கமாகி இருக்கிற பெரியாருடைய பாதங்களைப் போற்றுவதால் தீரும். ஆதலால், வருந்திய மக்களாகிய அனைவரையும் இந்தத் திரு நிறைந்த நாகூருக்கு வாருங்கள் என்று அழைப்பது போல அந்தக் கொடிகளின் அசைவு அமைந்திருந்தது என்பது கவிஞரின் கூற்று. 'பழிச்சுதல்' என்னும் சொல்லுக்குப் 'புகழ்தல்', 'வாழ்த்துதல்', 'துதித்தல்', 'வணங்குதல்' என்னும் பொருள்கள் உண்டு. செழும்பதம் பழிச்சினால்' என்னும் சொற்றொடரில் 'பழிச்சினால்' என்னும் சொல் இந்தப் பொருளிலேயே ஆளப்பட்டிருக்கிறது. நாகூர்

தர்காவின் மேலுள்ள மினாராக்களின் உச்சியில் கொடிகளை ஏற்றுவது வழக்கம். அந்தக் கொடிகளைச் குறிப்பிடுவதாகக் கொண்டாலும், அல்லது நகரிலுள்ள மாடங்களில் ஆடும் கொடிகளை நாவலர் குறிப்பிடுவதாகக் கொண்டாலும் இந்தப் பாட்டு பொருத்தம் உடைத்தே ஆகும். துன்பமுற்றவர்களை அவர்கள் துன்பம் தீர்வதற்காக நாகூருக்கு வருமாறு அழைப்பது போல அந்தக் கொடிகளின் அசைவு இருந்தது என்பது கவிஞர் கூற்று.

ஆக, சங்கம் மருவிய காலம் தொடங்கி 19 ஆம் நூற்றாண்டு வரை தோன்றிய கவிஞர் யாவரும் கொடிகளின் அசைவு என்னும் ஒரே நிகழ்ச்சிக்கு, தாம்தாம் பாடவந்த காப்பியத்தின் கதை நிகழ்ச்சிக்கு ஏற்ப ஒரு கற்பனையை ஏற்றிவந்திருக்கிறார்கள். நிகழ்ச்சி ஒன்றாக இருந்தபோதிலும் கவிஞர்களுடைய திறமை இந்த நிகழ்ச்சியைத் தத்தம் கதை நிகழ்ச்சிக்குப் பொருத்தமாக, வெவ்வேறு விதமாகப் பயன்படுத்திக்கொள்ள உதவுகிறது.

# 12. தேசிய ஒருமைப்பாடு

**[திரு. அகிலன்]**

**" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே ; - நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே ;**
**நன்றிது தேர்ந்திடல் வேண்டும் ; - இந்த**
**ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும் ? "**

—பாரதியார்

ஒன்றுபட்டு வாழ்ந்தால் உயர்ந்து வாழலாம் என்னும் கொள்கை வீட்டுக்கும் பொருந்தும்; வீதிக்கும் பொருந்தும்; நாட்டுக்கும் பொருந்தும்.

ஒரு வீட்டுக்குள் வாழ்பவர்கள் ஒற்றுமையாகவும், இணக்கமாகவும், ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டும், விட்டுக் கொடுத்தும், வாழ்வார்களானால் அந்த வீட்டில் உள்ள அனைவர் வாழ்க்கையிலும் வளம் பெருகும். உழைப்பையும் உழைப்பின் பயனையும் பங்கிட்டுக்கொண்டு அவர்கள் வளர்ந்தோங்கி வாழ்வார்கள். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்னும்

ப்பழமொழியின் பொருளை நாம், ஒற்றுமையோடு வாழும் பல குடும்பங்களில் காணலாம். ஒரே தெருவில் வாழும் அண்டை அயலாருடன் இனிமையாக இணங்கி வாழ்வதும் ஒரு கலைதான். எத்தனையோ சமயங்களில் நமக்கு அக்கம்பக்கத்தாரின் உதவி தேவைப்படுகிறது. தண்ணீர்க்குழாய்ச் சண்டை, குப்பையைக் கொட்டுவதில் சண்டை, குழந்தை குட்டிகளால் சண்டை என்று இருந்தால், அந்தத் தெருவில் வாழும் அனைவருக்கும் அதனால் துன்பந்தான் இருக்கும். எதிர்பாராத நெருக்கடியான சமயங்களிலும் இதனால் ஒருவரின் உதவி மற்றவருக்குக் கிடைக்காமல் போய்விடும்.

பல வீடுகள், பல தெருக்கள், பல கிராமங்கள், பல நகரங்கள், பல மாநிலங்கள் சேர்ந்ததுதான் ஒரு நாடு. 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்னும் கொள்கை, எப்படி ஒரு வீட்டுக்குப் பொருந்துமோ அப்படித்தான் ஒரு நாட்டுக்கும் பொருந்தும்.

தமிழ்ப் பெருமக்களாகிய நாம் மிகச் சிறந்த சிந்தனையாளர்களையும் கவிஞர்களையும் நமக்கு வழிகாட்டிகளாகக் கொண்டிருக்கிறோம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று ஒருமைப்பாட்டுக் குரல் எழுப்பிய கணியன் பூங்குன்றனார் ஒரு தமிழ்ப் புலவர் என்பது நமக்குப் பெருமை தரும் செய்தியாகும்.

ஆனால், கணியன் பூங்குன்றனார் வாழ்ந்த காலத்தில் தமிழகமும் நாட்டின் பிற பகுதிகளும் பல நூறு சிற்றரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. அரசர்கள் ஒருவரோடொருவர் போரிட்டுக் கொள்வதைப் பெருமை என்று நினைத்துக்கொண்டிருந்த காலம் அது. கணியன் பூங்குன்றனாரின் கவிதையைத் தன்னகத்தே கொண்ட 'புறநானூறு', பல்வேறு தமிழ் மன்னர்கள் ஒருவரோடொருவர் தங்களுக்குள் போரிட்டுப் படுகளத்தில் மாண்டு மடிந்த கதைகளையும் சொல்கிறது.

மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்களுக்கிடையிலும் மற்றும் சிற்றரசர்களுக்கிடையிலும் அடிக்கடி போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. இத்தகைய போர்களைத் தவிர்ப்பதற்குப் புலவர்கள் செய்துள்ள முயற்சிகளையும் நாம் கவிதைகளால் அறிகிறோம்.

ஆகவே, தொன்றுதொட்டே நம் நாட்டில் மன்னர்களிடையே ஒற்றுமை குறைந்திருந்ததை ஒரு புறமும், அதற்கு மாறுக ஒற்றுமைக்குரலை ஓங்கி எழுப்பிய கவிஞர்களின் இலட்சிய முழக்கத்தை மறுபுறமும் நாம் காண்கின்ருேம். இதில் அக் காலத்து அரசியல் தலைவர்களான சிற்றரசர்களின் போக்கு நமக்கு எச்சரிக்கை விடுப்பதாக இருக்கிறது. கணியன் பூங் குன்றனுர் போன்ற கவிஞர்களோ நமக்கு வழிகாட்டிகளாகத் திகழ்கிருர்கள்.

அரசியல் நிலையைப் பொறுத்தவரையில் நமது பழங் காலத்து வரலாறு நமக்குப் பல படிப்பினைகளைத் தரக்கூடியதாக உள்ளது. ஐம்பத்தாறு தேசங்களாகவும் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட குறுநிலங்க்ளாகவும் ஒரு காலத்தில் பிளவுபட்டிருந்த நாடு இது. குமரி முதல் இமயம் வரையிலும் எத்தனை எத்தனையோ மன்னர்கள் பல்வேறு காலங்களில் ஆட்சி செலுத்தியிருக்கிருர்கள். அவர்களுக்குள் நடைபெற்ற போர்களே வரலாருக நமக்கு உருவாகிவந்திருக்கின்றன என்று கூடக் கூறலாம்.

ஆனல், இவ்வளவு போர்களுக்கும் படுகளங்களுக்கும் ஒற்றுமைக் குறைவுக்கும் இடையிலும் நமக்குள் வலுவான ஓர் பிணைப்பு இருந்திருக்கிறது. நம் நாட்டின் சமயங்கள், இலக்கி யங்கள், பண்பாட்டியல்புகள் ஆகியவை நம் நாட்டை ஒன்று படுத்தியிருக்கின்றன.

போக்குவரத்து வசதிகளும் அஞ்சல் தந்தித் தொடர்புகளும் அச்சு யந்திரங்களும் இல்லாத அந்தக் காலத்திலும் நம்முடைய கலாச்சாரத் துறைகளில் இந்தியா முழுவதும் ஒரு நெருக்க மான பிணைப்பு இருந்திருக்கிறது. வடக்கே வால்மீகி எழுதிய காப்பியமான இராமகாதை தெற்கே குமரிமுனைவரை பல மொழிகளில் பரவியிருக்கிறது. தெற்கே சேதுக்கரையில் வாழ்ந்தவர்கள் வடக்கே காசிக்கும் கயிலாயத்துக்கும் வழி பாட்டுக்குச் சென்றிருக்கிருர்கள். அவ்வாறே வடக்கிலிருந்த வர்கள் தெற்கே தமிழகத்தின் தென்கோடியிலிருக்கும் இராமேசு வரத்துக்கு வந்திருக்கிருர்கள். இன்று வரையிலும் இத்தகைய போக்குவரத்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நம்முடைய பழந்தமிழ் இலக்கியச் செல்வத்துக்கு வளம் சேர்த்தவர்களுள் சமணர்களும் பௌத்தர்களும் குறிப்பிடத்

தக்கவர்கள். இவர்கள் தங்கள் தங்கள் சமய நெறிகளைத் தெற்கில் பரப்ப வந்தவர்களின் வழித்தோன்றல்கள். இவ்வாறே தெற்கில் சேரநாட்டிலிருந்து வடக்கில் காச்மீரம் வரை சென்று சமய உணர்வுக்குப் புத்தொளி தந்த ஆதி சங்கரரையும் நம்மால் மறக்க இயலாது. குமர குருபரரும் தமிழ்நாட்டிலிருந்து வடக்கே சென்று இறையுணர்வைப் பரப்பியவரே.

கலாச்சாரத்துறையில் வளர்ந்து வந்துள்ள ஒருமைப் பாட்டுக்கு இன்னும் எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். கலாச்சாரத்துறை ஒருமைப்பாட்டோடு அரசியல் பொருளாதார ஒருமைப்பாடும் நன்கு வளராத காரணத்தால் இடைக்காலத்தில் நம் இந்திய நாடு பல இன்னல்களை எதிர் கொள்ளவேண்டியிருந்தது.

நம்முடைய பழைய வரலாறு நமக்கு இதில் கடுமையான எச்சரிக்கை செய்கிறது. அக்காலத்து மன்னர்கள் தங்களுடைய உட்பூசல்கள் காரணமாக அன்னியர்களின் குறுக்கீட்டை நாடி யிருக்கிறார்கள். தொடர்ந்தாற் போலப் பல வெளிநாட்டுப் படையெடுப்புகள் இங்கே நடந்திருக்கின்றன. நாடு சின்ன பின்னமாக்கப்பட்டிருக்கிறது. மக்கள் பட்ட இன்னல்களுக்கு ஓர் அளவே இல்லை. பல்வேறு வெளி நாட்டாருக்கும் இந்த நாடு இடைக்காலத்தில் வேட்டைக்காடாக இருந்திருக்கிறது.

கடைசியாக ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் இந்த நாடு வந்தது. இதன் இயற்கை வளங்களும் உழைப்பும் சுரண்டப் பட்டன. இதன் செல்வங்கள் கொள்ளை கொண்டு போகப் பட்டன. பல்வேறு சாதிகள். சமயங்கள், மொழிகள், பழக்க வழக்கங்கள் கொண்ட இந்த நாட்டு மக்களைப் பிரித்தாளுவதற் காகப் பல சூழ்ச்சிகளை மேற்கொண்டனர் ஆங்கிலேயர். நாட்டில் அடிமைத்தனமும் வறுமையும் அறியாமையும் பயங் கரமாகத் தலைவிரித்தாடின.

இவ்வளவு துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் காரண மான அன்னிய ஆட்சியை நாட்டிலிருந்து அகற்றுவதற்காகத் தோன்றிய இயக்கம்தான் நாட்டு விடுதலை இயக்கம் - தேசிய இயக்கம். இந்தத் தேசிய விழிப்பின் காரணமாக நாட்டில் புத்துணர்ச்சியுடன் வீறு கொண்டு எழுந்ததுதான் புதிய தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு.

இந்த இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதி நம் இந்திய நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு காலக் கட்டமாகும். காந்தியடிகளின் தலைமையில் இந்த நாடே ஒன்றுபட்டெழுந்து வீராவேசத்துடன் அடிமை விலங்கை நொறுக்க முற்பட்ட காலம் அது. விடுதலைப்போரில் 'நாம் இந்தியர்' என்ற ஒரே உணர்வுடன் மக்கள் எத்தனை எத்தனையோ இன்னல்களை அனுபவித்தார்கள். தாங்களாகவே முன்வந்து தியாக வேள்வியில் குதித்தார்கள். இத்தகைய தியாகத்தில் சுடர் விட்ட பேரொளியே தேசிய ஒருமைப்பாடு என்னும் ஒளி. சாதி உணர்வு, சமய உணர்வு, இன உணர்வு, மாநில உணர்வு ஆகியவற்றையும் கடந்து மேலோங்கி எழுந்து நின்றது தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு.

தேசிய உணர்வோடு இந்தியாவிலிருந்த எல்லா மொழிகளும் புத்துயிர் பெற்றன. தமிழ்நாட்டிலும் தேசிய உணர்வோடு தமிழ்மொழியும் புத்துயிர் பெற்றுத் தழைத்தோங்கியது. மகாகவி பாரதியார், வ. உ. சிதம்பரனார், திரு. வி. கலியாணசுந்தரனார் போன்றவர்கள் தலை சிறந்த தேசியவாதிகளாயும் தலை சிறந்த தமிழுணர்வு கொண்டவர்களாயும் விளங்கினார்கள். மொழியுணர்வு ஒருமைப்பாட்டு உணர்வுக்கு உறுதுணையாக நின்றது; தூண்டு கோலாக விளங்கியது.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் நம்முடைய நாட்டின் மக்கள் தொகை முப்பது கோடி.

"முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்!"

என்று முழங்கினார் அவர்.

'வாழ்ந்தால் அனைவரும் நன்றாக வாழ்வோம்; இல்லையேல் ஒன்றாக வீழ்ந்துபடுவோம்' என்னும் உள்ளத்து உறுதியில் பிறந்த ஒற்றுமையின் காரணமாகத் தான் அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றோம். விடுதலை பெற்ற நாட்டைக் கட்டிக்காக்கவும் ஒருமைப்பாடு தேவைப்படுகிறது.

'வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்' என்றும் 'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்' என்றும் நாம் விடுதலை பெறுவதற்கு முன்பே

கங்கையையும் காவிரியையும் இணைத்துப் பாடியவர் அவர். செப்பு மொழி இந்த நாட்டில் பதினெட்டு இருந்தாலும் 'சிந்தனை ஒன்றாக இருக்க வேண்டும்-அது இந்தியச் சிந்தனையாக இருக்க வேண்டும்,' என அவர் கனவு கண்டார்.

தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு என்பது நம்மால் பேணிக் காத்து வளர்க்கப்படவேண்டிய ஓர் உயர்ந்த இலட்சியமாகும். தீவிரமாக உழைத்து முன்னேறினால்தான் உலக நாடுகளிடையே நாம் தலை நிமிர்ந்து நிற்க இயலும். நம்முடைய அடிப்படைப் பிரச்னைகளான வறுமை, அறியாமை ஆகியவற்றிலிருந்து நாம் விடுதலை பெறவும், பகைக்கு அஞ்சாமல் நாம் பாதுகாப்போடு வாழவும் நமக்கு இந்த உணர்வே உறு துணை செய்யும்.

கர்நாடகத்தில் பிறந்து வளரும் காவிரி நீரை நம் தமிழ்நாடு தன் வளத்துக்கு எதிர்பார்த்திருக்கிறது. இன்னும் மேலைக் கடலில் விழும் கேரளத்து நதிகளின் நீரையும் நாம் இங்கே பயன் படுத்த விரும்புகிறோம். ஆந்திர மாநிலத்தின் அரிசியும் நமது உணவுப்பற்றாக்குறைக்குக் கை கொடுக்கிறது. உழவுக்கும் தொழிலுக்கும் தேவையான மின் சக்தியை நாம் பல முறை வெளி மாநிலங்களிலிருந்து பெற்று வந்திருக்கிறோம். இவ்வாறாக நம் நாட்டின் ஒரு பகுதி மற்றொரு பகுதியின் உதவியோடும் ஒத்துழைப்போடும் வாழவேண்டியிருக்கிறது.

நம் ஒவ்வொருக்கும் குமரி முதல் இமயம் வரையில் உள்ள இந்த மாபெரும் நாடு முழுவதும் சொந்தமாக இருப்பதால் தான், நாம் இந்த நாட்டின் எந்தப் பகுதிக்கும் சென்று தொழில் புரியவும் வாணிகம் செய்யவும் உழைத்துப் பிழைக்கவும் உரிமை பெற்றிருக்கிறோம். பன்மையில் ஒருமையை வளர்க்க வேண்டியது நமது தலையாய கடமையாகிறது.

பல்வேறு மொழி பேசுவோர், பல சமயங்களைச் சார்ந் தோர், பல மாநிலங்களைச் சேர்ந்தோர் இவர்களுக்கு இடையே நாம் இந்தியர் என்னும் உணர்வு வளரவேண்டும். — இதை எப்படி வளர்ப்பது?

வாய்ப்புக் கிடைக்கும்போது நாம் நாட்டின் பிற பகுதி களைச் சுற்றிப் பார்த்து, பல்வேறுபட்ட மக்களின் வாழ்க்கை நிலையைத் தெரிந்துகொள்ளவேண்டும். பிற மொழி இலக்கி யங்களை நேரடியாகவோ மொழி பெயர்ப்புகளின் வாயிலாகவோ

படித்தால் அந்த மக்களின் பிரச்னைகளை நம்மால் உணர முடியும். மனிதர்களை அவர்களது சாதிக்காகவோ, சமயத்துக்காகவோ, மொழிக்காகவோ வெறுக்காமல் அவர்களிடம் மெய்யான அன்பு செலுத்தப் பழகவேண்டும். சமுகத் துறையிலும் பொருளா தாரத் துறையிலும் நிலவும் ஏற்றத் தாழ்வுகள் ஒருமைப் பாட்டுக்குக் குறுக்கே நிற்கக் கூடியவை. இவற்றை நீக்கு வதற்கு நம்மால் இயன்ற பணியை நாமும் செய்யவேண்டும்.

நம்முடைய மொழி, கலாச்சாரம், பண்பாடு இவற்றைக் காத்துக்கொண்டே நாம் ஒவ்வொருவரும் சிறந்த இந்திய ராகவும் விளங்க முடியும். ஒழுக்கத்திலும் பண்பாட்டிலும் உழைப்பிலும் சிறந்த தமிழர்களே சிறந்த இந்தியர்களாகவும் விளங்க முடியும். எனவே நாம் சிறந்த தமிழர்களாகவும் சிறந்த இந்தியர்களாகவும் வாழ முற்படுவோமாக!

"வாழிய செந்தமிழ்!
வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரதமணித் திருநாடு!"

—பாரதியார்

# 13. தமிழ் நாடகம் — தோற்றமும் வளர்ச்சியும்

[டாக்டர் இரா. குமரவேலன்]

நாடகம் ஓர் அரிய கலை; கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் ஆற்றல் மிக்கது; இயல் இசை ஆகியவற்றின் துணை யோடு இயங்குவது; பல கவின் கலைகளின் கூட்டு முயற்சியினால் சிறப்பது; ஓவியக்கலை, ஒப்பனைக்கலை முதலியவற்றோடு நடிப்பாற்றலையும் கொண்டு உயர்ந்து விளங்குவது. சிந்தைக் கினியதாகவும் செவிக்கின்பம் தருவதாகவும் விளங்கும் இக் கவின் கலை, பல மொழி இலக்கியங்களிலும் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. இயலும் இசையும், கற்றறிந்தோர்க்கு மட்டுமே மிகுதியாகப் பயன்படுவதாகும்.

ஆனால், நாடகமோ கல்லாத பாமரர்க்கும் களிப்பினை விளை விப்பது. இடர்ப்பட்டுக் கற்றறிந்துகொள்வதைக் காட்டிலும், இனிய நாடகங்களைக் கண்டு பெரும்பயனை எளிதில் எய்த முடியும். நாகரிகத்தை வளர்ப்பதற்கும் சமுதாயத்தை உயர்த்து வதற்கும் பெரிதும் துணைபுரிவது நாடகக்கலை.

## நாடகத் தோற்றம்

நாடகம் மாந்தரிடை இயல்பான தோற்றத்தைக்கொண்டது. ஒன்றைப்போலச் செய்வது மனிதன் இயல்பு. ஒருவரைப் பார்த்து ஒருவர் முதலில் குரலாலும் பின்னர்ச் சைகையினாலும் தம் கருத்துக்களைத் தெரிவித்தனர்; பிறகு கருவிகளைப் பயன் படுத்தினர். 'போலச் செய்யும்' இவ்வியல்பே மெய்ப்பாட் டின் அடிப்படை. மனிதன் இயல்பான இந்நாடகச் சுவையின் மூலத்தினை முதன்முதல் மரப்பாவைக் கூத்து வாயிலாகக் கலையுணர்வோடு வெளிப்படுத்தினான். பின்னர் அது தோல் பாவைக் கூத்தாக வளர்ந்தது அடுத்துப் பொம்மலாட்டம் எனச் சிறப்புப் பெற்றது. வள்ளுவர் "இரப்பாரை இல்லாத ஈர்ங்கண்மா ஞாலம் மரப்பாவை சென்றுவந் தற்று" என்று மரப்பாவைக் கூத்தினைக் குறிப்பிடுகிறார். "தோற்பாவைக் கூத்தும் தொல்லை மரப்பாவை இயக்கமும்" என்கிறது சிவஞான சித்தியார். எனவே, மரப்பாவையாகத் தோன்றித் தோற்பாவையாக வளர்ந்து பொம்மலாட்டமாக விளங்கிப் பின்னர்த் தெருக்கூத்தாகவும் மேடை நாடகமாகவும் மலர்ந்தது நாடகக்கலை என்பது தெளிவாகிறது.

முதன்முதல் நாடகம் சிவபெருமானாலும் உமையம்மை யினாலும் ஆக்கப்பட்டது என்றும், அதற்குப் பொருளாக அமைந்தது திரிபுர தகனம் என்றும் 'நாட்டிய சாத்திரம்' என்னும் வடமொழி நூல் கூறுகிறது. இறைவன், தான் தோற்றுவித்த நாடகத்தைப் பரத முனிவனுக்குக் கொடுத்து அக்கலையை ஊர்வசி முதலான அரம்பை மாதரைக் கொண்டு உலகில் பரப்புமாறு செய்தனன் என்றும் கூறுவர்.

## முத்தமிழ்

பழந்தமிழ்ச் சான்றோர் நம் தாய்மொழியை இயல், இசை, கூத்து என மூன்று பிரிவாகப் பிரித்து 'முத்தமிழ்' என்று

வழங்கினர். இத்தகைய பிரிவு பிற மொழிகளில் இல்லை. இலக்கணமும் இலக்கியமும் இயல் எனப்படும்; பண்ணும் பண்ணோடு கூடிய பாடலும் இசை எனப்படும். பாவும் உரையும் கலந்து இசையோடு நடித்துக் காட்டப்பெறுவது நாடகம் அல்லது கூத்து எனப்படும்.

## தமிழ் நாடகத் தொன்மை

தமிழ் மொழியில் நாடகம் மிகத் தொன்மைக் காலந் தொட்டுச் சிறந்து விளங்கியுள்ளது. மிகப் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியம் "நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்று நாடகத்தைக் குறிப்பிடுவதோடு, மெய்ப்பாட்டியல் என்னும் பகுதியில் நடிப்பிற்கு அடிப்படையான சுவையுணர்வுகளை விரிவாக விளக்குகிறது. வள்ளி, குரவை, துணங்கை முதலான கூத்து வகைகளைப் பற்றியும் அது கூறுகிறது. பத்துப் பாட்டுள் ஒன்றான பட்டினப்பாலை "பாட லோர்த்தும் நாடகம் நயந்தும் வெண்ணிலவின் பயன்துய்த்தும்" புகார் மாந்தர் மகிழ்ந்திருந்த தாகக் கூறுகிறது. பெரும்பாணாற்றுப்படை "நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்து விசிவீங்கு இன்னியம் கடுப்ப" என்று ஆடுமகளிரைப் பற்றி அறிவிக்கிறது. வான்புகழ் வள்ளுவர் "கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம் போக்கும் அதுவிளிந் தற்று" என்று செல்வ நிலையாமையை அறிவுறுத் தற்கு நாடக அரங்கினையே உவமையாகக் காட்டுகிறார்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, சீவக சிந்தா மணி முதலான பழம்பெருங் காப்பியங்களில் தமிழ் நாடகத் தன்மைகள் பலவும் கூறப்படுகின்றன. சிலப்பதிகாரத்தை அறிஞர் 'முத்தமிழ்க் காப்பியம்' என்று வழங்குவர். இயல் இசைப் பெருமைகளோடு நாடக நலமும் ஒருங்கு சேர்ந்து காணப்படுவதே சிலம்பின் சிறப்பாகும். மாணிக்கவாசகர் தம் திருக்கோவையாரில் "நன்பணைத் தண்ணற வுண்ணளி போன் றொளிர் நாடகமே" என்று நாடகத்தின் சிறப்பினைக் கூறியுள்ளார்.

இங்ஙனம் தொல்காப்பியர் தொடங்கி வழிவழி வந்த தமிழ்ச் சான்றோர்கள் நாடகத்தைப்பற்றித் தம் நூல்களில்

பலவாறு குறித்துள்ளனர். கூத்தர், பொருநர், ஆடுநர், வயிரியர், விறலியர், கோடியர் என்று நாடகக் கலைஞர்கள் சங்க காலத்தில் அழைக்கப்பெற்றனர். ஆனால், பழங்காலத் தமிழ் நாடகம் இவ்வாறு இருந்ததென அறிந்துகொள்ள ஒரு நாடக நூலேனும் நமக்குக் கிடைத்திலது.

## நாடக நூல்கள்

படித்தற்குரிய பழைய தமிழ் நாடக நூல்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. நாடகத்தைப் பற்றிய இலக்கண நூல்கள் பல தமிழில் இருந்தனவாக அறிகிறோம். அவையும் கால வெள்ளத்தில் மறைந்தொழிந்தன. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்குநல்லார் இதுபற்றி மிகவும் வருந்திக் கூறுகிறார். "நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தனபோலும்" என்கிறது அடியார்க்குநல்லார் உரைப்பாயிரத்தின் ஒரு பகுதி. இசை நுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணனார் நாடகத் தமிழ்நூல் ஆகியவை அடியார்க்குநல்லார் காலத்தில் இருந்து, பின்னர் மறைந்துபோன தமிழ் நாடகக் கலை இலக்கண நூல்கள் ஆகும். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புவது மரபாதலின் முற்காலத்தில் பன்னூறு நாடக இலக்கிய நூல்கள் இருந்த காரணத்தால் இத்தகைய நாடக இலக்கண நூல்கள் தோன்றியிருக்கவேண்டும் என்று கருதலாம். இன்று நாடக இலக்கணத்தை நாம் அறிவதற்குத் துணையாக இருப்பன பரிதிமாற் கலைஞரின் 'நாடகவியல்' என்னும் நூலும், விபுலானந்த அடிகளாரின் 'மதங்கசூளாமணி' என்னும் நூலுமே ஆகும். பிற பழைய நாடக இலக்கண நூல்கள் அனைத்தும் அழிந்தொழிந்து போயின.

## சிலப்பதிகாரச் செய்திகள்

பழங்கால நாடகம் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கும் கருவூலமாகச் சிலப்பதிகாரம் திகழ்கிறது. சிலம்பின் அரங்கேற்று காதையும், அதன் உரைகளும் பல அரிய செய்திகளைத் தருகின்றன.

முற்காலத்தில் ஆடலாசிரியன், இசையாசிரியன், கவிஞன், தண்ணுமையோன், குழலோன், யாழாசிரியன் ஆகியோர் நாட்டியம் அல்லது நாடகம் நடப்பதற்கு உறுதுணையாக இருந்தனர்.

வசைக் கூத்து, புகழ்க் கூத்து, வேத்தியல், பொதுவியல், வரிக்கூத்து, வரிச்சாந்திக் கூத்து, சாந்திக் கூத்து, விநோதக் கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து, இயல்புக் கூத்து, தேசிக் கூத்து எனப் பலவகையான கூத்துகள் நடைபெற்றன.

நாடகத்தில் வரும் பாடல்கள் 'உரு' எனப்படும். தற்காலத்தில் அவை 'உருப்படி' என வழங்கப்படுகின்றன.

முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்னும் ஐந்து சந்திகளைக் கொண்டு நாடகம் அமையும். இவை நாடகத்தின் தொடக்கம், வளர்ச்சி முடிவு நிலைகளை உணர்த்துவன.

வீரம், அச்சம், இழிவு, வியப்பு, இன்பம், அவலம், நகை, நடுவுநிலை, வெகுளி என்ற ஒன்பது சுவைகள் உடையதாக நாடகம் அமைதல் வேண்டும். சுவைகளை நடிகர்கள் மேடையில் கண், கை, கால், முகம் முதலான உறுப்புகளின் வழி தெரியப் படுத்துவது அபிநயம் அல்லது மெய்ப்பாடு என்று கூறப்படும். "சுவைகளில் எண்ணம் வந்தால் தோற்றும் உடம்பில்; உடம்பின் மிகத் தோற்றும் முகத்து; முகத்தின் மிகத் தோற்றும் கண்ணில்; கண்ணின் மிகத் தோற்றம் கண்ணின் கடையகத்து" என்று மெய்ப்பாட்டின் நுட்பத்தை அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டுகிறார்.

"குற்றங்கள் நீங்கின சிறந்த நிலத்தில் சிற்ப நூலாசிரியர் விதித்த இயல்புகளிலிருந்து வழுவாத நாடக அரங்கு கட்டப் பட்டது; எழுகோல் அகலமும் எண்கோல் நீளமும் ஒருகோல் குறட்டுயரமும் கொண்டு, இரு வாயில்களோடு விளங்கிய அரங்கத்தினது இடையில் உள்ள தூண்களின் நிழல் நாயகப் பத்தியின் கண்ணும் அவையின் கண்ணும் விழாதபடி விளக்குகளை அரங்கில் அமைத்திருந்தனர். அவ்வரங்கில் ஒருமுக வெழினி, பொருமுகவெழினி, கரந்துவரலெழினி என மூன்று விதமான திரைகள் பொருத்தப்பட்டிருந்தன. அரங்கின்

விதானத்தில் ஓவியம் தீட்டப்பட்டிருந்தது; முத்து மாலைகள் ஆங்காங்கே தொங்கின" என்று நாடக அரங்கு பற்றிய செய்திகளைச் சிலப்பதிகார உரையினால் அறியலாம்.

## கல்வெட்டில் நாடகம்

கி. பி. பத்தாம் நூற்றாண்டில் சோழர்கள் ஆட்சியில் நாடகக் கலை மிகச் சிறப்போடு விளங்கியது என்பதைப் பல கல்வெட்டு களால் அறிந்துகொள்ள முடிகிறது. தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டொன்று அக்கோயிலின்கண் வைகாசி மாதத் திருவிழாவில் 'இராசராசேசுவர நாடகம்' நடைபெற்றதனைத் தெரிவிக்கிறது. இதனைச் 'சாந்திக்கூத்தன் திருவாளன் திருமுதுகுன்றன் ஆன விசயராசேந்திர ஆசார்யன்' என்பவன் நடத்தினான் என்றும், அவனுக்கு நூற்றிருபது கலம் நெல் ஆடவல்லான் மரக்கால் அளவு கொண்டு தரப்பட்டது என்றும் அக்கல்வெட்டால் அறிகிறோம். பூம்புலியூர் நாடகம், கன்னிவன நாடகம், திருமூல நாயனார் நாடகம், திருநாடகம் முதலிய பல நாடகங்களைப்பற்றியும், ஆரியக் கூத்து, சாந்திக் கூத்து, சாக்கைக் கூத்து என்ற பலவகைக் கூத்துகள் பற்றியும் தமிழகக் கோயில் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

## பள்ளு — குறவஞ்சி

சோழர் காலத்திற்குப் பின், பதினாறு அல்லது பதினேழாம் நூற்றாண்டளவில் நாடகத் துறையில் ஒரு புதிய மலர்ச்சி உண்டாயிற்று. குறவஞ்சி, பள்ளு, நொண்டி முதலான இலக்கிய நாடக வகைகள் இக்காலத்தில் தோன்றின. சிற்றிலக்கிய வடிவம் கொண்ட இவை அக்காலச் சமுதாயத் தேவையின் அடிப்படையில் எழுந்த நூல்கள் ஆகும். நில உரிமையாளர் அல்லது பண்ணைக்காரர்தம் விருப்பத்திற் கிணங்கப் பலர் கூடிக் கண்டு மகிழும் வண்ணம் களத்துமேடு அல்லது கோயில் மன்றங்களில் நடிக்கும் வகையில் எழுதப்பட்ட நாடக வடிவங்களே பள்ளும் குறவஞ்சியுமாகும். தாம் விரும்பும் தெய்வம் அல்லது தலைவனைப் பாடிப் போற்றும் வகையில் இவை எழுதப்பட்டன. மக்கள் பயன்படுத்திய பாமர மொழியினைப் பேச்சுநடையில் இவை மேற்கொண்டாலும் இலக்கியத் தரத்தில் உயர்ந்தே விளங்குகின்றன. இத்தகைய

மக்கள் இலக்கிய நாடக வகைகளில் குறிப்பிடத்தக்க நூல்கள் திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற் பள்ளு, திருச்செந்தூர் நொண்டி நாடகம் ஆகியனவாகும். இவற்றைத் தொடர்ந்து பல பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகங்கள் தோன்றின என்றாலும் இவை பெற்ற தகுதியையும் புகழையும் மற்றவை பெற இயலவில்லை.

## தெருக்கூத்து

அடுத்த நிலையில் தமிழ் நாடக உலகில் கருதத்தக்கது 'தெருக்கூத்து' வகையாகும். கடந்த இரண்டு நூற்றாண்டுக் காலத்தில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தெருக்கூத்து நாடகங்கள் நடிக்கப்பெற்றன. நூற்றுக்கணக்கான நடிகர்கள் தம் நடிப்புத் திறனாலும், இசைப் புலமையினாலும் கிராமங்கள் தோறும் பயணம் செய்து பற்பல நாடகங்களை நடித்துப் பேரும் புகழும் பெற்றனர். பெருமுயற்சியின்றி எளிதிற் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே பாத்திரங்களுக் கேற்ற கோலந் தாங்கி இத்தகைய நாடகங்களைக் கலைஞர்கள் நடித்தனர். இவர்கள் மார்க்கண்டேயர் நாடகம், வாலி வதம், இராமர் பட்டாபிஷேகம், திரௌபதி சுயம்வரம், பீஷ்மர் சபதம், பார்வதி பரிணயம், கந்த லீலா, சக்தி லீலா முதலிய புராண இதிகாச நாடகங்களையே நடித்தனர். தெருக்கூத்து நாடகங்களில் வசனங்கள் குறைவு; இசைப் பாடல்களே மிகுதி. கோமாளி களும் நகைச்சுவை நடிகர்களும் இடையிடையே வந்து செல்வர். ஆடவரே பெண் வேடம் புனைந்து நடிப்பர். இரவில் பத்து மணிக்குமேல் தொடங்கி மறுநாள் விடியும் வரை நாடகத்தை நடத்தி, விடிந்தபின் தாம் புனைந்த வேடத்தைக் கலைக்காமல் சென்று ஊராரிடம் பணமும் பொருளும் பெறுவர். கட்டப்பட்ட அரங்குகளில் இவை நடைபெறுவதில்லை; களத்துமேடுகளிலும் வெட்ட வெளிகளிலும் நாற்சந்திகளிலும் நடிக்கப்பெற்றன.

## நாடக மறுமலர்ச்சி

சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ் நாடக உலகில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டன. தமிழகம் வந்திருந்த 'பார்சி' நாடகக் குழுவினர் அழகிய காட்சி அமைப்புகளோடு புதுமையான முறையில்

நடத்திய நாடகங்களைக் கண்டு, கோவிந்தசாமி ராவ், கன்னையா, பம்மல் சம்பந்த முதலியார் முதலானவர்கள் தமிழ் நாடக மேடையைச் சீர்திருத்த முனைந்தனர். இவர்களோடு சங்கரதாஸ் சுவாமிகள், எம். கந்தசாமி முதலியார், நவாப் இராசமாணிக்கம் ஆகியோரும் மேடை நாடகத்திற்குச் சிறந்த தொண்டாற்றினர். தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளைத் 'தமிழ்நாடகத் தலைமை ஆசிரியர்' என்று அழைப்பர். இவர் நடிகராகவும் நாடக ஆசிரிய ராகவும் விளங்கினர். சதி சுலோசன, அபிமன்யு சுந்தரி, சதி அனுசுயா முதலான பல நாடகங்களை இயற்றியதோடு, ஔவை தி. க. சண்முகம் முதலிய கலைஞர்களையும் உருவாக் கினர். சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர் ராஜா பர்த்ருஹரி, தேசிங்கு ராஜன் முதலிய வரலாற்று நாடகங்களை யும், கதரின் வெற்றி, பஞ்சாப் கேசரி என்னும் தேசிய நாடகங் களையும், பதிபக்தி, கவர்னர்ஸ் கப் முதலிய சீர்திருத்த நாடகங் களையும் எழுதி மேடையேற்றினர்.

முதன்முதல் முழுவதும் உரைநடையிலேயே நாடகம் எழுதியவர் இராமசாமி ராஜா என்பவர். அவர் எழுதிய நாடகம் பிரதாப சந்திர விலாசம் என்பதாகும். முதலில் சமுதாயச் சீர்திருத்த நாடகங்களை எழுதியவர் சென்னையைச் சேர்ந்த காசி விசுவநாத முதலியார் என்பவர். டம்பாச்சாரி விலாசம், தாசில்தார் நாடகம், பிரம்ம சமாஜ நாடகம், கூலிக்கு மாரடிக்கும் கூத்தாடிச்சி நடிப்பு என்பன அவர் எழுதிய நாடகங்கள்.

தமிழ் நாடக உயர்விற்கு முதற்காரணமாக விளங்கியவர் 'தமிழ் நாடகத் தந்தை' எனப் போற்றப்படும் பம்மல் சம்பந்த முதலியார் ஆவார். ஏறத்தாழ நூறு நாடகங்களை எழுதித் தம் சுகுண விலாச சபையின் வாயிலாக நடித்துத் தமிழ் நாடகத்தில் புரட்சியைச் செய்தவர் இவர். புராணம், வரலாறு, பக்தி, கற்பனை, நகைச்சுவை, மொழிபெயர்ப்பு எனப் பலவகை நாடகங்களையும் இவர் படைத்தார். மனோகரா, சபாபதி, சந்திரஹரி, வேதாள உலகம், லீலாவதி சுலோசன முதலானவை இவருடைய தலைசிறந்த நாடகங்களாகும். தமிழ் நாடக மேடையைச் சீர்திருத்திச் செம்மையாக்கி, அதற்குப் புதிய பொலிவையும் வலிவையும் தந்தவர் சம்பந்த முதலியார்.

## இலக்கிய நாடகம்

தமிழில் கற்றறிந்தாரும் படித்துப் பாராட்டத்தக்க சிறந்த இலக்கிய நாடகத்தை முதன்முதல் வழங்கியவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களே ஆவார். ஆங்கிலத்தில் லிட்டன் பிரபு எழுதிய 'மறை வழி' என்ற கதையினைத் தழுவி 'மனோன் மணீயம்' என்னும் மிகச் சிறந்த கவிதை இலக்கிய நாடகத்தை ஆக்கினார் சுந்தரம் பிள்ளை. இந்நூல் 1891ஆம் ஆண்டில் வெளிவந்தது. இந்த நாடகக் காப்பியத்தை அடியொற்றிப் பல அறிஞர்கள் தமிழன்னைக்குப் பல நாடக அணிகளைச் சூட்டி மகிழ்ந்தனர். மறைமலை அடிகளார் 'சாகுந்தலம்' நாடகத்தையும், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் 'மிருச்சகடிகம்' நாடகத்தையும் மொழிபெயர்த்து எழுதினர். பரிதிமாற் கலைஞர் கலாவதி, ரூபாவதி, மான விஜயம் ஆகிய சிறந்த தமிழ் நாடகங்களைப் படைத்தார். பேராசிரியர் கா. நமச்சிவாயர் கீசகன், பிருத்வி ராஜன் ஆகிய நாடகங்களைத் தெளிந்த தமிழ் நடையில் எழுதினார். ஆங்கில நாடகங்கள் பலவும் தமிழில் மொழிபெயர்க்க அறிஞர்கள் முயற்சி எடுத்துக்கொண்டனர். இவர்களுக்குப் பின்னர் நூற்றுக்கணக்கான நாடகங்கள் எழுதப் பெற்றன. அவை இருபதாம் நூற்றாண்டில் தமிழ் நாடகம் முன்னேறி வருவதை நன்குணர்த்துவனவாகும்.

## தற்காலம்

முத்தமிழ்க் கலா வித்வ ரத்தினம் தி. க. சண்முகம் குழுவினரால் நடிக்கப் பெற்ற எதிராசு எழுதிய ஔவையார், நாரண. துரைக்கண்ணன் எழுதிய உயிரோவியம், அரு. இராமநாதன் எழுதிய இராஜராஜ சோழன் ஆகிய நாடகங்களும், அறிஞர் அண்ணா எழுதிய ஓர் இரவு, வேலைக்காரி முதலிய நாடகங்களும் திருவாரூர் தங்கராசுவின் இரத்தக் கண்ணீர், எஸ். டி. சுந்தரத்தின் கவியின் கனவு, பி. எஸ். இராமையாவின் பிரசிடண்ட் பஞ்சாட்சரம், போலீஸ்காரன் மகள், திருமாறனின் சாணக்கிய சபதம், சோவின் மனம் ஒரு குரங்கு ஆகிய நாடகங்களும் அண்மைக் கால நாடகங்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

சோபாக்ளிஸ், காளிதாசன், ஷேக்ஸ்பியர், செர்வாண்டிஸ், மோலியர், பெர்னார்டு ஷா முதலிய உலகப்புகழ் பெற்ற நாடகாசிரியர்களைப் போலத் தமிழ் மொழியில் இலக்கிய நாடகம் படைத்த பெருமக்களைச் சுட்டிக்காட்ட இயலவில்லை. மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையைப் போல மேலும் பல அறிஞர்கள் நாடகக் கலைக்குச் சீரிய பணியாற்ற முன்வந்தால் தமிழ் மொழிக்கு இருக்கும் பெருங்குறை நீங்கி, நாடகத்துறை மேலும் செழித்து வளரும்.

# 14. மருத்துவத்தில் வியத்தகு சாதனைகள்

**[டாக்டர் வ. நம்பி]**

'மருத்துவத்தின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் இப்போகிரேட்டிஸ் என்னும் கிரேக்க அறிஞர் ஆவார். அவர் காலந்தொட்டே மருத்துவம் வளர்ந்துவந்திருக்கிறது. புதிய கண்டுபிடிப்பு வழிகள் (Investigations) நடைமுறைக்கு வந்துள்ளன. இதன் பயனாக, புதிய நோய்கள், நோய்க்கு உரிய காரணங்கள் என்னென்ன என்றெல்லாம் ஆராயப்பட்டு வருகின்றன. பின் அந்நோய்களைக் குணமாக்கும் மருந்துகளும், அறுவை முறைகளும் கண்டுபிடிக்கப்படவேண்டியதாகின்றன. இவ்வாறு ஒன்றன் அடிப்படையில் மற்றொன்று என மருத்துவ இயல் வளர்ந்துள்ளது. அந்த வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டமும் மயப்பூட்டுவதாகவும் வாழ்வு அளிப்பதாகவும் மாபெரும் சாதனையாகவும் விளங்குகிறது.

## குழந்தை மருத்துவம்

பத்துத் திங்கள் வரை குழந்தை கருப்பையினுள் இருந்து வளர்ந்து முழுமை அடையவேண்டும். கருப்பையினுள் இருக்கும் வெப்பம் அதற்கு ஏற்றதாகவும், இன்றியமையாததாகவும் இருக்கிறது. பத்துத் திங்கள் முடிந்த பின்னர், அக்குழந்தை வெளியுலகத்தின் வெப்ப நிலையைச் சரிசெய்து சீராக

வைத்துக்கொள்ளும் ஆற்றல் பெறுகிறது. சில குழந்தைகள் சில காரணங்களால், பத்துத் திங்கள் முடியுமுன்பே பிறந்து விடுகின்றன. முழு வளர்ச்சி அடையாக் குழந்தைகள் இவை. இக்குழந்தைகளுக்கென வெப்பநிலைப் பெட்டி (Incubator) ஒன்றை உருவாக்கி, அதனுள் குழந்தைகளை வளர்த்துக் காக்கின்றனர் மருத்துவர்கள். வெப்பநிலைப் பெட்டி குழந்தையின் உடல் வெப்பத்தைச் சீராக வைத்துக்கொள்ளத் துணை புரிகிறது. இம்முறை சாதாரணமானதுதான் எனினும், மருத்துவத்திற்கு என்று பயன்படுத்தும்போது போற்றுதற்குரியதாய் விளங்குகிறது.

இத்துறையில் இன்னொரு சிக்கல் எப்படி எளிதாகச் சீராக்கப்பட்டது என்பதைப் பார்ப்போம். இரத்த வகைகள் ஒன்றிப் போகாமல் இருக்கும் தாய் தந்தை உண்டு. இவர்களுக்குப் பிறக்கும் குழந்தையின் இரத்தமும் பாதிக்கப்படும். இந்த ஒவ்வாமையினால் (Incompatibility) குழந்தை மஞ்சள் காமாலை நோயுறும். பிற தொல்லைகளுக்கும் ஆளாகும். இதற்கென, குழல் விளக்குகளின் நீலக்கதிர்களைக் (Photo Theraphy) குழந்தைகளின் உடலின் மீது படவைத்துக் குணமாக்கும் மருத்துவமுறை ஒன்றிருக்கிறது. நீலக்கதிர்கள் சில வேதியியல் மாற்றங்களை உண்டாக்கிக் குழந்தையை நலமாக்குகிறது. இம்மஞ்சள் காமாலை நோய் அதிகமாக இருப்பினும், வேறு நல்ல இரத்தம் செலுத்திக் குழந்தையின் உடலில் உள்ள இரத்தம் முழுவதையும் மாற்றி (Exchange Blood Transfusion) நலம் விளைவிக்கின்றனர். வளர்ந்துவரும் மருத்துவம் நோயுற்றபின் குணமாக்குதல் என்னும் நிலையோடு நின்று விடவில்லை. அந்த ஒவ்வாமை ஏற்படாவண்ணம், தாய்க்கு மருந்துகள் சில செலுத்தி அதனைத் தடுத்தும் விடுகிறது.

பிறக்க இருக்கும் குழந்தைக்கு உடல் குறை ஏதேனும் உள்ளதா? அதன் வாழ்நாள் முழுவதும் நோயுற்றே வாழ வேண்டியதுதானா?' என்றெல்லாம் குழந்தை கருவில் இருக்கும் போதே அறியவைத்துள்ளது மருத்துவச் சாதனை. குரோமசோம்களைப் பற்றி ஆய்ந்ததனால் ஏற்பட்ட தெளிவு ஆகும் இது. இதனால், கருவாக இருக்கும் போதே அழித்து விடுதல் ஒரு மருத்துவ முறையாகும். நலிந்த குழந்தை, நலம் காண வழி

ஏதும் இல்லை; வாழ்நாள் வரை குறையுடன் இருத்தல்வேண்டும்; இந்நிலையைக் காட்டினும் அது கருவாக இருக்கும்போதே கலைத்து விடுதலைத் தவறென யாரும் கொள்ளார்.

## முக்கிய உறுப்புகளில் மருத்துவம்

### நெஞ்சு மருத்துவம்

இதய நோயைக் கண்டறியத்தான் எத்தனை எத்தனை முறைகள் தோன்றியுள்ளன. இதயச் செல்லில் (cell) உண்டாகும் மின்சாரத்தை அடிப்படையாக வைத்துச் செயல்படுவது தான் 'இதய மின் அலைப் பெட்டி' (E.C.G.). இது இதய வீக்கத்தையும் (Hypertrophy) இதயத் தாக்குதலையும் (Heart Attack) இதய ஓட்ட ஒழுங்கின்மையையும் (Arrhythmias) கண்டுபிடிக்க உதவுகிறது.

இதய அறைகளில் உள்ள அழுத்தம், அந்த அறைகளில் உள்ள இரத்தத்தில் உயிர்வளி (ஆக்சிஜன்), கரியமிலவாயு கலந்துள்ள அளவு ஆகியவற்றையும் அறியும் அளவுக்கு மருத்துவம் முன்னேறியுள்ளது. இரத்தக் குழாயின் வழியே சிறு குழாயைச் செலுத்தி (Cardiac Cathetrisation) அது இதயத்தை அடைந்தவுடன் ஆய்வுநடத்தும் முறை நாள்தோறும் கையாளும் ஒன்றாகும்.

நிமிடத்திற்கு எழுபதிலிருந்து தொண்ணூறு வரை இதயம் துடிக்கும். இந்த எண்ணிக்கை, நோயுற்றபோது கூடுவதும் உண்டு; குறைவதும் உண்டு. நூற்றறுபது, இருநூறு என்ற அளவில் வேலை செய்யும் இதயமும் உண்டு. மருந்துகளுக்கும் கட்டுப்படாத வேகநிலையைத் தடுப்பது எப்படி? மரண வாயிலில் நிற்கும் நோயாளியைக் காப்பது எங்ஙனம்? மின்சாரத்தை மருத்துவ வகையில் நோயாளியின் மார்பில் செலுத்தி, அந்த வேகத்தைக் கட்டுப்படுத்துவது ஓர் அரிய சாதனையாகும்.

தூங்கும்போதும் துடித்துக் கொண்டிருக்கும் இதயமானது, சில நோய்களினால் தளர்ந்து விடுவதுண்டு. நிமிடத்திற்கு இருபது, இருபத்தைந்து என்று அது வேலைசெய்துகொண்

டிருக்கும். மருந்துகளும் பயன் தாராமல் போய்விடலாம். அந்நிலையில் சிறிய மின்கலப் பெட்டி ஒன்றைப் பொருத்தி, இதயத்தைத் தூண்டி, நன்கு வேலை செய்யவைக்கும் திறன் மருத்துவத்தில் வியப்பூட்டுவதாகும். அச்சிறு மின்கலப் பெட்டிகளை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்துக்கொள்ளவேண்டும். அணுச் செல்களைக் கொண்ட மின்கலப்பெட்டிகள் (Atomic Pacemaker) புழக்கத்தில் வரவிருக்கின்றன. அவை பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் வேலை செய்யும். அடிக்கடி புதுப்பித்துக்கொள்ளவேண்டிய தொல்லையும் இராது.

**சிறுநீரகம்**

உடலின் கழிவுப் பொருள்களை வெளியேற்றும் உறுப்புகளில் முக்கியமானது சிறுநீரகங்களாகும். சிறு நீரகத்தின் அமைப்பு மிகவும் நுட்பமானது. அது வேலை செய்யும் முறையோ வியப்பூட்டுவதாகும். இத்தகைய சிறுநீரகம் கெட்டுப்போனால், செயற்கைச் சிறுநீரகத்தின் மூலம் அதன் வேலைகளைச் செய்வது என்பது மேலும் வியப்பூட்டுவதாகும். செயற்கை நீரகக் கருவியுடன் நோயுற்றோரின் இரத்தக் குழாயை இணைத்து, இரத்தத்தைத் தூய்மையாக்குகின்றனர். இயற்கை சீரழிக்கும்போது செயற்கை கைகொடுக்கிறது. இயற்கையை வெல்ல முடியாவிட்டாலும், இன்றைய மருத்துவம் இயற்கைக்கு ஈடுகொடுத்து ஒரு மாபெரும் சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

சிறுநீரக மாற்று முறை என்றொரு மருத்துவம் உள்ளது. அதுபற்றி விளக்கமாகப் பின்னர்க் காண்போம்.

**கண்**

கண் ஒரு நுண்ணிய உறுப்பு; மிக முக்கியமான உறுப்பு. அதில் ஏதேனும் நோய் ஏற்படின், அறுவை மருத்துவம் செய்வது அவ்வளவு எளிதன்று. சிறிய இடத்தில் நுண்ணிய அறுவை முறைகள் செய்ய, புதிய வழி ஒன்று நடைமுறையில் வந்துகொண்டிருக்கிறது. லாசர் (Laser) விளக்கு இதற்குப் பேருதவி புரிகிறது.

## மருத்துவத்தில் பொற்காலம்

### அணு மருத்துவம் (Nuclear Medicine)

"நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்னும் திருவள்ளுவரின் கருத்துக்கேற்ப, அணுசக்தியானது இன்றைய மருத்துவத்தில் பெரும் பங்கு வகிக்கிறது.

மனித உடலில் உள்ள செல்களைத் தாக்கும் வகையில் அணுப் பொருள்கள் (Radio Active Substances) அதிக அளவில் செலுத்தப்பட்டு நோய்களை அழிக்கின்றன.

என்ன நோய் என்று அறியும் பொருட்டு, இந்த அணுப் பொருள்கள் குறைந்த அளவில் உடலில் செலுத்தப்படு கின்றன. குறைந்த அளவில் அவை இருக்கும்போது உடலுக்கு ஏதும் ஊறு விளைவிப்பதில்லை. பொதுவாக, இரத்த குழாய் வழியாக அவை உடலினுள் செலுத்தப்படுகின் றன. சில வேளைகளில், வாய் வழியாகவும் மூச்சுக்குழாய் வழி யாகவும் உட்செலுத்தப்படுவதுண்டு. பின்னர், உடலின் மேற் புறத்தில், அவற்றின் போக்கைக் கண்காணிக்கவேண்டும் அல்லது இரத்தம், சிறுநீர், தசை இவைகளை அலசி, அவற்றின் தன்மைகளை ஆராயலாம்.

குழந்தைகளும், கருத்தரிக்கும் பெண்களும் அணுக்கதிர் களினுல் பெரிதும் பாதிக்கப்படுவர். அவர்களின் நலனும், வளர்ச்சியும், உருவமும் சீர்குலைந்து போகும். பரிசோதனை கள் செய்வதும் இயலாததாய் இருக்கிறது. மேற்சொன்ன முறையில், அணுக்கதிர்கள் பயன்படுகின்றனவேயன்றி அணுக் கதிர் வீச்சுப் பயன்படுத்தப்படுவதில்லை. ஆகவே, மருத்துவத் தில் இந்த அணுப்பொருள்கள் நோயாளிகளின் உடல் நலத்திற் காகப் பயன்படுத்தப்பட்டு மிக்க சிறப்பினைப் பெற்றுள்ளன.

கல்லீரல், மூளை, சிறுநீரகம், எலும்பு முதலானவைகள் **எப்படி உள்ளன? எந்த அளவு உள்ளன? அவைகளுக்குள் மாற்றங்கள் எவையேனும் உள்ளனவா? சீழ்க்கட்டியோ, புற்றுநோய்க் கட்டியோ தோன்றி இருக்கின்றனவா? என்றெல்**

லாம் கண்டுபிடிக்க உதவுவது இந்த அணு மருத்துவம்தான். இதற்குப் பெயர் 'அணுக்கொண்டு பகுத்தறிதல்' (Scanning) என்பதாகும். அயோடின், இரும்பு, தங்கம், பாதரசம் முதலிய வற்றை அணுப்பொருள்களோடு இணைப்பதால் இந்தப் பகுத் தறிதல் செயல்படுகிறது. தைராய்டு என்னும் சுரப்பிக்கு அயோடின் அணுப்பொருள் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக் காட்டாக, கல்லீரலில் ஒரு சீழ்க் கட்டி இருப்பதாக வைத்துக் கொள்வோம். ரோஸ் பெங்கால் (Rose Bengal) என்னும் அணுப் பொருள் செலுத்தப்படுகிறது. அது கல்லீரலில் குவிகிறது. சீழ்க்கட்டி இருக்கும் இடத்தில் ஈரல் தசை இல்லாததால் அவ் விடத்தில் அணுவின் ஈர்ப்பும் இருக்காது. அணு எந்த அளவுக்கு ஈர்க்கப்பட்டிருக்கிறது என்பதை வெளியில் உள்ள ஒரு கருவி மூலம் அளக்க முடியும். ஆக, எந்தவொரு அறுவை முறையும் இல்லாமல் ஈரலின் கட்டியை—அதன் தன்மையைக் கண்டு பிடிக்க முடிகிறது. இது போலவே, மிகவும் நுட்பமான மூளைக் கட்டிகளுக்கும் அது பயன்படுகிறது. அணு மருத்துவத்தின் வளர்ச்சியும் துணையும் போற்றுதற்குரிய சாதனைகளாகும்.

**பிளாஸ்டிக் அறுவை முறை (Plastic Surgery)**

இது ஒரு புதிய மருத்துவ முறையாகும். பிறந்த குழந் தையின் மேல் உதடு, உள்வாய் இவை இரண்டும் இணையாமல் பிளந்து இருக்கலாம். இதனால், உணவு உட்கொள்வதில் தொல்லையும், முக அழகின்மையும் ஏற்படும். இவற்றைப் போக்குவது இந்த அறுவை முறையே ஆகும். நெருப் பினாலோ விபத்துகளினாலோ ஆறாத தழும்புகள் ஏற்பட்டு முகத்தின் அழகையே குன்றவைக்கும். இவையும் இந்த அறுவை முறையினால் சீராக்கப்படுகின்றன. முகம்மட்டு மல்லாது மற்ற இடங்களிலும் இந்த அறுவை முறை செய்யப் படுகிறது.

**மாற்று உறுப்புப் பொருத்தும் மருத்துவம் (Transplantation)**

நல்ல உடல்நலம் உடையோரிடமிருந்து உறுப்புகளைப் பெற்று, நலிந்தோர் உடலில் பொருத்தி அவர்களுக்குப் புது வாழ்வு கொடுக்கும் நிலை மருத்துவ உலகில் தோன்றியுள்ளது. ஒவ்வொருவருக்கும் இரண்டு சிறு நீரகங்கள் உள்ளன. அவை இரண்டும் நன்கு இருப்பின், அவற்றில் ஒன்றை நலிந்தோர்க்குக்

கொடுக்கலாம். நோயுற்றோரின் இரண்டு சிறு நீரகங்களும் சீர்கெட்டுச் செயலற்றுப்போகும்போது, நோயாளியின் வாழ்வே முடிவுக்கு வந்துவிடுகிறது. இந்நிலை மாற, மருத்துவம் வியத்தகு சாதனை புரிந்து இந்த மருத்துவ முறையைப் புகுத்தியுள்ளது. அவ்வாறு மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்படும் போது ஒவ்வாமை ஏற்படக்கூடும். அதனையும் சில மருந்துகளால் கட்டுப்படுத்தி வெற்றி கண்டுள்ளனர் மருத்துவர்கள். நலிந்தோரின் உடலில் ஒரு சிறுநீரகம், நல்ல நிலையில் உள்ளோருக்கும் ஒரு சிறு நீரகம் எனச் சரியளவு தத்துவத்தை மருத்துவம் கண்டுள்ளது. அது மட்டுமன்று, நலிந்தோர்பால் இரக்கம் கொள்ளும் ஓர் உயர்ந்த பண்பையும் இம்மருத்துவம் ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு உறுப்புகள் இருப்பின் ஒன்றை அளிக்கலாம். ஒன்றே ஒன்று இருப்பின் என் செய்வது? அதற்கும் மருத்துவம் வழி கண்டுள்ளது. இறந்தவுடன் அவரின் இதயத்தை எடுத்து நோயுற்றோர்க்குப் பொருத்திப் புத்துயிர் அளிக்கும் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு ஆற்றல் பெற்றுள்ளது மருத்துவச் சாதனை.

இதயத்தைப் போலவே கண்களும் இறந்தோரின் உடலிலிருந்து அகற்றப்பட்டு, ஒளி இழந்தோருக்குப் பொருத்தப் பட்டுள்ளன. இறந்தோரின் விழிகளையும் பாதுகாப்பதற்கென 'விழிவங்கி'களும் நம் நாட்டில் உள்ளன.

அணு மருத்துவம், பிளாஸ்டிக் அறுவை முறை, மாற்று உறுப்புப் பொருத்தும் மருத்துவம் இம்மூன்றும் இன்றைய மருத்துவத்துறையில் ஒரு பொற்காலத்தை ஏற்படுத்தியுள்ளன.

## மருந்துகள்

மருத்துவத்தின் அடிப்படை மருந்துகளாகும். இன்று வரை எத்தனையோ மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புதிய மருந்துகள் மட்டுமன்றிப் பழைய மருந்துகளின் செயலாற்றலையும் மாற்றி, அவற்றையும் புதியனவாக மருத்துவ உலகில் புகுத்தியுள்ளனர். சான்றாக, பென்சிலின் என்னும் மருந்து நடைமுறைக்கு வந்த புதிதில் ஒருநாளில் பலமுறை

உடலில் செலுத்தவேண்டியிருந்தது. அப்போதுதான், அம் மருந்து வேண்டிய அளவு இரத்தத்தில் கலந்து நோயை எதிர்க்கும் ஆற்றல் பெற்றது. இன்றோ, அதே பென்சிலின் மருந்து ஓரளவு மாறி ஒருமுறை உடலில் செலுத்தினால் ஒரு திங்கள் வரை வேலை செய்யும் வலிமை பெற்றுள்ளது. இச்சாதனையின் பெருமையை நோயுற்றோர் அன்றி வேறு எவரும் புரிந்து கொள்ளுதல் இயலாது.

சில மருந்துகள் இயற்கையாகக் கிடைப்பன. எடுத்துக் காட்டாக, உடலில் உள்ள சுரப்பிகளின் சாறு, வைட்டமின் சத்துப் போன்றவைகளைச் சொல்லலாம். இயற்கையாகக் கிடைப்பதால் அரியனவாகவும், அதிக விலை உள்ளனவாகவும் அவை இருந்தன. பின்னர் அவை செயற்கை முறையில் செய்யப்பட்டன. செயல் வலிமையில் எந்த ஒரு மாற்றமும் இல்லை. எளிதாகவும் மலிவாகவும் கிடைத்தன.

மருத்துவர்களுக்குப் பெருந் தலைவலியாக இருந்துவருவது புற்று நோய் ஆகும். அறுவை செய்து குணமாக்குவதற்கும் அப்பாற்பட்ட நிலையை அந்நோய் அடைந்து விடுவதுண்டு. அப்போது மருந்துகள் மட்டுமே பயன்படக் கூடும். அதற் கெனப் பல ஆராய்ச்சிகள் நிகழ்ந்துவருகின்றன. பல மருந்து கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் நடந்த ஆராய்ச்சி ஒரு வழியைக் கண்டிருக்கிறது. எலும்புருக்கி நோயைத் தடுக்கும் பி.சி.ஜி. என்னும் மருந்து சில மாற்றங் கள் பெற்றுப் புற்று நோய்க்கும் மருந்தாகியுள்ளது.

'மட்டுக்கு மீறினால் மருந்தே விடமாகும்' என்பது தெரிந்த தொன்று. விடமே மருந்தாகும் விந்தை பலருக்குத் தெரிந் திருக்காது. பாம்பின் விடத்தை மருந்தாகப் பல நோய்களுக்குப் பயன்படுத்துகின்றனர். இரத்த ஒழுகல், நரம்பு நோய், மூட்டு அழற்சி நோய் முதலியவற்றைப் பாம்பின் விடத்தைக்கொண்டு குணமாக்குகின்றனர்.

**மருத்துவமும் உணவும்**

வளர்ந்துவரும் மருத்துவம், நோய் இன்னதென்று அறிந்து கொள்வதோடும் அதற்குரிய மருந்துகளையும் அறுவை முறை களையும் கண்டுபிடிப்பதோடும் நின்று விடவில்லை. நோய்க்கு

என்ன காரணம் என்று ஆராய்வதிலும் பெருங்கவனம் செலுத்தியுள்ளது. அந்தக் காரணங்கள் உணவுப் பொருள்களில் உள்ளனவா என்று கண்டறிய அது முனைந்துள்ளது. மருந்து கொடுத்துச் சீர் செய்வதைக் காட்டிலும் வேண்டாத உணவினை நீக்கி நோயற்று இருப்பது சிறப்புடையதன்றோ? அது உணவில் உள்ள கெடுதல்களை மருத்துவர்கள் மட்டுமேயல்லாது, மக்கள் யாவரும் அறியும் வண்ணம் எடுத்துச் சொல்கிறது.

இதயத் தாக்குதலுக்கு முதன்மையான காரணமாகக் கண்டறியப்பட்டது கொழுப்புச் சத்து நிறைந்த உணவுப் பொருள்களாகும். முட்டை, நெய், தேங்காய் எண்ணெய் இவற்றில் எல்லாம் கொழுப்புச் சத்து மிகுந்துள்ளது. இவற்றை நோய்க்கான அறிகுறி உள்ளோர் தவிர்த்தால் நலம் தரும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இந்த உண்மை தெரியவில்லையெனில், உடல் நலன் அற்றோர் மருந்துகள் பல உண்பார்கள்; எல்லாவகை உணவுகளையும் உண்பார்கள்; எனினும், நோயின் கடுமையிலிருந்து விடுபடமாட்டார்கள். ஏனெனில், மருந்தின் அளவைவிட, உணவின் அளவு பெரியதாயிருக்கிறது. நோய் உற்றோரின் உடலில் கொழுப்புச் சத்து மிகுந்துவிட்டது என்றால் என் செய்வது? மருந்துதானா அதற்கு வழி? மருத்துவத்தின் ஆராய்ச்சியெல்லாம் மருந்துகளின் பக்கமேதானா என்றால், இல்லை என்றுதான் கூறவேண்டும். 'கொலஸ்ட்ரால்' எனப்படும் இக்கொழுப்புச் சத்தை நீக்க வெங்காயம், வைட்டமின் 'சி' நிறைந்த பழங்கள், தேன் இவை பெரிதும் பயன்தரும் என்று மருத்துவம் கூறுகிறது.

இரத்த அழுத்தம் உள்ளோர், இதயம் நலிந்தோர், சிறுநீரகம் கேடு அடைந்தோர் இவர்களுக்கெல்லாம் உணவில் உப்பைக் குறைத்து இடுதல் நன்மை பயப்பதாகும். உடலோ நோயில் வருந்துகிறது; உணவோ கட்டுப்பாடானது. நோயாளி என் செய்வான்? மருத்துவம் ஆராய்ந்தது. அது உப்பில்லாத உணவு சுவைக்காது என்பதற்காக, உப்பின் சுவையை ஊட்டி, உப்பின் தன்மையை நீக்கி ஒரு புதிய பொருளைக் கண்டுபிடித்தது. இம்மருத்துவச் சாதனையைப் பற்றி நோயுற்றோரைத்தான் கேட்டு அறிதல் வேண்டும். அதன் பெருமை அப்போதுதான் விளங்கும்.

சர்க்கரை நோய்க்குச் சர்க்கரை ஆகாது என்று மட்டும் மருத்துவம் சொல்லவில்லை. மனிதனின் மனம் அது அறியும். சர்க்கரைக்குப் பதில் "சாக்கரின்" என்னும் இனிய சுவையுடைய, இன்ன செய்யாத, ஒரு பொருளை அந்நோய் உடையோர்க்கு வழங்கியது. அவர்களின் வாழ்த்தை மருத்துவம் பெற்றது.

மழலைச் செல்வங்களுக்குச் சத்தும் சுவையும் மிக்க உணவுகளைத் தரவேண்டும். தாய்ப்பாலுக்கு முழுதும் ஈடாக இல்லாவிடினும், பெருமளவிற்கு ஈடாகவேனும் பால் மாவுகளை உண்டாக்கியுள்ளது. ஈன்ற தாயாக விளங்க முடியாத மருத்துவம் மழலைகளுக்கு இவ்வகையில் செவிலித் தாயாக விளங்குகிறது. இதனினும் பெருமை அதற்கு என்ன வேண்டும்?

## பழைய மருத்துவத்தில் புதிய கண்ணோட்டம்

சீனர்கள் பல்லாண்டுகளாகக் கையாண்ட மருத்துவம் ஒன்று உண்டு. அது 'அக்யுபங்சர்' (Acupuncture) எனப்படும். மார்பு, வயிறு, கை, கால்களின் மேல் சில கற்பனைக் கோடுகள் (Meridian Lines) போவதாகவும் அக்கோடுகளே அங்கிருக்கும் உறுப்புகளைக் கட்டுப்படுத்துவதாகவும் எண்ணினர். அந்தக் கற்பனைக் கோடுகளின்மேல் மெல்லிய ஊசிகளைக் குத்தி, உறுப்புகளின் வலியைக் குறைத்தனர். புதிய மருத்துவம் அதை ஆராய்ந்தது. தன்னிச்சை நரம்பு மண்டலத்திற்கும் (Autonomous Nervous System) அக்கோடுகளுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று அது கருதுகிறது. சீனர்களின் பழங்கால முறையில் பயன் இருப்பதை உணர்ந்தனர்; அம்முறையை வேறு வழிகளுக்கும் கையாண்டனர். பொதுவாக மயக்கம் கொடுத்து அறுவை செய்யவேண்டியுள்ளது. 'அக்யுபங்சர்' முறையில் மயக்கம் தேவை இல்லை. மயக்கம் கொடுப்பதற்கு முன்பும், கொடுக்கும் போதும், கொடுத்த பின்பும், நோயாளியைப் பல வழிகளில் கண்காணிக்க வேண்டும். வயதானவர்கள் இதய நோய் உள்ளவர்கள் இவர்களுக்கெல்லாம் மயக்க மருந்தினால் தீங்கு விளையலாம். 'அக்யுபங்சர்' முறையில் இத்தீமை எதுவும் இல்லை. அறுவை நன்கு முடிந்த பின் நோயாளி தானாகவே எழுந்து நடந்து வெளியே வரலாம். பேறு காலங்களில், மயக்கம் கொடுத்து அறுவை செய்யவேண்டி இருக்கலாம். அப்போது

மயக்க மருந்து பிறக்கவிருக்கும் குழந்தையைத் தாக்கலாகாது. ஆக, மிகப் பொறுப்பாக மயக்கம் கொடுக்கவேண்டும். இவையெல்லாம் 'அக்யுபங்சர்' முறையில் இல்லை. தாய்க்கு வலியும் இல்லை ; சேய்க்குத் தீங்கும் இல்லை.

கடலில் குளிப்பது நலன் தரும் ஒன்று. இதுபற்றி மருத்துவர்கள் ஆராய்ந்தனர். கடல் நீரில் இரும்பு, சுண்ணும்பு, செம்பு, துத்தநாகம், அயோடின், சோடியம், பொட்டாசியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், சல்பர் போன்ற பல சத்துகள் உள்ளன. மனித உறுப்புகளுக்குத் தேவையான சத்துகள் இவை. அளவில் இவை குறையும்போது நோய் உண்டாகிறது. கடலில் நீராடுங்கால், மேற்கூறிய சத்துகள் உடலில் உறிஞ்சப் படுகின்றன. எடுத்துக்காட்டாக, தைராய்டு சுரப்பி நலிந்திருந் தால் அயோடின் சத்தும், எலும்பு நோய்களுக்குச் சுண்ணும்புச் சத்தும், சதை நோய்களுக்குப் பொட்டாசியம், மெக்னீசியம் சத்துகளும் பயன்தருகின்றன. பழைய மருத்துவத்தில் புதிய கண்ணேட்டம் செலுத்தப்பட்டது. கடலில் குளிப்பு ஆய்வால் பல உண்மைகள் தெரியவந்தன ; பல நோய்களுக்குக் குணமும் காணப்பட்டது.

## மருத்துவத்தில் செயற்கை

வயது ஆக ஆக உடலின் உறுப்புகள் ஊறுபட்டுப் பயனற் றுப்போகின்றன. அவற்றுக்கு ஈடாக வேறென்றை மருத்துவர்கள் கண்டுள்ளனர். செயற்கைப் பல் பொருத்துதல் அனைவரும் அறிந்த செய்தி. அதுபோலவே, உடைந்த எலும்பு களுக்கு மாற்றுகச் செயற்கை மூட்டுகளும், எலும்புகளும் (Prosthesis) பொருத்தப்படுகின்றன. இதய அறையின் வால்வுகள் எனப்படும் கதவுகள் பாழாகிவிடும்போது இவை போன்ற செயற்கை வால்வுகள் பொருத்தப்பட்டு, வாழ்வூட்டு வது விந்தையாகும். கை கால்களுக்கும் இவ்வாறே செயற்கை உறுப்புகளினுல் குணம் அளிக்கப்படுகின்றது. மருந்துகளும் செயற்கை முறையில் உண்டாக்கப்படுகின்றன.

## நடைமுறையில் இல்லாத புதினங்கள்

எத்தனையோ வழிகள், மருந்துகள், அறுவை முறைகள், ஆராய்ச்சி அளவில் நிற்கின்றன. அவையெல்லாம் காலப்

போக்கில் வெளிவரும். அதிகச் செலவு ஆகும் என்பதனுல் சில அறுவை முறைகள் நடைமுறைக்கு அதிகம் வராமலே இருக்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் 'குளிர்ச்சி அறுவை முறை' (Cryo Surgery) மயக்கத்திற்குப் பதிலாக மனிதனின் உடலே மிகக் குளுமையாக்கிப் பின் அறுவை செய்வதாகும். இம்முறையினுல், அறுவையின் போது இரத்தப்போக்கு, அதிகம் இருக்காது; வேண்டிய அளவு சதைகளை மட்டும் அறுத்துவிட இயலும்; குளிர்ச்சியினுல் உடல் மரத்து, வலியும் தெரியாது. இவ்வளவு பயன்கள் இருந்தும், அதிகச் செலவு ஆவதால் நடைமுறைக்கு இந்த வழி அவ்வளவாக வரவில்லே.

மனிதன் இறந்தவுடன் அவனுடைய இதயம், கண், சிறுநீரகங்களும் வேண்டியவர்களுக்குப் பொருத்தப்பட்டு மறுவாழ்வு அளிக்கிறது இன்றைய மருத்துவம். தலேயில் உள்ள பிட்யூட்டரி என்னும் மிக முக்கிய நாளமில்லாச் சுரப்பியின் சாறு, இறந்தவர்களின் உடலில் இருந்து எடுக்கப்படுகிறது. மருத்துவத்தின் வளர்ச்சி, அதன் சாதனைகள், மனிதன் இறந்த பின்னும் அவனைப் பயன்படவைத்துள்ளன. இருந்தாலும், இறந்தாலும் ஆயிரம் பொன் என்பது யானைக்கு மட்டுமன்று, மனிதனுக்கும் பொருந்தும். இந்நிலேயே மருத்துவத்தின் மாபெரும் சாதனையாகும். நடைமுறைக்கு வராத புதினங்கள் பலப்பல. அவையெல்லாம் ஆராய்ச்சி முடிந்து, பயன்தரத்தக்க அளவில் வெளிவரும்போது, விந்தைகள் இன்னும் பல காண்போம். மருத்துவத்தினுல் இயற்கையை முழுதுமாக வெல்ல இயலவில்லே. இயற்கையோடு மருத்துவம் போராடுகிறது. அப்போராட்டத்தில் ஏற்படும் தோல்வி ஆராய்ச்சிக்கு வித்தாகவும், அந்தப் போராட்டத்தில் விளையும் வெற்றி விந்தையாகவும் விளங்குகின்றன.